தமிழ்நாடு அரசு

# சமூக அறிவியல்

## ஏழாம் வகுப்பு

தீண்டாமை
மனித நேயமற்ற செயல் – பெருங்குற்றம்

பள்ளிக் கல்வித்துறை

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது
(விற்பனைக்கு அன்று)

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு 2011
(சமச்சீர்க் கல்வி பொதுப் பாடத் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)

**குழுத்தலைவர்**

வரலாறு & குடிமையியல்

முனைவர். R. பாரதி மனோகரன்,
இணை பேராசிரியர்,
வெலிங்டன் சீமாட்டி கல்வியியல் கல்லூரி,
திருவல்லிக்கேணி, சென்னை–5.

புவியியல் & பொருளாதாரம்

முனைவர். P. அருள்,
இணை பேராசிரியர்,
அரசு கலைக் கல்லூரி, கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**மேலாய்வாளர்கள்**

முனைவர். A. தானப்பன்,
இணை பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி,
சென்னை–5.

திருமதி. S. கற்பகவள்ளி,
தலைமை ஆசிரியர்,
அரசினர் உயர் நிலைப் பள்ளி,
சூராதி மங்கலம், காஞ்சிபுரம்.

முனைவர். B. கோபு,
உதவி பேராசிரியர்,
அரசு கலைக் கல்லூரி, கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

திரு. S. வடிவேல்,
உதவி பேராசிரியர்,
அரசு கலைக் கல்லூரி, கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**ஆசிரியர்கள்**

திரு. J. அருள் ஜார்ஜ் பீட்டர்,
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம்,
முனாஞ்சிப்பட்டி,
திருநெல்வேலி மாவட்டம்.

திருமதி. J. உஷா நாராயணன்
முதுகலை ஆசிரியர்,
அ.மே.நி.பள்ளி,
J.G.H.V. மெட்ரிக். மே.நி.பள்ளி,
சென்னை–33.

திரு. R. விஜயன்,
முதுகலை ஆசிரியர்,
அரசினர் மகளிர் மே.நி.பள்ளி,
ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.

திருமதி. ஹேனா நிர்மலா,
முதுகலை ஆசிரியர்,
புனித ஜான். மெட்ரிக். மே.நி.பள்ளி,
வில்லிவாக்கம், சென்னை–49.

திரு. P. சண்முகம்,
முதுகலை ஆசிரியர்,
அ.மே.நி.பள்ளி, காங்கேயம்,
திருப்பூர் மாவட்டம்.

திரு. V. சுரேஷ்குமார்,
பட்டதாரி ஆசிரியர்,
S.B.O.A. மெட்ரிக். மே.நி.பள்ளி,
சென்னை–40.

திரு. M. சரவணன்,
பட்டதாரி ஆசிரியர்,
அ.மே.நி.பள்ளி,
திருச்சேரை, தஞ்சாவூர் மாவட்டம்.

திருமதி. S. புஷ்பலதா,
முதுகலை ஆசிரியர்,
கமல சுப்ரமணியன் மெட்ரிக்.மே.நி.பள்ளி,
தஞ்சாவூர் மாவட்டம்.

கணிணி அச்சு: ந.செல்வமணி, சரத் சந்திரன்
அட்டை வடிவமைப்பு: ந.செல்வமணி
வரைகலை: ந.செல்வமணி, V. சபாஷ்குமார்
வடிவமைப்பு: ந.செல்வமணி

நூல் அச்சாக்கம்
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,
கல்லூரிச்சாலை, சென்னை–600 006.

விலை: ரூ.

இந்நூல் 80.ஜி.எஸ்.எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

## பொருளடக்கம்


| வ.எண் | அலகு | பக்க எண் |
|---|---|---|
| **வரலாறு** | | |
| 1. | வட இந்திய அரசுகள்—இராசபுத்திரர்கள் | 01 |
| 2. | தக்காண அரசுகள் | 10 |
| 3. | தென்னிந்திய அரசுகள் | 19 |
| 4. | அரேபியர், துருக்கியர் படையெடுப்பு | 36 |
| 5. | டெல்லி சுல்தான்கள் | 42 |
| 6. | விஜயநகர, பாமினி அரசுகள் | 60 |
| 7. | பக்தி, சூஃபி இயக்கங்கள் | 67 |
| **புவியியல்** | | |
| 1. | புவி—அதன் அமைப்பு மற்றும் நில நகர்வுகள் | 75 |
| 2. | புவி மேற்பரப்பு—மாறிக் கொண்டிருக்கும் நிலகோளத்தின் மேற்பரப்பு | 87 |
| 3. | வானிலையும் காலநிலையும் | 101 |
| 4. | பேரிடர் மற்றும் பேரிடர் மேலாண்மை | 122 |
| 5. | பேராழியியல் ஒரு அறிமுகம் | 135 |
| **குடிமையியல்** | | |
| 1. | நமது நாடு | 144 |
| 2. | இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள் | 154 |
| 3. | அரசியல் கட்சிகள் | 161 |
| 4. | ஐக்கிய நாடுகள் அவை | 165 |
| 5. | குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான சட்டங்களும், நலத்திட்டங்களும் | 172 |
| **பொருளாதாரம்** | | |
| 1. | உற்பத்திக் காரணிகள் | 178 |

# வரலாறு

## 1. வட இந்திய அரசுகள் – இராசபுத்திரர்கள்

உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் பழமையான நீண்ட வரலாற்றைக் கொண்டதாக திகழ்கிறது. வரலாற்றினை எளிய முறையில் புரிந்து கொள்வதற்காக, வரலாற்றாளர்கள் வரலாற்றை, காலத்தின் அடிப்படையில் பண்டைய காலம், இடைக்காலம் மற்றும் நவீன காலம் எனப்பிரித்துள்ளார்கள்.

இதன் அடிப்படையில் நமது இந்திய நாட்டின் 'இடைக்காலவரலாற்றை' இனிவரும் பாடங்களில் படிக்க இருக்கின்றோம். கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி18 ஆம் நூற்றாண்டு வரையிலான காலமே இடைக்காலம் எனப்படுகிறது. கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை முந்தைய இடைக்காலம் எனவும், கி.பி.13ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.18 ஆம் நூற்றாண்டு வரை பிந்தைய இடைக்காலம் எனவும் இதனை வகைப்படுத்தியுள்ளனர்.

நாம் இனிவரும் பாடங்களில் வடஇந்தியா மற்றும் தென்னிந்தியாவில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளை படிக்க இருக்கின்றோம். இப்பாடம் முந்தைய இடைக்காலத்தைச் சார்ந்த இராசபுத்திரர்களைப்பற்றி விளக்குகிறது.

### இராசபுத்திரர்கள் காலம் (கி.பி 647 – கி.பி 1200)

ஹர்சர் மற்றும் இரண்டாம் புலிகேசி ஆகியோரின் ஆட்சியுடன் பண்டையகால வரலாறு முடிவுறுகிறது. ஹர்சர் இறப்பு முதல், கி.பி. 12–ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு இராசபுத்திர வம்சத்தினர், வடஇந்தியாவின் வரலாற்றை நிர்ணயித்தார்கள்.

### இராசபுத்திரர்கள் தோற்றம்

இராசபுத்திரர்களின் தோற்றத்தைப்பற்றி பல அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறுகிறார்கள், அவற்றில் குறிப்பிடத்தக்கவை,

இராசபுத்திரர்கள்,

(அ) இராமன் (சூரிய குலம்) அல்லது கிருஷ்ணன் (சந்திர குலம்) வழிவந்தவர்கள்.

ஆ) பண்டையசத்திரிய குடும்பங்களைச் சார்ந்தவர்கள்.

இ) சாகர்கள், ஹூணர்கள், குஷானர்கள், கூர்ஜரர்கள் போன்ற வெளிநாட்டு மரபினைச் சார்ந்தவர்கள்.

ஈ) அக்னி குலத்தவர் என்பனவாகும்.

36 வகை இராசபுத்திரர்கள் வடஇந்தியாவில் ஆட்சி செய்தார்கள். அவர்களில் வலிமைப் பெற்ற இராசபுத்திரர்கள்,

அவந்தியை ஆட்சி செய்த பிரதிகாரர்கள்.

வங்காளத்தை ஆட்சி செய்த பாலர்கள்.

ஆஜ்மீர், டெல்லியை ஆண்ட சௌகான்கள்.

டெல்லியை ஆட்சி செய்த தோமர்கள்.

கனோஜ்பகுதியை ஆட்சி செய்த ரத்தோர்கள்.

மேவார் பகுதியை ஆட்சி செய்த சிசோதியர்கள் அல்லது குகிலர்கள்.

பந்தல்கண்டை ஆட்சி செய்த சந்தேலர்கள்.

மாளவத்தை ஆட்சி செய்த பரமாரர்கள்.

வங்காளத்தை ஆட்சி செய்த சேனர்கள்.

குஜராத்தை ஆட்சி செய்த சோலங்கிகள் ஆவர்.

## ஆட்சியை அமைப்பதற்கான போராட்டம்

இராசபுத்திரர் காலக்கட்டத்தில் 36 வகை இராசபுத்திரர்கள் வடஇந்தியாவில் ஆட்சி செய்தார்கள். பிரதிகாரர்கள், பாலர்கள், சௌகான்கள், தோமர்கள், சந்தேலர்கள், பரமாரர்கள் ஆகியோர் குறிப்பிடத்தகுந்த மரபினர் ஆவர். அனைத்து வகை இராசபுத்திரர்களையும் ஒருங்கிணைக்கக்கூடிய வலிமை பெற்றவர்கள் இவர்களுள் எவருமில்லை. மேலும் இவர்கள் அனைவரும் ஒற்றுமையின்றி, வடஇந்தியாவில் ஆட்சி அமைப்பதற்காகவும், தங்களின் வலிமையை நிலைநாட்டுவதற்காகவும், தொடர்ந்து போர்களில் ஈடுபட்டனர். இவ்வகை தொடர் போராட்டங்களினால் எல்லைப்புற பாதுகாப்பினை வலிமைப்படுத்த தவறிவிட்டனர். இதுவே, பிற்காலத்தில் முஸ்லீம்களின் படையெடுப்பிற்கு வழிவகுத்தது.

## பிரதிகாரர்கள் (கி.பி 8–11 நூற்றாண்டுகள்)

பிரதிகாரர்கள் கூர்ஜர மரபினர், எனவே இவர்கள் கூர்ஜரப் பிரதிகாரர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் இந்தியாவின் வடக்கு, மேற்கு பகுதிகளை கி.பி.8–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.11–ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தார்கள்.

பிரதிகார மரபை தோற்றுவித்தவர் முதலாம் நாகபட்டர் (கி.பி 725 – 740) ஆவார். இவர் சிந்து பகுதியிலிருந்து போர்தொடுத்து அரேபியர்களை வென்றார். மேலும், கத்தியவார், மாளவம், குஜராத் உள்ளிட்ட பல பகுதிகளையும் வென்றார். இவரது தலைநகராக கனோஜ் விளங்கியது.

நாகபட்டரின் வழிவந்தோரில் வத்சராசா, இரண்டாம் நாகபட்டர் ஆகியோர் இப்பேரரசை மேலும் வலிமையுறச் செய்தனர்.

பிரதிகார மன்னர்களில் மிகவும் வலிமையுடன் விளங்கியவர் மிகிரபோசர். இவரது ஆற்றல்மிக்க ஆட்சியில் பிரதிகாரர்களின் பேரரசு, காஷ்மீர் முதல் நர்மதா ஆறு வரையிலும், கத்தியவார் முதல் பீகார் வரையிலும் விரிந்துப்பரந்தது. இவர் சிந்துவின் ஜுனட் முஸ்லீம்களின் படையெடுப்பை முற்றிலும் தடுத்தார்.

மகேந்திர பாலர் (கி.பி.885–908) மிகிரபோசரின் மகன் ஆவார். இம்மரபின் ஆற்றல்மிக்க அரசர்களில் மகேந்திரபாலர் ஒருவராவார். இவர் மகதம், வங்காளத்தின் வடபகுதி ஆகிய இடங்களை வென்றார்.

## பிரதிகாரர்களின் வீழ்ச்சி

பிரதிகாரர்களின் கடைசி மன்னர் இராஜ்யபாலா ஆவார். இவரது ஆட்சியில் பேரரசின் பரப்பளவு குறைந்து கனோஜ்வரை மட்டுமே இருந்தது. கி.பி.1018 ஆம் ஆண்டில் முகமது கஜினி, இராஜ்யபாலா மீது போர்தொடுத்தார். இப்போருக்குப் பின்பு பிரதிகாரர்களில் வீழ்ச்சியடைந்தார்கள். இவர்களின் ஆட்சியின்கீழ் இருந்த ரத்தோர்கள், சௌகான்கள், தோமர்கள், சந்தேலர்கள், பரமாரர்கள், பாலர்கள்

ஆகியோர் சுதந்திர அரசுகளாக செயல்படத் தொடங்கினார்கள்.

### பிரதிகாரர்கள் – ஒரு பாதுகாப்பு அரண்

சிந்துவின் ஜுனட் முஸ்லீம்கள் (கி.பி.725) முதல், முகமது கஜினி வரையிலான முஸ்லீம்களின் படையெடுப்பிலிருந்து இந்தியாவை பாதுகாக்கும் அரணாக பிரதிகாரர்கள் இருந்தனர்.

### பாலர்கள் (கி.பி.8–12 நூற்றாண்டு )

கி.பி.750 முதல் 760 வரையிலான காலத்தில் வங்காளத்தில் குழப்பமான சூழல் நிலவியது. இதற்கு ஒரு முடிவு ஏற்படுத்தும் விதமாக பாலர் இனத்தலைவர்கள் ஒன்றுகூடி கோபாலரை, வங்காளம் மற்றும் பீகார் முழுமைக்கும் மன்னராகத் தேர்ந்தெடுத்தனர்.

கோபாலர் (கி.பி.765–769), பாலர் மரபைத்தொடங்கினார். இவர் தமது நாட்டின் எல்லையை மகதம் வரை விரிவுபடுத்தினார். இவ்வரசகுலம் இந்தியாவின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியையும் ஆட்சி செய்தது.

கோபாலருக்கு பின் அவரின் மகன் தருமபாலர்(கி.பி.769–815) மன்னரானார். இவர் பிரதிகாரர்களை வென்றதோடு கனோஜ், வங்காளம் பீகார் ஆகிய இடங்களைக் கைப்பற்றி, வடஇந்தியா முழுவதையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தார். பௌத்த மதத்தில் பற்றுமிக்க தருமபாலர் பல பௌத்த மடங்களைக் கட்டினார். புகழ்மிக்க விக்ரமசீலா பல்கலைக்கழகத்தை நிறுவியதோடு நாளந்தா பல்கலைக்கழகத்தையும் புதுப்பித்தார்.

தேவபாலர் (கி.பி.815–855) தருமபாலரின் மகன் ஆவார். இவர் போர்களின் மூலமாக புதிய பகுதிகளை வென்றதோடு, அஸ்ஸாம், ஒரிசா ஆகியனவற்றையும் கைப்பற்றினார். இவரது வழித்தோன்றல்கள் வலிமையற்றவர்களாக இருந்தனர்.

மகிபாலர் (கி.பி.998–1038) ஆட்சியேற்றதைத் தொடர்ந்து நாடு மீண்டும் வலிமைபெறத் தொடங்கியது. எனினும் இவரது இறப்பிற்குப் பிறகு பாலர்வம்சம் வலிமைக்குன்றியது. பாலர் மரபின் கடைசி மன்னர் கோவிந்தபாலர் ஆவார். கி.பி.12ஆம் நூற்றாண்டின் மத்தியில் பாலர் மரபு வீழ்ச்சியடைந்தது, வங்காளப்பகுதியின் சேனர்கள் எழுச்சி பெற்று புதிய ஆட்சியை ஏற்படுத்தினார்கள்.

### கனோஜ்பகுதிக்காக மூன்று அரசுகளிடையே போராட்டம்

இந்தியாவின் மத்திய பகுதியை ஆட்சி செய்த பிரதிகாரர்கள், வங்காளத்தை ஆட்சி செய்த பாலர்கள், தக்காணத்தை ஆட்சி செய்த இராஷ்டிரகூடர்கள் ஆகிய மூன்று அரசுகளும் வளம் நிறைந்த கங்கைச்சமவெளிப்பகுதி மற்றும் கனோஜ்பகுதியை, கைப்பற்றுவதிலேயே நோக்கமாக இருந்தனர்.

எனவே மூன்று அரசுகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்ந்து போரிட்டன. ஏறத்தாழ 200 ஆண்டுகள் தொடர்ந்த இப்போராட்டம் மூன்று அரசுகளையுமே வலிமை இழக்கச் செய்தன. துருக்கியர்களின் இந்திய வெற்றிக்கு இதுவே மறைமுகக் காரணமானது எனலாம்.

### டெல்லியை ஆண்ட தோமர்கள்

கனோஜ்பகுதியில் இருந்த, பிரதிகாரர்களிடம் திறைசெலுத்திய அரசர்களாக இருந்தவர்களே தோமர்கள் ஆவர். பின்னர் இவர்கள் தனியரசை ஏற்படுத்தி டெல்லி நகரை கி.பி. 736ல் நிறுவினார்கள். கி.பி.1043ல்

மகிபால தோமர், தானேஸ்வரம், ஹான்சி, நாகர்கோட் ஆகிய இடங்களை வென்றார். கி.பி.12 ஆம் நூற்றாண்டில் சௌகான்கள் டெல்லியைக் கைப்பற்றினர். எனினும் தோமர்கள், சௌகான்களுக்கு திறை செலுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

### டெல்லி மற்றும் ஆஜ்மீர் பகுதியில் ஆட்சி செலுத்திய சௌகான்கள்

கனோஜ்பகுதியை ஆண்ட பிரதிகாரர்களுக்குத் திறை செலுத்துபவர்களாக இருந்தவர்களே சௌகான்கள் ஆவர். கி.பி.11–ஆம் நூற்றாண்டில் ஆஜ்மீர் பகுதியை சுதந்திர அரசாக அறிவித்த சௌகான்கள் கி.பி.12 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாளவப் பகுதியை ஆண்ட பரமாரர்களிடமிருந்து உஜ்ஜயினியையும், தோமர்களிடமிருந்து டெல்லியையும் வென்றனர். பின்னர்தம் தலைநகரை டெல்லிக்கு மாற்றிக்கொண்டனர். சௌகான் மன்னர்களில் மிக முக்கியமான மன்னர் பிருத்திவிராஜ்சௌகான் ஆவார்.

### கனோஜ்பகுதியை ஆட்சி செய்த ரத்தோர்கள் (கி.பி.1090–1194)

பிரதிகாரர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் கனோஜ்பகுதியில் தெளிவற்ற சூழல் நிலவியது. இதனைப் பயன்படுத்தி ரத்தோர்கள் கனோஜ்அரசைக் கைப்பற்றினர். கி.பி.1090 முதல் 1194 வரையில் ஆண்ட இவர்களில் ஜெயச்சந்திரன் என்பவரே புகழுடன் ஆட்சி செய்த கடைசி மன்னர் ஆவார். முகமது கோரியுடன் கி.பி.1194ல் நடந்த சந்தவார் போரில் இவர் கொல்லப்பட்டார்.

### பந்தல்கண்ட் பகுதியை ஆட்சி செய்த சந்தேலர்கள்

பிரதிகாரர்களின் ஆட்சியில் இருந்த பந்தல்கண்ட் பகுதியை கி.பி.9ஆம் நூற்றாண்டில் தனியரசாக சந்தேலர்கள் அமைத்தனர். சந்தேலர்களின் மன்னன் யாசோதவர்மன் மகோபாவை தலைநகராக நிறுவினார். சந்தேலர்களின் கடைசி அரசர் பாரமால். இவரை கி.பி.1203இல் குத்புத்தீன் ஐபக் தோற்கடித்தார். கலிஞ்சார் கோட்டை இவர்களது முக்கிய கோட்டையாகும். கஜுராஹோவில் பல அழகிய கோயில்களை இவர்கள் கட்டினார்கள். இவைகளுள் கந்தர்ய மகாதேவர் ஆலயம் (கி.பி. 1050) புகழ்பெற்றதாகும்.



கந்தர்ய மகாதேவர் ஆலையம்

### மேவாரை ஆட்சி செய்த சிசோதியர்கள் அல்லது குகிலர்கள்

சித்தூரை தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த சிசோதிய மரபினைத் தொடங்கியவர் பாபாரவால். இவர் வழிவந்த இராணாரத்தன்சிங்கை கி.பி.1307ல் அலாவுதீன் கில்ஜி போரிட்டு தோற்கடித்தார். இதனையறிந்த இராணாரத்தன்சிங்கின் மனைவி இராணி பத்மினி, ஜவ்ஹர் என்ற வழக்கத்தின்படி தீயில் குதித்து இறந்தார். முகலாயர்கள் காலத்தில் ராணா சங்கா, மகாராணா பிரதாப் ஆகியோர் முகலாயர்களை எதிர்த்து வலிமையுடன் போர்புரிந்தார்கள் என்பது குறிப்பிடதக்கதாகும்.

### மாளவம் பகுதியை ஆண்ட பரமாரர்கள்

பிரதிகாரர்களின் ஆளுகைக்கு உட்பட்ட அரசர்களாக இருந்த

பரமாரர்கள் கி.பி.10ஆம் நூற்றாண்டில் தம்மைச் சுதந்திர அரசாக அறிவித்துக் கொண்டனர். இவர்களது தலைநகரமாக தாராவிளங்கியது.

இராஜாபோஜ் (கி.பி.1018–1069) என்பவர் இம்மரபின் புகழ்மிக்க மன்னராவார். இவர் போபால் நகரின் அருகில் அழகிய ஏரி (250 சதுர மைல்) ஒன்றை அமைத்தார். தாராவில் சமஸ்கிருத கல்லூரி ஒன்றை நிறுவினார். அலாவுதீன் கில்ஜியின் படையெடுப்பால் பரமாரர்களின் ஆட்சி வீழ்ச்சியடைந்தது.

### இராசபுத்திரர்களின் சிறப்பியல்புகள்

இராசபுத்திரர்கள் வீரமிகுந்தவர்களாகவும், சிறந்த போர் வீரர்களாகவும் இருந்தனர், பெண்களையும், நலிந்தவர்களையும் காக்கும் குணம் படைத்தவர்களாக இருந்தனர். பெண்கள் கற்பினை உயிராக மதித்து வாழ்ந்தார்கள். பெண்கள் கல்வி கற்றவர்களாக இருந்தனர். அவர்கள் சமூகத்தில் நல்ல மதிப்புடன் நடத்தப்பட்டார்கள். பெண்கள், பொதுவாழ்விலும், போர் செய்வதிலும் ஈடுபட்டார்கள். குழந்தைத் திருமணமும், பலதாரமணமும் நடைமுறையில் இருந்தது. எதிரிகளிடம் சிறைபட்டு களங்கம் ஏற்படுவதைவிட இறப்பதை மேலாக கருதியதால் ஜவ்ஹர் முறையும், உடன்கட்டை ஏறுதலும் வழக்கிலிருந்தன.

### சமயம்

இராசபுத்திரர்கள் இந்து மதத்தை போற்றி வளர்த்தனர். சமணசமயம், புத்த சமயம் ஆகியவைகளும் ஆதரிக்கப்பட்டன. பக்தி இயக்கம் இவர்கள் காலத்தில் மலரத் தொடங்கியது.

### அரசு நிர்வாகம்

இராசபுத்திரர்களின் அரசு நிலமான்ய முறையினை அடிப்படையாக கொண்டு இருந்தது, நாட்டினைப் பல ஜாகிர்களாகப் பிரித்தனர். அதன் தலைவர்களான ஜாகிர்தார்கள், வரிவசூலித்து உரிய பங்கை மன்னரிடம் செலுத்தினர். ஜாகிர்தார்கள் படையை தனியே பராமரித்ததோடு மன்னருக்குத் தேவைப்படும் சமயத்தில் படையுதவியும் செய்தனர்.

### இராசபுத்திரர்களின் பங்களிப்பு

இராசபுத்திரர்கள், மொழி, இலக்கியம், கலை மற்றும் கட்டிடக்கலை ஆகிய துறைகளின் வளர்ச்சிக்குப் பெரும் பாடுபட்டார்கள்.

### மொழியும், இலக்கியமும்

இவர்களின் காலத்தில் மராத்தி, குஜராத்தி, வங்க மொழி போன்ற வட்டாரமொழிகள் சிறப்பாக வளர்ச்சியடைந்தன. பக்தி இயக்கத்தினரும், நாட்டுப்புறபாடல்கள் பாடிய கலைஞர்களும் வட்டார மொழி வளர்ச்சிக்கு வழிக்கோலினார்கள். இவர்கள் கால இலக்கியங்களில், கல்ஹணர் எழுதிய இராஜதரங்கினி, ஜெயதேவரின் கீதகோவிந்தம், சோமதேவரின் கதா சரித சாகரம் ஆகியன சிறப்பான படைப்புகளாகும். பிருத்திவிராஜ்செளகானின் அவைப்புலவரான சந்த்பரிதை எழுதிய பிருத்திவிராஜ்ரசோ என்னும் நூலானது, பிருத்திவிராசனின் படையெடுப்புகளைப் பற்றி விளக்குவதாகும். பாஸ்கராச்சாரியா எழுதிய சித்தாந்த சிரோமணியானது ஒரு சிறந்த வானவியல் நூலாகும். மகேந்திரபாலர், மகிபாலர் ஆகியோரின் அவைப்புலவராக இராசசேகரன் திகழ்ந்தார் கற்பூரமஞ்சரி, பாலஇராமயணம் ஆகியன

# வட இந்திய அரசுகள்



இராசசேகரனின் சிறந்த படைப்புகளாகும்.

## கலை மற்றும் கட்டடக்கலை

இராசபுத்திரர்கள் காலத்தில் வண்ணச்சுவர் ஓவியங்களும், நுண்ஓவியங்களும் பிரபலமடைந்தன. கஜுராஹோ நகரின் ஆலயங்களும், புவனேஸ்வரத்தில் உள்ள லிங்கராசா கோயிலும், கோனார்க்கில் உள்ள சூரியக்கோயிலும், அபுமலையில் கட்டப்பட்டுள்ள தில்வாரா ஆலயமும் இராசபுத்திரர்களின் கோயிற்கட்டிடக்கலையின் சிறப்பான எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.



லிங்கராஜா கோயில்



சூரியக் கோயில் – கோனார்க்

கஜுராஹோ கோயில், இந்திய மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் சுற்றுலா மையமாக விளங்குகிறது. ஜெய்ப்பூர், உதய்பூர் நகர அரண்மனைகளும், சித்தூர், மாண்டு, ஜோத்பூர், குவாலியர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கோட்டைகளும், இராசபுத்திரர்களின் கட்டிடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.



தில்வாரா கோயில்



உதய்பூர் அரண்மனை

## இராசபுத்திர அரசுகளின் முடிவு

தங்களுக்குள் தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்த இராசபுத்திர அரசுகளை அடக்கி, ஒருங்கிணைத்து, வெளிநாட்டவர் படையெடுப்புகளை முறியடிக்கக்கூடிய வலிமையான மையஅமைப்பு எதுவும் இல்லாத அரசியல் சூழலைப் பயன்படுத்தி, துருக்கியர்கள் தங்களின் ஆட்சியை இந்தியாவில் அமைத்தனர்.

## பயிற்சி

### I) சரியான விடையை எழுதுக.

1. ____________ நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலமே இடைக்காலம் எனப்படுகிறது.

அ) 8–18 ஆ) 1– 8 இ) 18 – நிகழ்காலம்

2. பிரதிகாரர்கள் மரபினைத் தோற்றுவித்தவர் ____________.

அ) மகேந்திரபாலர் ஆ) மிகரபோசர் இ) முதலாம் நாகபட்டர்

3. தர்மபாலர் புகழ்மிக்க பல்கலைக்கழகத்தை ____________ என்ற இடத்தில் நிறுவினார் .

அ) நாளந்தா ஆ)தட்சசீலம் இ) விக்ரம சீலம்

4. சௌகான் மன்னர்களில் மிக முக்கியமான மன்னர் ____________ சௌகான்.

அ) ஜெயபாலர் ஆ) மகிபாலர் இ) பிருத்திவிராஜ்

5. பரமாரர்களின் தலைநகரமாக ____________ விளங்கியது.

அ) டெல்லி ஆ) மாளவம் இ) தாரா

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பிரதிகாரர்கள் ____________ எனவும் அழைக்கப்படுகின்றனர்.
2. கோபாலர் தனது நாட்டின் எல்லையை ____________ வரை விரிவுபடுத்தினார்.
3. நாளந்தா பல்கலைக்கழகத்தை புதுப்பித்தவர் ____________.
4. இராஜா போஜ் ____________ நகரின் அருகில் அழகிய ஏரி ஒன்றை அமைத்தார்.
5. பாஸ்கராச்சாரியா எழுதிய சித்தாந்த சிரோமணி ஒரு சிறந்த ____________ நூலாகும்.

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. மூன்று அரசுகளிடையே போராட்டம் | அபுமலை |
| 2. சந்த் பரிதை | கனோஜ் |
| 3. இராசசேகரன் | பிருதிவிராஜ்ராசோ |
| 4. சூரிய கோயில் | கற்பூரமஞ்சரி |
| 5. தில்வாரா கோயில் | கோனார்க் |

## IV) குறுகிய விடையளி.

1. இந்திய வரலாற்றில் இடைக்காலம் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.
2. இந்தியாவில் ஆட்சி செய்த இராசபுத்திரர்களில் ஏதேனும் நான்கு வகையினரின் பெயர்களை குறிப்பிடுக.
3. மூன்று அரசுகளிடையே போராட்டம் பற்றி சிறு குறிப்பு வரைக.
4. சந்தேலர்கள் கோயில் கட்டிடக் கலைக்கு ஆற்றிய பங்களிப்பு யாது ?
5. சிசோதியர்கள் மரபினை நிறுவியவர் யார் ? அவர்கள் தலைநகரம் யாது ?

## V) விரிவான விடையளி.

1. இராசபுத்திரர்களின் தோற்றம் மற்றும் ஆதிக்கத்தை நிலைநாட்ட போராடியமை குறித்து விளக்கமாக எழுதவும்.
2. இராசபுத்திரர்கள் பல்வேறு துறைகளில் ஆற்றிய பங்களிப்பினை விரிவாக எழுதவும்.

## செய்ய வேண்டியன.

1. இந்திய வரைப்படத்தில் கீழே குறிப்பிட்டுள்ள இடங்களை குறிக்கவும்.
   அஜ்மீர், நாளந்தா, கனோஜ், பந்தல்கண்ட், டெல்லி .
2. இராசபுத்திரர்களின் அரசியல் நிலையை மனதில் நிறுத்தி ‘சேர்ந்திருப்பின் வாழலாம், பிரிந்திருப்பின் வீழ்ச்சியே’ என்ற தலைப்பில் நாடகம் தயார் செய்யவும்.

# 2. தக்காண அரசுகள்

இந்தியாவின் தெற்குப்பகுதியானது 'தக்காணம்' அல்லது 'தட்சணபதம்' என அழைக்கப்படுகிறது. விந்திய சாத்பூரா மலைகளும், நர்மதை, தபதி நதிகளும், அடர்த்தியான காடுகளும், வட இந்தியாவை, தென்னிந்தியாவிலிருந்து பிரிக்கின்றன. இதனால்தான் வடஇந்தியாவின் வரலாற்று நிகழ்வுகள் தென்னிந்தியாவில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தவில்லை. இடைக்காலத்தில் சாளுக்கியர்களும், இராட்டிரகூடர்களும் தக்காணத்தில் ஆட்சியை ஏற்படுத்தினார்கள். சாளுக்கியர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு இவர்களிடம் திறை செலுத்தி வந்த குறுநில அரசர்களாகிய யாதவர்கள், காகத்தீயர்கள், ஹொய்சாளர்கள் ஆகியோர் சுதந்திர அரசை நிறுவினார்கள். இக்கால கட்டத்தில் டெல்லி சுல்தானியர்களான கில்ஜி மரபினரும், துக்ளக் மரபினரும் தென்னிந்தியாவில் தங்களின் மேலாண்மையை விரிவாக்கினர்.

## சாளுக்கியர்கள் (கி.பி.6 – 12 நூற்றாண்டுகள்)

தக்காணத்தை ஆண்ட அரசுகளில் முக்கியமான ஆட்சியாளர்களாக சாளுக்கியர்கள் விளங்கினர். இவர்களது ஆட்சிகாலத்தை மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவையாவன,

முற்கால மேலைச் சாளுக்கியர். (கி.பி. 6–8நூற்றாண்டுகள்).

பிற்கால மேலைச் சாளுக்கியர். (கி.பி.10–12 நூற்றாண்டுகள்).

கீழைச் சாளுக்கியர். (கி.பி.7–12 நூற்றாண்டுகள்) என்பனவாகும்.

## முற்கால மேலைச் சாளுக்கியர் (கி.பி.6–8 நூற்றாண்டுகள்)

கி.பி.6–ஆம் நூற்றறாண்டில், இன்றைய கர்னாடக மாநிலம் அமைந்துள்ள பகுதியில் சாளுக்கியர்கள் தங்களது அரசாட்சியை ஏற்படுத்தினர். தற்போது பதாமி என்று அழைக்கப்படும், பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ள வாதாபி அவர்களுடைய தலைநகரமாய் விளங்கியது.

ஜெயசிம்மன், இராமராயா ஆகியோரது காலத்தில்தான் சாளுக்கியமரபு மெல்ல வளரத் தலைப்பட்டது. முதலாம் புலிகேசி (கி.பி.543–566) வாதாபி சாளுக்கிய மரபிற்கு அடித்தளமிட்டவராவார். சாளுக்கிய அரசர்களில் மிகச்சிறந்தவராக இரண்டாம் புலிகேசி (கி.பி.610–642) விளங்கினார்.

இரண்டாம் புலிகேசி, கங்கர், மாளவர்கள் , கூர்ஜரர்கள் ஆகியோரை வென்றதோடு கி.பி.637–ல் ஹர்ஷரின் படையெடுப்பை எதிர்த்து நின்று வெற்றியடைந்தார். தெற்குப்பகுதியில் ஆட்சி செய்த பல்லவர்களுடன் தொடர்ந்து போரிட்டு கொண்டிருந்தார். பல்லவமன்னன் முதலாம் மகேந்திரவர்மனை வென்று பின்னர் காவேரி நதியைக் கடந்து சென்று சேர, சோழ, பாண்டியர்களிடம் நட்பை ஏற்படுத்திக் கொண்டார். எனினும் கி.பி,642–ல் மகேந்திரனின் மகன் நரசிம்மவர்மன் இரண்டாம் புலிகேசி மீது படையெடுத்து, புலிகேசியைக் கொன்றார்.

முதலாம் விக்கிரமாதித்யன், விஜயாதித்தன், இரண்டாம் விக்கிரமாதித்யன் ஆகியோர்

# தக்காண அரசுகள்


சாளுக்கியர்கள்
சோமநாதபுரம்
யாதவர்கள்
அஜந்தா
மேலை சாளுக்கியர்
கல்யாணி
காகதீயர்
ராட்டிரகூடர்
மால்கெட்
வாரங்கல்
அதிகும்பா
கீழை சாளுக்கியர்
வெங்கி
வாதாபி
ஐஹோலே
ஹொய்சாளர்
காஞ்சிபுரம்
மாமல்லபுரம்
துவாரசமுத்திரம்
சோழர்கள்
தஞ்சாவூர்

சாளுக்கிய மரபில் குறிப்பிடத்தகுந்த மன்னர்கள் ஆவர். இவர்கள் காலக்கட்டத்திலும் சாளுக்கிய – பல்லவ போராட்டங்கள் தொடர்ந்தன. இராட்டிரக்கூடர்கள் மூலமாக புதியதொரு ஆபத்தும் வந்தது. இராட்டிரகூட மரபைத் தோற்றுவித்த தந்திதுர்கா, சாளுக்கியன் இரண்டாம் கீர்த்திவர்மனை தோற்கடித்து வாதாபியைக் கைப்பற்றினார். இதனைத் தொடர்ந்து இரண்டு நூற்றாண்டுகள் சாளுக்கிய மரபு புகழ்நிலையெய்தாது மங்கிய நிலையிலிருந்தது.

### கல்யாணியை ஆண்ட பிற்கால மேலை சாளுக்கியர்கள் (கி.பி.10–12 நூற்றாண்டுகள்)

கல்யாணியைத் தலைநகராக கொண்டு கி.பி. 10ஆம் நூற்றாண்டின் இறுதி பகுதியில் மேலை சாளுக்கியர்கள் ஆட்சியை அமைத்தனர். இவர்களது ஆட்சி கி.பி.12 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது.

பிற்கால மேலைச் சாளுக்கிய மரபைத் தொடங்கிவைத்தவர் இரண்டாம் தைலப்பா (கி.பி, 973–997) ஆவார். பிற்கால மேலைச்சாளுக்கிய மரபின் சிறந்த மன்னர்களாக இரண்டாம் சோமேஸ்வரன், இரண்டாம் ஜெயசிம்மன், ஆறாம் விக்கிரமாதித்யன், மூன்றாம் தைலப்பா ஆகியோர் கருதப்படுகின்றனர்.

கல்யாணியை ஆண்ட சாளுக்கியர்களில் இறுதி அரசர் மூன்றாம் தைலப்பா (கி.பி. 1150–1163) ஆவார். கி.பி.1190 ஆம் ஆண்டிற்குப்பிறகு சாளுக்கியர்களிடம் திறை செலுத்திய, தேவகிரியை ஆண்ட யாதவர்கள், வாரங்கலை ஆண்ட காகதீயர், துவாரக சமுத்திரத்தை ஆண்ட ஹொய்சாளர் தங்களை சுதந்திர அரசுகளாக அறிவித்துக்கொண்டனர். இதனால் கல்யாணியை தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்த பிற்காலமேலைச்சாளுக்கியர்களின் பேரரசு மூன்று பிரிவுகளாகப் பிரிந்தது.

### வெங்கியை ஆண்ட கீழைச்சாளுக்கியர் (கி.பி.7–12 நூற்றாண்டுகள்)

இரண்டாம் புலிகேசியின் சகோதரனான விஷ்ணுவர்த்தன், கீழைச்சாளுக்கிய மரபைத் தொடங்கி வைத்தவராவார். இவர்கள் பல தலைமுறைகளாக மேலை சாளுக்கியர்களிடமிருந்து தனித்து ஆட்சிபுரிந்தனர்.



ஐஹோலே கோயில்



பட்டாடக்கல் கோயில்கள்

வெங்கி இவர்களின் தலைநகரமாகும். இவர்கள் ஆட்சியில் தெலுங்கு சமுதாயமும், தெலுங்கு இலக்கியமும் மற்ற கலைகளும்

சிறப்பான வளர்ச்சியடைந்தன. கீழைச்சாளுக்கியர்கள், சோழமரபுடன் திருமண உறவுகளைக் கொண்டிருந்தனர். இத்திருமண உறவின் வழியாக தோன்றிய வாரிசே குலோத்துங்க சோழன் (கி.பி.1070–1122) ஆவார். இவர் கீழைச்சாளுக்கிய நாட்டினை சோழப்பேரரசுடன் இணைத்து சோழநாட்டு மன்னரானார். இவரே கீழைச்சாளுக்கிய மரபின் கடைசி மன்னரும் ஆவார்.

### சாளுக்கியர்களின் பங்களிப்பு

சாளுக்கிய மன்னர்கள் இந்து சமயத்தைப் போற்றினர். அதே வேளையில் சமண மதத்தையும் ஆதரித்தனர். இரண்டாம் புலிகேசியின் அவைப்புலவரான இரவிகீர்த்தி ஐஹோலே கல்வெட்டுகளைப் படைத்தவராவார். இவர் சமணசமயத்தைச் சேர்ந்தவர். சாளுக்கியர்கள் கட்டிடக்கலையைப் பெரிதும் ஆதரித்தனர். 70க்கும் மேற்பட்ட கோயில்களை ஐஹோலேவில் கட்டினர். இதனால் ஐஹோலே 'இந்திய கோயில் கட்டக்கலையின் தொட்டில்' எனச் சிறப்பிக்கப்படுகிறது. மேலும், பட்டாடக் கல்லில் உள்ள விருபாக்ஷர் ஆலயம், பாதாமி குகைக் கோயில்கள் ஆகியன மற்ற சிறந்த ஆலயங்களாகும் விருபாக்ஷர் கோயில், காஞ்சிபுரத்தின் கைலாசநாதர் கோயிலைப் போலக் கட்டப்பட்டுள்ளது.

### இராட்டிரகூடர்கள் (கி.பி.8–10 ஆம் நூற்றாண்டுகள்)

இராட்டிரகூடர்களின் ஆட்சிக்காலம் (கி.பி.753–975) தக்காண வரலாற்றின் சிறப்புக்குரிய காலமாகும். வட இந்தியாவில் இருந்த இரத்தோர்களின் வழிவந்தோரே இராட்டிரகூடர்கள் ஆவார்.

'இராட்டிரகூடர்' என்னும் சொல்லிற்கு, இராட்டிரம் என்னும் (நாட்டின் சிறிய) பகுதியினை ஆளுகை செய்யும் உரிமை பெற்றவர்கள் எனப்பொருளாகும். இராட்டிரகூடர் மரபினர் முற்கால மேலைச்சாளுக்கியர்களிடம் இராட்டிர அதிகாரிகளாக பணியாற்றியவர் ஆவர். கன்னடம் இவர்களின் தாய்மொழியாகும்.

பதாமியை ஆண்ட இரண்டாம் கீர்த்திவர்மனின் இராட்டிர அலுவலராக இருந்த தந்திதுர்கர் கி.பி.742–ல் எல்லோரரைவைக் கைப்பற்றினார். பின்னர் தற்கால மகாராஷ்டிரம், குஜராத், மற்றும் மத்தியபிரதேசத்தின் வடக்கு, மையப்பகுதிகளைக் கைப்பற்றினார், ஸ்ரீசைலம் (கர்னூல்) நாட்டையாண்ட சோழர்களை அடிமைப்படுத்தினார். கி.பி.750ல் காஞ்சிபுரத்தை முற்றுகையிட்டு, பல்லவமல்லனுடன் திருமண ஒப்பந்தம் செய்துகொண்டு அவரது மகள் ரேவாவை பல்லவ மன்னனுக்கு மணமுடித்தார். பின்னர் தான் திறை செலுத்தி வந்த மேலைசாளுக்கிய மன்னர், இரண்டாம் கீர்த்திவர்மனை தோற்கடித்து கி.பி.753ல் தக்காணப் பகுதியில் நிலையான அரசினை ஏற்படுத்தினார். மால்கெட் நகரைத் தலைநகராகக் கொண்ட இந்த இராட்டிரகூடப் பேரரசு வடக்கே நாசிக்வரை பரவி இருந்தது.

கி.பி.756ல் தந்திதுர்கர் மரணமடைந்த பிறகு, முதலாம் கிருஷ்ணா (கி.பி.756–775) பட்டமேற்றார். இவர் சில்ஹரா இனத்தவரை தன்னுடைய குறுநில மன்னராக்கினார். கங்கவாடி பகுதியை வென்றார். புகழ்பெற்ற எல்லோராவின் கைலாசநாதர் குடைவரைக் கோயிலை உருவாக்கியவர் இவரே. இவரை தொடர்ந்து இவரின் மகன் இரண்டாம் கோவிந்தன் ஆட்சியில் அமர்ந்தார்.

இவர் வேங்கியின் மீது படையெடுத்து வென்றார். கங்கவாடி, காஞ்சிபுரம், மாளவம் ஆகிய மன்னர்களுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொண்டார்.

கோவிந்தனுக்கு அடுத்து பதவிக்கு வந்தவர் துருவன் (கி.பி. 780–792) என்பவராவர். இவர் சிறந்த ஆட்சியாளராக விளங்கினார். மாளவப் பகுதியை தமது நாட்டுடன் இணைத்தார். கனோஜ்மன்னர் சக்கரயுத்தனை தமது ஆளுகைக்கு உள்ளாக்கினார். பல்லவமன்னன் தண்டிவர்மனை வென்றார். இலங்கையை கைப்பற்றி அடிமைபடுத்தினார். வேங்கியை ஆண்ட இரண்டாம் விஜயாதித்தனை வென்று அவரது ஒன்றுவிட்ட சகோதரர் பீமா என்பவருக்கு ஆதரவாக நடந்துகொண்டார். இவரது காலத்தில் இரட்டிரகூட நாடு புகழின் உச்சத்தை அடைந்தது.

மூன்றாம் கோவிந்தனுக்கு (கி.பி.792–814) பிறகு, அவரின் மகன் அமோகவர்ஷன் தமது பதினான்காம் வயதில் (கி.பி.814–880) மன்னரானார். எனவே அமோகவர்ஷனின் மைத்துனன் கார்கா, வெங்கி மன்னர் இரண்டாம் விஜயாதித்தன், கங்க மன்னன் முதலாம் இராசமல்லன் ஆகியோர்களை தோற்கடித்தார். பின்னர் அமோகவர்ஷன் சாளுக்கியர்களை தோற்கடித்து வெங்கியை கைப்பற்றினார்.

அடுத்து பதவியேற்ற அரசர்களில் குறிப்பிடத் தக்கவர் மூன்றாம் கிருஷ்ணர் (கி.பி. 936–968) ஆவார். இவர் தக்கோலம் போரில் சோழர்களை வென்று, தஞ்சாவூரைக் கைப்பற்றி, இராமேஸ்வரம் வரையில் வந்தார்.

இராட்டிரகூடர்களின் கடைசி அரசர் இரண்டாம் கர்கா (கி.பி.972–973) ஆவார். இவர் கல்யாணியை ஆண்ட சாளுக்கிய அரசர் இரண்டாம் தைலப்பா என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். இதனால் இராட்டிரகூடப் பேரரசு முடிவுக்கு வந்தது.

## இராட்டிரகூடர்களின் சிறப்புகள்

இராட்டிரகூட அரசர்களில் துருவன், மூன்றாம் கோவிந்தன், மூன்றாம் இந்திரன் ஆகியோர் வட இந்தியாமீது படையெடுத்தனர். இவர்கள் வட இந்திய அரசர்களைத் தோற்கடித்தமையினால் வட இந்திய வரலாற்றின் போக்கினையே மாற்றியமைத்தனர். இராட்டிரகூடர்களின் தென்னிந்திய படையெடுப்புகளும் குறிப்பிடதகுந்தவைகளாகும். மூன்றாம் கிருஷ்ணன் தென்னிந்தியாவில் இராமேஸ்வரம் வரை சென்றார். மேலும் இவர்கள், பாலர்கள், பிரதிகாரர்கள், கீழை சாளுக்கியர்கள், சோழர்கள் ஆகியோரை வென்றனர்.

## இராட்டிரகூடர்களின் பங்களிப்புகள்

இராட்டிரகூடர்கள் கலை மற்றும் கட்டிடக்கலைகளைப் பெருமளவில் ஆதரித்து வளர்த்தனர். முதலாம் கிருஷ்ணன். கைலாசநாதர் கோயிலை எல்லோராவில் கட்டினார். மும்பைக்கு அருகில் உள்ள எலிபண்டா குகைக்கோயிலை கட்டி முடித்தவர்கள் இராட்டிரகூடர்களே. அமோகவர்ஷன் இலக்கியங்களை வளர்த்தார். மேலும் இவர் கன்னடமொழியில் 'கவிராச மார்க்கம்' என்ற இலக்கியத்தை படைத்துள்ளார். இவரின் ஆசிரியர் ஜினசேனர் என்பவர் பார்சுவநாதரின் வாழ்க்கை வரலாற்றை பார்சுவஉதயம் என்ற நூலாக படைத்தார்.

### துவாரசமுத்திரத்தை ஆண்ட ஹொய்சாளர்கள் (கி.பி.11–14 நூற்றாண்டுகள்)

துவாரசமுத்திரம் என்னும் பகுதியிலிருந்து ஆட்சி செய்த ஹொய்சாளர்கள். பிற்கால கல்யாணி, மேலைச் சாளுக்கியர்களின்குறுநில அரசர்களாவார்கள். முதலாம் வினியாதித்தன் (கி.பி.1006–1022) மைசூர் பகுதி அடங்கிய ஒரு சிற்றரசை நிறுவி, சோசவீர் என்ற இடத்தை தலைநகராக்கி ஒரு குறுநில அரசானார். இம் மரபில் குறிப்பிடத்தக்கவர் விஷ்ணுவர்தனர் ஆவார். இவர்தம் தலைநகரை துவாரசமுத்திரத்திற்கு மாற்றினார். முதலாம் குலோத்துங்க சோழனிடமிருந்து கங்கவாடி பகுதியைக் கைப்பற்றினார். சாளுக்கியர்களுக்கும், சோழர்களுக்கும் இடையீட்டு அரசாக கங்கவாடி திகழ்ந்தது.

ஹொய்சாள மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர் இரண்டாம் வீரபல்லாளா (கி.பி.1173–1220) என்பவராவார். இவர் யாதவ மரபைச் சேர்ந்த ஐந்தாம் பில்லாமாவை வென்று ஹொய்சாளர்களின் வலிமையை உறுதிசெய்தார்.

இரண்டாம் நரசிம்மன் (கி.பி.1220–1235)காலத்தில் சிங்கனா என்ற யாதவ அரசரிடம், கிருஷ்ணா–துங்காபத்ரா நதிகளின் இடைப்பட்ட பகுதிகளை இழந்தார். இவர் தமிழகத்தில் மாறவர்மன் சுந்தரபாண்டியனைத் தோற்கடித்து சோழநாட்டுப் பகுதிகளை மூன்றாம் இராசராசனுக்கு மீட்டுக் கொடுத்தார். இராமேஸ்வரத்தில் ஒரு வெற்றித்தூணையும் நட்டார்.

ஹொய்சாள மரபின் பிற்கால மன்னர்களில் சிறந்த பேரரசர் மூன்றாம் பல்லாளா (கி.பி.1291–1342) ஆவார். இவர் கி.பி. 1310ல் மாலிக்கபூரால் தோற்கடிக்கப்பட்டார், கி.பி.1342–ல் மதுரை சுல்தான்களுடனான போரிலும் தோற்கடிக்கப்பட்டார். இவரது மகன் நான்காம் பல்லாளா தந்தை விட்டுச்சென்ற போர்களைத் தொடரவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். இவரது மறைவுக்குப்பின் ஹொய்சாளப் பேரரசு முடிவுற்றது.

### ஹொய்சாளர்களின் பங்களிப்பு

மைசூர் அரசு அமைவதற்கு ஹொய்சாளர் வழியமைத்துத் தந்தனர். ஹொய்சள மன்னர்கள், கலை, இலக்கியம், கட்டிடக்கலைகளுக்கு முழுமையான ஆதரவை நல்கினர். துவாரசமுத்திரம், பேளூர் ஆகிய இடங்களில் ஏராளமான கோயில்களைக் கட்டினர். அக்கோயில்களில் இராமயணம், மகாபாரத காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவர்கள் கன்னட இலக்கியங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டனர். நியச்சந்திரா, கண்டி, ராகவங்கர், நேமிச்சந்திரன் ஆகியோர் இக்காலத்தில்சிறந்த இலக்கியங்களைப் படைத்தார்கள்.

### வாரங்கலை ஆண்ட காகதீயர் (கி.பி.12–14 ஆம் நூற்றாண்டுகள்)

கல்யாணியை ஆண்ட மேலைச்சாளுக்கியர்களிடம் குறுநில அரசர்களாக இருந்தவர்களே காகதீயர்கள். இவர்கள் வராங்கல் பகுதியை ஆட்சி செய்தனர். காகதீய அரசர் இரண்டாம் புரோலா என்பவர் (கி.பி.1110–1158) சாளுக்கியர்களிடமிருந்து, கிருஷ்ணா–கோதாவரி இடையிலான பகுதியை வென்றார். அனுமகொண்டா இவர்களது தலைநகராகமாக இருந்தது. புரோலாவின் மகன் முதலாம் பிரதாபருத்ரன் (கி.பி,1158–1196) தமது தலைநகரை வாரங்கலுக்கு மாற்றினார்.

இவருக்கு அடுத்த, குறிப்பிடத்தக்க அரசர் கணபதி (கி.பி.1199–1261) ஆவார். இவர் சோழர்களிடமிருந்து காஞ்சிபுரம்பகுதியை வென்றார். கலிங்கம், மேற்கு ஆந்திரா ஆகியவற்றின் மீதும் படையெடுத்தார்.

கணபதியிடமிருந்து ஆட்சி உரிமையை அவரது மகள் ருத்ராம்பாள் (கி.பி. 1261–1291) பெற்றார். இவரது ஆட்சியில் நாடானது, வளமும், அமைதியும் பெற்று விளங்கியது. ருத்ராம்பாள் தனது பேரன் இரண்டாம் பிரதாபருத்ரனுக்காக தமது மணிமுடியைத் துறந்தார். பிரதாபருத்ரன் காலத்தில் மாலிக்கபூர் கி.பி.1309ல் வாரங்கல் மீது படையெடுத்தார். எனவே பிரதாபருத்ரன் தம் அரசை தற்காத்துக் கொள்ள ஏராளமான செல்வத்தை மாலிக்கபூருக்கு தந்தார்.

கியாசுதீன் மகன் உலூக்கான், கி.பி. 1323ல் வாரங்கலை தாக்கி பிரதாபருத்ரனை சிறைப்பிடித்து டெல்லிக்கு அனுப்பினார். இவரது வழிவந்தோர் தொடர்ந்து துக்ளக் வம்சத்துடன் போர்களில் ஈடுபட்டனர். இறுதியாக கி.பி.1327ல் முகமதுபின் துக்ளக், வாராங்கலை கைப்பற்றினார்.

காகதீயர்களின் இறுதிமன்னரான வினயகதேவன் கி.பி.1362ல். பாமினி சுல்தான் முதலாம் முகமதுஷா என்பவரால் கொல்லப்பட்டார், இதனால் காகதீய அரசு முடிவுக்கு வந்தது.



ஆயிரம் தூண் ஆலயம்–அனுமகொண்டா

### காகதீயர்களின் பங்களிப்பு

காகதீய மன்னர்கள் கலை, இலக்கியங்களுக்கு நல்லாதரவு தந்தனர். அனும கொண்டாவில் இவர்கள் கட்டிய ஆயிரம்தூண் ஆலயம், இவர்களது கட்டிடக் கலைக்கு நிலைத்த புகழினை தரும் ஒன்றாகும்.

### தேவகிரியை ஆண்ட யாதவர்கள் (கி.பி.12–14 ஆம் நூற்றாண்டுகள்)

தேவகிரியை ஆட்சி செய்த யாதவர்கள் தங்களை, புராண நாயகனான கிருஷ்ண பகவானின் வழிவந்தோர் எனக் கூறிக்கொண்டனர். இவர்கள் நாசிக் முதல் தேவகிரி (தௌலதாபாத்) வரையில் அமைந்திருந்த செவுனா பகுதியை ஆண்டதால் செவுனர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்களின் முன்னோர்கள் இராட்டிரகூடர்களிடமும், பிற்கால மேலைச்சாளுக்கியர்களிடம் குறுநில அரசர்களாக இருந்தவர்களாவர்.

ஐந்தாம் பில்லம்மா (கி.பி. 1175–1190) கல்யாணியை ஆண்ட மேலைசாளுக்கியர்களின் வீழ்ச்சியை பயன்படுத்திக் கொண்டார். அம்மரபின் அரசர் ஐந்தாம் சோமேசுவரனைத் தோற்கடித்து தம்மை அப்பகுதியின் சுதந்திர அரசராக அறிவித்துக் கொண்டார். ஹொய்சள அரசர் இரண்டாம் வீரபல்லாளனுடன் (கி.பி.1173–1220) போரிட்டார். லக்குண்டி போர்களத்தில் ஐந்தாம் பில்லம்மா இறந்தார்.

இவரது மகன் ஜெய்திரபாலா, (கி.பி.1191–1210) காகதீயர்கள், காளச்சூரிகள், கூர்ஜர்கள் ஆகியோரை தோற்கடித்தார். இவரையடுத்து இவரது மகன் சிங்கனா (கி.பி. 1210–1247) பட்டமேற்றார். இவர் இம்மரபின் மிகச்சிறந்த மன்னராவார். காகதீய

அரசர் மகாதேவனை வென்றார். ஹொய்சாள மன்னன் இரண்டாம் வீரபல்லாளனை தோற்கடித்து, கிருஷ்ணா நதியையும் கடந்து, தனது எல்லையை விரிவுப்படுத்தினார். குஜராத் மீது பலமுறை படையெடுத்தார். சில்ஹாரா மரபின் கீழ் இருந்த கொல்லாபூரை வென்று தம் நாட்டுடன் இணைத்துக்கொண்டார்.

சிங்கனாவை அடுத்து அவரது பேரன் கிருஷ்ணா (கி.பி.1247–60) பட்டமேற்றார். கிருஷ்ணாவுக்குப்பின்னர் அவரது சகோதரன் மகாதேவா(கி.பி.1260–71) மன்னரானார். மகாதேவா, வடகொங்கன் பகுதியை தனது நாட்டுடன் இணைத்து சில்ஹாரா ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

இராமச்சந்திரதேவா (கி.பி.1271–1309) இம்மரபின் இறுதி மன்னராவார். இவரை அலாவுதீன் கில்ஜி தோற்கடித்து டெல்லிக்குத் திறைசெலுத்தும் அரசராக மாற்றினார். இவரை அடுத்து அரசரான இவரின் மகன் சங்கரதேவர் (கி.பி.1309–1312) டெல்லி சுல்தானுக்கு திறை செலுத்த தவறிய காரணத்தினால் மாலிக்கபூர், சங்கரதேவனை போரிட்டுக் (கி.பி.1312) கொன்றார். இதனால் வெகுண்ட சங்கரதேவனின் மைத்துனர் ஹரபாலர், கில்ஜிகளுக்கு எதிராக போர்தொடுத்தார் இறுதியில் ஹரபாலரும் அலாவுதீன் கில்ஜியின் மகன் முபாரக்என்பவரால் கொல்லப்பட்டார். இவற்றின்பின்னர் யாதவ அரசு முடிவடைந்தது.

### யாதவர்களின் பங்களிப்பு

தேவகிரி கோட்டையானது யாதவர்களால் கட்டப்பட்டது. வலிமைவாய்ந்த இந்தியக் கோட்டைகளில் இதுவும் ஒன்று. டெல்லி சுல்தானியர்கள் இக்கோட்டைக்குள் ஜும்மா மசூதி, சாந்மினார் ஆகியவற்றை பிற்காலத்தில் கட்டினர். யாதவர்கள் அறிவியலையும், வானவியலையும் ஆதரித்து வளர்த்தனர்.

### தக்காண அரசுகளின் முடிவு

தக்காண அரசுகள் ஒன்றுக்கொன்று இடைவிடாமல் நிகழ்த்திய போர்களினால் அனைத்து தக்காண அரசுகளும் வலிமையை இழந்தன. மேலும் அலாவுத்தீன் காலத்திலிருந்து தொடர்ந்த டெல்லி சுல்தானியர்களின் தாக்குதல், இத்தக்காண அரசுகளின் வீழ்ச்சிக்கு முழுமையாக வழிவகுத்தது.

## பயிற்சி

I) சரியான விடையை எழுதுக.

1. விருபாக்ஷர் ஆலயமானது __________ கோயிலைப் போல கட்டப்பட்டுள்ளது.

   அ) கைலாச நாதர் ஆ) பிரகதீஸ்வரர் இ) ஹொய்சலேஸ்வரர்

2. இராட்டிரகூடர்களின் ஆட்சி __________ காலத்தில் உயர்நிலை அடைந்தது,

   அ) தந்தி துர்கா ஆ) கோவிந்தன் இ) துருவன்

3. ஹாயசாள மன்னர் விஷ்ணு வர்தனர், தலைநகரை சோசவீர் என்ற இடத்திலிருந்து __________ க்கு மாற்றினார்.

   அ) துவாரசமுத்திரம் ஆ) வாரங்கல் இ) தேவகிரி

4. காகதீயர் மன்னர் __________ இறப்பிற்கு பின்னர் காகதியமரபு முடிவடைந்தது.

அ) இரண்டாம் பிரதாபருத்ரன் ஆ) வினயகத் தேவன் இ) ருத்ராம்பாள்

5. மிகச் சிறந்த யாதவ மன்னர்__________.

அ) ஜெய்திரபாலர் ஆ) சிங்கனா இ) கிருஷ்ணன்

## II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. முற்கால மேலைச் சாளுக்கியர்களில் மிகச்சிறந்த அரசர்__________.
2. குலோத்துங்கச்சோழன், சாளுக்கிய அரசினை __________ அரசுடன் இணைத்தார்.
3. வட இந்தியாவில் இருந்த இரத்தோர்களின் வழிவந்தோரே __________ ஆவார்.
4. முதலாம் கிருஷ்ணர் எல்லோராவில் கட்டிய கோயில் __________.
5. மூன்றாம் பல்லாளா __________ மரபின் பிற்காலச்சிறந்த பேரரசர் ஆவார்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. இரண்டாம் புலிகேசி | தேவகிரி |
| 2. விருபாக்ஷா கோயில் | துவாரசமுத்திரம் |
| 3. ஹொய்சாளர்கள் | வாரங்கல் |
| 4. காகதீயர்கள் | முற்கால மேலைச் சாளுக்கியர் |
| 5. யாதவர்கள் | பட்டாடக்கல் |

## IV) குறுகிய விடையளி.

1. தக்காணத்தை வட இந்தியாவிலிருந்து எவை பிரிக்கின்றன ?
2. கி.பி. 1190க்கு பிறகு கல்யாணியை ஆண்ட பிற்கால மேலைச்சாளுக்கியர்களுக்கு திறை செலுத்தி வந்த அரசுகள் எத்தனை பிரிவுகளாக பிரிந்தது. ?
3. இராட்டிரகூட அரசர் துருவன் பற்றி சிறுகுறிப்பு வரைக.
4. ஹொய்சாளர்களின் கலை மற்றும் கட்டிடக் கலைகளைப் பற்றி நீவிர் அறிவது யாது ?
5. எதனால் தக்காண அரசு முடிவடைந்தது ?

## V) விரிவான விடையளி.

1. தக்காணத்தை எப்பொழுது சாளுக்கியர்கள் ஆண்டார்கள் ? முற்கால மேலைச் சாளுக்கியர்கள் குறித்து விரிவாக எழுதவும்.
2. இராட்டிரகூட அரசர் தந்திதுர்கா பற்றி விரிவாக எழுதவும்.

## VI) செய்யவேண்டியன.

1. இந்திய வரைப்படத்தில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களை குறிக்கவும் . வாதாபி, வெங்கி, கல்யாணி, துவாரசமுத்திரம், மால்கெட், ஐஹோலே, எல்லோரா, வாரங்கல்.

# 3. தென்னிந்திய அரசுகள்

பண்டைய தமிழகமானது. சேர, சோழ, பாண்டியநாடு என்ற முப்பெரும் அரசியல் பிரிவுகளைக் கொண்டதாக இருந்தது. அக்காலம் சங்ககாலம் எனப்பட்டது. பின்னர் களப்பிரர்கள் கி.பி.300 முதல் 600 ஆம் ஆண்டு வரையில் ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் தமிழகத்தை ஆண்டனர். அதன் பின்னர் மீண்டும் ஆட்சியை பிடித்த, பிற்கால பல்லவப் பேரரசு, சோழப்பேரரசு, பாண்டியப்பேரரசு இவைகளைப் பற்றி இப்பாடத்தில் நாம் படிக்க இருக்கின்றோம்.

## பல்லவப்பேரரசு

### பல்லவர்களின் அரசியல் வரலாறு

பல்லவர்களின் தோற்றம் குறித்து பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இவர்கள் பாரசீகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், சாதவாகனர்கள் கீழ் ஆட்சி அலுவலர்களாக இருந்தவர்கள் என்றும், தொண்டை மண்டலத்தைத் தாயகமாகக் கொண்டவர்கள் என்றும் கூறுவர்.

பல்லவ மரபை, முற்காலப் பல்லவர், பிற்காலப் பல்லவர் என பிரித்து வழங்குவர். சிம்மவிஷ்ணுவின் தலைமையில் பல்லவர்கள், களப்பிரர்களை தோற்கடித்து வடதமிழ்நாடாகிய தொண்டை மண்டலத்தில் தமது ஆட்சியை நிறுவினர். பல்லவர்களின் தலைநகரம் காஞ்சிபுரம் ஆகும்.

### பிறகாலப் பல்லவர்கள் (கி.பி.570–903)

பிற்காலப் பல்லவ அரசர்களில் முதன்மையானவர் சிம்ம விஷ்ணு. இவர் களப்பிரர்களை வீழ்த்தி பல்லவர் ஆட்சியைத் தொண்டை மண்டலத்தில் தொடங்கி வைத்தார். பின்னர் சோழப்பகுதிகள் சிலவற்றையும் கைப்பற்றினார். மேலும் வடக்கில் ஆந்திரப் பகுதியான விஷ்ணுகுண்டின் முதல், தெற்கில் காவிரி ஆறு வரையில் விரிந்ததொரு பேரரசை நிறுவினார். அதனால் இவர் அவனிசிம்மன் அதாவது உலகின் சிங்கம் எனப்புகழப்பட்டார்.

இவரைத் தொடர்ந்து பல்லவ அரசை ஆட்சி செய்தவர்களில், முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவார்.

### முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி.600–630)

சிம்மவிஷ்ணுவின் மகன் முதலாம் மகேந்திரவர்மன் ஆவார். இவரது காலத்தில் சாளுக்கியர்களோடு பகைமை ஏற்பட்டது. சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசி, பல்லவ நாட்டின் மீது போர் தொடுத்தார். மகேந்திரவர்மனைத் தோற்கடித்து பல்லவநாட்டின் வடபகுதிகளைக் கைப்பற்றினார்.

மகேந்திரவர்மன் தமது ஆட்சியின் தொடக்கத்தில் சமணமதத்தை பின்பற்றினார். பின்னர் சைவக்குரவர் அப்பர் என்பவரால் சைவத்திற்கு மாற்றப்பட்டார். மகேந்திரவர்மன் பல்வேறு திறன்களைக் கொண்டிருந்தார். கட்டிடக்கலையிலும், ஓவியக்கலையிலும், இசைக்கலையிலும், கொண்ட ஈடுபாட்டினால் இவர் பல சிறப்புப் பெயர்களை பெற்றிருந்தார்.

இவர் அமைத்த குடைவரைக் கோயில்கள், மண்டகப்பட்டு, பல்லாவரம்,

மாமண்டூர், மகேந்திரவாடி, தளவானூர், திருச்சிராப்பள்ளி, சீயமங்கலம் ஆகிய இடங்களில் உள்ளன. அவைகளை இன்றும் நாம் காணலாம். மேலும் இவர் மகேந்திரமங்கலம், மகேந்திரவாடி என்ற இரண்டு நகரங்களை நிறுவினார்.

### முதலாம் நரசிம்மவர்மன்(கி.பி.630–668)

முதலாம் மகேந்திரவர்மனின் மகன் முதலாம் நரசிம்மவர்மன் ஆவார். இவரை 'மாமல்லன்' என்றும் அழைப்பர். மற்போரில் சிறந்தவன் என்பது இதன் பொருளாகும். சாளுக்கியர் தலைநகரான வாதாபிக்குப் படையெடுத்துச் சென்று வென்றதால் இவர் 'வாதாபி கொண்டான்' எனவும் புகழப்பட்டார். இவரது நண்பர் மானவர்மனுக்காக, இருமுறை இலங்கையின் மீது போரிட்டு வென்று ஆட்சியை மீட்டுக்கொடுத்தார். நரசிம்மவர்மன் ஆட்சியின் போதுதான் சீனப்பயணி யுவான்சுவாங், தலைநகர் காஞ்சிக்கு வருகை தந்தார்.

நரசிம்மவர்மன் சிறந்த கட்டிடக்கலை நிபுணராகவும் விளங்கினார். மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் ரதங்கள் இவரது கட்டிடக்கலைக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். இவரைத் தொடர்ந்து இரண்டாம் மகேந்திரவர்மன் (கி.பி. 668–670), முதலாம் பரமேஸ்வர வர்மன் (கி.பி.670–691) ஆகியோர் ஆட்சிபுரிந்தனர்.

### இரண்டாம் நரசிம்மவர்மன் (இராஜசிம்மன்) கி.பி.691–728

முதலாம் பரமேஸ்வரவர்மனின் மகன் இரண்டாம் நரசிம்மவர்மன் ஆவார். இவர் பல்லவ மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவரது ஆட்சிக்காலத்தில் பல்லவநாடு, அமைதியும், வளமும் கொண்டு விளங்கியது. காஞ்சிபுரத்தில் கைலாசநாதர் கோயில், மாமல்லபுரத்தில் கடற்கரைக்கோயில், பனைமலையில் தாளகிரீஸ்வரர் கோயில் உட்பட பல ஆலயங்களை இவர் கட்டினார்.



காஞ்சி கைலாசநாதர் கோயில்

இவரது அரசவையில் பல அறிஞர்கள் இடம்பெற்றிருந்தனர், அவர்களுள் தண்டி என்ற வடமொழி அறிஞர்ஒருவராவார். இவர் தண்டி அலங்காரம் என்னும் சமஸ்கிருத இலக்கண நூலை எழுதினார். நரசிம்மவர்மன் ஆட்சியில் சீனாவுடன் வணிக உறவு ஏற்பட்டது ஒரு முக்கிய நிகழ்வாகும்.



பல்லவர் கால நாணயம்

### இரண்டாம் பரமேஸ்வரவர்மன் கி.பி.728–731

இரண்டாம் நரசிம்மவர்மனின் மகனான இரண்டாம் பரமேஸ்வரவர்மன் கி.பி.728ல் ஆட்சியில் அமர்ந்தார். சாளுக்கிய மன்னர் இரண்டாம் விக்கிரமாதித்தனால் போரில் தோற்கடிக்கப்பட்டார். கங்கர்களோடு நடைபெற்ற போரில் பரமேஸ்வர வர்மன்

கொல்லப்பட்டார். இவரது மரணத்திற்கு பிறகு இவரின் மகன்கள் ஆட்சிக்கு வராத காரணத்தினால் சிம்மவிஷ்ணுவால் தொடங்கப்பட்ட பிற்கால பல்லவ மரபு முடிவடைந்தது.

### இரண்டாம் நந்திவர்மன் பல்லவமல்லன் கி.பி. 731–796

இரண்டாம் பரமேஸ்வரனின் இறப்பிற்குப் பிறகு சிம்மவிஷ்ணுவின் தம்பியும் இரண்யவர்மனின் மகனுமான இரண்டாம் நந்திவர்மன் என்பவரை, பல்லவ அமைச்சர்கள். கடிகைகளின் (கல்வி நிலையங்கள்) உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரால் பல்லவ அரசராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாம் நந்திவர்மன் விஷ்ணுபக்தர் ஆவார். காஞ்சியில் கைலாசநாதர் கோயிலைக் கட்டினார். திருமங்கை ஆழ்வார் இவரின் சமக்காலத்தவராவர்.

பல்லவ மன்னர்களில் குறிப்பிடத்தக்க மற்றொரு மன்னர் மூன்றாம் நந்திவர்மன் (கி.பி.847–870) ஆவார். இவர் தெள்ளாறு என்னுமிடத்தில் நடைபெற்ற பெரும் போரில் பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லபனை வென்றார். எனவே இவரை தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் என நந்திக்கலம்பகம் புகழ்கிறது.

### பல்லவப் பேரரசின் வீழ்ச்சி

பல்லவ அரசர்களில் இரண்டாம் நரசிம்மவர்மனுக்கு பிறகு ஆட்சி செய்தவர்கள் திறமையற்றவர்களாக இருந்தார்கள். இவர்கள் பாண்டியர்களுடன் போரிட்டார்கள். கடைசி பல்லவ அரசர் அபராஜிதனை (கி.பி 885–903) சோழமன்னர் ஆதித்தன் தோற்கடித்தார். அபராஜித்தனுக்குப் பிறகு தொண்டை மண்டலத்தில் பல்லவர்கள் ஆட்சி முடிவுற்றது.

### பல்லவர்களின் நிர்வாகம்

பல்லவர்கள் சிறந்ததொரு நிர்வாக அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர். பல்லவநாடு பல 'ராஷ்டிரம்' எனக்கூடிய மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. மண்டலங்கள் பல விஷயங்களாகவும் (கோட்டங்களாகவும்), விஷயங்கள் பல நாடுகளாகவும், நாடுகள் பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டன. மைய அரசின் தலைவராக மன்னர் விளங்கினார். மன்னருக்கு உதவியாக அமைச்சர்களும், செயலர்களும் இருந்தனர். உரிமையியல், குற்றவியல் ஆகிய நீதிமன்றங்களும் இருந்தன.

நிர்வாகத்தின் அடிப்படை அலகு கிராமம் ஆகும். கிராமத்தை நிர்வகிக்க 'ஊர் அவை' இருந்தது. கிராமங்களின் வளர்ச்சிக்கு வாரியங்கள் பாடுபட்டன, ஏரிவாரியம், தோட்டவாரியம், கோயில்வாரியம் உள்ளிட்ட சுமார் இருபது வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### பல்லவர்களின் கொடைகள் இலக்கியம்

பல்லவ மன்னர்கள் கல்விக்கு பெரும் ஆதரவு தந்தனர். முதலாம் மகேந்திரவர்மன் மத்தவிலாச பிரகசனம், பகவதவியூகம் ஆகிய நூல்களை எழுதினார் பாரவி 'கீர்தார்சுனியம்' என்ற நூலை எழுதினர். தண்டி என்பார் அவந்தி சுந்தரி கதாசாரம் என்னும் நூலையும், பெருந்தேவனார் பாரத வெண்பாவையும் எழுதினர். ஆழ்வார்களும். நாயன்மார்களும் எழுதிய பாடல்களில் பல, பல்லவர் காலத்தைச் சேர்ந்ததாகும். புகழ்பெற்ற நந்திக்கலம்பகமும் இக்காலகட்டத்தில் எழுதப்பட்டது.

### பல்லவர் கால கலைகள்

திராவிடபாணியிலான கட்டிடக்கலை பல்லவர்கள் காலத்தில்

தொடங்கப்பட்டது. இவர்களது கட்டிடக்கலையை நான்கு விதமாக பிரிக்கலாம். முதலாவதாக, பாறைக்குடைவு கோயில்கள், இவை முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் ஏற்படுத்தப்பட்டன. எடுத்துக்காட்டாக, மகேந்திரவாடி, மாமண்டூர், தளவானூர், சீயமங்கலம், திருச்சிராப்பள்ளி, திருக்கழுகுன்றம் உள்ளிட்ட பல இடங்களில் உள்ளன. இரண்டாவதாக, ஒற்றைக்கல் இரதங்கள், மண்டபங்கள் ஆகியன. இவை மாமல்லபுரத்தில் உள்ளன. மூன்றாவது அமைப்பு, இராஜசிம்மன் வகையிலானது. காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோயில், மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக்கோயில் ஆகியன இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். நான்காவது வகையானது, கட்டுமான கோயில்கள் ஆகும். காஞ்சியில் உள்ள முக்தீஸ்வரர் ஆலயம், வைகுந்த பெருமாள் கோயில் ஆகியன இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.



ஒற்றைக்கல் ரதங்கள்–மாமல்லபுரம்

பல்லவ மன்னர்கள் இசை, ஓவியம், நுண்கலைகளை ஆதரித்தனர். இசையில் வல்லவராய் திகழ்ந்ததால் முதலாம் மகேந்திரவர்மன் 'சங்கீரணசாதி' என்றும், அவரது ஓவிய ஆற்றலால் 'சித்திரக்காரப்புலி' என்றும் புகழப்பட்டார். பல்லவர்காலத்து அழகிய ஓவியங்கள் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் காணப்படுகின்றன.

## சோழப்பேரரசு

சோழர்களின் வரலாறு மிகவும் பழமையானது. மகாபாரதத்திலும், அசோகரின் கல்வெட்டுகளிலும், மெகஸ்தனிஸ், தாலமி ஆகியோரது குறிப்புகளிலும் சோழர்களைப் பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. சங்க காலத்தில் சோழர்கள் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளை ஆட்சி செய்துள்ளனர். அவர்களது அன்றைய தலைநகராமாக உறையூர் விளங்கியது. சோழர்களது இலச்சினையாக 'புலி' உருவம் இடம்பெற்றது. முற்காலச் சோழர்களில் கரிகாலசோழன் புகழ்பெற்றவர் ஆவார். இவர் காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டினார். முற்காலச் சோழர்கள் தமது இறுதிக்காலத்தில் உறையூரை மட்டுமே ஆட்சி செய்யுமளவில் சிற்றரசர்காளயினர்.

## பிற்காலச் சோழர்கள்

கி.பி.9 ஆம் நூற்றாண்டின் இடையில், பிற்கால சோழர்கள் வலிமை பெற்றனர். விஜயாலயசோழன் (கி.பி. 850 – 871) முத்தரையர்களிடமிருந்து தஞ்சாவூரைக் கைப்பற்றினார். இதுவே பிற்கால சோழர்கள் ஆட்சியமைக்க அடித்தளமாக அமைந்தது. தஞ்சாவூர் இவர்களின் தலைநகரமானது, பிற்காலத்தில் இச்சோழ மரபு தென்னிந்தியாவின் பெரும் பகுதியையும், இலங்கை, கடாரம் (சுமத்ரா, மலேசிய பகுதிகள்) ஆகிய பகுதிகளையும் வென்றதால் இவர்கள் பேரரசு சோழர்கள் (imperial cholas) எனப்பட்டனர்.

விஜயாலய சோழனின் மகன் முதலாம் ஆதித்த சோழன் (கி.பி.871–907). இவர் தொண்டை மண்டலம் உள்ளிட்ட சோழ மண்டலத்தைத்

தம்குடையின் கீழ் கொண்டுவந்தார். கங்கர்களையும் கொங்கு நாட்டினரையும் வென்றார். ஆதித்த சோழனின் மகன் முதலாம் பராந்தகன் (கி.பி.907–955) பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து, அதன் தலைநகரான மதுரையை வென்றதால் 'மதுரை கொண்டான்' என்ற புகழப்பட்டார். புகழ்பெற்ற தக்கோலம் போரில் இராட்டிரகூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணனிடம் தோற்று, கி.பி.955ல் மரணமடைந்தார்.

### முதலாம் பராந்தகனுக்குப் பிறகு ஆட்சி செய்தவர்கள்

1) கண்டராதித்தன் (கி.பி, 949–957)

2) அரிஞ்சயன் (கி.பி.956–957)

3) இரண்டாம் பராந்தகன் (கி.பி. 956–973)

4) ஆதித்தன் (கி.பி. 956–966)

5) உத்தம சோழன் (கி.பி. 965–985) இவர்களில் சிலர் இணைந்து ஆண்டார்கள்.

### முதலாம் இராஜராஜ சோழன் (கி.பி.985–1014)

சோழமரபில் ஆட்சிசெய்த மன்னர்களில் மிகச் சிறந்த ஆட்சியாளர் முதலாம் இராஜராஜசோழன் ஆவார். இவர் சிறந்த வெற்றியாளராகவும் விளங்கினார். சேரர், பாண்டியர், சாளுக்கியர்களை போர்களில் வென்றார். இலங்கை மன்னன் ஐந்தாம் மகிந்தனையும் வென்று இலங்கையின் தலைநகரை அனுராதபுரத்திலிருந்து பொலனருவுக்கு மாற்றினார். அங்கு ஒரு சிவன் கோயிலையும் கட்டினார். முந்நீர் பழந்தீவுகள் எனப்பட்ட மாலத்தீவுகளையும் வென்றார். இவர்காலத்தில் சோழப்பேரரசின்பரப்பு தென்னிந்தியாவையும் கடந்து பரந்து விரிந்திருந்தது.

இராஜராஜன், சேரமன்னன் பாஸ்கரவர்மனை காந்தளூர் சாலை (திருவனந்தபுரம்) என்னுமிடத்தில் வென்றார். கல்யாணியை ஆண்ட சத்யசரயாவிடமிருந்து வேங்கியைக் கைப்பற்றி சக்திவர்மனுக்கு அளித்தார். இவருடைய மகளை சக்திவர்மனின் சகோதரர் விமலாதித்தனுக்கு மணமுடித்தார். மேலும் கங்கவாடி, தடிகைபாடி, நொளம்பாடி ஆகிய மைசூரின் பகுதிகளையும், ரெய்ச்சூர் தோஆப் பகுதியையும் வென்றார்.

மும்முடிசோழன், ஜெயங்கொண்டான், சிவபாதசேகரன் போன்ற பல சிறப்புப் பெயர்களை இராஜராஜன் பெற்றிருந்தார். இவர் சைவ சமயத்தைப் பின்பற்றினார். இவரது காலத்தில்தான் தேவாரம் தொகுக்கப்பட்டது. கி.பி.1010 ஆம் ஆண்டில் தஞ்சாவூரில் பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டினார். இவர் கி.பி.1014ல் இயற்கையெய்தினார்.



பிரகதீஸ்வரர் ஆலயம்–தஞ்சாவூர்

### முதலாம் இராசேந்திரன் (கி.பி.1012–1044)

இராஜராஜ சோழனின் மகனான இராஜேந்திரசோழன் தம் தந்தையின் வழியில் சோழப் பேரரசை விரிவுபடுத்தினார். இடைதுறைநாடு

(ரெய்ச்சூர் தோஆப்), வனவாசி (கடம்பர் தலைநகர்), கொள்ளிப்பாக்கை (ஹைதராபாத் பகுதி), மண்ணைக்கடக்கம் (மால்கெட்) ஆகிய இடங்களை வென்றார். ஈழமண்டலம் எனப்பட்ட இலங்கை முழுவதையும் கைப்பற்றினார். மேலும், பாண்டியர், சேரர், மேலைச்சாளுக்கியர் ஆகியோரையும் தோற்கடித்தார்.

வங்காளத்தின் மீது படையெடுத்த இராசேந்திரன், அந்நாட்டு மன்னர் மகிபாலனை வென்றார், இவ்வெற்றியின் நினைவாக 'கங்கை கொண்ட சோழபுரம்' என்னும் நகரை நிறுவினார்.

ஸ்ரீவிஜயம், கடாரம் மற்றும் நிக்கோபார் தீவுகளைச் சார்ந்த பகுதிகள் மற்றும் மலேயா தீபகற்பம் ஆகிய இடங்களை, கடல் கடந்து போரிட்டு வென்றது இவரது மிகச்சிறந்த செயலாகும். இவருக்கு, கங்கைகொண்டான், பண்டித சோழன், கடாரம் கொண்டான் போன்ற சிறப்புப் பெயர்களை அமைந்தன. இராசேந்திரன் காலத்தில் சோழப்பேரரசானது புகழின் உச்சநிலையை எய்தியது.

முதலாம் இராசேந்திரனின் வழித்தோன்றல்கள்,

முதலாம் இராசாதிராசன்–கி.பி.1018–1054.

இரண்டாம் இராசேந்திரன்–கி.பி.1056–1064.

இராசமகேந்திரன்–கி.பி.1060–1063.

வீரஇராசேந்திரன்–கி.பி.1063–1070.

அதிஇராசேந்திரன்–கி.பி.1067–1070.

இவர்களில் சிலர் இணைந்து ஆண்டார்கள்.

## முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி.1071–1122)

முதலாம் இராஜேந்திர சோழனின் மகளான அம்மங்கா தேவி என்பாரின் மகனே முதலாம் குலோத்துங்க சோழன் ஆவார். குலோத்துங்கசோழனின் தந்தை வெங்கியைச் சேர்ந்த இராசராசன் ஆவார். இவர் வெங்கியை ஆண்ட சாளுக்கியமரபைச் சேர்ந்தவர். பின்னர் சோழநாட்டுக்கு மன்னரானார். இவர் சோழநாட்டுடன் வெங்கியை இணைத்து, சாளுக்கிய–சோழமரபைத் தோற்றுவித்தார். மேலைச்சாளுக்கியர்களை வென்று கலிங்கத்தைக் கைப்பற்றினார். இவர் காலத்தில் இலங்கை, சோழப்பேரரசிலிருந்து விடுதலை பெற்றது. ஸ்ரீவிஜயம் என்ற நாட்டுடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தால் கி.பி.1077ல் அங்கு வணிகக் குழுவினரையும் அனுப்பி வைத்தார்.

முதலாம் குலோத்துங்கன் சிறந்த நிர்வாகியாக விளங்கினார். நிலங்களை அளந்து வரி விதித்ததோடு, சுங்கவரியை நீக்கி வணிகத்தை எளிமைபடுத்தியால் இவர் 'சுங்கம் தவிர்த்த சோழன்' எனப்போற்றப்பட்டார்.

இவர், ஜெயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, கம்பர் முதலான கவிஞர்களை ஆதரித்தார்.

## சோழப் பேரரசு சிதறுதல்

சோழ மன்னன் மூன்றாம் இராசேந்திரன் (கி.பி. 1246–1279) காலத்தில் சோழப் பேரரசு சிதைவுறத் தொடங்கியது, காடவராயன் போன்ற குறுநில மன்னர்கள் எழுச்சி, பாண்டிய நாட்டு எழுச்சி ஆகியவை சோழ அரசை நிலைகுலையச் செய்தது. பாண்டிய மன்னன் இரண்டாம் ஜடாவர்ம சுந்தரப்பாண்டியன், சோழநாட்டின் கடைசி அரசனான மூன்றாம்

இராசேந்திரனை வென்று சோழ நாட்டைக் கைப்பற்றினார்.

### சோழர்களின் ஆட்சிமுறை

சோழர்களின் ஆட்சிமுறையானது சிறந்த, திறமையான நிர்வாக அமைப்பாக உருவாக்கப்பட்டிருந்தது. சோழநாட்டின் நிர்வாக அடிப்படை அலகு'ஊர்' என்பதாகும். பல ஊர்கள் சேர்ந்தவை வளநாடு என்றும், பல வளநாடுகள் சேர்ந்தது மண்டலம் என்றும், மண்டலங்கள் அனைத்தும் ஒருங்கே சேர்ந்ததாக சோழநாடு விளங்கியது.

முதலாம் பராந்தக சோழன் காலத்தைச் சார்ந்த உத்திரமேரூர் கல்வெட்டு, கிராம நிர்வாகத்தைப் பற்றி விரிவாக விளக்குகிறது. ஒவ்வொரு கிராமமும் ஊர் அல்லது சபை என்ற அமைப்பின் மூலம் நிர்வாகிக்கப்பட்டது. கிராமசபை உறுப்பினர்கள் குடவோலை முறையின்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதன்படி உறுப்பினர்களாக போட்டியிடுவோரின் பெயர்களை பனை ஓலையில் எழுதி ஒரு குடத்திலிடுவர். ஒரு சிறுவன் அல்லது சிறுமியை அழைத்து குடத்தில் உள்ள ஓலைகளை எடுக்கச் செய்வர். அவ்வாறு 30 ஓலைகள் எடுக்கப்பட்டு, அவற்றில் உள்ள பெயர்களுக்குரியோர் உறுப்பினர்களாக அறிவிக்கப்படுவர்.

வாரியங்கள் என்ற விரிவான நிர்வாக அமைப்பும் நடைமுறையில் இருந்தது. அவைகளுள், சமவத்சர வாரியம், ஏரி வாரியம், தோட்ட வாரியம், பஞ்சவாரியம்,பொன் வாரியம், புறவு வரி வாரியம் ஆகியவை குறிப்பிடத் தகுந்தன ஆகும், இதன் உறுப்பினர்கள் வாரிய பெருமக்கள் எனப்பட்டனர். வாரிய எண்ணிக்கையும், உறுப்பினர் எண்ணிக்கையும் கிராமங்களுக்கேற்ப மாறுபட்டது.

### சமூக, பொருளாதார நிலை

சோழர்கால சமூகத்தில் சாதிமுறை வழக்கில் இருந்தது. சதி, தேவதாசி போன்ற வழக்கங்கள் நடைமுறையில் காணப்பட்டன. பெண்கள் 'சிறுபாடு' என்னும் சிறுசேமிப்பு பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர்.

> **வரி பொத்தகம்**
>
> வரிவிதிப்பு நடைமுறைகளை சோழர்காலத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதித்தொகுத்தனர். இது வரி பொத்தகம் (புத்தகம்) எனப்பட்டது.
>
> இராஜராஜன் காலத்தில் (கி.பி.1001) வரிவிதிப்புக்கான கணக்கெடுப்புப் பணி சேனாதிபதி குரவன் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது.

இக்காலத்தில் நெசவு, உலோக உருக்குத் தொழில்கள் மேன்மையுற்றன, மக்கள் மன்றங்கள் பரவலாக இருந்தன. சீனா, சுமத்ரா, ஜாவா, அரேபியா ஆகிய நாடுகளுடன் வணிக உறவு ஏற்பட்டிருந்தது.

### சமயமும், கல்வியும்

சோழ வேந்தர்கள் சைவ சமயத்தின் மீது ஈடுபாடு கொண்டிருந்தனர். எனினும் புறச்சமயங்களான, வைணவம், சமணம், பௌத்தம் ஆகியவற்றையும் மதித்து நடந்தனர். ஆலயங்களும், மடங்களும் கல்விமையங்களாக விளங்கின. இங்கு, வேதங்கள், புராணங்கள், கணிதம், மருத்துவம் ஆகியன கற்பிக்கப்பட்டன. இவைகளைப்பற்றிய குறிப்புகளை எண்ணாயிரம், திருமுக்கூடல், திருபுவனம் ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

### இலக்கியம்

சோழர்காலம் தமிழ் இலக்கியவளர்ச்சிக்கு புத்துணர்வு தந்தது. சேக்கிழாரால் பெரிய புராணமும்

## பல்லவப் பேரரசு



வாதாபி
புள்ளலூர்
தக்கோலம்
மயிலாப்பூர்
சீயமங்கலம்
மாமல்லபுரம்
தெள்ளாறு
பனைமலை
திருச்சி
தஞ்சாவூர்
இலங்கை

## சோழப் பேரரசு


கல்யாணி
வெங்கி
நுளம்பபாடி
கங்கபாடி
தடிகைபாடி
காஞ்சி
உத்திரமேரூர்
கொங்குநாடு
கங்கைகொண்ட சோழபுரம்
திருச்சி
தஞ்சாவூர்
மதுரை
இலங்கை

(திருத்தொண்டர்புராணம்), திருத்தக்க தேவரால் சீவக சிந்தாமணியும் எழுதப்பட்டன. கம்பராமாயணத்தை கம்பரும், கலிங்கத்து பரணியை செயங்கொண்டாரும் எழுதினர், சைவ நூலான பன்னிரு திருமுறைகளை நம்பியாண்டார் நம்பியும், வைணவ நூலான நாலாயிர திவ்யபிரபந்தத்தை நாதமுனியும் தொகுத்தனர். மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், தக்கயாபரணி ஆகியவற்றை ஒட்டக்கூத்தர் எழுதினார். உரையாசிரியர்களான இளம்பூரனார், நச்சினார்கினியார், பரிமேலழகர், ஆகியோர் சோழர் காலத்தவரே.

## கலையும், கட்டிடக்கலையும்

திராவிட பாணியிலான கலைகளும், கட்டிடக்கலையும் சோழர்கள் காலத்தில் முழு வடிவத்தைப் பெற்றன. கோயில் கருவறையின் மீது கட்டப்பட்ட விமானம் உயரமாக வடிவமைக்கப்பட்டது. கிருஷ்ணா ஆறு தொடங்கி, மன்னார் வளைகுடா வரையில் சுமார் எழுபது ஆலயங்களில் சோழர்களின் சிறந்த கட்டிடக்கலை அடையாளங்களைக் காணலாம். திருச்சிராப்பள்ளி, திருவரங்கம், தஞ்சாவூர்,கும்பகோணம், சிதம்பரம், திருவண்ணாமலை, சுசீந்திரம், திருவனந்தபுரம், உடுப்பி போன்ற இடங்களில் கட்டப்பட்ட ஆலயங்கள் சோழர்களின் கலையை பிரதிபலிக்கும் வகையில் சிறப்புடன் திகழ்கின்றன.

முற்கால சோழர்களின் கட்டிடக்கலையானது எளிமையான வேலைப்பாடுகளை உடையதாகும். நார்தாமலையின் விஜயாலய சோழீஸ்வரம், கொடும்பாளூரின் ஐவர்கோயில் ஆகியன இக்காலத்தைச் சேர்ந்தவை. பிற்கால சோழர்களின் தொடக்க காலத்தில் எழுப்பப்பட்ட ஆலயங்கள் கம்பீரமானவை. அவை, தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயம் மற்றும் கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள சிவன் கோயில் போன்றனவாகும். இப்பிரகதீஸ்வரர் ஆலயம் உலகத்தொன்மையான சின்னங்களுள் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது போற்றுதலுக்குரியதாகும். தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயத்து விமானத்தின் உயரம் 216 அடியாகும். மூலவர் அறையின் மீது கட்டப்பட்ட விமானம் 13 அடுக்குகளாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பிற்கால சோழர்களது கட்டிடப்பணிகள் அழகும், நேர்த்தியும் ஒருங்கே அமைந்தனவாகும். தஞ்சாவூர் சுப்பிரமணியர் ஆலயம், தாராசுரம் அறிவட்டேசுவரர் கோயில், கும்பகோணம் அருகே திருபுவனம் என்னுமிடத்தில் உள்ள கம்பஹரேஸ்வரர் அல்லது திருபுவனேஸ்வரர் கோயில் ஆகியனவும் பிற்காலச் சோழர்களால் கட்டப்பட்டவை.

## சிற்பங்கள்

சோழர்களது சிற்பங்களிலும், உலோகச் சிலைகளிலும் காணப்படும் அழகிய உருவங்கள், கற்பனை வடிவங்கள், அலங்கார வேலைப்பாடுகள் எல்லாமே அவர்களது தனித்துவமிக்க



நடராஜர்–உலோகச்சிலை

ஈடுபாட்டை பிரதிபலிக்கிறது. இதனுள் முதலாம் இராஜராஜனின் சிற்பமானது கலைநயம் கொண்டது. சிவன், விஷ்ணு, பிரம்மா, எண் கரங்களுடன் காட்சிதரும் துர்கை, ஆகிய சிவன், விஷ்ணு ஆலயச் சிற்பங்கள் அனைத்துமே மிகுந்த அழகு வாய்ந்தவை.

கும்பகோணம் நாகேஸ்வரர் கோயிலில் உள்ள நடராசர், அர்த்தநாரீஸ்வரர் ஆகிய உலோகச் சிலைகள், சோழர் கலையம்சத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## ஓவியங்கள்

சோழர்களது சுவரோவியங்கள் எழிலுற அமைந்துள்ளன. அவை, தஞ்சாவூர், திருமயம், காஞ்சி கைலாசநாதர் கோயில், நார்தாமலை விஷ்ணுகோயில் ஆகிய இடங்களில் காணலாம்.

## இசை

நுண்கலை எனப்படும் இசைக்கலையானது வளர்ச்சி பெற்ற காலம் இது. இன்றைய கர்னாடக இசைக்கு சோழர்காலத்தில்தான் அடித்தளமிடப்பட்டது. இதே நாட்களில்தான் பரதநாட்டியம் என்னும் அழகு மிளிரும் ஆடற்கலையும் தோன்றியது.

## சோழர் ஆட்சியின் விளைவுகள்

கி.பி.850ல் தொடங்கி கி.பி.1279ஆம் ஆண்டுவரையில் சுமார் 430 ஆண்டுகள் தமிழகத்தில் ஆட்சி செய்த சோழர்களின் காலத்தில் தமிழகம் பல துறைகளில் வளர்ச்சி கண்டது. அரசியல், நிர்வாகம், தமிழ் இலக்கியம். கோயிற்கட்டிடக்கலை, இசை, ஆடல், ஆகிய அனைத்து கலைகளிலும் சோழர்கள் தங்களின் தாக்கத்தினையும், முத்திரையையும் பதித்தார்கள்.

கடல்கடந்து பல நாடுகளை தம் ஆட்சியின்கீழ் கொண்டு வந்த 'பேரரசு சோழர்'களின் காலத்தில் தமிழ் சமுதாயத்தின் பெருமை திக்கெட்டும் பரவியது.

## பாண்டியப் பேரரசு

அன்றைய கால கட்டத்தில் பரந்திருந்த பாண்டியப் பேரரசானது இன்றைய மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களும், திருச்சிராப்பள்ளியின் ஒரு பகுதி மற்றும் திருவாங்கூரின் சில பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது. மெகஸ்தனிஸ், பிளினி, கிரேக்க எழுத்தாளர்கள், சமஸ்கிருத இலக்கண அறிஞர் கத்யாயணர் ஆகியோரது குறிப்புகளிலும், பழந்தமிழ் இலக்கியங்களிலும், யுவான்–சுவாங், மார்கோபோலோ, இஸ்லாமிய வரலாற்றாளர் வாசஃப் ஆகிய வெளிநாட்டவரின் பயணக் குறிப்புகளிலும் பாண்டியரின் வரலாற்றுச் செய்திகளை அறியலாம். பாண்டியர்களின் வரலாற்றை, முற்காலப்பாண்டியர்கள், முதலாம் பாண்டியப்பேரரசு மற்றும் இரண்டாம் பாண்டியப்பேரரசு என மூன்று காலக்கட்டங்களாக வகைப்படுத்தப்படுகிறது.

## முற்காலப்பாண்டியர்கள்

முற்காலப் பாண்டியர்கள் தமிழை வளர்க்க தமிழ்ச்சங்கங்கள் அமைத்து பெருமை பெற்றவர்களாவர். பாண்டியர்களின் தலைநகரம் மதுரை ஆகும். அவர்களது இலச்சினை மீன் உருவமாகும். தமிழகத்தை களப்பிரர்கள் கைப்பற்றியபோது முற்காலப் பாண்டியர் ஆட்சியானது முடிவுக்கு வந்தது.

## முதலாம் பாண்டியப் பேரரசு

பாண்டிய அரசர் கடுங்கோன், களப்பிரர்களை வென்று கி.பி. 6ஆம் நூற்றாண்டின் இறுதியில்

## பாண்டிய பேரரசு




பாண்டியர்களின் ஆட்சியை மலரச் செய்தார். இக்காலகட்டத்தையே (கி.பி.550–950) முதலாம் பாண்டியப் பேரரசுகாலம் என்பர்.

அரிகேசரி மாறவர்மன், இரணதீரன், முதலாம் மாறவர்மன் இராஜசிம்மன் முதலாம் வரகுணன் மற்றும் ஸ்ரீமாறன்ஸ்ரீவல்லபன் ஆகியோர் முதலாம் பாண்டிய பேரரசின் முக்கிய அரசர்களாவார்கள். இவர்கள் பாண்டிய பேரரசை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் விரிவுபடுத்தினார்கள்.

### முதலாம் பாண்டியப் பேரரசின் முடிவு

ஸ்ரீமாறன்ஸ்ரீவல்லபனின் வழித்தோன்றல்கள் பல்லவ, சோழர்களோடு பலமுறை போரிட நேரிட்டது. கி.பி. 10 முதல் 11 ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர்கள் பலமுறை போரிட்டும் தமது பழைய பெருமையை நிலைநிறுத்த முடியவில்லை. அவர்களோடு நடந்த தொடர் போராட்டங்களில் பாண்டியப் பேரரசு சிதறுண்டுபோனது.

### இரண்டாம் பாண்டியப் பேரரசு

கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் பாண்டியர்கள் மெல்ல, சோழரின் தலைமையிலிருந்து விடுபட்டு தங்களது தனியரசை நிறுவினர். இந்நிலையில் விக்கிரம பாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் இடையில் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. சோழ வேந்தன் மூன்றாம் குலோத்துங்கனின் ஆதரவோடு விக்கிரம பாண்டியன் ஆட்சியைப் பிடித்தார். முதலாம் ஜடாவர்ம குலசேகர பாண்டியன் (கி.பி.1190–1216) தமது தந்தை விக்கிரம பாண்டியனை அடுத்து ஆட்சிப்

பொறுப்பேற்றார். இவரது ஆற்றலால், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளை தம் குடையின் கீழ் கொண்டுவந்தார். இவரையடுத்து ஆட்சிசெய்ய இவரது சகோதரன் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்கு மகுடம் சூட்டினார்.

### முதலாம் மாறவர்மன் சுந்தரப்பாண்டியன் (கி.பி. 1216–1238)

இவர் ஆட்சிக்கு வந்தபின் சோழநாட்டுடன் போரிட முனைந்தார். கி.பி.1219ல் மூன்றாம் குலோத்துங்க சோழனை போரிட்டு வென்றார். எனினும் ஹொய்சாளர்கள் சோழர்களுக்கு ஆதரவாக செயல்பட்டதால் தான் வென்ற சோழ நாட்டை குலோத்துங்கனிடமே கொடுத்தார். இதனால் 'சோணாடு வழங்கியருளிய சுந்தரப் பாண்டியன்' என்று புகழப்பட்டார்.

### இரண்டாம் மாறவர்மன் சுந்தரப்பாண்டியன் (கி.பி–1238 –1253)

இவர் ஆட்சியேற்றபின் ஹொய்சாள மன்னர் சோமேஸ்வரன் உதவியுடன், சோழமன்னன் மூன்றாம் இராஜேந்திரனிடமிருந்து சில பகுதிகளை மீட்டெடுத்தார்.

### முதலாம் சடையவர்மன் சுந்தரப்பாண்டியன் (கி.பி. 1253–1268)

இவர், இரண்டாம் மாறவர்மன் சுந்தரப்பாண்டியனை அடுத்து ஆட்சிப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் பாண்டியப் பேரரசு வடக்கே, நெல்லூர், கடப்பா முதற்கொண்டு தெற்கே கன்னியாகுமரி வரையில் விரிவுபெற்றது. 'எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரப் பாண்டியன், மகாராஜாதிராஜா, ஸ்ரீபரமேஸ்வரன், பொன்வேய்ந்த பெருமாள்' என்றெல்லாம் இவர் சிறப்பிக்கப்பட்டார்.

இவரது மகன் முதலாம் மாறவர்மன் குலசேகரன் (கி.பி.1268–1308) ஆட்சியின்போது பேரரசு மேலும் வலுப்பெற்றது. இவர் இலங்கையையும், சேரர்களிடமிருந்து கொல்லம் பகுதியையும் வென்றார், இதனால் கொல்லம் கொண்ட பாண்டியன் என்று சிறப்பிக்கப்பட்டார். இவரது ஆட்சிக்குப் பிறகு, இவரது மகன்களிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப்போரை அடுத்து பாண்டிய நாட்டின் புகழ் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

### பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி

முதலாம் மாறவர்மன் குலசேகரனின் மகன்களான சுந்தர பாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும், ஏற்பட்ட அரசுரிமைப் போரில் பாண்டியநாடு பிளவுபட்டது. சுந்தரபாண்டியன், டெல்லியை ஆண்ட அலாவுதீன் கில்ஜியின் உதவியை நாடினார். அலாவுதீன் தமது தளபதி மாலிக்கபூர் என்பாரை அனுப்பி சுந்தர பாண்டியனுக்கு ஆட்சியை மீட்டுத் தந்தார்.

கில்ஜிமரபினருக்குப்பின் வந்த துக்ளக்மரபினர் தங்களின் ஆதிக்கத்தை தென்னிந்தியாவிலும் விரிவு படுத்தினார்கள். பாண்டிய பேரரசை தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்கள். பின்னர் துக்ளக் மரபினர் வீழ்ச்சியடைந்த காரணத்தினால் மதுரை சுல்தான்கள் தனியே மதுரையை ஆளத் தொடங்கினார்கள். மதுரை சுல்தான்களின் எழுச்சியினால் முழுமையாக பாண்டிய பேரரசு வீழ்ச்சியடைந்து.

## பாண்டியர்களின் நிர்வாகம்

பாண்டியநாடு முழுவதும் பாண்டிய மண்டலம் எனப்பட்டது. மண்டலமானது பல வளநாடுகளாகவும், வளநாடு பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டது. மன்னர் தமக்கு உதவியாக, அரையர்கள் எனப்பட்ட அமைச்சர்களையும், படைத்தளபதியையும் நியமித்துக் கொண்டார். வரியை பெறுவதற்கும் கணக்குகளை சரிபார்க்கவும் சிறப்பு அதிகாரிகளையும் பணியமர்த்தினார்.

## உள்ளாட்சி

அறநிலை, நீர்நிலை நாணயம், வரித்தண்டல் மற்றும் நீதிவாரியங்கள் என்ற ஐந்து வாரியங்களும், ஒவ்வொரு கிராமத்தையும் நிர்வகித்தன,

## தொழில்

வேளாண்மை வாணிபம் மக்களின் முக்கிய தொழிலாக இருந்தன. வேளாண்தொழில் செய்வோர் 'பூமி புத்திரர்கள்' எனப்பட்டனர். அடிமைகள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டனர். பாண்டியநாடு முத்துக்குளிக்கும் தொழிலில் சிறந்து விளங்கியது. பாண்டிய நாட்டு முத்துக்கள் வெளிநாட்டு சந்தைகளில் விரும்பி வாங்கப்பட்டன. கொற்கை, தொண்டி ஆகியன சிறந்த துறைமுகங்களாக விளங்கின.

## இலக்கியம்

திருவாசகம் மாணிக்க வாசகரால் எழுதப்பட்டது. ஆண்டாள் திருப்பாவையையும் நம்மாழ்வார் திருப்பல்லாண்டையும், வில்லிபுத்தூரார் மகாபாரதத்தையும், அதிவீரராம பாண்டியன் நைடதம் என்னும் நூலையும் எழுதினர். சேயூர் முருகன் உலா மற்றும் இரத்தினகிரிஉலா ஆகிய நூல்களை ஸ்ரீகவிராயர் எழுதினார். பாண்டியர் கலை, இலக்கியவளர்ச்சிக்கு பெரும்பங்களித்தனர்.

## கலைகளும், கட்டிடக்கலையும்

பாண்டியர்கள் கலைகளைவளர்ப்பதிலும் கட்டிடக் கலையிலும் குறிப்பிடத்தகுந்த அளவு பங்காற்றியுள்ளனர். கோயிற் கட்டிட கலையில் கருவறை, விமானம், பிரகாரம், கோபுரம் ஆகிய கட்டுமானப் பணிகளில் பாண்டியர்களின் கலைப்பாங்கு தனித்துவம் பெற்றது.

பாறைகளைக் குடைந்து குடைவரைக் கோயில்களை உருவாக்குவதிலும் இவர்கள் முத்திரைப் பதித்துள்ளனர். பாண்டியர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடைவரைகளைக் கோயில்களை உருவாக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக திருப்பரங்குன்றம், ஆனைமலை, கழுகுமலை, திருச்சிராப்பள்ளி, குன்றக்குடி, சித்தன்னவாசல் ஆகியவற்றை கூறலாம்.

கோயில்பட்டி, திருப்பத்தூர், மதுரை, ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் உள்ள கட்டுமானக் கோயில்கள் பாண்டியர் காலத்தவையாகும். குலசேகர பாண்டியன் என்ற மன்னன் தனது ஆட்சிக்குட்பட்ட இடங்களில் உள்ள எல்லா கோயில்களிலும், அர்த்த மண்டபம், மணி மண்டபம், சன்னதிகள் ஆகியவற்றை கட்டித்தந்துள்ளார்.

கோயில்கள் மக்களது வாழ்வில் முக்கிய இடம் பெற்றன. அவை, சமய நிகழ்ச்சிகள் நடைபெறும் இடமாகவும், மக்கள் கூடிப்பேசும் மன்றமாகவும், அரசியல், பொதுப்பிரச்சனைகள் ஆகியனவற்றை பேசித்தீர்க்கும் அம்பலமாகவும் இருந்தன. மேலும், சமயப்பாடல்கள், இசை, கதைக்களம், நாடகமேடை போன்ற பல்வேறு

கலைகளின் தொட்டிலாகவும் விளங்கின.

### சிற்பங்கள்

பாண்டியரது சிற்பங்கள் அழகும், அலங்காரமும் மட்டும் வெளிப்படுத்தவில்லை, அவை விலை மதிப்பற்ற வரலாற்று செய்திகளையும் நமக்குத் தருகின்றன. மேலும் சோமேஸ்கந்தர், துர்கை, கணபதி, நரசிம்மர், நடராசர் ஆகிய சிற்பங்களைக் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற சிற்பங்களை, கழுகுமலை, திருப்பரங்குன்றம், திருமலைபுரம், நார்த்தாமலை, குன்றக்குடி ஆகிய இடங்களிலும் காணலாம்.

### ஓவியங்கள்

அனைத்து நுண்கலைகளிலும் பாண்டியர் கால ஓவியங்கள் தனித்துவம் பெற்றுள்ளன. ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்து சுவரோவியத்தை, சித்தன்னவாசல் குடைவரையில் காணலாம். அதில் வரையப்பட்டுள்ள தாமரைப் பூக்கள், துள்ளும் மீன்கள், நீராடும் யானைகள் போன்ற ஓவியங்கள் அழகு வாய்ந்தவை.



சித்தன்னவாசல்

பாண்டிய மன்னர்கள், தமிழர் சமுதாயத்திற்கும், தென்னிந்திய வரலாற்றுக்கும் ஏராளமான, விலைமதிப்பற்ற அடையாளங்களை விட்டுச் சென்றுள்ளனர் என்றால் அது மிகையாகாது.

## பயிற்சி

I) சரியான விடையை எழுதுக.

1. பல்லவ அரசர் ____________ களப்பிரர்களை வீழ்த்தி, பல்லவர் ஆட்சியை தொண்டை மண்டலத்தில் தொடங்கி வைத்தார்.

   அ) சிம்ம விஷ்ணு ஆ) முதலாம் மகேந்திர வர்மன்

   இ) இரண்டாம் நரசிம்ம வர்மன்

2. முதலாம் நரசிம்ம வர்மனின் பட்டப் பெயர்____________.

   அ) வாதாபி கொண்டான் ஆ) ஜெயம்கொண்டான்

   இ) கடாரம் கொண்டான்.

3. காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டியவர் ____________.

   அ) முதலாம் இராசேந்திரன் ஆ) கரிகால சோழன் இ) இராஜராஜ சோழன்

4. முதலாம் ஆதித்த சோழனின் மகன் முதலாம் பராந்தகன், பாண்டிய மன்னரை தோற்கடித்ததால் ____________ என்ற பட்டப்பெயரைப்பெற்றார்.

   அ) மதுரை கொண்டான் ஆ) முடிக்கொண்டான் இ) கடாரம் கொண்டான்

5. பாண்டிய பேரரசானது, பாண்டிய ____________ என அழைக்கப்பட்டது.

அ) மண்டலம் ஆ) வளநாடு இ) ஊர் அவை

6. ஆண்டாள் இயற்றிய நூல் ____________.

அ) தேவாரம் ஆ) திருப்பாவை இ) இராமயணம்

## II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. முதலாம் நரசிம்ம வர்மன் ஆட்சியில், காஞ்சிக்கு வந்தவர் ____________.
2. ஒற்றைக்கல் இரதங்கள் ____________ ல் உள்ளன.
3. சுங்கம் தவிர்த்த சோழன் என அழைக்கப்படுபவர் ____________.
4. ____________ மதத்தை சோழ மன்னர்கள் ஆதரித்தார்கள்
5. திருவாசகத்தை எழுதியவர் ____________.
6. ஸ்ரீமாறன் ஸ்ரீ வல்லபன் கால சுவரோவியம் ____________ குடைவரையில் காணலாம்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. ஊரவைகள் | சமஸ்கிருத இலக்கண அறிஞர் |
| 2. கடற்கரைக் கோயில் | இராமயணம் |
| 3. கம்பர் | கிராம அவைகள் |
| 4. பிரகதீஸ்வரர் கோயில் | கிரேக்க எழுத்தாளர் |
| 5. மெகஸ்தனிஸ் | தஞ்சாவூர் |
| 6. கத்யாயணர் | மாமல்லபுரம் |

## IV) குறுகிய விடையளி.

1. பல்லவர்களின் தோற்றம் குறித்து சிறுகுறிப்பு வரைக.
2. பல்லவர்களின் நிர்வாகப் பிரிவுகளை குறித்து எழுதுக.
3. சோழர்களைப் பற்றி அறிய உதவும் ஆதாரங்களை குறிப்பிடுக.
4. சோழர்களின் கலை மற்றும் கட்டிடக் கலைகளின் முதன்மை மையங்கள் யாவை ?
5. முதலாம் மாறவர்மன் குலசேகரன் பற்றி நீவிர் அறிவது யாது ?
6. பாண்டியர் காலத்தில் செய்யப்பட்ட தொழில்கள் சிலவற்றை குறிப்பிடுக.

V) விரிவான விடையளி.

1. கலை, கட்டிடக்கலை மற்றும் நுண்கலைகளுக்கு, பல்லவர்கள் ஆற்றிய பங்களிப்பினை விளக்கமாக எழுதுக.
2. சோழர்களின் நிர்வாக அமைப்பினை விரிவாக விளக்குக.
3. இரண்டாம் பாண்டியப்பேரரசைப் பற்றி விரிவாக எழுதவும்.

VI) செய்யவேண்டியன.

1. இந்திய வரைப்படத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்
   மாமல்லபுரம், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், தஞ்சாவூர், மதுரை.
2. தென்னிந்தியப் பேரரசுகளின் கலை மற்றும் கட்டிடக்கலை ஆகியவற்றின் படங்களை சேகரித்து ஒரு படத்தொகுப்பினைத் தயாரிக்கவும்.
   பல்லவர்கள் அல்லது சோழர்கள் அல்லது பாண்டியர்கள் வரலாற்று தொடர்பான இடங்களுக்கு கல்விப் பயணம் அழைத்துச் செல்லும்படி பள்ளி நிர்வாகிகளுக்கு வேண்டுகோள் விடுத்து கல்விப் பயணம் செல்க.

# 4. அரேபியர், துருக்கியர் படையெடுப்பு

இஸ்லாமியர்களின் தோற்றமும், வளர்ச்சியும் உலக வரலாற்றில் ஒரு முக்கியமான அத்தியாயத்தைத் தொடங்கி வைத்துள்ளது. இஸ்லாம் மதத்தைத் தோற்றுவித்தவர் முகமது நபி (கி.பி.570–632) ஆவார். இஸ்லாம் சமயம் முதன்முதலாக பாலைவன நாடுகளில் வளரத் தொடங்கியது. அரேபியர்கள்தான் முதன் முதலில் இஸ்லாமிய மதத்தை பின்பற்ற ஆரம்பித்தார்கள். இஸ்லாமியர்களை வலிமைமிக்க அரசியல் இயக்கமாக ஆசியாவில் நிலைநிறுத்தியர்களும், அரேபியர்களே ஆவார்கள்.

அரேபியர்களைத் தொடர்ந்து பாரசீகர்கள் இஸ்லாம் மதத்தை வலிமையுடன் வளரச் செய்தார்கள். துருக்கியர்கள் இஸ்லாமிய மதத்தை மேற்கு மற்றும் கிழக்கு நாடுகளில் பரவச்செய்து, உலக மதங்களில் ஒரு முக்கிய மதமாக வளரச்செய்துள்ளனர்.

### அரேபியர்களின், சிந்து, முல்தான் படையெடுப்புகள் – கி.பி.712

பண்டைய காலம் தொட்டே அரேபிய நாடுகள் இந்தியாவுடன் வாணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்தன. இந்நிலையில் இந்தியாவின் சிந்து பகுதி மீது அரேபியர்கள் படையெடுக்க பல காரணங்கங்கள் இருந்தன.

செல்வ வளம் கொழிக்கும் சிந்து பகுதியின் துறைமுகங்கள் அரேபியர்களைக் கவர்ந்தது. எனவே சிந்து பகுதியில் அரேபியநிர்வாகத்தை நிலைநாட்ட முடிவு செய்தார்கள். கடற்கொள்ளையர்களைக் கட்டுப்படுத்தத் தவறிய சிந்து அரசர்கள் மீது கோபமடைந்து அதனையே உடனடிக் காரணமாக கொண்டு சிந்து பகுதியின் மீது படையெடுத்தனர்.

### முகமது–பின்–காசிம்

ஈராக் ஆளுநர் அல்ஹாஜாஜ், கலீபா வாலித் அனுமதியுடன் தனது மருமகன் முகமது பின் காசிமை சிந்து மீது படையெடுக்க அனுப்பினார்.

**வீரப்பெண்மணிகளின் தற்காப்பு**

சிந்துவின் மன்னர் தாகீர் தோற்றதால், ரேவார் கோட்டைக்குள் இருந்த அவரது மனைவி இராணிபாய் மற்றும் அரண்மனைப் பெண்களும் தற்காப்புப் போரில் இறங்கினர். அதுதோல்வியடையவே ஜவ்ஹர் என்ற வழக்கப்படி, எதிரியிடம் அகப்படாமல் இருக்க, தீயை மூட்டி அதில் குதித்து உயிர் துறந்தனர்.

**முகமது பின் காசிம் படைகள்**

மிகப்பெரிய படையை முகமதுபின் காசிம் வைத்திருந்தார்

6000 சிரியாநாட்டு குதிரைகள்,

6000 ஒட்டகங்கள்

3000 பாக்டீரிய நாட்டு ஒட்டகங்கள்

2000 காலாட்படை,

பாறைகளை எறியும் இயந்திரம் ஐந்து ஆக சுமார் 25000 வீரர்களைக் கொண்டதாக இருந்தது.

### ரேவார்படையெடுப்பு

சிந்துவின் மன்னர் தாகீர் மீது போரிட முகமது–பின்–காசிமும் படையுடன் வந்தார். ரேவாரில் நடைபெற்ற போரில் காசிம் படையே வென்றது. மேலும் முல்தான் நகரமும் கைப்பற்றப்பட்டது. காசிம், முல்தானில் நிறைய செல்வ வளங்களை பெற்றமையால் முல்தானை தங்கநகரம் என அழைத்தார்.

## நிர்வாகம் அமைப்பு

முகமது – பின் – காசிம், சிந்துவையும், முல்தானையும் நிர்வகிக்கும் பொருட்டு அவற்றை மாவட்டங்கள் எனப்படும் இக்தார்களாகப் பிரித்தார். இக்தார்களின் தலைவர்களாக தமது படை அதிகாரிகளை நியமித்தார். நிர்வாகத்தில் இந்து அதிகாரிகளும் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் இக்தாரின் உட்பிரிவுகளை நிர்வாகம் செய்தனர். முஸ்லீமாக அல்லதோர் மீது ஜிசியா வரியானது கட்டாயப்படுத்தி வசூலிக்கப்பட்டது.

## முகமது–பின்–காசிமின் முடிவு

கலீபா வாலித் என்பருக்குப் பின் சுலைமான் கலீபா என்பவர் பதவிக்கு வந்தார். இவர் ஈராக்கின் ஆளுனரான அல் ஹாஜாஜின் எதிரியாவார். எனவே இவர், அல் ஹாஜாஜின் மருமகனான முகமது–பின்–காசிமை பதவியிலிருந்து நீக்கி, கைது செய்து மெசபடோமியாவுக்கு அனுப்பினார். அங்கு அவர் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார். சிந்து முல்தான் பகுதி 150 ஆண்டுகளுக்கு மேலாக கலீபா ஆட்சியின் ஒரு பகுதியாக இருந்தது. பின்னர் கலீபாவின் ஆட்சி மெல்லமெல்ல மறைந்தது.

## அரேபிய படையெடுப்பின் விளைவுகள்

அரேபியர்கள் சிந்துவை வென்றதன் மூலமாக, பிற்காலத்தில் இஸ்லாமியர் இந்தியா வருவதற்கு வித்திட்டனர் எனலாம். இந்தியர்களிடமிருந்து, நிர்வாக முறை, வானவியல், இசை, ஓவியம், மருத்துவம், கட்டிடக்கலை ஆகியவற்றைக் கற்றுக்கொண்டனர். இந்திய தத்துவங்கள், இந்திய எண்கள், வானவியற்கலை ஆகியன அரேபியர் மூலமாக ஐரோப்பாவரை பரவியது.

## அரேபிய படையெடுப்பின் தாக்கங்கள்

பிரம்மகுப்தர் எழுதிய பிரம்மசித்தாந்தம் என்ற சமஸ்கிருத நூலானது அரபு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

அரேபிய நூல்களில் இந்திய அறிவியலாளர்களான பஹலா, மானகா, சிந்துபாத் ஆகியோர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பாக்தாத்நகரின் மருத்துவமனையில் தலைமை மருத்துவராக தாணா என்ற இந்தியர் நியமிக்கப்பட்டிருந்தார்.

கலீபா ஹாரூல் – அல் – ரஷித் என்பவருக்கு இருந்த ஆபத்தான நோயை மானகா என்பார் குணப்படுத்தினார்.

## துரக்கியப் படையெடுப்பு , இந்தியாவில் துருக்கியர் ஆட்சியை நிறுவுதல்

கி. பி. 8 மற்றும் 9 – ஆம் நூற்றாண்டுகளில், பாக்தாத் கலிபாக்களிடம் துருக்கியர்கள் மிகுந்த செல்வாக்குடன் இருந்தனர். துருக்கியர் அரேபியர்களைவிட தீவிரமான ஆக்கிரமிப்புக் கொள்கை உடையவர்கள். எனவே அரேபியர்கள் ஆதிக்கத்திலிருந்து. சிந்து, முல்தான் பகுதிகளையும் கடந்து இந்தியாவில் துருக்கியர்களின் ஆட்சியை ஏற்படுத்தினார்கள்.

## முகமது கஜினி

கஜினியின் அரசர் சபுக்டிஜினுக்கு பிறகு இஸ்மாயில் என்பவர் கஜினியின் அரசரானார். இவரின் சகோதரரான, முகமது கஜினி கி. பி. 998 – ல் இஸ்மாயிலை அரச பதவியிருந்து நீக்கி, அப்பதவியில் அமர்ந்தார். கி.பி.1000 ஆம் ஆண்டு இந்தியா மீது படையெடுத்தார். சாஹி மரபைச் சேர்ந்த இந்து அரசர் ஜெயபாலரைத் தோற்கடித்தார்.

முல்தான் அரசர் பதே தாவூத் மற்றும் நாகர்கோட்டை அரசர் ஆனந்த பாலர் ஆகியோரையும் வெற்றிக் கொண்டார்.

இவ்வெற்றிகளைத் தொடர்ந்து சந்தேலேர்களைத் தோற்கடித்தார். பின்பு மதுரா கனோஜ், குவாலியர் ஆகிய இடங்களை முற்றுகையிட்டு வெற்றிபெற்ற பிறகு ஏராளமான செல்வத்துடன் கஜினி திரும்பினார். ஒவ்வொரு படையெடுப்பின் வெற்றிக்கு பின்னர் அளவிடமுடியாத செல்வத்துடன் கஜினிக்குத் திரும்புவதை வழக்கமாக கொண்டிருந்தார்.

இந்தியாவில் முகமது கஜினி மேற்கொண்ட படையெடுப்பிலேயே முக்கியமானது கி.பி.1025ல் நடந்த சோமநாதபுர படையெடுப்பாகும். இந்த இடம் கத்தியவார் தீபகற்பத்தில் உள்ளது. இங்கு முகமது கஜினி படையெடுத்து வந்தபோது இப்பகுதியின் மன்னரான இராஜாபீமதேவனும் அவரது அதிகாரிகளும் அரண்மனையை விட்டு ஓடிவிட்டனர். எனவே கஜினி மிக எளிதாக வெற்றி பெற்று இருபது லட்சம் தினார்கள் மதிப்புள்ள விலையுயர்ந்த பொருட்களை கொள்ளையிட்டுச் சென்றார்.

> சர்ஹென்றி எலியட் எழுதிய, இந்திய வரலாறு என்னும் நூலில், முகமது கஜினியின் 17 படையெடுப்புகளைப் பற்றி குறிப்பிடுகிறார். ஒவ்வொரு முறையும் கஜினி எண்ணற்ற பெருஞ்செல்வங்களைக் கொள்ளையடித்து திரும்பிச் சென்றதாக எழுதியுள்ளார்.

### முகமது கஜினியைப் பற்றிய மதிப்பீடு

ஆசிய பகுதிக்குள் ஆட்சி செய்த வலிமைமிக்க இஸ்லாமிய மன்னர்களில் முகமது கஜினியும் ஒருவராவார். கல்வியாளர்களை பெரிதும் ஆதரித்தார். பிர்தௌசி, அல்பருனி ஆகிய அறிஞர்கள் இவரது அவையில் இடம் பெற்றிருந்தனர்.

### கஜினி மரபின் முடிவு

முகமது கஜினியின் வழிவந்தோர் திறமையற்றவர்களாக இருந்தனர். கோரி நாட்டையாண்ட அலாவுதீன் உசேன், கி.பி.1186ல் கஜினியைக் கைப்பற்றி, கொள்ளையிட்டு தீக்கரையாக்கினார். இதனால் கஜினி அரசு வீழ்ந்தது. கோரி மரபு ஆளத்தொடங்கியது.

### முகமது கோரி

இந்தியாவின் மீது படையெடுத்த முக்கியமான மூன்று இஸ்லாமிய படையெடுப்பாளர்களில் கோரியும் ஒருவர். ஹீரட்டுக்கும், கஜினிக்கும் நடுவே மலைப்பகுதியான கோரி என்ற இடத்திற்கு முகமது மன்னரானார். கோரி என்ற இடத்தை ஆண்டதால் முகமது கோரி என அழைக்கப்பட்டார்.

### படையெடுப்புகள்

வெற்றிகாண வேண்டுமென்ற நோக்கமும், துணிச்சலும் கொண்ட கோரி கி.பி. 1176ல் இந்தியா மீது படையெடுக்கத் தொடங்கினார். முதலில் முல்தான், உச் ஆகிய இடங்களைக் கைப்பற்றி பின்னர் கி.பி. 1182ல் சிந்து பள்ளத்தாக்கையும் கைப்பற்றினார். பின்னர் கி.பி. 1185ல் பஞ்சாபை வென்று, சியால்கோட் என்ற கோட்டையையும் பிடித்தார். கி.பி.1186ல் லாகூரை வென்றார்.

### முதலாம் தரைன்போர் (கி.பி. 1191)

கி.பி. 1189ல் முகமது கோரி பதிண்டா கோட்டையை வென்று இராஜபுத்திர அரசர் பிருதிவிராச சௌகான் நாட்டுக்குள் நுழைந்தார்.

பிருதிவிராசன் ஒரு பெரும் படையுடன் முகமது கோரியை எதிர்த்து போர் புரிந்தார். முடிவில் கோரி தோல்வியடைந்தார் கி.பி. 1191ல் தரைன் என்னுமிடத்தில் நடைபெற்ற போரின் முடிவில் பதிண்டா கோட்டையை பிருதிவிராசன் திரும்பப்பெற்றார்.

### இரண்டாம் தரைன் போர் (கி.பி.1192)

முகமது கோரி தனது படை வலிமையை பெருக்கிக் கொண்டு இரண்டாவது முறையாக கி.பி. 1192ல் பிருத்திவிராசனுடன் மோதினார். மற்ற இராசபுத்திர படைகளை தம்முடன் சேர்த்துக்கொண்டு பிருத்திவிராசன், கோரியுடன் போரிட்டார். ஆனாலும் இக்கூட்டுப்படைகளை கோரி எளிதாக தோற்கடித்தார். பிருத்திவிராசன் கைது செய்யப்பட்டு பின்னர் கொல்லப்பட்டார். இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக துருக்கிய முஸ்லீம் அரசுகள் இந்தியப் பகுதியில் நுழைய இந்த இரண்டாம் தரைன் போர் வழியமைத்துக் கொடுத்தது. முகமது, தான் வென்ற இந்திய பகுதியின் ஆளுனராக குத்புத்தீன் ஐபெக் என்பவரை நியமித்தார்.

### இராசபுத்திரர் போராட்டங்கள்

கி.பி. 1193க்கும் 1198க்கும் இடையே பல இராசபுத்திர அரசுகள் தாங்கள் இழந்த பகுதியை மீட்கப்போராடத் தொடங்கின. குத்புத்தீன் ஐபெக் இராசபுத்திரர்களை அடக்கி அவர்களின் பகுதிகளை தம் ஆதிக்கத்தில் கொண்டு வந்து முகமது கோரியின் அரசுடன் இணைத்தார். முகமது கோரி அரசின் தலைநகரமாக டெல்லி அமைந்தது.

### சந்தவார் போர் (கி.பி. 1194)

வடஇந்தியாவின், பெரும்பகுதியை உள்ளடக்கிய, கனோஜ்பகுதியை ஆண்ட இராசபுத்திர மன்னர் ஜெயச்சந்திரனுக்கு எதிராக முகமதுகோரி போரிட முனைந்தார். சந்தவார் என்ற இடத்தில் நடைபெற்ற பெரும்போரில், எங்கிருந்தோ பறந்து வந்த அம்பு ஒன்று ஜெயச்சந்திரனின் கண்ணைத் துளைத்தது. ஜெயச்சந்திரனும் தோற்கடிக்கப்பட்டு, கோரியால் கொல்லப்பட்டார். இந்த சந்தவார் வெற்றியானது முகமது கோரி தனது இந்திய அரசை மேலும் விரிவாக்கிக் கொள்ள வழியமைத்தது.

#### கோரியின் தந்திரம்

முகமது கோரி, இராசபுத்திர படையெடுப்பில் தந்திரத்துடன் செயல்பட்டார். தனது படையை ஐந்து பாகங்களாகப் பிரித்து அதில் நான்கு பிரிவுகளை இராசபுத்திரப்படைகளைச் சூழ்ந்து போரிடச் செய்தார். ஐந்தாவது பிரிவை காப்புப்படையாக நிறுத்தி வைத்தார். நாளெல்லாம் தீரமுடன் போரிட்ட இராசபுத்திரர்கள் களைப்படைந்த நேரத்தில் தமது காப்புப்படையை இராசபுத்திரர்களை தாக்குவதற்கு அனுப்பினார். இந்த ஐந்தாவது படைப்பிரிவான காப்புப்படை வேகமாக செயல்பட்டு இராசபுத்திரர்களை வீழ்த்தியது.

### வங்காளம், பீகார் படையெடுப்பு

முகமது கோரியின் தளபதி முகமது–பின்–பக்தியார் கில்ஜி என்பார், கி.பி.1202–1203 ஆண்டுகளில் விக்ரமசீலா, நாளந்தா ஆகிய பல்கலைக்கழகங்களை இடித்துத் தள்ளியதோடு வங்களத்தில் நடியா பகுதியையும், பீகார் பகுதியையும் கைப்பற்றினார்.

### முகமது கோரியின் இறப்பு

மத்திய ஆசியாவில் உள்ள தனது எதிரிகளைக் அடக்குவதற்காக முகமது கோரி, கஜினிக்குத் திரும்பினார். ஒருநாள் மாலையில் தொழுகையில்

ஈடுபட்டிருந்தபோது, ஷியா பிரிவைச்சேர்ந்த புரட்சியாளர்களும், கோகர்களும் சேர்ந்து 1206 ஆம் ஆண்டு மார்ச் 25–இல்அவரைக் கொலை செய்தனர்.

### மதிப்பீடு

கோரி முகமது பல்வேறு படையெடுப்புகளினால் வடஇந்திய இராசபுத்திரர்களின் பகுதிகளை வென்று துருக்கிய அரசை ஏற்படுத்தினார். இந்திய மண்ணில் துருக்கியப் பேரரசை உறுதியாக நிறுவியவர் முகமது கோரி எனலாம்.

## பயிற்சி

### I) சரியான விடையை எழுதுக.

1. முகமது –பின்–காசிம் ____________ மீது படையெடுக்க அனுப்பப்பட்டார்.
   அ) சிந்து ஆ) டெல்லி இ) கோரி
2. முகமது கஜினியினால் தோற்கடிக்கப்பட்ட சாஹி மரபைச் சேர்ந்த இந்து அரசர் ____________ஆவார்.
   அ)ஜெயசந்திரன் ஆ) ஜெயபாலர் இ) ராஜ்யபாலர்
3. முகமது கஜினி ____________ ஆண்டில் சோமநாதபுரத்தின் மீது படையெடுத்தார்.
   அ) கி.பி.1025 ஆ) கி.பி.1027 இ) கி.பி.1001
4. முதலாம் தரைன் போரில், முகமது கோரியை தோற்கடித்தவர் ____________ஆவார்.
   அ) சபுக்டிஜின் ஆ) கியாசுதீன் இ) பிருதிவிராசன்
5. முகமது கோரியின் படைதளபதி ____________ஆவார்.
   அ) குத்புத்தீன் ஐபக் ஆ) பால்பன் இ) நசீர் உத்தீன்

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. முகமது நபி தோற்றுவித்த மதம்____________.
2. முகமது–பின் –காசிம் ____________ஆண்டில் சிந்து மீது படையெடுத்தார்.
3. இரண்டாம் தரைன் போரில் முகமதுகோரி, ____________ னைக் கொன்றார்.
4. முகமுது–பின்–பக்தியார் கில்ஜி ____________ ஆண்டில் நடியா பகுதியைக் கைப்பற்றினார்.
5. இந்தியாவில் ____________பேரரசை உறுதியாக நிறுவியவர் என முகமது கோரி கருதப்படுகிறார்.

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. அல்ஹாஜாஜ் | தங்க நகரம் |
| 2. முல்தான் | இராக்கின் ஆளுநர் |
| 3. சபுக்டிஜின் | கத்தியவார் |
| 4. சோமநாதபுரக்கோயில் | அறிஞர் |
| 5. பிர்தௌசி | கஜினியின் அரசர் |

### IV) குறுகிய விடையளி.

1. சிந்துவில் அரேபியர்களின் நிர்வாக அமைப்பை குறித்து சிறுகுறிப்பு வரைக.
2. முகமது காசிமை யார் பதவியிலிருந்து நீக்கினார் ? ஏன் ?
3. முகமது கஜினியினால் தோற்கடிக்கப்பட்ட அரசர்கள் யாவர் ?
4. முகமது கோரி படையெடுத்து கைப்பற்றிய பகுதிகள் யாவை ?
5. இந்திய வரலாற்றில் சந்தவார் போர் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது ?

### V) விரிவான விடையளி.

1. இந்தியாவில் சிந்து, முல்தான் படையெடுப்புகள் மற்றும் அவற்றின் விளைவுகள் ஆகியவற்றை விரிவாக எழுதவும்.
2. முதல் மற்றும் இரண்டாம் தரைன் போர்களைப் பற்றி விரிவாக எழுதவும்.

### VI) செய்யவேண்டியன.

இந்தியாவிற்கு, பல்வேறு காலக் கட்டங்களில் படையெடுத்த வெளிநாட்டவர்களைப் பற்றி செய்திகளை சேகரிக்கவும்.

# 5. டெல்லி சுல்தான்கள்

கி.பி.1206 முதல் கி.பி.1526 வரையிலான காலம் சுல்தான்களின் காலம் எனப்படும். அக்காலகட்டத்தில், இந்தியாவில், மாம்லுக், கில்ஜி, துக்ளக். சையது. லோடி ஆகிய மரபினர் ஆட்சி செய்துள்ளனர். முகமது கோரியின் இறப்பிற்குப் பின்பு அவரது தளபதி குத்புத்தீன் ஐபெக் ஆட்சியேற்று மாம்லுக் மரபினை நிறுவினார்.

## மாம்லுக் மரபு
### குத்புத்தீன் ஐபக் (கி.1206– 1210)

குத்புத்தீன் ஐபக், மாம்லுக் மரபினை நிறுவி டெல்லி சுல்தான்களின் ஆட்சியை தொடங்கினார். இவர் கி.பி.1206 ஜூன் 24ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். தனது பெயரில் நாணயங்களை வெளியிடுவதையும், குத்பா படிப்பதையும் இவர் விரும்பிய தில்லை. இந்தியாவில் துருக்கிய ஆதிக்கத்தைத் தொடங்கி வைத்தவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'மாம்லுக்' – குரானின்படி 'அடிமை'யை குறிக்கும் சொல் ஆகும்.

### ஆட்சியை நிலை நிறுத்த மேற்கொண்ட முயற்சிகள்

குத்புத்தீன் பட்டமேற்ற உடனே தமது ஆட்சியை நிலைநிறுத்த வேண்டிய கட்டாயத்தில் இருந்தார். எனவே அவர் பல்வேறு முயற்சிகள் செய்ய வேண்டியதாயிற்று. அவைகளாவன,

1) கவாரிசம் பகுதியின் ஆட்சியாளன் அலாவுத்தீன் முகமது டெல்லி, கஜினியை கைப்பற்றாமல் தடுப்பது.

2) இராஜபுத்திரர், தாம் இழந்த பகுதிகளை மீட்க மேற்கொள்ளும் முயற்சிகளைத் முறியடிப்பது.

3) வங்காளத்தின் ஆட்சியாளர் அலிமர்தன்கான் மற்றும் வங்காளம், குபாச்சா, யுல்துஸ் ஆகியவர்களை அடக்கி துருக்கிய ஆட்சியைப் பாதுகாப்பது.

மேலும் குத்புத்தீன், துருக்கிய மரபு அரசைக் காப்பாற்றிக்கொள்ளும் முயற்சியாக பல திருமணத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். தனது தலைநகரை லாகூருக்கு மாற்றினார். பின்னர் அவர் நினைத்தபடியே எதிரிகளை அடக்கியதோடு தமது ஆட்சியையும் நிலைநிறுத்திக்கொண்டார்.

### மதிப்பீடு

குத்புத்தீன் ஐபெக் ஓர் இஸ்லாமிய மதப்பற்றாளர் ஆவார். இராணுவத்தின் வலிமையை பயன்படுத்தியே மாம்லுக் ஆட்சியை நிலை நிறுத்தினார். நாட்டின் உள்ளாட்சியினை நிர்வகிக்க உள்ளூர் அதிகாரிகளை நியமித்தார். அஜ்மீரில் குவ்வதுல் இஸ்லாம் என்ற மசூதியையும், டெல்லியில் தாய்டின்கா–ஜோன்பரா என்ற மசூதியையும் கட்டினார். டெல்லியில் குதுப்மினார் என்னும் கோபுரக்கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார். ஹாசன் நிசாமி, ஃபக்ரேமுதிர் போன்ற அறிஞர்களை ஆதரித்தார். இவர் பல இலட்சங்களைக் கொடையாக வழங்கியதால் 'லாக்பக்ஷா' எனப் புகழப்பட்டார். கி.பி.1210 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில், குதிரைமீது அமர்ந்து 'போலோ' விளையாடிக் கொண்டிருந்த போது குத்புத்தீன், நிலை தடுமாறி விழுந்து இறந்து போனார்.

### இல்துத்மிஷ் (கி.பி.1211–1236)

மத்திய ஆசியாவில் வாழ்ந்த இல்பாரி என்ற பழங்குடி இனத்தில் பிறந்தவர் இல்துத்மிஷ். இவர் சிறுவனாக

மாம்லுக் ஆட்சி



இருந்த போதே குத்புத்தீனுக்கு அடிமையாக விற்கப்பட்டார். ஐபக், இவரைதன்னுடைய மருமகனாக்கினார். கி.பி.1211–ல் இல்துத்மிஷ், குத்புத்தீனுடைய மகனும், மன்னருமான ஆராம்ஷாவைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினார்.

### இல்துத்மிஷ் படையெடுப்புகள்

இவரது ஆட்சியின் தொடக்கக் காலத்தில், நாட்டைச் சுற்றிலும் எதிரிகளே சூழ்ந்திருந்தனர். அவர்களையெல்லாம் படிப்படியாக வென்று தமது ஆட்சியை நிலைநிறுத்தினார். கோரிமுகமதுவின் வழித்தோன்றல் என எண்ணிய யுல்துஸ் என்பவரை இல்துத்மிஷ் தோற்கடித்துக் கொன்றார். உச் மற்றும் முல்தானை ஆண்ட நசீருத்தீன் குபாச்சாவையும் வென்றார். அதோடு குபாச்சா தங்கியிருந்த பக்கார் என்ற பகுதியையும் வென்றார். வங்காளப் பகுதியின் அரசர் இவாஸ் என்பவரை போரில் கொன்று அப்பகுதியையும் கைப்பற்றினார். கி.பி.230ல் வங்காளத்தில் ஏற்பட்ட கில்ஜி மாலிக்குகளின் கலகத்தையும் அடக்கினார்.

மங்கோலியர்களால் தாக்கப்பட்ட, கவாரிசம் பகுதியின் மன்னர் ஜலாலுத்தீன் மங்கபர்னி என்பவருக்கு இல்துஷ்மிஷ் அடைக்கலம் கொடுக்க மறுத்தார். இச்செயல் மங்கோலிய படைத்தலைவர் செங்கிஸ்கானை மகிழ்ச்சியடைய செய்தது. எனவே மங்கோலியர்கள் டெல்லியை முற்றுகையிடவில்லை. இதனால் இல்துஷ்மிஷ் மங்கோலியர்களின் படையெடுப்பிலிருந்து டெல்லியைப் பாதுகாத்துக் கொண்டார். இராசபுதனப் பகுதியைச் சேர்ந்த இராண்தம்பூர், மாண்டூர் ஆகியவற்றை மீண்டும் கைப்பற்றினார். ஜாலோர் பகுதியின் மன்னர் உதய்சிங் தோற்கடிக்கப்பட்டு இல்துஷ்மிஷ் ஆட்சிக்குட்பட்ட குறுநில மன்னராக்கப்பட்டார். மேலும், தங்கிரி, ஆஜ்மீர், சம்பா நகூர், கலிஞ்சார், குவாலியர் ஆகிய பகுதிகளையும் கைப்பற்றினார். பதூன், கனோஜ், பனாரஸ் மற்றும் கச்சார் எனப்படும் கங்கை–யமுனை இடையிலான (தோ ஆப்) பகுதிகள் ஆகியன இல்துஷ்மிஷ் அரசுடன் இணைக்கப்பட்டது.

**இல்துத்மிஷ் நாணயங்கள்**

இல்துத்மிஷ் வெளியிட்ட டங்கா என்ற வெள்ளி நாணயம் 175 மி.கி. எடை கொண்டது. அதில் அராபிய மொழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ஜிடால் என்ற செம்பு நாணயமும் அவர் வெளியிட்டார்.



குதுப்மினார்

**குதுப்மினார்**

குதுப்–உத்–தீன்–பக்தியார் என்ற சூஃபித் துறவியின் நினைவாக குதுப்மினார் என்ற கோபுரத்தை குத்புத்தீன் ஐபக் கட்டத்தொடங்கினார். அதனை இல்துஷ்மிஷ் கட்டி முடித்தார்.

### இல்துத்மிஷ் முடிவு

பம்யான்கள் மீது போர்தொடுக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த நிலையில் கி.பி.1236ல் உடல் நலக்குறைவால் இல்துத்மிஷ் மரணமடைந்தார். இறப்பதற்கு முன் தனது மகள் இரசியாவை நாட்டின் அரசியாக அறிவித்தார்.

## நிர்வாகம்

நாடு, நிர்வாக வசதிக்காக பல இக்தாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவை 'இக்தாதார்' என்பவர்களால் நிர்வகிக்கப் பட்டன. படைப்பிரிவில் 'நாற்பதின்மர் குழு' என்ற தொகுதி முறை உருவாக்கப்பட்டது. அவர்கள் சகல்கான்கள் எனப்பட்டனர். அராபிய மொழியில் நாணயங்கள் வெளியிட்ட முதல் துருக்கியர் என்ற சிறப்பை இல்துத்மிஷ் பெற்றார்.

## மதிப்பீடு

இல்துத்மிஷ் நிர்வாகத் திறமை கொண்டவரும், சிறந்த தளபதியுமாவார். குத்புத்தீன் ஐபக்கினால் தொடங்கப்பட்ட பல பணிகளை இவர் நிறைவு செய்தார். வட இந்தியாவில் துருக்கிய அரசை வலிமையடைய செய்தவர்களில் இவர் குறிப்பிடத்தகுந்தவராவார்.

## சுல்தானா இரசியா (கி.பி. 1236–1240)

சுல்தான்கள் வரிசையில் வந்த முதல் பெண்ணரசி இரசியா ஆவார். இல்துத்மிஷ் மறைவுக்குப்பின் ஆட்சியைக் கைப்பற்றிய பிரோஸ் ஷாவைத் தோற்கடித்துக் கொன்று பட்டத்து இராணியானார். இந்தியாவில் துருக்கிய அரசின் பெருமைகளை மீட்டுக்கொடுத்த சிறப்பினைப் பெற்றார். எனினும் துருக்கிய உயர்குடியினர் சதி திட்டத்தால் கி.பி.1240ல் இவரது ஆட்சி முடிவுக்கு வந்தது. இரசியாவுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்றவர்கள் அனைவரும் திறமையற்றவர்களாக இருந்ததால், கி.பி.1265ல் பால்பன் ஆட்சியைக் கைப்பற்றி சுல்தான் ஆனார்.

**இரசியாவின் வழிவந்தோர்**

| | |
|---|---|
| பக்ரம்ஷா | (கி.பி.1240–1242) |
| அலாவுத்தீன் மசூத் | (கி.பி.1242–1246) |
| நசீருத்தீன் மகமுத் | (கி.பி.1246–1264) |
| பால்பன் | (கி.பி.1265–1287) |

## கியாசுத்தின் பால்பன் (கி.பி.1265–1287)

பால்பன் துருக்கிய இனத்தில், இல்பாரி என்னும் பிரிவைச் சேர்ந்தவர். கி.பி.1265ல் நசீருத்தீன் முகமதுவின் இறப்பிற்கு பின்னர் பால்பன் ஆட்சியில் அமர்ந்தார். 'தெய்வீக உரிமைக் கோட்பாட்டில்' நம்பிக்கைக் கொண்டவராக இருந்தார். பைபோஸ் என்னும் புதிய வணக்க முறையை நடைமுறைப்படுத்தினார். பைபோஸ் முறைபடி, மன்னரை சந்திக்க வருபவர், அவரது காலை முத்தமிட்டு வணங்க வேண்டும்.

பால்பன், ஒரு அடிமையாக, தண்ணீர் சுமக்கும் தொழிலாளியாக, வேட்டைக்காரனாக, தளபதியாக, இராஜதந்திரியாக, சுல்தானாக வாழ்ந்தவர். அதோடு டெல்லி சுல்தான்களில் குறிப்பிடத்தக்கவர்.

–லேன் பூல்

## ஆட்சிமுறை

துருக்கிய உயர்குடியினர்களை அடக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் அவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை வழங்கினார். அவர்களுக்கு எதிராக கீழ்மட்ட பணியாளர்களுக்கு உயர் பதவிகளை வழங்கினார். 'நாற்பதின்மர்குழு' என்ற அடிமை முறையை ஒழித்தார். சிறந்த ஒற்றர்படையை அறிமுகம் செய்தார்.

திவானி அர்ஸ் என்ற தனிப்படைப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. போஜ்பூர், படியாலி, கம்பில், ஜலாலி போன்ற இடங்களில் பல புதிய இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டன. வங்காளத்தில் சுதந்திர மன்னராக செயல்பட்ட துக்ரின்கானை தோற்கடித்து, வங்காளத்தைக் கைப்பற்றினார்.

**தெய்வீக கோட்பாடு**

இக்கோட்பாட்டில் அரசர் கடவுளின் பிரதிநிதியாக கருதப்படுவார்.

### மதிப்பீடு

கற்றவர்களை ஆதரிப்பதில் பால்பன் சிறந்து விளங்கினார். 'இந்தியக்கிளி' எனப்பாராட்டப்பட்ட அமீர்குஸ்ருவையும், அமீர் ஹாசன் என்ற அறிஞரையும் இவர் ஆதரித்தார். அடிமை வம்ச மன்னர்களில் சிறந்த மன்னராக பால்பன் திகழ்ந்தார்.

### பால்பனின் முடிவு

மங்கோலியர் படையெடுப்பின் போது, பால்பனின் மகன் முகமது கொல்லப்பட்டார். அந்த அதிர்ச்சியிலிருந்து மீளாத பால்பன் 1287இல் இறந்தார்.

### மாம்லுக் மரபின் வீழ்ச்சி

பால்பனை அடுத்து அவரது பேரன் கைகுபாத் பட்டமேற்றார். ஆனால் அரச பதவிக்கு தகுதியற்றவராக இருந்தார். சிறுவனாகிய–கைகுபாதின் மகன் கையுமார் என்பவரை உயர்குடியினர் மன்னராக்கினர். அவருக்கு பாதுகாவலராக, தளபதியான ஜலாலுதீன் கில்ஜி நியமிக்கப்பட்டார். ஆனால் ஜலாலுதீன் கில்ஜி, கைகுபாத், கையுமார் ஆகிய இருவரையும் கொன்று டெல்லியின் மன்னரானார். இதன்படி மாம்லுக் மரபு முடிவுற்று கில்ஜி மரபினர் டெல்லி சுல்தானியத்தை ஆளத்தொடங்கினார்கள்.

### ஜலாலுத்தின் – பெரோஸ் – கில்ஜி (கி.பி.1290–1296)

கி.பி. 1290ல் ஜலாலுத்தின் – பெரோஸ் கில்ஜி டெல்லியின் ஆட்சியைக் கைப்பற்றினார் இவர் பிற்காலத்தில் அமைதியான முறையில் ஆட்சியை நடத்தினார். மேலும் இரத்தம் சிந்தாத ஆட்சியை வழங்க விரும்பினார். எனவே இவர் 'கருணை உள்ளம் கொண்ட ஜலாலுத்தீன்' எனப் புகழப்பட்டார்.

### ஆட்சிமுறை

பேரரசின் ஒரு பகுதியான காரா என்னுமிடத்தின் நிர்வாகி, மாலிக் சஜ்ஜீ என்பவர் கலகத்தில் ஈடுபட்டார். ஜலாலுத்தின் சஜ்ஜீவின் கலகத்தை அடக்கி, தனது சகோதரரின் மகனும், மருமகனுமாகிய அலாவுத்தீன் கில்ஜியை காராவின் ஆளுநராக்கினார். இவரது ஆட்சியில் வழிப்பறியும், திருட்டும் அதிகம் நடைபெற்றது. எனவே எண்ணற்ற திருடர்களையும், தக்கர்கள் என்ற கொள்ளைகூட்டத்தவரையும் சிறையிலடைத்தார். பின்னர் அவர்களை மன்னித்து விடுதலை செய்து வங்காளத்தில் குடியமர்த்தினார். சித்தி மௌலா என்ற மதவாதி, ஜலாலுத்தீனின் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றதால் அவரை சிறைப்படுத்திக் கொன்றார்.

### மங்கோலியர் படையெடுப்பு

கி.பி.1292ல் சூனம் என்னும் தமது ஆட்சிப் பகுதியில் ஊடுருவ முயன்ற மங்கோலியர்களைத் தோற்கடித்துக் கைது செய்தார். சிறைப்பட்ட அவர்களது வேண்டுகோளை ஏற்று விடுதலையும் செய்தார். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சில மங்கோலியர்கள் இந்தியாவிலேயே தங்கிவிட்டனர்.

### ஜலாலுத்தீன் கில்ஜியின் முடிவு

ஜலாலுத்தீனின் அமைதிக் கொள்கையை அவரது இளைய தலைமுறையினர் விரும்பவில்லை. தேவகிரியிலிருந்து திரும்பிய அவரது மருமகன் அலாவுத்தீன் கில்ஜி என்பவர் ஜலாலுத்தீனைக் கொன்று ஆட்சியை பிடித்துக்கொண்டார்.

### அலாவுத்தீன் கில்ஜி (கி.பி. 1296–1316)

கி.பி.1296ல் அரசப்பதவியைக் கைப்பற்றிய அலாவுத்தீன் வடஇந்தியா

முழுவதையும் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தார். மேலும் சில தென்னிந்தியப் பகுதிகளையும் இவர் வென்றார்.

### வடஇந்தியப்படையெடுப்புகள்

உலுக்கான், நசரத்கான் என்ற வலிமையான படைத் தளபதிகளை குஜராத் பகுதியை கைப்பற்ற அனுப்பி வைத்தார். இப்படைகள் முதலில், ராந்தாம்பூரை வென்று அதன் மன்னர் அமீர்தேவாவைக் கொன்றனர். பிறகு சித்தூர், மாளவம், மாண்டு, உஜ்ஜெயின், தார், சாந்தேரி, மார்வார். ஜலோர் ஆகிய இடங்களையும்வென்றனர்.

### தென்னிந்தியப்படையெடுப்புகள்

டெல்லி சுல்தான்களில், முதன் முதலில் தென்னிந்திய படையெடுப்புகளை மேற்கொண்டவர் அலாவுத்தீன் கில்ஜி ஆவார். தமது நம்பிக்கைக்குரிய தளபதி மாலிக்கபூரை தென்னிந்திய அரசர்களுக்கு எதிராக அனுப்பினார். தென்னிந்தியாவைச் சார்ந்த தேவகிரியை ஆண்ட யாதவ அரசர் இராமசந்திரதேவன், வாரங்கல் அரசர் இரண்டாம் பிரதாபருத்ரன் மற்றும் ஹொய்சாள அரசர் மூன்றாம் வீரபல்லாளன் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டு, டெல்லி சுல்தானியத்திற்கு திறை செலுத்தும் அரசர்களானார்கள். பாண்டியப் பேரரசில் நிகழ்ந்த வாரிசுரிமைப் போரில் மாலிக்காபூர் தலையிட்டு வீரபாண்டியனுக்கு எதிராக சுந்தரபாண்டியனுக்கு உதவியதோடு, சுந்தரபாண்டியனை பாண்டிய அரியணையில் அமரச் செய்தார். பின்னர் இராமேஸ்வரம் வரைசென்றுஅங்குஒருபள்ளிவாசலைக் கட்டினார். தென்னிந்திய படையெடுப்பின் விளைவாக தென்னிந்திய அரசுகள் அலாவுத்தீன் கில்ஜியின் மேலாண்மையை ஒப்புக்கொண்டு திறை செலுத்ததொடங்கின.

### மங்கோலியர்களைத்தடுத்தல்

அலாவுத்தீன் கில்ஜி, சுமார் பன்னிரெண்டு முறைக்கு மேலாக மங்கோலியப் படையெடுப்புகளைத் தடுத்தார். தம் எல்லைக்குட்பட்ட இடங்களில் உள்ள கோட்டைகளையும், படை முகாமிடும் இடங்களையும் செப்பணிட்டார். புதிய கோட்டைகளைக் கட்டியதோடு, அவைகளை தமது முன்னோர்களது கட்டிடங்களை விட பாதுகாப்பாகஉருவாக்கினார்.

### ஆட்சிமுறை

அலாவுத்தீன்கில்ஜி தம்மை 'கடவுளின் பிரதிநிதி'யாகக் கருதினார். நாட்டில் தொடர்ந்து கலகம் நடப்பதை தடுக்க நான்கு சட்டங்களை ஏற்படுத்தினார். அச்சட்டங்களின் வழியாக சமய அறக்கொடைகளையும் இலவசமாக வழங்கப்பட்ட நிலங்களையும் பறிமுதல் செய்தார். ஒற்றர் முறையை மறுசீரமைப்புச் செய்தார். சமுதாயகுழுக்கள் கூடுவதைத் தடுத்தார். மக்கள் மது அருந்திடதடைசெய்தார்.

அலாவுதீன், நிரந்தரமான ஒரு பெரும்படையை உருவாக்கினார். படைப்பிரிவில் குதிரைகளுக்கு சூடுபோடும் முறையை கொண்டு வந்தார். படைவீரர்களுக்கு பெயர் பட்டியல் ஒன்றினை ஏற்படுத்தி, இராணுவத்தில் நடைபெற்ற ஊழல்களை ஒழித்தார்.

வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருட்களின் விலைகளை நிர்ணயித்தார். அலாவுதீன் கில்ஜி நிர்ணயித்த விலைகள் அங்காடி விலைகளை விடக்குறைவாகவே இருந்தன.

நிர்ணயித்த விலையிலேயே பொருட்களை,தனது ஆட்சிக்குஉட்பட்ட அனைத்துப் பகுதியிலும் விற்கச் செய்தார். அங்காடிகளை

# அலாவுதீன் கில்ஜியின் பேரரசு



கட்டுப்படுத்தினார். கள்ளச் சந்தையை முற்றிலும் ஒழித்தார். வரிகளைப் பொருளாக செலுத்தும் முறையினைக் கொண்டு வந்தார். அதிக அளவில் குதிரை படைவீரர்களையும், எழுத்தர்களையும் நியமித்தார். அஞ்சல் முறையை மேம்படுத்தினார். இந்துக்கள் மீது கடுமையானக் கட்டுப்பாடுகளை விதித்தார். ஜிசியா வரி, மேய்ச்சல் வரி, வீட்டுவரி,போன்றபலவரிகளைஅவர்கள் மீது திணித்தார்.

**அங்காடிகளைக்கட்டுப்படுத்துதல்**

அங்காடியைக் கட்டுப்படுத்த திவானி ரியாஸத், ஹானாயி மண்டி என்று இரு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அனைத்து வியாபாரிகளும் மண்டியில் தங்களை பதிவு செய்ய வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. அரசு நிர்ணயித்த விலையில் மட்டுமே பொருள்கள் விற்க வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டு அங்காடிகள் கட்டுப்படுத்தப்பட்டன.

## மதிப்பீடு

பெரிய அளவிலான ஒரு 'நிரந்தரப்படையை' உருவாக்கிய முதல் சுல்தான் அலாவுதீன் கில்ஜி ஆவார். அங்காடிகளை கட்டுப்படுத்தினார். விந்தியமலையைக் கடந்து சென்று தென்னிந்தியாவையும் வென்றார். பாமத்கானா மசூதி, அலைதர்வாசா, சீரிக்கோட்டை, ஆயிரம் தூண்கள் அரண்மனை போன்றவற்றைக் கட்டினார். இவர் சிறந்த ஒரு வெற்றியாளரும், நிர்வாகியும் ஆவார். உறுதியானக் கொள்கையை உடையவராக அலாவுதீன் செயல்பட்டார்.

## கில்ஜி மரபின் முடிவு

அலாவுதீன் கில்ஜி கி.பி.1316ல் மரணமடைந்தார். அவருக்குப் பின்னர் குதுப்–உத்–தீன்–முபாரக்ஷா (கி.பி.1316–1320), நஸிர் –உத்தீன்– குஸ்ரு–ஷா (கி.பி.1320) ஆகியோர் பதவியேற்றனர். ஆயினும் திறமையற்ற இவர்களது ஆட்சியினால், கில்ஜி மரபு கி.பி.1320ல்முடிவுக்குவந்தது.

கி.பி.1320ல் பஞ்சாபின் ஆளுநர் காஸிமாலிக், உயர்குடியினர் உதவியுடன் டெல்லியை கைப்பற்றி, கியாசுதீன் என்ற பட்டப்பெயருடன், துக்ளக் மரபின் ஆட்சியை ஏற்படுத்தினார்.

## துக்ளக் மரபு கியாசுதீன் துக்ளக் (கி.பி.1320–1325)

கியாசுதீன் துக்ளக் எனப்படும் காஸிமாலிக் தனது கடுமையான முயற்சிகளின் மூலம் ஆட்சிக்கு வந்தார். மிகவும் எளிமையான தொடக்கத்திலிருந்து தனது திறமையின் காரணமாக உயர்ந்து கி.பி.1320ல் துக்ளக் வம்ச ஆட்சியை ஏற்படுத்தினார்.

## உள்நாட்டு,வெளிநாட்டுக் கொள்கைகள்

கியாசுதீன் தனது ஆட்சிப் பகுதியில் அமைதியை நிலை நாட்டினர். வேளாண்மை, பாசனவசதி, நீதித்துறை, காவல்துறை, அஞ்சல்துறை ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு முக்கியத் துவம் கொடுத்தார். இவரது பேரரசுடன், வாரங்கல், ஒரிஸாவின் உத்கல், வங்காளம் ஆகியன இணைக்கப்பட்டன. வடஇந்திய பகுதியை தாக்கிய மங்கோலியர்களை அடக்கி மங்கோலிய படைத் தலைவர்களை சிறையிலடைத்தார்.

## ஆட்சியின் முடிவு

கி.பி.1325ல் வங்கப்பகுதியை வென்றார். அவ்வெற்றியை கொண்டாட அமைக்கப்பட்ட மேடை சரிந்து, கியாசுதீன் இறந்து போனார். அவரை அடுத்து இளவரசர் ஜூனாகான் ஆட்சிக்குவந்தார்.

# முகமதுபின் துக்ளக் பேரரசு



## முகமதுபின் துக்ளக் (கி.பி.1325–1351)

கி.பி.1325ல் இளவரசர் ஜூனாகான் 'முகமதுபின்துக்ளக்' என்ற பட்டப் பெயருடன் அரசரானார். இந்தியாவில் அரசியல் மற்றும் நிர்வாகத்தை சீர்த்திருத்தம் செய்ய வேண்டும் என்று பாடுபட்டார். கி.பி1327ல் வாராங்கல் பகுதியைக்கைப்பற்றினார்.

## உள்நாட்டுக்கொள்கை

காலியாகக் கிடந்த அரசுக் கருவூலத்தை நிரப்பும் பொருட்டு தோஆப் பகுதியின் நிலவரியை அதிகரித்தார். திடீரென உயர்த்தப்பட்ட பெரும்வரியைச் செலுத்த வழியில்லாத விவசாயிகள் காடுகளுக்கு ஓடி தஞ்சமடைந்தனர். விவசாயம் தடைபட்டதால் நாட்டில் பஞ்சம் தலைதூக்கியது. துக்ளக் தனதுதவறை உணர்ந்து விவசாயிகளை அழைத்து கடன்களை வழங்கினார். புதிய வாய்க்கால்களை வெட்டித் தந்தார். ஆனாலும் இவை தாமதப்பட்ட செயலாகவே அமைந்தது.

இந்திய எல்லைக்கருகில் இருந்த மங்கோலியர்கள் தொடர்ந்து படையெடுத்தனர். தலைநகரை காப்பாற்றுவதற்காக நாட்டின் மையப்பகுதிக்குத் தலைநகரை மாற்றவேண்டுமென துக்ளக் நினைத்தார். உடனடியாக டெல்லியிலிருந்து தேவகிரிக்கு தலைநகரை மாற்ற உத்தரவிட்டார். மக்களும், அரசு அலுவலர்களும் தேவகிரியை நோக்கிப் பயணமாயினர். திடீரென புறப்பட்டதால் பெருந்துயருக்கு ஆளாயினர். இதனை நடைமுறை படுத்துவதில் உள்ள குறைப்பாட்டினை உணர்ந்த மன்னர், மக்களை மீண்டும் டெல்லிக்கே செல்லும்படி கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த எண்ணினார், துக்ளக். அதனால் செப்பு நாணயங்களை அறிமுகம் செய்தார். ஆனால் அரசு சார்பாக அச்சிடும் தனிப்பட்ட நாணயச்சாலை இல்லாததால் மக்களே நாணயங்களை அளவின்றி அச்சிடத் தொடங்கினார்கள். இதனால் பணத்தின் மதிப்பு வீழ்ச்சியடைய தொடங்கியது. எனவே சுல்தான் செப்பு நாணய முறையைநிறுத்தினார்.





முகமதுபின் துக்ளக்

துக்ளக், டிரான்ஸ் ஆக்ஸியானா, கொரேசான், ஈராக் ஆகிய இடங்களைக் கைப்பற்ற நினைத்தார். எனவே தமது படைபலத்தைப் பெருக்க, புதிதாக 3,70,000 வீரர்களை சேர்த்துக் கொண்டார். அச்செயல் சாத்தியமில்லாமல் போகவே தனது புதிய படைபிரிவுகளைக் கலைத்தார். மங்கோலியப் படையெடுப்பால் தமது நாட்டுப் பொருளாதாரம் பாதிக்கக்கூடும் எனக்கருதிய துக்ளக் மங்கோலியத் தலைவன் தமஷிரின் என்பாரிடம் நட்பு பாராட்டி, அவருக்கு பெரும் பரிசு பொருட்களை அனுப்பி தனது நாட்டை மங்கோலிய படையெடுப்பிலிருந்து காப்பாற்றினார். இத்தகைய செயல்களானது, நிதிநிலையை மேலும் சீர்குலைத்தது.

## மதிப்பீடு

முகமது பின் துக்ளக் ஏற்படுத்திய திட்டங்கள் அனைத்துமே சிறந்தவைகளாகும். ஆனால் சூழ்நிலையை அறிந்து அவைகளை நடைமுறைப்படுத்தவில்லை. எனவேதான் அவரது திட்டங்கள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. அவரது அவசர கொள்கை முடிவுகளும். சில நடைமுறைப்படுத்த இயலாதத் திட்டங்களும், துக்ளக் மரபின் வீழ்ச்சிக்குக் காரணமாயின.

## பிரோஸ் துக்ளக் (கி.பி.1351–1388)

கியாசுதீன் துக்ளக்கின் இளைய சகோதரரின் மகன் பிரோஸ் துக்ளக் ஆவார். இவர் கி.பி.1351ல் ஆட்சியில் அமர்ந்தார்.

## நிர்வாகச் சீர்த்திருத்தங்கள்

மக்களுக்குப்பயன் தரும் பல சீர்த்திருத்தங்களை பிரோஸ் துக்ளக் உருவாக்கினார். முகமது–பின்– துக்ளக்கினால் வழங்கப்பட்ட தக்காவி என்னும் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தார். வருவாய் துறை அதிகாரிகளின் ஊதியத்தை உயர்த்தினார். சட்டத்திற்கு புறம்பான தேவையற்ற வரிகள் நீக்கப்பட்டன. இவர் தனது மக்களிடமிருந்து நான்கு விதமான வரிகளை வசூலித்தார். அவைகளாவன,

கரோஜ் – விளைச்சலில் 1/10 பங்கு

கம்ஸ் – போர்களில் கைப்பற்றிய பொருட்களில் 1/5 பங்கு

பெஸியா – தலைவரி

ஜகாத் – குறிப்பிட்ட இஸ்லாமிய மதச்சடங்குகளைச் செய்வதற்கு வசூலிக்கப்படும் கட்டணம், ஆகியனவாகும்.

இவர் பொதுப்பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். பல பாசன வாய்க்கால்களை வெட்டினார். 50 அணைகள், 150 கிணறுகள், 100 பாலங்கள் ஆகியவைகள் கட்டப்பட்டன. பிரோஸாபாத், பெதாபாத், ஜான்பூர், ஹிஸ்ஸார் உட்பட பல நகரங்களை உருவாக்கினார்.

குரானின் அடிப்படையிலான சட்டங்களை நடைமுறைப்படுத்தினார். பிராமணர்கள் மீது ஜிசியா வரி விதிக்கப்பட்டது. சித்திரவதை செய்தல், உடல் உறுப்புகளை வெட்டுதல் ஆகிய கொடிய தண்டனைகளை ஒழித்தார்.

வேலைவாய்ப்பு அமைப்பு, திருமண அமைப்பு (திவானி கிரமத்) மருத்துவ மனைகள் (தார்–உல்–பா) போன்ற அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

## அயலுறவு கொள்கை

கி.பி.1353 மற்றும் 1359 ஆம் ஆண்டுகளில் பிரோஸ் வங்காளத்தை முற்றுகையிட்டார். ஜெய்நகரை வென்றதோடு, பூரியில் ஜெகந்நாதர் கோயிலை அழித்தார். நகர்கோட், தட்டா ஆகிய பகுதிகளின் அரசர்களை வென்று அவர்களை திறை செலுத்தச் செய்தார்.

## மதிப்பீடு

பிரோஸ் தனது சீர்திருத்தங்களின் வழியாக நாட்டை வளமடையச் செய்தார். பதூஹத்– இ– பெரோஷாஹி என்னும் சுயவரலாற்று நூலை எழுதினார். ஜியாவுத்தீன் பராணி என்ற அறிஞரை ஆதரித்தார். இவரது காலத்தில், மருத்துவம், அறிவியல், கலைகள் போன்றவற்றின் எண்ணற்ற சமஸ்கிருத நூல்கள் பாரசீக மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்டது. குதுப்– பெரோஸ்–ஷாஹி என்ற இயற்பியல் தொடர்பான நூலும் எழுதப்பட்டது.

## பிற்கால துக்ளக் மரபினர்

பிரோஸ் துக்ளக்கை அடுத்து, இரண்டாம் கியாசுதீன் துக்ளக் ஷா,

அபுபக்கர் ஷா, நாசிர் – உத்– தீன் முகமது துக்ளக் ஆகியோர் ஆட்சி செய்தனர். எனினும் இவர்கள் திறமையற்ற ஆட்சியாளராகவே இருந்தனர். பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் நாட்டின் பல பகுதிகள் பிரிந்து சுதந்திரமாயின. டெல்லி, பஞ்சாப் ஆகியன மட்டுமே துக்ளக் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இந்நிலையிலேயே கி.பி.1414 வரையில் துக்ளக்குகளின் ஆட்சிநீடித்தது. இக்காலகட்டத்தில் தான் தைமூரின் படையெடுப்பும் நிகழ்ந்தது.

### தைமூர் படையெடுப்பு (கி.பி.1398)

சமர்கண்ட் பகுதியை தைமூர் என்பவர் ஆட்சி செய்தார். இவர் இந்திய நாட்டு செல்வச்செழிப்பை அறிந்ததால் இந்தியா மீது படையெடுக்க முடிவெடுத்தார். நசீர் முகமது துக்ளக் என்பவர் ஆட்சியின் போது அவருடன் போரிட முனைந்து, சிந்து நதியைக் கடந்து டெல்லியை நோக்கி வந்தார். எனவே நசீர் முகமது, அவரது தளபதி மல்லு இக்பால் ஆகியோர் தைமூரை எதிர்த்துப் போரிட்டனர். முடிவில் தைமூரே வென்றார். கி.பி.1398ல் டெல்லி தைமூரால் கைப்பற்றப்பட்டது. வார்த்தைகளால் விவரிக்க இயலாத அளவுக்கு டெல்லி மக்களைக் கொன்று குவித்தார். அதோடு அவர்களது உடமைகளையும் கொள்ளையடித்தார். தைமூரின் படையெடுப்பு துக்ளக் மரபின் வீழ்ச்சிக்கு அடிகோலியது.

### சையது மரபு (கி.பி.1414–1451)

துக்ளக் மரபின் வீழ்ச்சிக்கு பின்னர் சையது மரபினர் டெல்லியை ஆளத் தொடங்கினார்கள். தைமூர் படையெடுப்பால் டெல்லிப் பகுதியில் நிகழ்ந்த அரசியல் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட, முல்தானின் ஆளுனர் கிஸிர்கான், (கி.பி.1414–1421) டெல்லியின் ஆட்சியைக் கைப்பற்றி கி.பி.1414ல் சையது மரபினைத் தொடங்கினார். இவர் அரச பதவிக்குரிய பட்டப்பெயர்களை சூட்டிக்கொள்ள வில்லை.

பஞ்சாப், திலாபூர், சூரத்தின் ஒரு பகுதி ஆகியவற்றை இவர் வென்றாலும், ஜான்பூர், மாளவம், குஜராத், காண்டேஷ், வங்காளம், தக்காணம் ஆகிய பகுதிகளை இழந்தார். கி.பி.1421ல் கிஸிர்கானின் இறப்பிற்கு பின்னர் அவரது மகன் முபாரக்ஷா (கி.பி.1421–1434) ஆட்சியேறினார். இவர் கோகர்களையும் மற்றும், தோஆப் பகுதியின் உள்ளூர் தலைவர்கள் செய்த கலகத்தையும் அடக்கினார். இவர் டெல்லி நீதிமன்றத்தில் இந்துமத உயர்குடியினரை நியமித்தது குறிப்பிடத்தக்கது. யமுனை நதிக்கரையில் 'முபாரக் பாத்' என்னும் நகரை நிர்மானித்தார். இந்நிலையில் கி.பி.1434ல் முபாரக் கொல்லப்பட்டார்.

முபாரக் மரணத்தை அடுத்து அவரது சகோதரனின் மகனான முகமதுஷா (கி.பி.1434–1445) மன்னரானார். லாகூர் ஆளுநர் பஹ்லுல் லோடி உதவியுடன் மாளவத்தின் மீது படையெடுத்து அதனை வென்றார். இவ்வெற்றிக்குக் காரணமான பஹ்லுல் லோடிக்கு 'கானி கானா' என்ற பட்டத்தை சூட்டினார். கி.பி.1445ல் முகமது ஷா இயற்கை யெய்தினார்.

முகமது ஷாவை அடுத்து அலாவுதீன் ஷா (கி.பி.1445–1457) மன்னரானார். இவர் திறமையற்று செயல்பட்டதால், லாகூரின் ஆளுனர் பஹ்லுல் லோடி கி.பி.1457ஆம் ஆண்டு டெல்லியின் ஆட்சியைக் கைப்பற்றினார். அதோடு அலாவுதீன் ஷாவுக்கு கட்டாய ஓய்வளித்தார். அலாவுதீன் ஷா கி.பி1478ல் மரணமடைந்தார்.

கி.பி.1457ல் சையது வம்சம் முடிவுக்கு வந்தது.

## லோடி மரபு

பஹ்லுல் லோடி (கி.பி.1451–1489) டெல்லியை ஆண்ட சுல்தான்களில் லோடி மரபே இறுதியாக ஆட்சி செய்தது. இம்மரபைத் தொடங்கிவைத்தவர் பஹ்லுல்லோடி ஆவார்.

பஹ்லுல்லோடி அரியணையில் அமரவில்லை. உயர்குடியினரின் ஆதரவை பெறுவதற்ககாகவே, உயர்குடியினருடன் கம்பளத்தில் அமர்ந்து ஆட்சிசெய்தார்.

விவேகம் நிறைந்த மன்னரான பஹ்லுல்லோடி தனக்கென்று சில வரையறைகளை வகுத்துக் கொண்டார். தம்நாட்டு உயர்குடிக்குழுவினரின் மனநிறைவினை அறிந்த பின்னரே அடுத்தக்கட்ட நடவடிக்கையை தொடங்குவார். இவர் போரின் மூலம், மேவாட், சம்தல், சகிட், எட்வா, குவாலியர் ஆகிய பகுதிகளை வென்றார். பஹ்லுல் லோடி கி.பி.1489ல்இறந்தார்.

பஹ்லூல் லோடியை அடுத்து அவரது மகன் சிக்கந்தர் ஷாஹி (கி.பி1489–1517) பதவியேற்றார். சிக்கந்தர் ஷா என்ற பட்டப்பெயருடன் ஆளத் தொடங்கினார். இவர் தமது பேரரசை பஞ்சாப் முதல் பீகார் வரை விரிவடையச் செய்தார். ஆக்ரா நகரை கட்டினார். லோடி மரபினர் காலத்தில் ஆக்ரா நகர் முக்கியத்துவம் பெற்று, நிர்வாகம் மற்றும் பண்பாட்டு மையமாகத் திகழ்ந்தது.

சிறந்த ஒற்றர்படையை உருவாக்கினார். வேளாண்மையும், தொழிற்துறையும் முன்னேற்றம் அடைந்தன. இவர்காலத்தில் கணிதம், வானவியல், யோகா, மருத்துவம் உள்ளிட்ட பல சமஸ்கிருத நூல்கள் பாரசீக மொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்டன. ஷெனாய் இசையை இவர் மிகவும் விரும்பினார். லஹ்ஜட்–இ–சிக்கந்தர் ஷாஹி என்ற இசைத் தொகுப்பு இவர் காலத்தில் உருவாக்கப்பட்டது.

சிக்கந்தர் ஷா ஒரு தீவிர இஸ்லாமியப் பற்றுடையவர். எனவே இந்துக்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தார். லோடிமரபின் சிறந்த அரசரான இவர் கி.பி.1517ல் மரணமடைந்தார்.

## லோடி மரபின் முடிவு

சிக்கந்தர் லோடியை அடுத்து இப்ராஹிம் லோடி (கி.பி1517–1526) பட்டமேற்றர். இவர் சகிப்புத்தன்மை யற்றவராகவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லலாதவராகவும் விளங்கினார் உயர்குடியினரை அவமானப்படுத்தியதோடு ஒரு சிலரைகொடுமையாகக் கொலையும் செய்தார். தௌலத்கான் லோடியின் மகன் தில்வர்கான் லோடியை இவர் கொடுமைப்படுத்தியதால் தௌலத்கான் லோடி, காபூல் மன்னர் பாபரை உதவிக்கு அழைத்தார். பாபர் தனது பெரும்படையுடன் இந்தியாவுக்கு வந்தார். கி.பி.1526ல் நடைபெற்ற முதலாம் பானிபட் போரில் இப்ராஹிம் லோடியை வென்றார். இந்தவெற்றியனது டெல்லியில் சுல்தான்களின் ஆட்சிக்கு



இப்ராஹிம் லோடி கல்லறை

முற்றுப்புள்ளி வைத்து, முகலாயர் ஆட்சியைத் தொடங்கி வைத்தது.

### சுல்தான்களின் ஆட்சியில் – நிர்வாகத்துறை

கி.பி.1206 முதல் கி.பி1526 வரையிலான 320 ஆண்டுகள் ஆண்ட டெல்லி சுல்தானிய ஆட்சியானது, மதவாத ஆட்சியாகவும், இராணுவ ஆட்சியாகவுமே இருந்தது. இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படையிலேயே நிர்வாகம் நடைபெற்றது.

### மைய நிர்வாகம்

சுல்தான், பேரரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார். வானளாவிய அதிகாரங்களை அவர் பெற்றிருந்தார். அவருக்கு உதவிட ஆறு அமைச்சர் களைக் கொண்ட குழு ஒன்று இருந்தது. நிர்வாக வசதிக்காகப் பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

**சுல்தான்களின் அமைச்சர்கள்**

| | |
|---|---|
| வசீர் | – பிரதம அமைச்சர் மற்றும் நிதியமைச்சர். |
| திவானி ரிஸாலத் | – வெளியுறவு அமைச்சர். |
| சுதர் – உஸ் – சாதர் | – இஸ்லாமிய சட்ட அமைச்சர் |
| திவானி இன்ஷா | – அஞ்சல் துறை அமைச்சர். |
| திவானி அர்ஸ் | – பாதுகாப்பு அல்லது படைத்துறை அமைச்சர். |
| காஸி– உல்–கஸாத் | – நீதித்துறை அமைச்சர். |

### நகர நிர்வாகம்

பேரரசு பல இக்தாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதனை நிர்வகித்தோர் இக்தார் எனப்பட்டனர். இக்தாக்கள் மேலும், ஷிக், பர்கானா, கிராமங்கள் என உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. ஷிக் பகுதியின் நிர்வாகி ஷிக்தார் எனப்பட்டார். பர்கானாவின் முக்கிய அலுவலர்கள் அமில் அல்லது முன்ஷிப் எனப்பட்டார். மேலும் கருவூலர், கனுங்கோ ஆகியோர் நிர்வாகத்தில் இடம்பெற்றனர்.

### உள்ளாட்சி நிர்வாகம்

நிர்வாகத்தின் மிகச்சிறிய அளவு கிராமமாகும். கிராம நிர்வாகமானது மரபுவழி வந்த உள்ளூர் அலுவலர்களைக் கொண்டு நடத்தப்பட்டது. கல்வி, சுகாதாரம், நீதி, வரி ஆகிய பணிகளை இந்நிர்வாகம் கவனித்தது, பொதுவாக மையஅரசு உள்ளாட்சி நிர்வாகங்களில் தலையிடவில்லை.

### வருவாய் நிர்வாகம்

நாட்டின் முதன்மையான வருமானம் நிலவரி மூலமாகவே கிடைத்தது. எனவே வேளாண்மைக்கும், பாசனத்திற்கும் முக்கியத்துவம் தரப்பட்டது. வணிகவரி, வீட்டுவரி, சுரங்கவரி, குதிரைவரி போன்ற வரிகள் வசூலிக்கப்பட்டன.

### நீதித்துறை

நீதித்துறையின் உயர்நிலைப் பொறுப்பு சுல்தானிடம் இருந்தது. தலைமை நீதிபதி காஸி–உத்–கவாத் எனப்பட்டார். ஒவ்வொரு நகரத்திலும் காஸி இருந்தார். குற்றவாளிகளுக்குக்

கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.

### படைத்துறை நிர்வாகம்

சுல்தான் அனைத்து படைப் பிரிவுகளுக்கும் தலைவர் ஆவார். அரச பரம்பரையினரைத் தலைவராகக் கொண்ட படைகள், ஆளுனர் தலைமையிலான படைகள், உயர்குடிகளின் தலைமையிலான படைகள், போர்க் காலப்படைகள் ஆகிய படைப்பிரிவுகள் இருந்தன.

### சமூகநிலை

வெளிநாட்டு முஸ்லீம்கள், இந்திய முஸ்லீம்கள் மற்றும் இந்துக்கள் ஆகியோர் சமூகத்தில் வாழ்ந்தனர்.

### பொருளாதார நிலை

வேளாண்மையே நாட்டின் முக்கிய தொழிலாக இருந்தது. அதற்கு அடுத்த நிலையில் நெசவுத்தொழில் இருந்தது. சர்க்கரை உற்பத்தி, காகிதம், முத்து எடுத்தல், தந்தம், சந்தனம் ஆகியவற்றை சார்ந்த தொழில்களும் நடைபெற்றன.

**நெசவு**

இந்தியதுணிகள் வெளிநாட்டவரால் விரும்பி வாங்கப்பட்டன. குஜராத், வங்காளம் ஆகிய இடங்களில் தரமான துணிகள் தயாரிக்கப்பட்டன. பருத்தி, பட்டு, கம்பளி போன்ற ஆடைகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. உயர்தர ஆடைகளில் பொன், வைரம், முத்து, வெள்ளி, இரத்தினம் ஆகியவை இணைத்து நெய்யப்பட்டன.

### டெல்லி சுல்தான்களின் பங்களிப்பு கலை மற்றும் கட்டிடக்கலை

இந்திய இஸ்லாமிய டெல்லி சுல்தானியர்கள் கலை மற்றும் கட்டிடக்கலையில் தனிச்சிறப்புடையர்களாக இருந்தார்கள். கலைநுணுக்கங்களைக் கொண்ட அழகிய கட்டிடங்களை சுல்தான்கள் கட்டினர். இவர்களது கட்டிட அமைப்பை மூன்று விதமாக வகைப்படுத்தலாம். அவை டெல்லி அல்லது பேரரசு கலைபாணி, நகர கலைபாணி, இந்துக்கள் கலைபாணி ஆகியனவாகும். குதுப்மினார், குவாத் உத் இஸ்லாம் மசூதி, நாசிர்–உத்–தீன் முகமதுவின் கல்லறை, பால்பனின் சமாதி ஆகியன மாம்லுக் கால அழகிய கட்டிடங்களாகும்.

டெல்லியில் அமைந்துள்ள சீரி நகரம், ஹரத்நிஜாம்முதின் அலுயாவின் தர்கா, அலாய்தார்வாசா ஆகியவை கில்ஜி காலக்கட்டிடக்கலைக்கு எடுத்துக் காட்டுகளாகும்

கியாசுதீன் துக்ளக்கின் கல்லறை, முகமது – பின் – துக்ளக் கட்டிய அதலாபாத் கோட்டை, துக்ளக்காபாத், ஜஹான்பனா ஆகிய நகரங்கள் துக்ளக் கால கட்டிடங்களாகும். எனினும் இவ்வரசர்கள் கலையம்சத்திற்கு அதிக முக்கியத்துவம் தரவில்லை. ஆனால் உறுதிமிக்க கட்டிடங்களையே உருவாக்கினர். சில கட்டிடங்கள் இந்து முறையிலும் அமைத்துள்ளனர்.

டெல்லியில் உள்ள லோடி பூங்கா, மோதி மசூதி மற்றும் சிக்கந்தர் லோடியின் கல்லறை ஆகியன லோடி மரபினர் காலத்தைச் சேர்ந்தவை.

### இலக்கியம்

சுல்தான்களின் அவையில், அல்பருணி, அமிர்குஸ்ரு ஜியா உல்பரணி போன்ற பல அறிஞர்கள் இடம் பெற்றிருந்தனர். பல சமஸ்கிருத நூல்கள் அராபிய மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்டன. வட்டார மொழி இலக்கியங்கள் பெருமளவில் இக்காலத்தில் எழுதப்பட்டன. உருது மொழியானது உருவான காலமும் இதுவே.

### சுல்தான்கள் கால அறிஞர்கள்

அல்பரூனி என்ற அறிஞர், அரபு, பாரசீக மொழிகளில் புலமை பெற்றிருந்தார். இந்தியாவில் பல்லாண்டு காலம் தங்கியிருந்த இவர், கஜினி முகமது அவையிலும் இடம் பெற்றிருந்தார். இவர் சமஸ்கிருத மொழியைக் கற்றதோடு, உபநிடதங்கள், பகவத் கீதை படித்து அதன் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார். இவர் எழுதிய தாருக்கி–உல்–இந்த் என்ற நூலில் இந்திய சமூகபொருளா தார நிலையை விளக்கினார்.

சிறந்த பாரசீக மொழிக் கவிஞரான அமிர்குஸ்ரு சுமார் 4,00,000 ஈரடிச் செய்யுள்களை எழுதியுள்ளார். சிறந்த பாடகராக விளங்கிய இவர் 'இந்தியக் கிளி' என புகழப்பட்டார். இவரது கவிதை களில் நிறைய இந்தி சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சுல்தான்கள் ஆட்சியின் தாக்கங்கள்

துரக்கியர்கள் இந்தியாவை வென்று தமது ஆட்சியை நிலை நிறுத்தியதன் தாக்கங்கள் பல்வேறு துறைகளில் காணப்படுகிறன.

1) மைய ஒருங்கிணைப்பு அரசியலுக்கு வழியமைக்கப்பட்டது.
2) ஆசியா, ஆப்ரிக்கா போன்ற நாடுகளுடன் தொடர்புகள் வளர்ந்தன.
3) நிலையான, நிரந்தர பெரும்படை அமைக்கப்பட்டது.
4) சீரான சட்டமுறை, வரிமுறை, நாணயமுறை ஆகியவற்றினால் வாணிபம் வளர்ந்தது.
5) பாரசீக மொழி நீதிமன்ற மொழியாகியது. நீதித்துறையில் சீரான நடைமுறைகள் கையாளப்பட்டன.

### சுல்தானியப் பேரரசின் வீழ்ச்சி

துக்ளக் மரபினரின் ஆட்சிக் காலத்திலேயே சுல்தானியப் பேரரசின் வீழ்ச்சியானது தொடங்கிவிட்டது எனலாம். மேலும் தைமூர் படையெடுப்பு, திறமையற்ற, சகிப்புத்தன்மையற்ற சில சையது மறறும் லோடி மரபினரின் நடவடிக்கைகளால் சுல்தானியப் பேரரசின் ஆட்சிய வீழ்ச்சிபெறத் தொடங்கியது.

சரிவின் தொடக்கமாக, விஜயநகரம், பாமினி அரசு, ஆகியன சுல்தான்களின் நிர்வாகத்திலிருந்து வெளியேறின. காணடேஷ் சிந்து, முல்தான் பகுதிகளில் இருந்த குஜராத், மாளவம், ஜான்பூர், காஷ்மீர், அஸ்ஸாம், ஒரிசா ஆகியன சுதந்திர நாடுகளாயின.

கி.பி1526ல் நடைபெற்ற முதல் பானிபட்போரில் இப்ராகீம்லோடியை பாபர் வென்றதால் லோடி வம்சம் முடிவுக்குவந்தது. இதனால் சுல்தான்களின் ஆட்சியும் முற்றுப்பெற்றது. டெல்லியைத் தலைநகராகக் கொண்டு, முகலாயப் பேரரசு உருவானது.

## பயிற்சி

### I) சரியான விடையை எழுதுக.

1. மாம்லுக் மரபினை நிறுவியவர் _______________ ஆவார்.
   அ) பால்பன் ஆ) இல்துஷ்மிஷ் இ) குத்புத்தீன் ஐபெக்
2. துருக்கிய நாணய முறையை முதலில் அறிமுகப்படுத்திய துருக்கிய அரசர் _______________ ஆவார்.
   அ) இல்துஷ்மிஷ் ஆ) அமீர்குஸ்ரு இ) அமீர்ஹாசன்
3. 'இந்தியக் கிளி' என அழைக்கப்பட்ட கவிஞர் _______________ ஆவார்.
   அ) அல்பெருணி ஆ) கைகுபாத் இ) அமிர்குஸ்ரு
4. சையது மரபினைத் தொடங்கியவர் _______________ ஆவார்.
   அ) கிஸிர்கான் ஆ) முகமதுஷா இ) தௌலத்கான்லோடி
5. காபூல் மன்னர் பாபரை இந்தியா மீது படையெடுக்கும்படி அழைத்தவர் _______________
   அ)பஹ்லூல் லோடி ஆ) இப்ராஹீம் லோடி இ) தௌலத்கான்லோடி

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அஜ்மீரில் உள்ள குவாத் உல் இஸ்லாம் மசூதியை கட்டியவர் _______________.
2. டெல்லி சுல்தானிய ஆட்சியின் முதல் பெண்ணரசி _______________.
3. துக்ளக் மரபினைத் தோற்றுவித்தவர் _______________.
4. பஹ்லூல் லோடி கி.பி. _______________ ஆண்டு டெல்லியைக் கைப்பற்றினார்.
5. சிக்கந்தர்ஷா _______________ இசையை மிகவும் விரும்பினார்.

### III) பொருத்து.

| | |
|---|---|
| 1. குத்புத்தீன் ஐபெக் | தெய்வீகக் கோட்பாடு. |
| 2. பால்பன் | முகமது – பின் –துக்ளக். |
| 3. ஜலாலுத்தீன் பெரோஸ் கில்ஜி | சமர்கண்ட அரசர். |
| 4. இளவரசர் ஜூனாகான் | லாக்பக்ஷா அல்லது இலட்சங்களைக் கொடையாக வழங்கியவர். |
| 5. தைமூர் | அமைதி கோட்பாடு. |

## IV) சுருக்கமாக விடையளி

1. குத்புத்தீன் ஐபக், துருக்கிய ஆட்சியை எவ்வாறு பாதுகாத்தார் ?
2. பால்பன், நாற்பதின்மர் குழுவை எவ்வாறு ஒழித்தார் ?
3. அலாவுத்தீன் படையைப்பற்றி சிறுக்குறிப்பு எழுதுக.
4. பிரோஸ் துக்ளக் ஏற்படுத்திய பொதுப்பணி சீர்த்திருத்தங்கள் யாவை ?
5. தைமூர் படையெடுப்பை குறித்து சிறுகுறிப்பு எழுதுக.

## V) விரிவான விடையளி:

1. இல்துத்மிஷ், தனது எதிரிகளை அடக்கி தனது வலிமையை எவ்வாறு பெருக்கினார் ?
2. அலாவுத்தீன் கில்ஜியின் வட மற்றும் தென்னிந்திய படையெடுப்புகளை விரிவாக எழுதவும்.
3. முகமது – பின் – துக்ளக்கின் உள்நாட்டு கொள்கையை விளக்குக.
4. டெல்லி சுல்தானியர்களின் ஆட்சிமுறையை விளக்கமாக விவரிக்கவும்.

## VI) செய்யவேண்டியன.

1. டெல்லி சுல்தானியர்களின் கலை மற்றும் கட்டிடக் கலை பற்றிய படத்தொகுப்பு தயாரிக்கவும்.
2. இந்திய வரைப்படத்தில் கீழே குறிப்பிட்டுள்ள இடங்களைக் குறிக்கவும்.

   முல்தான், மதுரா, கனோஜ், குவாலியர், டெல்லி, பனாரஸ், முகமது –பின் துக்ளக் ஆட்சியின் எல்லை.

# 6. விஜயநகர, பாமினி அரசுகள்

## விஜயநகர, பாமினி அரசுகளின் எழுச்சி

முகமது பின் துக்ளக் ஆட்சிக் குப் பிறகு டெல்லி சுல்தானிய வீழ்ச்சியினால் வடஇந்தியாவிலும், தென் இந்தியாவிலும் ஏராளமான மாகாண ஆளுநர்களும், திறை செலுத்தும் குறுநில அரசர்களும் சுதந்திர அரசுகளை அமைத்து ஆள முற்பட்டனர். டெல்லி ஆட்சியின் பிடியிலிருந்து முதலில் வங்காளமும், முல்தானும் வெளியேறின. தொடர்ந்து, குஜராத், மேவார், மாளவம், மார்வார், காஷ்மீர் ஆகியன தமது சுதந்திரத்தை அறிவித்துக் கொண்டன.

இதன் தொடர்ச்சியாக தக்காணம் மற்றும் தென்இந்தியாவிலும் விஜயநகரம், பாமினி பேரரசு ஆகிய இரு பெரும் அரசுகள் எழுந்ததோடு அவைகள் அரசியல் முக்கியத் துவமும் பெற்றன.

## விஜயநகரப் பேரரசு (கி.பி.1336–1672)

ஹொய்சாள அரசர் மூன்றாம் வீர பல்லாளனிடம் ஹரிகரர், புக்கர் ஆகியோர் பணியாற்றினார்கள். முகமது பின் துக்ளக்கினால் ஹொய்சாள மரபு வீழ்ச்சியடைந்தது பிறகு, துறவி வித்யாரண்யர் மற்றும் அவரின் சகோதரர் சாயனா ஆகியோர் உதவியுடன் ஹரிஹரர் புக்கர் கி.பி1336ல் துங்கபத்ரா ஆற்றங்கரையில் விஜயநகர அரசினை உருவாக்கினர். இதன் தலைநகரம் ஹம்பியாகும். பின்னர் இந்தப் பேரரசு, சங்கம, சாளுவ, துளுவ, அரவீடு எனும் நான்கு முக்கிய மரபினர்களால் ஆளப்பட்டது.

கி.பி. 1336ல் ஆட்சிப்பொறுப்பேற்ற முதலாம் ஹரிகரன், முதலாவதாக மைசூரையும், பின்னர் மதுரையையும் வென்றார். அவரைத் தொடர்ந்து முதலாம் புக்கர் (கி.பி. 1356 ) ஆட்சிக்கு வந்தார். இவரது காலத்தில் பேரரசின் பரப்பானது துங்கபத்ரா ஆறு முதல், தெற்கில் இராமேஸ்வரம் வரையில் விரிவடைந்தது. விஜயநகர பேரரசின் முக்கிய மன்னர்கள், இரண்டாம் ஹரிகரர், முதலாம் தேவராயர், இரண்டாம் தேவராயர், கிருஷ்ணதேவராயர் ஆகியோராவர்.



கிருஷ்ண தேவராயர்

## கிருஷ்ணதேவராயர் (கி.பி.1509 – 1529)

துளவ மரபைச் சேர்ந்தவர் கிருஷ்ண தேவராயர். இவர் விஜயநகரப் பேரரசை ஆட்சி செய்தவர்களில் குறிப்பிடத் தக்கவராவார். ‘கிருஷ்ண தேவராயர் முழு நிறைவான அரசர்’ என்று வரலாற்று அறிஞர் டோமினிக் பயஸ் குறிப்பிட்டுள்ளார்.

## படையெடுப்புகள்

கிருஷ்ணதேவராயர் மாபெரும் வீரராவார். இவர் கி.பி.1510ல் சிவசமுத்திரம் பகுதியையும், கி.பி. 1512ல் ரெய்ச்சூரையும், கி.பி.1523ல்

வாரங்கலையும், ஒரிசாவையும் வென்றார். மேலும் தக்காணத்தின் பெரும் பகுதியையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். வடக்கே கிருஷ்ணா நதி முதல் தெற்கே காவிரி வரையிலும், மேற்கே அரபிக்கடல் முதல் கிழக்கே வங்கக்கடல் வரையிலுமாக பரந்த பேரரசை நிறுவினார்.

கிருஷ்ணதேவராயரிடம் சிறந்த நிர்வாகத் திறமையும் இருந்தது. நீர் பாசன வசதிக்காக பெரிய ஏரிகளையும், வாய்க்கால்களையும் ஏற்படுத்தினார். அயல்நாட்டு வணிகத்தின் முக்கியத் துவத்தை உணர்ந்த இவர் கப்பல் கட்டுமானத்தையும் மேம்படுத்தினார். போர்ச்சுக்கீசிய, அரேபிய வணிகக் குழுவினரை நட்புறவோடு நடத்தி, நாட்டின் வருமானத்தை அதிகப்படுத்தினார்.

கிருஷ்ணதேவராயர் சிறந்த கல்விமான் ஆவார். இவரது அவையில் அஷ்டதிக்கஜங்கள் எனப்படும் எட்டு அறிஞர்கள் இடம் பெற்றிருந்தனர். கட்டிடங்களை நிர்மானிப்பதிலும், கலைகளை வளர்ப்பதிலும் இம்மன்னர் ஆர்வம் கொண்டிருந்தார். அழகிய ஆலயங்கள் பலவற்றையும், அரண்மனைகளையும் எழிலுற கட்டினார். இவரது காலத்தில் விஜயநகரப் பேரரசின் புகழ் உச்ச நிலையை அடைந்தது.

**அஷ்டதிக்கஜங்கள்**

அல்லசாணி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, தெனாலிஇராமன், பட்டு மூர்த்தி, புனவீரபத்திரன், துர்ஜதி, மல்லண்ணா, மற்றும் பனாஜி சூரானா ஆகியோர்.

## தலைக்கோட்டைப் போர் (கி.பி.1565)

கிருஷ்ணதேவராயருக்குப் பின் வந்த அரசர்கள் திறமையற்றவர்களாக இருந்தனர். இராமராயர் ஆட்சியின் போது, பாமினி அரசுகளான, அகமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா, பீடார் ஆகிய முஸ்லீம் நாடுகள் கூட்டாக விஜயநகர் மீது படையெடுத்தன. கி.பி.1565ல் தலைக்கோட்டை என்னுமிடத்தில் நடைபெற்ற பெரும் போரின் போது விஜயநகர மக்கள் இரக்கமின்றி கொல்லப்பட்டனர். விஜயநகரம் சூறையாடப்பட்டு நாசமாக்கப்பட்டது. இராமராயர் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

## நிர்வாகச் சிறப்புகள்
### மைய, மாகாண, கிராம நிர்வாகம்.

விஜயநகர ஆட்சியாளர்கள் ஒரு சிறந்த கட்டமைப்பு கொண்ட நிர்வாக முறையைப் பின்பற்றினர். நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் அரசர் பெற்றிருந்தார். அவருக்கு உதவிட அமைச்சர்கள் பலர் இருந்தனர்.

பேரரசு ஆறு மாகாணங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. நாயக் எனப்பட்ட ஆளுநர்கள் மாகாணங்களை நிர்வகித்தனர். மாகாணங்கள் பல மாவட்டங்களாவும், மாவட்டங்கள் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கிராமமும் 'கிராமசபை' என்னும் குழுவினரால் ஆளப்பட்டது. அக்குழுவில் தலைமுறை வழிவந்த, கணக்காளர், எடையாளர், காவல்காரர், குற்றேவலர் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். மகாநாயக்காச்சாரியார் என்னும் மைய அரசின் அதிகாரியால் கிராம நிர்வாகங்கள் அனைத்தும் கண்காணிக்கப்பட்டன.

## இராணுவம்

படைப்பிரிவில் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை ஆகியன பெரும்பங்கு வகித்தன. தலைமை தளபதியின் நேரடி நிர்வாகத்தில் படைகள் இருந்தன.

## நிதித்துறை

நாட்டின் வருவாயானது வேளாண்மையைச் சார்ந்திருந்தது. நிலங்கள் முறைாக அளக்கப்பட்டு அதன் மண் வளத்திற்கேற்ப வரி விதிக்கப்பட்டது. வேளாண்துறை மீது தனி கவனம் செலுத்தப்பட்டு புதிய அணைகளும், வாய்க்கால்களும் ஏற்படுத்தப்பட்டன.

## நீதித்துறை

மன்னர், நாட்டின் தலைமை நீதிபதியாகவும் விளங்கினார். வழக்குகள் இந்து நெறிமுறைகளின் அடிப்படையில் விசாரிக்கப்பட்டன. குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. நீதிக்குப் புறம்பாக நடப்போரிடம் அபராதமும் வசூலிக்கப்பட்டது.

## பெண்களின் நிலை

பெண்களின் நிலை மேம்பட்டிருந்தது. அரசியல், சமுதாயம், இலக்கியம் போன்றவற்றில் பங்கு கொண்டனர். ஆயுதமேந்துதல், மல்யுத்தம் உள்ளிட்ட தற்காப்பு கலைகளிலும் ஆர்வம் காட்டினர். இசையிலும், நுண்கலைகளிலும் ஈடுபாடு கொண்டிந்தனர். ஒரு சில பெண்கள் கல்வியில் தேர்ச்சி பெற்று விளங்கினர். நியுனஸ் என்பார் 'பெண் சோதிடர்கள், எழுத்தர், கணக்காளர், காவலர், மல்யுத்த வீராங்கனைகள் ஆகியோர் அரசவையில் இடம் பெற்றிருந்தனர்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## சமூக வாழ்க்கை

மக்களது வாழ்க்கை முறையின் விவரங்களை வெளிநாட்டுப் பயணியர் எழுதிய குறிப்புகளின் மூலமாக நாம் அறிகிறோம். குழந்தைத்திருமணமும், பலதார மணமும், உடன்கட்டை ஏறுதலும் நடைமுறையில் இருந்தன. மன்னர், சமயங்களை பின்பற்றுவதில் முழு உரிமையை மக்களுக்கு கொடுத்தார்.

## பொருளாதார நிலை

விஜயநகர பேரரசு வளமும், செழுமையும் மிக்கதாகக் காணப்பட்டது. அரசின் வேளாண்மைச் சீர்திருத்தங்களால் விளைச்சல் அதிகரித்தது. நெசவு, சுரங்கம், உலோகம், வாசனை திரவியம் சார்ந்த பல தொழிற்கூடங்கள் இயங்கின. இந்திய பெருங்கடலில் உள்ள தீவுகள், மலேய தீவுக் கூட்டங்கள், பர்மா, சீனா, அரேபியா, பாரசீகம், தென்னாப்பிரிக்கா, அபிசினியா மற்றும் போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். வெளிநாட்டுக்கப்பல் போக்குவரத்துக்கு, கோவா, டையூ, கொல்லம், கொச்சி முதலியன முக்கிய துறைமுகங்களாக விளங்கின. பேரரசிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் வாசனைப் பொருட்கள், தானியங்கள், பட்டு, பருத்தி, அபின், சாயப்பொருட்கள், முத்து, குங்குமப்பூ. இஞ்சி, சர்க்கரை, தேங்காய் போன்றவைகள் முக்கியமானவைகளாகும். அதே வேளையில், குதிரைகள். பாதரசம், சீனப்பட்டு, மிருதுவான வெல்வெட்துணி போன்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

## கலை, இலக்கியக் கொடைகள்

கலை, கல்வி ஆகியவற்றிற்கு விஜயநகர மன்னர்கள் பெரும் ஆதரவு தந்துள்ளனர். கோயிற்கட்டுமானக் கலைக்கு, ஹசரா ராமசாமி கோயிலும், விட்டலசாமி ஆலயமும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். ஊலோக உருக்குக்கலை சிறப்பிற்கு கிருஷ்ணதேவராயர் சிலையே ஒரு மகுடமாகும்.

மன்னர்களால் பல அறிஞர்கள் ஆதரிக்கப்பட்டனர். சமஸ்கிருதம்,

தெலுங்கு, தமிழ், கன்னட இலக்கியங்கள் வளர்ச்சியடைந்தன. வேதங்களுக்கான உரையை சாயனா எழுதினார். கிருஷ்ணதேவராயர் தெலுங்கில் ஆமுக்த–மால்யதா என்னும் நூலை எழுதினார், மேலும் அவர் உஷாபரிநயம், ஜாம்பவதி கல்யாணம் ஆகிய சமஸ்கிருத நூல்களையும் எழுதியுள்ளார்.

### பேரரசின் வீழ்ச்சி

பேரரசை இறுதியாக ஆண்ட அரவீடு மரபின் ஆட்சியாளர்கள் திறமையற்று இருந்ததால் மாகாண ஆளுனர்கள் தங்கள் பகுதியை சுதந்திர நாடுகளாக அறிவித்தனர். பீஜப்பூர், கோல்கொண்டா அரசுகள் விஜயநகரின் ஒரு பகுதியை கைப்பற்றின. தெற்கே நாயக்கர்கள் தனியாட்சியைத் தொடங்கினர். கி.பி1614ல் விஜயநகரம் முழுமையாக வீழ்ச்சியடைந்தது.

### பாமினி அரசு (கி.பி.1347–1526)

கி.பி.1347 முதல் கி.பி1526 வரையில் தக்காணத்தில் பாமினி அரசு வலிமையுடன் செயல்பட்டது.

### அரசியல் வரலாறு

ஹசன்கங்கு பாமினி என்பவர் கி.பி.1347ல் இவ்வரசைத் தோற்றுவித்தார். இவர் தேவகிரியைச் சேர்ந்த துருக்கிய அலுவலர் ஆவார். வடகிழக்கில் மாகூர் முதல் தெற்கே தெலுங்கானா வரையில் உள்ள அனைத்துப் பகுதிகளையும் கைப்பற்றினார். வாரங்கலை ஆண்ட இந்து மன்னரை வென்று, கொல்லாப்பூர், கோவா, மாண்டு, மாளவம் ஆகிய இடங்களை கைப்பற்றினார். இதனால் இவரது பேரரசு, அரபிக்கடல் முதல் வங்கக்கடல்வரையும், தக்காணத்தின் பெரும் பகுதியாக கிருஷ்ணா நதிவரையிலும் அமைந்தது. இவரது தலைநகரம் குல்பர்கா ஆகும்.

### முதலாம் முகமது ஷா (கி.பி.1358– 1377)

இவர் சிறந்த போர் வீரரும், நிர்வாகியுமாவார். விஜயநகர மன்னர் முதலாம் புக்காவையும், வாரங்கலின் கபயா நாயக்கர்களையும் போரில் தோற்கடித்தவராவார்.

### இரண்டாம் முகமது ஷா (கி.பி. 1378– 1397)

இவர் அமைதியை விரும்பினார். அண்டை நாடுகளுடன் நட்பை வளர்த்தார். பல மசூதிகளையும், மதராஸா என்ற கல்விக்கூடங்களையும், மருத்துவமனைகளையும் கட்டினார்.

### பெரோஸ் ஷா பாமினி (கி.பி.1397– 1422)

சிறந்த போர் வீரராக விளங்கிய இவர் விஜயநகர மன்னர் முதலாம் தேவ ராயரை வென்றார். தமது நிர்வாகத்தில் இந்துக்களுக்கும் இடமளித்தார். தமது ஆட்சியின் இறுதியில், விஜயநகர அரசர்களினால் தோற்கடிக்கப்பட்டு, நாட்டின் வட, தென் பகுதிகளை இழந்தார்.

### அகமது ஷா (கி.பி.1422 – 1435)

இவர் பெரோஸ்ஷா பாமினியை அடுத்து பட்டமேற்றார். இவர் கொடுங் கோலனாகவும், இரக்கமற்றவனாகவும் இருந்தார். இவர் வாரங்கல் பகுதியை வென்றதால் தமது தலைநகரை குல்பர் காவிலிருந்து பீடாருக்கு மாற்றினார். இவர் கி.பி.1435ல் மரணமடைந்தார்.

**முகமது கவான்**

ஆற்றலும், அறிவு நுட்பமும் கொண்டவர் கவான். சிறந்த நிர்வாகியான இவர், நிதித் துறையை சீரமைத்தார். கல்விக்கு ஊக்கம் கொடுத்தார். வரிமுறையில் மாற்றங்களை உண்டாக்கினார். படைத்துறையில் ஊழலை ஒழித்து ஒழுங்குசெய்தார்.

## பாமினி மற்றும் விஜயநகரப் பேரரசு



தக்காண முஸ்லீம்களின் பொய்யான குற்றச்சாட்டை நம்பிய மன்னர் முகமது ஷா, கவானுக்கு மரண தண்டனையளித்தார். அதன்படி கி.பி.1481ல் கவான் கொல்லப்பட்டார்.

## மூன்றாம் முகமது ஷா (கி.பி.1463 –1482)

கி.பி.1463ல் மூன்றாம் முகமது ஷா பட்டமேற்ற போது அவருக்கு வயது ஒன்பது. எனவே அவருக்கு முகமது கவான் பாதுகாவலராக இருந்து ஆட்சி செய்தார். நிர்வாக ஆற்றல் கொண்ட முகமது கவானின் வழிகாட்டுதலால் பாமினி அரசு மிக வலிமை மிக்க நாடானது. முகமது கவானால், கொங்குநாடு, சங்கமேஸ்வர், ஒரிஸ்ஸா, விஜயநகர் ஆகிய நாடுகளின் ஆட்சியாளர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இக்காலத்தில் பாமினி அரசின் எல்லையாக இரு கடல்களும், தபதி–துங்கபத்ரா நதிகளும் இருந்தன.

## பாமினி அரசு சிதறுதல்

கி.பி.1482ல் முகமது ஷா இறந்தார். அவருக்குப் பின்பு பதவிக்கு வந்த வாரிசுகள் வலிமையற்று இருந்தனர். அதனால் பாமினி அரசு ஐந்து சிறு நாடுகளாக சிதறுண்டது. அவை பீஜப்பூர், அகமதுநகர், பீரார், பீடார், கோல்கொண்டா ஆகியனவாகும்.

## நிர்வாகம்

பாமினி அரசின் நிர்வாகம் நிலமானிய முறையில் அமைந்தது. நாடு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன. அவை தராஃபுகள் எனப்பட்டன. தராஃப் ஒவ்வொன்றையும் தராஃப்தார் அல்லது அமீர் நிர்வகித்தார். ஆளுநர்கள் போர்காலங்களில் மன்னருக்கு படைவீரர்களையும், போர் தளவாடங்களையும் அனுப்பி உதவினர். ஆளுனர்கள் வலிமை பெற்றவர்களாக இருந்தார்கள்.

## பாமினி அரசின் கொடைகள்

பாமினி அரசர்கள் கல்விக்காக சிறப்பு கவனம் செலுத்தினர். குறிப்பாக அரபு, பாரசீக மொழிகளைக் கற்க ஊக்கமளித்தனர். உருது மொழி வளர்ச்சியுற்றது. எண்ணற்ற மசூதிகள், மதரசாக்கள். நூலகங்கள் கட்டப்பட்டன, முகமது கவான் கட்டிய மதரசா மற்றும் சுல்தான்களால் கட்டப்பட்ட, குல்பர்கா ஜூம்மா மசூதி, கோல்கொண்டா கோட்டை, பீஜப்பூரில் உள்ள கோல்கும்பாஸ் கட்டிடம் ஆகியன அவர்களின் கட்டிடக்கலைக்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

**கோல்கும்பா**

பீஜப்பூரில் உள்ள கோல்கும்பா கட்டடம் 'முணுமுணுக்கும் அரங்கம்' என்ற சிறப்பைப் பெற்றது. ஏனெனில், இங்குள்ள அரங்கத்தின் ஒரு மூலையில் நின்று மெல்லப் பேசினாலே அதன் எதிரொலியை எதிர்முனையில் தெளிவாகக் கேட்க முடியும்.

## பாமினி அரசின் வீழ்ச்சி

பாமினி அரசின் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் உண்டு. விஜயநகர அரசர்களுடன் தொடர்ச்சியாக போர்கள் நடந்தது, மூன்றாம் முகமது கவானுக்குப் பின்னர் திறமையற்ற அரசர்களின் ஆட்சி, அயல்நாட்டு பிரபுக்களின் கலகங்கள் போன்றன பாமினி அரசின் விழ்ச்சிக்கு காரணமாக அமைந்தன.

## பயிற்சி

### I) சரியான விடையை எழுதுக.

1. விஜயநகர பேரரசு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ______________

   அ) கி.பி. 1337   ஆ) கி.பி. 1336   இ) கி.பி. 1338

2. ஹரிகரர், புக்கர் சகோதரர்கள் பணியாற்றிய ஹொய்சாள அரசர் ______________ ஆவார்.

   அ) மூன்றாம் வீர பல்லாளர்   ஆ) இரண்டாம் நரசிம்மர்   இ) ஆறாம் பில்லம்மா

3. விஜய நகர பேரரசின் புகழ்மிக்க அரசர் ______________ ஆவார்.

   அ) ஹரிகரர்   ஆ) புக்கர்   இ) கிருஷ்ண தேவராயர்

4. 1347ல் தக்காணத்தில் ஏற்படுத்தப்பட்ட முஸ்லிம் பேரரசு ______________ ஆகும்.

   அ) அடிமை   ஆ) விஜயநகர   இ) பாமினி

5. ______________ வின் பாதுகாவலராக முகமது கவான் இருந்தார்.

   அ) மூன்றாம் முகமது ஷா   ஆ) ஹசன்கங்கு   இ) அகமது ஷா

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கிருஷ்ண தேவராயரின் அவையை அலங்கரித்த எட்டு அறிஞர்கள் ______________ என அழைக்கப்பட்டனர்.
2. ______________ காலத்தில் விஜயநகரப் பேரரசின் புகழ் உச்சநிலையை அடைந்தது.
3. இராமராயர் ______________ போர்களத்தில் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.
4. பாமினி பேரரசை நிறுவியவர் ______________ ஆவார்.
5. பாமினி அரசர்கள் அரபு மற்றும் ______________ மொழிகளைக் கற்க ஊக்கமளித்தனர்.

## III) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. விஜயநகரம் | – | பிஜப்பூர் |
| 2. தலைக்கோட்டைப் போர் | – | உஷாபரிநயம் |
| 3. கிருஷ்ண தேவராயர் | – | குல்பர்கா |
| 4. ஜிம்மா மசூதி | – | துங்க பத்திரா நதிக்கரை |
| 5. கோல்கும்பா | – | கி.பி. 1565 |

## IV) சுருக்கமாக விடையளி.

1. விஜயநகர பேரரசு யாரால் எப்போது நிறுவப்பட்டது ?
2. விஜய நகர பேரரசின் முக்கிய அரசர்கள் யாவர் ?
3. தலைக்கோட்டை போர்ப்பற்றி சிறுகுறிப்பு வரைக.
4. பாமினி பேரரசு யாரால், எப்போது நிறுவப்பட்டது ?
5. பாமினி பேரரசிலிருந்து இறுதியில் பிரிந்த ஐந்து தக்காண முஸ்லீம் அரசுகளின் பெயர்களை எழுதுக.

## V) விரிவான விடையளி.

1. விஜயநகர பேரரசின் சிறப்புகளை விரிவாக எழுதுக.
2. பாமினி பேரரசின் அரசியல் வரலாற்றை விரிவாக கூறுக.

## VI) செய்ய வேண்டியன.

விஜய நகர மற்றும் பாமினி பேரரசுகள், கலை மற்றும் கட்டிடக் கலைக்கு ஆற்றிய பங்களிப்புகள் பற்றிய படங்களைச் சேகரித்து ‘படதொகுப்பு’ தயாரிக்கவும்.

# 7. பக்தி, சூஃபி இயக்கங்கள்

இடைக்காலத்தில் தோன்றிய பக்தி இயக்கமானது இந்தியா முழுவதும் பரவி, பல நூற்றாண்டுகளுக்கு இம்மண்ணில் நின்று நிலவியது, பக்தி இயக்கத்தை பரப்பிய துறவிகள் பொதுவாக இறைபற்றையே முன்னிலைப் படுத்தினர். அதுமட்டுமின்றி இறைவனை வழிபடுவதன் குறிக்கோளே முக்தி அடைவதற்காகத் தான் என்பதை அறிவுறுத்தினர். மேலும் இந்துக்களின் மனதில் நல்ல மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தொடங்கப்பட்ட பக்தி இயக்கம், இந்து – முஸ்லீம் நட்புறவையும் வலியுறுத்தியது. பக்தி இயக்கங்களை பரப்பியவர்கள் பல்வேறு இடங்களையும், பல்வேறு காலக்கட்டங்களையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

## தென்னிந்தியாவில் பக்தி இயக்கம்

தென்னிந்தியாவில் ஆட்சி செய்த பண்டைய அரசுகளான, பல்லவர், சோழர், பாண்டியர் காலத்தில் மக்கள் சைவம், வைணவம் ஆகிய சமய வழிபாடுகளை மேற்கொண்டிருந்தனர். அதனை அன்றையக் காலகட்டடத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் தழைத்தோங்கிடச் செய்தனர்.

**பக்தி இயக்கத்தைப்பற்றிய பொதுவான கருத்து.**

பக்தி இயக்கம் முதலில் தென்னிந்தியாவிலேயே தொடங்கப்பட்டது. பின்னர் இராமானந்தர் அதனை வடஇந்தியாவில் கொண்டுபோய் சேர்த்தார். கபீர் அதனை மக்களிடையே பிரபலமடையச் செய்தார்.

## நாயன்மார்கள்

63 நாயன்மார்கள் சைவ சமயத்தை நாடெங்கும் பரப்பினார்கள். இவர்களில் திருநாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் முதன்மையானவர்களாவர்.

திருநாவுக்கரசர் என்கின்ற அப்பர் கி.பி600ஆம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் பிறந்தார். முதலில் சமண சமயத்தை சார்ந்திருந்த அப்பர் தனது தமக்கை திலகவதி அம்மையாரின் தாக்கத்தினால் சிவபக்தரானார். இவர் 49,000 க்கும் மேற்பட்ட பதிகங்களை எழுதியுள்ளார் எனினும் 311 பதிகங்களே இதுவரை கிடைத்துள்ளன.

ஒரே கடவுள் என்ற கோட்பாட்டையுடைய மாணிக்கவாசகர், கடவுளை அடைய ஒரே வழி 'அன்பு' மட்டுமே தவிர, சடங்குகள் இல்லை என உறுதியாக அறிவுறுத்தினார். இவருடைய நூல் திருவாசகம் ஆகும்.

சம்பந்தர் 16,000பதிகங்களை பாடினார் எனக் கூறப்படுகிறது, எனினும் 384 பதிகங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. தென்னாற்காடு மாவட்டத்தில் எட்டாவது நூற்றாண்டின் இறுதி பகுதியில் பிறந்தவர் சுந்தரமூர்த்தி ஆவார். 38,000 பதிகங்களை பாடினார் என அறிகிறோம். இருப்பினும் 100 பதிகங்கள் மட்டுமே இதுவரை கிடைத்துள்ளன. சேக்கிழாரின் பெரியபுராணம் (நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்று நூல்) மற்றும் தேவாரம், திருவாசகம் திருமறை ஆகிய நூல்கள் இக்காலக்கட்டத்தில் எழுதப்பட்ட முக்கிய நூல்கள் ஆகும். இந்நூல்களின் பாக்களில் தத்துவம், இலக்கியம் மற்றும் பக்தி ஆகியவை நிறைந்து காணப்படுகின்றன.

## ஆழ்வார்கள்

விஷ்ணுவின் புகழினைப் பரப்பியோர் ஆழ்வார்கள் எனப்பட்டனர். ஆழ்வார்கள் மொத்தம் பன்னிரெண்டு பேர் ஆவர். ஆழ்வார்களில், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஆழ்வார்கள் பாடிய சுமார் 4000 பாடல்களை நாதமுனி என்பார் நாலாயிரத் திவ்யபிரபந்தம் என்னும் நூலாகத் தொகுத்தார்.

## பக்தி இயக்கத்தின் தாக்கம்

பக்தியியக்கத்தின் விளைவாக தஞ்சாவூர், சிதம்பரம், கங்கைகொண்ட சோழபுரம் போன்ற இடங்களில் பிரமாண்டமான கோயில்கள் எழுப்பப்பட்டன. இறைவன், இறைவி, துறவிகளுக்காக உலோக சிற்பங்களும் வடிக்கப்பட்டு அவை விழாக்காலங்களில் ஊர்முழுவதும் உலா எடுத்துச் செல்லப்பட்டன. வட்டார மொழிகளில் அழகிய பாடல்கள் இறைவன் மீது பாடப்பட்டன.

## பழங்கால பக்தியியக்க வரலாறு

பழங்காலத்தில் தென்னிந்தியாவில் பக்தி இயக்கத்தைத் தொடங்கி வைத்தவர் சங்கராச்சாரியார் ஆவார். இவர் கேரளாவில், காலடி என்ற இடத்தில் பிறந்தார். ஒரே கடவுள் என்னும் அத்வைத கொள்கையை இவர் பரப்பினார். பிரம்மம் என்ற தலையாய சக்தியே உண்மை என உரைத்தார். சங்கராச்சாரியார் தமது சீடர்களுக்கு, அன்பு, உண்மை, மதிப்பளித்தல் போன்ற வாழ்க்கையின் அவசிய கோட்பாடுகளை உணரச் செய்தார்.

## பக்தி இயக்கத்தைப் பரப்பியோர்

இறைவனை வழிபடுவதனால் முக்தி அடையலாம் என்ற கருத்து, பல்வேறு பக்தியியக்க பரப்புரையாளர்களை உருவாக்கியது.



இராமானுஜர்

இராமானுஜர் பக்தி இயக்கத்தை பரப்பியவர்களில் குறிப்பிடத்தக்கவர். இவர் ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தவர். இவர் கி.பி.12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவப்பெரியார் ஆவார். பக்தியின் மூலம் முக்தியைப் பெறலாம் என்பது இவரது கொள்கை. வைணவமார்க்கத்தை கீழ்க்குடிகள் பின்பற்றுவதை இவர் வரவேற்றார்.

இராமானுஜரின் சீடர் இராமானந்தர் ஆவார். இவர் கடவுள் நம்பிக்கையை பெரிதும் போற்றினார். மக்கள் அனைவரையும் ஒரே குடும்பமாகக் கருதியதோடு அவர்கள் அனைவரையும் சகோதர, சகோதரிகளாக எண்ணினார். எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும், எல்லா சாதியைச் சேர்ந்தவர்களும் இவரது சீடர்களாயினர். மக்கள் பேசும் மொழியிலேயே இவர் போதனை செய்தார்.

வல்லபாச்சாரியார், (கி.பி.1479–1531) கிருஷ்ணரை வழிபட்டார். மக்கள் ஒவ்வொருவரும் பக்தியின் மூலம் இறைவனை அடையலாம் என்று போதித்தார்.

பசவர், வீரசைவம் என்ற பிரிவைத் தொடங்கினார். சிவனை வழிபட்ட இவரைப் பின்பற்றியோர் வீரசைவர் அல்லது லிங்காயத்துகள் எனப்பட்டனர். சாதிமுறை, மறுபிறப்பு ஆகியவற்றை இவர் எதிர்த்தார்.

சைதன்யர், கிபி1485ல் வங்காளத்தில் பிறந்தார். கிருஷ்ண வழிபாட்டை பிரபலப்படுத்தினார். அன்பும், பக்தியுமே இறைவனை அடையும் நல்வழி என்று போதித்தார்.

கபீர், (கி.பி1425–1581) இராமானந்தரின் சீடராவார். இந்து–முஸ்லீம் ஒற்று மையை முதன்முதலாக வலியுறுத்தியவர். ஆன்மீகத் துறவிகளுள் இவர் சிறப்பிடம் பெற்றிருந்தார். இவரைப் பின்பற்றியோர் கபீர்பந்த் எனப்பட்டனர். இவரது போதனைகளின் தொகுப்பு பிஜகா எனப்படுகிறது. இவரது பாடல்கள், குறிப்பாக தோகா வகைப்பாடல்கள் மக்களிடையே தாக்கத்தையும், ஈர்ப்பினையும் ஏற்படுத்தின. மக்களின் வழிபாட்டுப் பாடல்களாகவும் அவை அமைந்தன. இவர், இராமனும், இரகீமும் ஒருவரே என்றார். சிலை வழிபாட்டையும், சாதிமுறைகளையும் இவர் கண்டித்தார்.

**கபீர் எழுதிய கவிதை**

ஓ மனிதனே!
என்னை நீ எங்கு தேடுகிறாய்?
உன்னருகே இருக்கிறேன்.
என்னைக் கோயிலில் தேடாதே,
மசூதியிலும் தேடாதே,
நான் காபாவிலும் இல்லை,
கைலாயத்திலும் இல்லை,
சடங்கின் அருகிலோ
சம்பிரதாயத்தின் அணைப்பிலோ
உன் படையலின் பக்கத்திலோ
பக்தியின் யோகா விரிப்பிலோ நான் இல்லை.
உண்மையாக நீ என்னைத் தேடினால்
நீ என்னை உடனே காண்பாய்.
நொடிப்பொழுதில்
என்னை நீ சந்திப்பாய்.

**கபீரின் பதில்;** ஓ துறவியே !
அனைவரது மூச்சிலும்
இறைவனது மூச்சும் கலந்திருக்கும்.


கபீர்

## குரு நானக் (கி.பி.1469–1538)


குரு நானக்

பக்தி இயக்கத்தின் மற்றுமொரு மகான் குருநானக் ஆவார். இவர் சீக்கிய மதத்தை நிறுவினார். இவர் கபீரின் உற்ற சீடர் ஆவார். லாகூர் அருகில் தால்வாண்டி என்னும் ஊரில் கி.பி1469ல் பிறந்தார். கடவுள் ஒருவரே என்பது இவரது கருத்து. இந்து, முஸ்லீம்களிடையே, நம்பிக்கையையும், நட்புறவையும் வளர்க்க முற்பட்டார். உருவ வழிபாட்டினையும், மூடநம்பிக்கைகளையும் எதிர்த்தார். உண்மை, நேர்மை, அன்பு ஆகியவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தினார்.

## மீராபாய்


மீராபாய்

மேவார் நாட்டு மன்னர் ரதோர் ரத்னாசிங் என்பவரின் மகளும், உதய்பூர் மன்னரின் மனைவியுமான மீராபாய் கி.பி1498ல் பிறந்தார். கிருஷ்ணரின் பக்தையான இவர் பக்தியியக்கத்தின் முக்கியத் துறவியாக விளங்கினார். பஜன் என்னும் வகையிலமைந்த இவரது பாடல்கள் இராஜஸ்தான் பகுதியில் மிகவும் புகழ்பெற்றவையாகும்.

## மகாராட்டிரத்தின் துறவிகள்

இக்காலக்கட்டத்தில் பல துறவிகள் மகாராட்டிர பகுதியில் உருவாயினர். ஞானதேவர், நாமதேவர், ஏக்நாத், துக்காராம், துளசிதாசர், ராமதாசர் ஆகியோர் அதில் குறிப்பிடத் தகுந்தவர்கள். ஞானதேவர் பகவத்கீதைக்கு எழுதிய உரை நூலானது ஞானேஸ்வரி எனப்பட்டது. சொக்கமேளா என்பவர் இவ்வரிசையில் இடம்பெற்ற, தாழ்த்தப்பட்டவர்களில், முதன்மையானவர் ஆவார். ஏக்நாத் சாதிமுறையை எதிர்த்தார். குருராமதாசர், தசபோதா என்ற நூலையும், துளசிதாசர், இராமசரிதமானஸ் என்ற நூலையும் எழுதினர்.

## சூஃபி இயக்கம்

பாரசீகத்தில் தொடங்கப்பட்ட இஸ்லாமிய சீர்திருத்த இயக்கம் இந்தியாவிலும் (கி.பி12 ஆம் நூற்றாண்டில்) பரவியது. இவ்வியக்கத்தை பின்பற்றியோர் சூஃபிக்கள் என அழைக்கப்பட்டனர்.

சூஃபி இயக்கமானது கலிபாவின் போக்கினைக் கண்டித்தது. அரசியலையும், தத்துவத்தையும், இன்பங்களைத் தரும் பொருட்களையும் பயன்படுத்திக் கொள்ளும் கலீபாவின் செயல்களை எதிர்த்தது. முகமது நபியே உண்மையானவர் அவரது கோட்பாடுகளே முழுமையானது. என்று சூஃபி இயக்கம் கருதியது. மேலும் தியானமும், பக்தியும் மட்டுமே இறைவனை அடையும் வழிகளென போதித்தது. சடங்குகளை எதிர்த்ததோடு மதச்சகிப்பின்மையை போற்றியது. சூஃபி இயக்கத்தினர் தம்மை பல குழுக்களாக வகுத்துக் கொண்டனர். குழுவின் தலைவர் (அரபு மொழியில்) ஷேக் (பாரசீக மொழியில்) பீர் அல்லது முர்ஷித் எனப்பட்டார். இக்குழுக்கள் 12 தொகுப்புளாக செயல்பட்டனர் இத்தொகுப்பு 'சில்சிலா' எனப்பட்டது. சில்சிலா என்றால் தொடர் சங்கிலி என்று பொருள். இதுகுருவுக்கும் சீடருக்கும் உள்ள இணைப்பைக் குறிப்பதாகும். சிஸ்டிசில்சிலா குழு முறையானது இந்தியாவில் மிகுந்த செல்வாக்கு பெற்றதோடு, உள்நாட்டு சூழலுக்கேற்ப தன்னை வகுத்துக் கொண்ட ஒரு பக்திமார்க்கமாக வளர்ந்தது.

### சூஃபி இயக்கம் – பெயர் வரலாறு

சூஃப் என்றால் முரட்டு கம்பளி ஆடையை அணிந்து, எளிமையை வெளிப்படுத்தும் துறவி என்பது பொருள். அதாவது உலகத்தின் பகட்டு வாழ்க்கையை அமைதியாக வெறுப்போர் எனலாம்.

ஸூஃபா என்றால் தூய்மையான என்பது பொருளாகும்.
ஸூஃபா உண்மையையறிய குழுமிய கூட்டத்தினருடன் முகமது நபி நின்று கொண்டிருந்த இடமான, மசூதியின் வெளிப்புற நடைபாதையை இச்சொல் குறிக்கும்.

### இந்திய ஸூஃபி இயக்கத்துறவிகள்

இந்திய ஸூஃபி இயக்கத்துறவிகளில் குறிப்பிடத்தக்கவர்கள் குவாஜா மொய்ன்–உத்–தீன்–சிஸ்டி, பாபா ஃப்ரீத், நிஜாம் – உத்– தீன் அவுலியா ஆகியோராவர்.

### குவாஜா மொய்ன் –உத்– தீன்– சிஸ்டி

இவர் கி.பி 1192ல் இந்தியாவுக்கு வந்து அஜ்மீரில் தங்கியிருந்தார். மனிதர்களுக்கு செய்யும் சேவையே சிறந்த இறைபக்தியாகும் என்றார். மக்கள் இவரை ஏழைகளின் காப்பாளர் என்ற பொருளில் 'கரிப் நவாஜ்' என்று அன்புடன் அழைத்தனர். குழுவாக சேர்ந்து பக்தி பாடல்களைப் பாடுவதையும், கவாலி பாடல்களைப் பாடுவதையும்இவர் ஊக்கப்படுத்தினார். கி.பி1235ல் இவர் இறந்தார். இவரது உடலை அடக்கம் செய்த, அஜ்மீரில் உள்ள தர்காவானது முஸ்லீம்களின புனிதத்தலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. தேங்காய் உடைப்பது, விளக்குகள் ஏற்றிவைப்பது போன்ற இந்துக்களின் முறைகள் இங்கு பின்பற்றப்படுகிறது.

### பாபா ஃபரீத்

குவாஜா மொய்ன்–உத்தீன்–சிஸ்டியின் சீடர் பாபாஃபரீத் ஆவார். புகழ்பெற்ற ஸூஃபி துறவிகளுள் ஒருவராக இவர் விளங்கினார்.

கடவுள் ஒருவரே என்றும், மக்கள் சகோதரத்துடன் வாழவேண்டுமென்றும் கொள்கை உடையவராக இருந்தார். மக்கள் எளிமையான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். பஞ்சாபி மொழியில் பல பாடல்களை எழுதினார். அவைகள் இந்துக்களாலும், முஸ்லீம்களாலும் விரும்பி பாடப்பட்டன. டெல்லி சுல்தானாக விளங்கிய பால்பன். பாபாஃபரீத்தின் பக்தர் ஆவார்.

### நிஜாம் –உத்–தீன்– அவுலியா

படாயீன் என்ற பகுதியிலிருந்து இந்தியாவுக்கு வந்த இவர் டெல்லியில் தங்கினார். இவர் ஒரு புகழ்பெற்ற இஸ்லாமியத் துறவியாவார். இவரும் பாபாஃபரீதின் சீடராக இருந்தவர். சாதிமுறையையும் வகுப்பு பிரிவினையையும் வெறுத்தார். இவரை, கடவுளின் அன்பைப் பெற்றவர் என்று பொருள்படும் 'மெஹபூம் – இ– இலாஹி' என மக்கள் புகழ்ந்தனர். இவரது கல்லறை டெல்லியில் உள்ளது. இங்கு முஸ்லீம்கள் மட்டுமின்றி இந்துக்களும் வழிபடுகின்றனர்.

### நாகூர் ஆண்டவர்

நாகூர் ஆண்டவர் கி.பி16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் ஆவார். இவர், மீரான் சாகிப் என்றும் குவாதிர் வாலி என்றும் மக்களால் புகழப்பட்டார். தமிழகத்தில், நாகூரில் இவரின் கல்லறை உள்ளது. இக்கட்டிட அமைப்பிலும், இங்கு இடம்பெறும் வழிபாட்டு முறைகளிலும், இந்துக்களின் தாக்கம் காணப்படுகின்றன. மேலும் இந்துகளின் சடங்குகளான, சந்தனம் பூசுதல், பிரசாதம் வழங்குதல். மொட்டையடித்தல். ஆகியனவும் நடைபெறுகின்றன. இங்கு நடைபெறும் கந்தூரி உருஸ் என்னும் விழாவில் அனைத்து மதத்தினரும் பங்கேற்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தர்கா அல்லது கல்லறை

ஷேக் அல்லது துறவியின் கல்லறையானது (தர்கா) அவரைப் பின்பற்றுவோரது வழிபாட்டு தலமாக விளங்குகிறது. காரணம், துறவியர் மரணமடைந்த பின்னர் இறைவனுடன் கலப்பர். இறைவனுடன் நெருக்கமாவர் என எண்ணுவதால் அவர்களது தர்காவை வழிபடுவதன் மூலமாக உலக இன்பத்தையும், ஆன்மீகப் பலன்களையும் பெறமுடியும் என நம்பப்படுகிறது.

### பக்தி மற்றும் சூஃபி இயக்கத்தின் விளைவுகள்

பக்தி மற்றும் சூஃபி இயக்கங்கள், மதவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மக்களை பிரித்து எளிமைப்படுத்தின. மதநம்பிக்கையில் மறைந்து கிடந்த மூடநம்பிக்கைகளைப் பற்றி மக்களுக்கு எடுத்துக்கூறின. மக்கள் அனைவரும் சமமாகவும், சகோதரத்துடனும் வாழ வழிசெய்தன.

பொதுவாக பக்தி இயக்கத் துறவிகள், சடங்குகள், உருவ வழிபாடு, சாதிமுறை, மதகுருவின் அதிகாரம், மதவேறுபாடு ஆகியவற்றுக்கு எதிராக போதனை செய்தனர். அன்பும், பக்தியுமே தனியொருவரை கடவுள் தன்மையினை உணரச்செய்யும் என நம்பிக்கை கொண்டிருந்தனர். இந்துக்களும், முஸ்லீம்களும், சகோதரத்துவத்துடனும், நல்ல நம்பிக்கையுடனும், ஒத்துழைப்புடனும் வாழ ஊக்கமளித்தனர்.

சூஃபி இயக்கத்துறவிகள், கடவுள் ஒருவரே என்றும், மக்கள் அனைவரும் அவரது பிள்ளைகள் என்றும் போதித்தனர். வாழ்க்கையில் தூய்மையையும், ஏழைகளுக்கு தொண்டு செய்வதையும் வலியுறுத்தினர். சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் வெறுத்த அவர்கள் மக்கள் நன்னடத்தையுடன் வாழ வேண்டுமென்பதில் அக்கறை கொண்டனர்.

பக்தி, சூஃபி இயக்கத்துறவிகளால், இந்தி, பஞ்சாபி, வங்காளம், தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய வட்டார மொழிகளின் இலக்கியங்கள் மேலும் வளர்ச்சியடைந்தன.

## பயிற்சி

I) சரியான விடையை எழுதுக.

1. ____________ தோன்றிய பக்தி இயக்கமானது இந்தியா முழுவதும் பரவியது.

   அ) இடைக்காலத்தில் ஆ) பண்டையக்காலத்தில் இ) நவீனக்காலத்தில்

2. சங்கராச்சாரியார் கேரளாவில் ____________ என்ற இடத்தில் பிறந்தார்.

   அ) காலடி ஆ) தால்வண்டி இ) மேவார்

3. குருநானக் நிறுவிய மதம் ____________

   அ) சீக்கியமதம் ஆ) வீரசைவம் இ) வைணவம்

4. துளசிதாசர் எழுதிய நூல் ____________

   அ) தோகா ஆ) தசபோதம் இ) இராமசரிதமானஸ்

5. சூஃபி இயக்கம் ஆரம்பமான இடம் ______________

அ) ஈராக் ஆ) துருக்கி இ) பாரசீகம்

## II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சங்கராச்சாரியர் ______________ கோட்பாட்டினைப் பரப்பினார்.
2. பக்தி இயக்கத்தைப் பரப்பிய இராமனுஜர் ______________ என்ற இடத்தில் பிறந்தார்.
3. பசவர் தோற்றுவித்த பிரிவு ______________ ஆகும்.
4. ஞானதேவர் பகவத் கீதைக்கு எழுதிய உரை நூல் ______________ எனப்பட்டது.
5. நாகூர் தர்காவில் ______________ என்னும் விழா கொண்டாடப்படுகிறது.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. நாயன்மார்கள் | தலித் எழுத்தாளர் |
| 2. மாணிக்கவாசகர் | வைணவர்கள் |
| 3. ஆழ்வார்கள் | திருவாசகம் |
| 4. மீராபாய் | சைவர்கள் |
| 5. சொக்கமேளா | கிருஷ்ணனை வழிபட்டார். |

## IV) கீழ்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்

1. பக்தி இயக்கத்தின் முக்கிய குறிக்கோள்கள் யாவை ?
2. தென்னிந்தியாவில் பக்தி இயக்கத்தின் தாக்கங்கள் யாவை ?
3. கபீர் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
4. பக்தி இயக்கத்தில் மராட்டியத் துறவிகளின் பெயர்களை குறிப்பிடுக.
5. சூஃபிக்கள் எதனை வலியுறுத்தினார்கள் ?

## V) விரிவான விடையளிக்கவும்.

1. பக்தி இயக்கத்தை பரப்பியவர்களைப் பற்றி விரிவாக எழுதவும்.
2. இந்தியாவின் சூஃபி இயக்கத்தை பற்றி விரிவாக எழுதவும்.
3. இந்தியாவில் பக்தி மற்று சூஃபி இயக்கங்களின் விளைவுகள் யாவை ?

## VI) செய்ய வேண்டியன.

1. பக்தி மற்றும் சூஃபி இயக்கங்களின் துறவிகளின் படங்களை சேகரிக்கவும்.
2. பக்தி மற்றும் சூஃபி இயக்கங்களில் ஏதேனும் ஒரு துறவியின் வாழ்க்கை வரலாற்றை நாடகமாக தயாரிக்கவும்.

# புவியியல்

## 1. புவி அதன் அமைப்பு மற்றும் நில நகர்வுகள்

நாம் வாழும் பூமியானது (தாய்க்கோளம்) சூரிய குடும்பத்தில் ஒரு முக்கியமான கோளாகும். ஏனென்றால் பூமியில் மட்டுமே உயிரினங்கள் உள்ளன. அதோடு மட்டுமல்லாமல் நம்முடைய அடிப்படை தேவைகளையும் அது பூர்த்தி செய்கிறது. புவியின் மீது உள்ள பல வகையான உயிரிணங்களை நாம் கவனித்துள்ளோம். இன்றும் இவ்வுயிரினங்களை கொண்டிருக்கும் பூமியின் தோற்றத்தைப்பற்றி விவாதம் நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

**உங்களுக்கு தெரியுமா ?**

பூமியானது கடலின் மீது மிதக்கும் ஒரு கோளமாக எகிப்தியர்கள் கருதினார்கள்.

பூமி மற்றும் மற்ற கோள்களின் தோற்றம் பற்றி பல வல்லுனர்கள், பல கோட்டுபாடுகளை வெளியிட்டுள்ளார்கள். அவைகளில் **'பெரு வெடிப்புக் கொள்கை'** (Big Bang Theory) கோட்பாடே பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். பேரண்டம் ஒரு காலத்தில் மிக நெருக்கமாகவும், அடர்த்தியாகவும் மற்றும் வெப்பமாகவும் இருந்தது என இக்கொள்கை விளக்குகிறது. 10 பில்லியன் முதல் 20 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு காஸ்மிக் வெடிப்பு நிகழ்ந்தது. இந்நிகழ்வே 'பெரு வெடிப்புக் கொள்கை' ஆகும். இவ்வெடிப்பிலிருந்துதான் நமது பூமி உள்பட பேரண்டம் உருவானது. இப்பேரண்டமானது இன்னும் விரிவடைந்து கொண்டுதான் வருகிறது என அமெரிக்க வானிலை ஆராய்ச்சியாளர் "எட்வின் ஹபிள்" விளக்கினார். மேலும் காலம் செல்லச் செல்ல அண்டங்கள் ஒன்றையொன்று விலகிச் செல்கின்றன என்றும் கூறினார். மே மாதம் 30, 2010–ம் ஆண்டு நம்முடைய அறிவியல் அறிஞர்கள்

பூமியின் தோற்றம்



'லார்ஜ் ஹெட்ரான் கொலாய்டர்' (Large Hadron Collider-LHC) என்ற கருவியை உருவாக்கி பெரு வெடிப்புக் கொள்கையை பரிசோதனை செய்து பார்த்தார்கள். இது பூமி உருவான ரகசியங்களை நாம் புரிந்துகொள்ள உதவக்கூடும் என நம்பப்படுகிறது.

**செயல்முறை**

ஒரு பலூனை எடுத்துக்கொண்டு அதில் பால்வழி மண்டலத்தை (Galaxies) குறிக்கும் வகையில் பல புள்ளிகளை குறிக்கவும். பிறகு, நீ பலூனில் காற்றை ஊதி நிரப்பிக் கொண்டே கவனித்தால் நாம் ஏற்கனவே குறித்த இடத்திலிருந்து புள்ளிகள் ஒன்றைவிட்டு மற்றொன்று விலகிச் செல்வதை பார்க்க முடியும்.

## கண்டங்கள் மற்றும் பேராழிகள் உருவாகுதல்

பூமியின் மீது தற்பொழுது உள்ள நில மற்றும் நீர் பரவலானது எப்பொழுதும் ஒரே நிலையில் இருந்ததில்லை. சில மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தற்பொழுது உள்ள அனைத்து கண்டங்களும் தென் துருவத்தில் ஒன்றிணைந்து இருந்தது. இப்பெரிய நிலப்பரப்பை 'பான்ஜியா' (Pangea) என்று அழைக்கப்பட்டது. பான்ஜியா என்பது ஒரு கிரேக்கச் சொல். இதன் பொருள் 'எல்லா நிலமும்' (All Earth) என்பதாகும். இந்நிலப்பரப்பை சுற்றி இருந்த பெரிய பேராழியை 'பெந்தலாசா' (Penthalassa) அல்லது பிரம்மாண்டமான பேராழி என்று அழைக்கப்பட்டது. பெந்தலாசா என்பதும் ஒரு கிரேக்கச் சொல். இதன் பொருள் 'எல்லா நீரும்' (All Water) என்பதாகும். பிறகு பான்ஜியா பல தட்டுகளாக உடைந்தது. இவ்வாறு உடைந்த இத்தட்டுகளே நிலக்கோள் தட்டுகள் (Lithosphere Plate) என அறியப்படுகிறது. இத்தட்டுகள் மெதுவாக ஒரு சில மில்லி மீட்டர் முதல்

புவித்தட்டுகளின் எல்லை



சென்டி மீட்டர் வரை ஒவ்வொரு ஆண்டும் நகர்கிறது.

**உங்களுக்கு தெரியுமா ?**

பசிபிக் தட்டுதான் மிகப் பெரிய தட்டு ஆகும். இது 1/5 பங்கு புவி மேற்பரப்பை உள்ளடக்கக் கூடியதாக உள்ளது.

பான்ஜியா ஏழு பெரிய தட்டுகளாகவும், பல சிறிய தட்டுகளாகவும் உடைப்பட்டுள்ளன. யுரேசியா, அண்டார்டிகா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, பசிபிக், ஆப்ரிக்கா மற்றும் இந்தோ–ஆஸ்திரேலியா போன்றவை பெரிய தட்டுகளாகும். கரீபியன் பிலிப்பைன்ஸ், கோகோஸ் மற்றும் நாஸ்கா போன்றவை சிறிய தட்டுகளாகும். இத்தட்டுகள் ஒன்றை ஒன்று நோக்கி தொடர்ந்து நகர்ந்து கொண்டிருக்கின்றன.

**உங்களுக்கு தெரியுமா ?**

இந்தோ–ஆஸ்திரேலியன் தட்டு 67 மில்லி மீட்டர் அளவிற்கு ஒவ்வொரு ஆண்டும் நகர்கிறது. இதனால் இமயமலை 5 மில்லி மீட்டர் அளவிற்கு ஒவ்வொரு ஆண்டும் உயர்கிறது. அடுத்த 10 மில்லியன் ஆண்டுகளில் இவை 1,500 கி.மீ அளவிற்கு ஆசியாவிற்குள் பயணிக்கக் கூடும் என அறிவியல் அறிஞர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

## பூமியின் உள்ளமைப்பு

நிலநடுக்கத்தின்போது நில அதிர்வுமானியில் (Seismogram) பதிவான விவரங்களை அறிவியல் அறிஞர்கள் ஆராய்ந்து பார்க்கும் பொழுது புவி மூன்று அடுக்குகளாக அல்லது ஒடுகளாக உள்ளது என கண்டறிந்தார்கள். அவ்வறிஞர்களில் பூமி (உள்ளமைப்பு) அமைப்புப் பற்றிய கோட்பாட்டை முதலில் உருவாக்கியவர் 'ஐசக் நியூட்டன்' ஆவார். அதன் பிறகு பல அறிஞர்கள் பூமி அமைப்பு பற்றிய கோட்பாட்டை வெளியிட்டார்கள். நாம் வாழும் பூமியின் மேற்பகுதியை உட்கருவத்தோடு ஒப்பிடும் பொழுது மிக மெலிதான பகுதியாக காணப்படுகிறது. பூமியின் உட்பகுதியானது வேதிப்பொருட்களின் கட்டமைப்பு மற்றும் பண்புகளின் அடிப்படையில் மூன்று அடுக்குகளாக பிரிக்கப்படுகிறது. அவைகள் பூமி மேலோடு, கவசம் மற்றும் கருவம் ஆகும்.







**உங்களுக்கு தெரியுமா ?**

சூயஸ் என்ற ஆஸ்திரியா நாட்டின் புவி அமைப்பியல் வல்லுனர் மேலோடு, கவசம் மற்றும் கருவத்திற்கு சியால், சிமா மற்றும் நைஃப் என முறையே பெயரிட்டுள்ளார்.

## மேலோடு

பூமியின் மேற்பரப்பு 'மேலோடு (Crust)' அல்லது 'நிலக்கோளம் (Lithosphere)' என அழைக்கப்படுகிறது. கண்டத்தின் மேல் அடுக்கானது 'சியால்' என்று அழைக்கப்படுகிறது. இது சிலிக்கா மற்றும் அலுமினியத்தலானது. கடலடி மேலோடு பசால்ட் அடுக்குகளால் உருவானதாகும். இதை 'சிமா' என்று அழைக்கப்படுகிறது. இது சிலிக்கா மற்றும் மெக்னீசியத்தால் ஆனது. பூமியின் மேலோடு கண்டபகுதியில் அதிக தடிமனாகவும் மற்றும் கடல் பகுதியில் மெலிதாகவும் உள்ளது. சியால் அடுக்கானது சிமா அடுக்கின் மீது மிதந்து கொண்டு உள்ளது. சியாலின் சராசரி ஆழம் 20 கி.மீ ஆகவும் சிமாவின் சராசரி ஆழம் 25 கி.மீ ஆகவும் உள்ளது. மேலோட்டின் சராசரி அடர்த்தி எண் 3 ஆகும்.

## கவசம்

கவசம் பூமியின் மேலோட்டிற்கும் கருவத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. இக்கவசம் பூமியின் எடையில் 83 சதவீதத்தை கொண்டுள்ளது. இவை பல தட்டுகளால் உருவாக்கப்பட்டதாகும். இவை கண்ட நகர்வை உருவாக்குகிறது. இவ்வடுக்கு 900 கி. மீ அப்பால் ஒரே மாதிரியாக காணப்படுகிறது. இவ்வடுக்கின் மேல் பகுதியை 'அஸ்தினோஸ்பியர்' (Asthenosphere) என்று அழைக்கப்படுகிறது. இது 700 கி.மீ ஆழம் வரை பரவிக் காணப்படுகிறது. இக்கவச அடுக்கின் கீழ்ப் பகுதி குழம்பு (Magma) நிலையையும் மற்றும் நெகிழும் தன்மையையும் கொண்டுள்ளது. இதன் சராசரி அடர்த்தி எண் 8 ஆகும்.

### உங்களுக்கு தெரியுமா ?

பூமியின் அடுக்குகளை எளிதாக புரிந்து கொள்ள மாங்கனி அல்லது அவித்த முட்டை அல்லது கிரிக்கெட் பந்து போன்றவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது.

## கருவம்

பூமியின் உள் மைய அடுக்கை கருவம் அல்லது 'பேரிஸ்பியர்' (Barysphere)என அழைக்கப்படுகிறது. நிக்கல் மற்றும் இரும்பு இருப்பதன் காரணமாக இதை 'நைஃப்' (NIFE) எனவும் கூறப்படுகிறது. இவ்வடுக்கு பூமியின் காந்த விசையை உற்பத்தி செய்கிறது. இதில் இரண்டு பிரிவுகள் உள்ளன. அவைகள் வெளிக் கருவம் மற்றும் உட்கருவம் ஆகும். வெளிக் கருவமானது திரவ நிலையிலும், உள் கருவமானது சுற்றியுள்ள அடுக்குகளின் அழுத்தத்தின் காரணமாக பொருட்கள் திடநிலையிலும் காணப்படுகிறது. இதன் சராசரி அடர்த்தி எண் 12 ஆகும்.

## புவி மையப்பகுதியின் வெப்பநிலை

எரிமலை கக்குதல், வெப்ப நீர் ஊற்று மற்றும் சுரங்கங்கள் மூலமாக கிடைத்த ஆதாரத்தைக் கொண்டு பார்க்கும் போது வெப்ப நிலையானது புவியின் மேலோட்டிலிருந்து கீழ்நோக்கிச் செல்லச் செல்ல அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. புவியின் மையப்பகுதியில் வெப்பநிலையானது $5000^{0}$ C இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இயல்பான பெரு விகித (Normal Gain Rate) வெப்பநிலையானது ஒவ்வொரு 32 மீட்டர் ஆழத்திற்கும் $1^{0}$C அதிகரிக்கிறது.

## பூமியின் இயக்க சக்திகள்

பூமியின் மேலோடு நிலையானது அல்ல. தற்பொழுது உள்ள பெரும்பாலான நிலத்தோற்றங்கள் முற்காலத்தில் கடலுக்கு அடியில் இருந்தன. பூமியின் மேற்பரப்பில் தொடர்ந்து மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே உள்ளது. தற்போதைய இமயமலையானது முன்னொரு காலத்தில் ஆழம் குறைந்த 'டெத்திஸ்' (Tethys) கடல் பகுதியாக இருந்தது. இந்த மாற்றங்கள் தொடர்ந்தும் மற்றும் மெதுவாகவும் சில நேரங்களில் திடீர் எனவும் ஏற்படுகிறது. இம்மாற்றங்கள் இருவேறு சக்திகளால் ஏற்படுகிறது. அவைகள்,

**உங்களுக்கு தெரியுமா ?**

அங்காரா மற்றும் கோண்டுவானா என்ற இரண்டுபெரிய நிலப் பகுதிகளுக்கு இடையே அமைந்திருந்த ஆழம் குறைந்த கடல் பகுதி டெத்திஸ் ஆகும்.




## எண்டோஜெனிக் (அல்லது) உள் இயக்க சக்தி

இச்சக்தி பூமியின் உட்பகுதியில் தோன்றி செயல்படுகிறது. இவை பூமியின் மேலோட்டை உருக்குலையச் செய்வதோடு, ஒழுங்கற்ற நிலத்தோற்றங்களையும் பூமியின் மீது உருவாக்குகின்றது. புவியோட்டின் மீது பெரியளவு மாற்றங்கள் ஏற்படுவதை எண்டோஜெனிக் அல்லது கண்ட நகர்வுகள் (Tectonic Movements) என்று அழைக்கப்படுகிறது. இந்நகர்வுகள் இருவகைப்படும்; அவைகளாவன,

## டையட்ரோப்பிஸம் அல்லது மெதுவாக நகர்தல்

டையட்ரோப்பிஸம் (ஒட்டுருவு அழிதல்) என்பது ஒரு பொதுவான சொல். இது மெதுவாக வளைதல், மடிதல், வளர்த்தல் மற்றும் உடைதல் என பொருள்படும். இவ்வகை நகர்வானது கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகிறது.

### எபிரோஜெனிக் அல்லது கண்ட ஆக்க நகர்வு

செங்குத்து நகர்வானது பூமியின் மேலோட்டு பகுதியை மேல் நோக்கி அல்லது கீழ் நோக்கி பலவீனமான கோட்டின் வழியாக செல்வதையே 'பிளவுகள்' (Faults) என்கிறோம். பிளவுகோட்டிற்கு இடையே காணப்படும் பகுதி மேல் நோக்கி தள்ளப்பட்டால் அது ஒரு பிதிர்வு மலை (Block Mountain) அல்லது பீடபூமி (Plateau) எனவும் மாறாக கீழ்நோக்கி தள்ளப்பட்டால் அதை பிளவு பள்ளத்தாக்கு கொப்பரை (Basin of Rift Valley) எனவும் அழைக்கப்படுகிறது. பூமியின் மேலோட்டில் மிகப் பெரியளவிற்கு செங்குத்து நகர்வு ஏற்படுவதை 'கண்ட ஆக்க அல்லது எபிரோஜெனிக் நகர்வு' என்று அழைக்கப்படுகிறது.

**உங்களுக்கு தெரியுமா?**

ஆப்பிரிக்காவின் பெரிய பிளவு பள்ளத்தாக்கு கொப்பரை மற்றும் நர்மதா பள்ளத்தாக்கு ஆகியன இவ்வகையான வடி நிலங்களுக்குச் சிறந்த உதாரணங்கள் ஆகும்.



பிளவு


தொங்கும் பள்ளத்தாக்கு


நர்மதா பள்ளத்தாக்கு– இந்தியா

### ஒரோஜெனிக் அல்லது மலையாக்க நகர்வு

கிடைமட்டமாக நகரும் புவியோட்டில் மடிப்புகள் ஏற்படவும் மற்றும் பாறை அடுக்குகள் இடம் மாறுவதற்கும் காரணமாகிறது. சாதாரண மடிப்புகள் ஒரு மேல் வளைவையும் (Anticline) மற்றும் ஒரு கீழ் வளைவையும் (Syncline) கொண்டிருக்கும். இவ்வகையான மடிப்புகள் அரிதாகவே தோன்றும். மடிப்புகள் மேன்மேலும் அழுத்தப்பட்டு பாறை அடுக்குகள் நீண்ட தொலைவிற்கு இடம் பெயர்தலின் விளைவாக பல சிக்கலான மடிப்புகள் தோன்றுகிறது. புவியோட்டில் மிகப்பெரிய அளவிற்கு கிடைமட்ட நகர்வு ஏற்படுவதை 'மலையாக்க நகர்வு' என்று அழைக்கப்படுகிறது. உலகின் மடிப்பு மலைகள் தோன்றுவதற்கு இதுவே காரணமாகும். உதாரணம் இமயமலை.

### எக்ஸோஜெனிக் அல்லது வெளி இயக்க சக்தி

இச்சக்தி பூமியின் மேலோட்டு பகுதியில் உருவாகி செயல்படுகிறது. இவை பூமியின் மேலோட்டில் உள்ள ஒழுங்கற்ற நிலப் பரப்புகளை களைந்து சமநிலையை உருவாக்குகிறது.

**செயல்முறை**

மேல் வளைவையும் மற்றும் கீழ் வளைவையும் உருவாக்குதல் (Anticline and Syncline).

அ) உங்களுக்கு தேவையான ஒரு கட்டு காகிதங்களை எடுத்துக் கொள்ளவும்.

ஆ) காகிதங்கள் மேசையின் மீது அடுக்கி வைக்கவும்.

இ) உங்கள் கைகளால் காகிதங்களை இரண்டு பக்கங்களிலிருந்து கிடைமட்டமாக அழுத்தவும்.

ஈ) காகிதங்கள் சிகரம் போல் மேலே உயரும்.

உ) தற்போது நீங்கள் மேல் வளைவு மற்றும் கீழ் வளைவுகளை உருவாக்கி உள்ளீர்கள்.

உலகில் உள்ள முக்கிய மடிப்பு மலைகளை பட்டியலிடுக.

திடீர் நகர்வுகள்







மடிப்பு மலை உருவாகுதல்

இவ்வகை நகர்வுகள் பூமியின் மேலோட்டிலும் மற்றும் உள் அடுக்கிலும் திடீர் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இவ்வகையான நகர்வுகள் அழிவுகளை ஏற்படுத்துவது இயல்பானதாகும். மிகப்பெரிய அழிவுகள் ஏற்படுவதற்கு நிலநடுக்கம் மற்றும் எரிமலைச் செயல்களே காரணமாகும்.

## நிலநடுக்கங்கள்

நிலநடுக்கம் என்பது புவிமேலோட்டில் திடீரென நிகழும் அசைதல் அல்லது நடுங்குதல் ஆகும். இதன் விளைவாக நடுக்கம் அல்லது அதிர்வுகள் ஏற்படுகின்றது. இது எரிமலை நிலநடுக்கம் (Volcanic Earthquake) மற்றும் கண்ட நகர்வு நிலநடுக்கம் (Tectonic Earthquake) என இருவகைப்படும்.




நில நடுக்க மையம்




சீஸ்மோகிராஃப்

எரிமலை வெடிக்கும் போதோ அல்லது வெடிப்பதற்கு முன்பாகவோ ஏற்படும் அதிர்வுகள் எரிமலை நிலநடுக்கம் எனப்படும். கண்ட நகர்வு நிலநடுக்கம் பாறைகளின் அமைப்பு மாற்றமடைவதற்கும், உருக்குலைவதற்கும் அல்லது இடம்பெயர்வதற்கும் காரணமாக அமைகிறது. நிலநடுக்கம் தோன்றும்

இடத்தை 'நிலநடுக்க மையம் (Focus)' என்றும், இம்மையத்திற்கு நேர் எதிரே பூமியின் மேற்பரப்பில் அமைந்திருக்கும் புள்ளி 'வெளி மையம் (Epicenter)' என்றும் அழைக்கப்படுகிறது. உலகில் ஒவ்வொரு ஆண்டும் 8,000 முதல் 10,000 வரையிலான நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு நிலநடுக்கம் ஏற்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. பல நிலநடுக்கங்கள் உணர முடியாத அளவில் இருப்பதற்கு காரணம் அதன் குறைவான அளவே ஆகும்.

**உங்களுக்குத் தெரியுமா ?**

சீஸ்மோகிராம் என்ற கருவியைக் கொண்டு நிலநடுக்கத்தின் அலைகள் பதிவு செய்யப்படுகிறது. இந்நிலடுக்கத்தை மதிப்பீடு செய்ய ரிக்டர் அளவுகோள் பயன்படுத்தப்படுகிறது. இதன் அலகு 0 முதல் 9 ரிக்டர் அளவை வரை ஆகும்.

## நிலநடுக்க அலைகளின் வகைகள்

இவ்வலைகளை உட்புற அலைகள் (Body Waves) என்றும் மேற்புற அலைகள் (Surface Waves) என்று இருவகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

உட்புற அலைகள் நிலநடுக்க மையத்திலிருந்து ஆற்றல் வெளிப்படுவதன் மூலமாக உற்பத்தியாகி பூமியின் அனைத்து திசைகளிலும் பரவுகிறது. உட்புற அலைகளை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

முதல் நிலை அலைகள் அல்லது P அலைகள் மிக வேகமாக பயணிக்கிறது. இவை ஒலி அலைகளைப் போன்றே வாயு, திரவ மற்றும் திட நிலையிலுள்ள பொருட்களில் ஊடுருவிச் செல்லும். P அலைகள் பயணம் செய்யும் திசையிலுள்ள பூமியின் பொருட்களை முன்னும் பின்னும் அழுத்திக் கொண்டு செல்கிறது. இது ஒரு நொடிக்கு 8 கி.மீ வேகத்தில் பயணிக்கிறது.

இரண்டாம் நிலை அலைகள் அல்லது S அலைகள், இவைகள் P அலைகளை விட மெதுவாக பயணிப்பவை. இவை திடநிலையில் உள்ள பொருட்களில் மட்டுமே ஊடுருவிச் செல்லும் தன்மையுடையது. இவை ஏற்படும் பொழுது, தான் பயணம் செய்யும் திசையில் உள்ள பூமியின் பொருட்களை செங்கோண திசையில் அசைத்துக் கொண்டு செல்லும். இவ்வலைகள் கயிற்றை ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு நகர்த்துவதை போன்று செயல்படுகிறது. இது ஒரு நொடிக்கு 5 கி.மீ வேகத்தில் பயணம் செய்யக் கூடியதாகும்.

மேற்புற அலைகள் நிலநடுக்க மானியில் இறுதியாக பதிவாகிறது. இவை பூமியில் மிக அதிகப்படியான அழிவுகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகிறது. இதை L-அலைகள் என்றும் அறியப்படுகிறது. இவ்வலைகள் ஒரு நொடிக்கு 4 கி.மீ வேகத்தில் பயணம் செய்கிறது.



நிலகடுக்க அலைகள்

## எரிமலைகள்

பூமியின் உட்பகுதியிலிருந்து வெப்பமான பாறைக் குழம்பை (Magma) ஒரு திறப்பு (Vent) அல்லது துளை வழியே பூமியின் மேற்பரப்பின் மீது படியவைப்பதை எரிமலை என்கிறோம்.

அவ்வாறு உமிழும் (Eruption) பாறைக்குழம்பு லாவா (Lava) என அழைக்கப்படுகிறது. பூமியின் அடிப்பகுதியில் உள்ள பொருட்கள் எரிமலை சத்தமாக வெடித்தல் மூலமாகவும் அல்லது அமைதியாகவும் பூமியின் மேற்பரப்பை அடைகிறது.




எரிமலை குறுக்கு வெட்டுத் தோற்றம்

## எரிமலைகளின் வகைகள்

**எரிமலைகள்**
- செயல்படும்
- தணிந்த
- உயிரற்ற

எரிமலைகளை அவை செயல்படும் தன்மையை பொருத்து மூன்று வகையாக பிரிக்கப்படுகிறது.

## செயல்படும் எரிமலைகள்

இவைகள் அவ்வப்பொழுது சீராக லாவாவை வெளியேற்றுகிறது. மிக அதிகமான செயல்படும் எரிமலைகள் கடலடி மலைத்தொடர்களில் காணப்படுகிறது. ஹவாய் தீவில் உள்ள மோனா லோவா உலகிலேயே மிகப்பெரிய செயல்படும் எரிமலை



பாரன்தீவு எரிமலை

ஆகும். இந்தியாவில் உள்ள ஒரே ஒரு செயல்படும் எரிமலை பாரன் தீவில் உள்ளது.

**உங்களுக்கு தெரியுமா ?**

இந்தியாவிலுள்ள தக்காண பீடபூமியின் வடமேற்கு பகுதியானது எரிமலைகுழம்பால் உருவாக்கப்பட்டதாகும்.



ஐஸ்லாந்தில் உள்ள எரிமலை

## தணிந்த எரிமலைகள்

இவ்வகை எரிமலைகள் உறங்கும் எரிமலைகள் என்றும் அழைக்கப்படுகிறது. இது பல ஆண்டுகளுக்கு முன்புவரை செயல்பட்டு கொண்டு இருந்தது. தற்பொழுது லாவா உமிழ்வதை நிறுத்தி உள்ளது. ஆனால் எதிர்காலத்தில் எப்பொழுது வேண்டுமானாலும் எரிமலைகுழம்பை உமிழலாம். இத்தாலியிள்ள வெசூவியஸ் (Vesuvius) எரிமலை மற்றும் ஹவாய் தீவிலுள்ள

# உலகின் எரிமலை பிரதேசங்கள்





இத்தாலியிலுள்ள வெசுவியஸ் எரிமலை

மௌனகியா (Mauna Kea) எரிமலைகளை உதாரணமாக கூறலாம்.

### உயிரற்ற எரிமலைகள்

இவ்வகை எரிமலைகளை இறந்த எரிமலைகள் என்று அழைக்கபடுகிறது. இவைகள் முன்பு உமிழ்ந்து கொண்டிருந்தது. ஆனால் தற்பொழுது அவ்வாறு உமிழ்வது இல்லை. எதிர்காலத்திலும் உமிழாது என எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணம் ஆப்பிரிக்காவில் உள்ள மவுண்ட் கிளிமாஞ்ரோ மற்றும் இந்தியாவில் உள்ள நார்கண்டம் தீவு ஆகியவற்றைக் கூறலாம். இது வடக்கு அந்தமான் தீவின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. இந்திய நிலப்பகுதியில் மேலும் பல இறந்தஎரிமலைகள் காணப்படுகின்றன. அவைகள் தமிழ்நாட்டிலுள்ள புகழ்பெற்ற திருவண்ணாமலை குன்று மற்றும் ஆந்திபிரதேசத்திலுள்ள பனகா குன்று ஆகியன இறந்த எரிமலைகளாக கருதப்படுகிறது.



இந்தியாவிலுள்ள நார்கோண்டம் எரிமலை

**உங்களுக்கு தெரியுமா ?**

நீர் நிரம்பிய எரிமலை வாயை 'பெருவாய் ஏரி' என அழைக்கப்படுகிறது.

**செயல் முறை**

உலக வரைபடத்தின் மீது நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மண்டலங்களை குறிக்கவும்.

### பயிற்சி

**I) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. __________கோளில் மட்டும்தான் உயிரினங்கள் உள்ளன.
   அ) பூமி ஆ) வெள்ளி இ) செவ்வாய் ஈ) புதன்
2. பான்ஜியா__________பெரிய தட்டுக்களாக உடைபட்டுள்ளது.
   அ) 6 ஆ) 7 இ) 10 ஈ) 12
3. பூமி__________நிலையானதாக இல்லை.
   அ) கருவம் ஆ) நைஃப் இ) மேலோடு ஈ) கவசம்
4. புவி மேலோட்டில் மிகப்பெரிய அளவிற்கு செங்குத்து நகர்வு ஏற்படுவதை__________ நகர்வு என்று அழைக்கப்படுகிறது.
   அ) எண்டோஜெனிக் ஆ) எக்ஸோஜெனிக்
   இ) மையம் ஈ) தேய்வுருதல்

5. நிலநடுக்கம் தோன்றும் மையம் (இடம்)____________எனப்படும்.

அ) வெளிமையம் ஆ) நிலநடுக்க மையம்

இ) மையம் ஈ) எரிமலை மண்டலம்

## II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கண்ட மேலோடு____________அடுக்கால் ஆனது.
2. சியால் அடுக்கு சிமா அடுக்கின் மீது____________கொண்டு உள்ளது.
3. பூமியின் மேலோட்டில் மிகப்பெரிய அளவிற்கு கிடைமட்ட நகர்வினை ஏற்படுத்துவது____________என்று அழைக்கப்படுகிறது.
4. ____________யை L அலைகள் என்று அழைக்கிறோம்.
5. எரிமலை என்பது பூமியின் ஒரு____________ஆகும்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. மோனா லோவா | ஆப்பிரிக்கா |
| 2. வெசூவியஸ் | இந்தியா |
| 3. மவுண்ட் கிளிமாஞ்ரோ | ஹவாய் |
| 4. பியூஜியாமா | இத்தாலி |
| 5. நார்கண்டம் | ஜப்பான் |

## IV) பின்வருவனவற்றுள் சுருக்கமான விடையளிக்கவும்.

1. பூமியின் அடுக்குகளை கூறுக.
2. பான்ஜியா மற்றும் பெந்தலாசா பற்றி சிறு குறிப்பு வரைக.
3. உலகத்தில் உள்ள பெரிய தட்டுக்களின் பெயர்களை எழுதுக.
4. நிலநடுக்கங்களை பாதிக்கும் சக்திகளை கூறுக.
5. மேல் வளைவு மற்றும் கீழ் வளைவு என்றால் என்ன ?
6. எரிமலைகளின் வகைகள் யாவை ?

## V) பின்வருவனவற்றுக்கு விரிவாக விடையளிக்கவும்.

1. புவி மேலோட்டின் அடுக்குகளை ஆராய்க.
2. நிலநடுக்க அலைகளின் வகைகளை விளக்குக.
3. எரிமலையின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தை வரைந்து அதன் பாகங்களைக் குறிக்கவும்.
4. பூமியின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தை வரைந்து அதன் அடுக்குகளை குறிக்கவும்.

## 2. புவி மேற்பரப்பு – மாறிக்கொண்டிருக்கும் நிலக்கோளத்தின் மேற்பரப்பு

உன்னை சுற்றியுள்ள இடங்களைப்பார். உன்னை சுற்றி மலைகள், குன்றுகள் மற்றும் பீடபூமிகள் ஏதாவது இருக் கின்றனவா ? அவைகள் எப்படி தோன்றி யிருக்கக்கூடும் என்று உன்னால் அனுமானிக்க முடியுமா ? மற்றும் எதிர் காலத்தில் கூட அதே நிலத்தோற்றங்களில் தொடர்ந்து இருக்குமா ? அந்த நிலத்தோற்றங்களில் ஏதாவது மாற்றங்களை நீ கண்டுபிடித்து இருக்கி றாயா ? ஆம், அந்த நிலத்தோற்றங்களில் சில மாற்றங்கள் மெதுவாக நடைபெறு கின்றது.

சில நேரங்களில் பாறைகள் பிளவுபடுவதும் அல்லது உடைந்து சிறு சிறு பகுதிகளாவதும் அவைகளில் காணலாம் மற்றும் வன் சரிவுகளானது மென் சரிவுகளாக மாறுவதும் அல்லது தாழ்வான பகுதிகளில் மண், மணல் மற்றும் கற்கள் நிரம்புவதையும் காணலாம்.

காலநிலை காரணிகளான வெப்ப நிலை, மழைப்பொழிவு மற்றும் உறைபனி மற்றும் இயற்கை சக்திகளான ஆறுகள், காற்று, பனியாறுகள் மற்றும் கடல் அலைகள் ஆகிய நிலத் தோற்றங்கள் மாற்றங்களை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மாற்றங்கள் மனித வாழ்க்கையில் மட்டும் ஏற்படுவதில்லை மற்றும் புவியின் மேற்பரப்பிலுள்ள நிலத்தோற்றங்களும் கூட மாற்றங்களுக்கு உட்படுகின்றன. புவியினுடைய மேற்பரப்பில் ஏற்படுகின்ற மாற்றங்களை பற்றி நாம் விரிவாக படிப்போம்.

### வானிலைச் சிதைவு

பாறைகள் உடைதல் அல்லது சிதைவடைதல் செயலே வானிலைச் சிதைவு என்கிறோம். வானிலைச் சிதைவானது பௌதீக, இரசாயண மற்றும் உயிரின செயல்முறைகளின் கூட்டு செய்கையினால் புவியின் மேற்பரப்பில் உள்ள பாறையானது மாற்றம் அடைவதாகும். வானிலைச் சிதைவானது பௌதீக (அல்லது உருமாற்ற), இரசாயண மற்றும் உயிரின சிதைவு என வகைப்படுத்தப்படுகிறது.

### பௌதீக (அல்லது உருமாற்ற) சிதைவு

பௌதீக சிதைவு என்பது பாறைகள் இராசாயண மாற்றம் அடையாமல் சிதைவடைவதை குறிப்பதாகும். பௌதீக சிதைவில் முதன்மை செயல்முறையானது அரித்து தின்னல் ஆகும். பௌதீக சிதைவானது பின்வரும் செயல்முறைகளினால் நடைபெறுகின்றன.

### வெப்ப அழுத்தம் (Thermal Stress)

பலதரப்பட்ட தாதுக்களின் கூட்ட மைப்பே பாறைகளாகும். வெப்பநிலை வேறுபாட்டின் காரணமாக ஒவ்வொரு தாதுக்களும் விரிவடைகிறது மற்றும் சுருங்குகிறது. இவ்வாறு பாறைகள் விரிவடைவதும், சுருங்குவதுமான செயல்கள் நீடிப்பதால் பாறைகளில் அழுத்தம் ஏற்பட்டு உடைகின்றன. பாறைகளின் தொடர்ச்சியான விரிதல் மற்றும் சுருங்குதலால் அழுத்தம் உரு வாக்கப்பட்டு பாறைகள் உடைகின்றது.

இந்த செயல்முறையானது வெப்ப அழுத்த சிதைவு என அழைக்கப்படுகிறது. இதன் இரண்டு முக்கிய வகைகளானது, வெப்ப அதிர்ச்சி (Thermal Shock) மற்றும் வெப்ப தணிவு (Thermal Fatigue) ஆகிய வைகளாகும். பாலைவன

பிரதேசங்களில் இந்த வகை சிதைவானது இயல்பாக நடைபெறுகின்றது.

### உறைபனி சிதைவு

உறைபனி நிலவும் மலைப்பகுதிகளில் இந்த வகை சிதைவு காணப்படுகின்றன. சில நேரங்களில் விரிசல்கள் உள்ள பாறைகளின் மழைப்பொழிவின் காரணமாக நீரானது நிரம்புகிறது. இரவு நேரங்களில் நிலவும் வெப்பநிலையின் காரணமாக இந்த



உறைபனி சிதைவு

நீரானது உறைந்து பனிக்கட்டியாக மாறும் மற்றும் பகல் நேரங்களில் உருகும். பனிக்கட்டியானது ஒரு திடப் பொருளாக இருப்பதால் பாறைகளின் உடைப்பட்ட பகுதிகளில் அது அதிக அழுத்தத்தை உருவாக்கும், ஆதலால் பாறையின் விரிசல்கள் மேலும் அதிகரிக்கும். உறைதல் மற்றும் உருகுதல் செயல்முறையானது தொடர்ந்து நடைபெறுவதால் பாறைகள் சிறு பகுதிகளாக உடைக்கப்படுகின்றன. இந்த வகை சிதைவு உறைபனி சிதைவு எனப்படுகிறது.

### உப்பு படிகங்களின் வளர்ச்சி

உப்புபடிகமாதலை ஹாலோஹிலாஸ்டி (Haloclasty) எனவும் அழைக்கப்படுகிறது. உடைந்த பாறைகளில் உள்ள வெடிப்பு மற்றும் இணைப்புகளின் வழியாக உட்புகும்



உப்பு படிகமாதல்

உப்பு கலந்த நீர் ஆவியாகும் போது உப்பானது தங்கி படிகமாக மாறுகிறது.

**உங்களுக்கு தெரியுமா ?**

பீடப்பாறையின் மேற்பரப்பு உப்பு படிகமாதலின் காரணமாக தேன் கூட்டு அமைப்பை பெறுகிறது. உதாரணம், தைவானில் அமைந்துள்ள ஏகிலு.

**செயல்முறை**

அருகில் உள்ள மலை பகுதிகளுக்கு சென்று அங்கு நடைபெறும் பல்வேறுபட்ட சிதைவுகளை உற்று நோக்கவும்.

### இரசாயண சிதைவு

இரசாயண சிதைவானது பாறைகள் பல பகுதிகளாக சிதைவடைவதாகும் அல்லது வேதிப்பொருட்கள் மாற்றி அமைக்கப்படுவதின் காரணமாக பாறைகள் உடைபடுவதாகும். இந்த செயல்முறையில் ஆக்ஸிகரணம் மற்றும் நீரின் சேர்க்கை ஆகியன மிகவும் பொதுவான நிகழ்வுகளாகும்.

### கரைதல்

வளிமண்டல கார்பன் டை ஆக்ஸைடு அல்லது சல்பர் டை ஆக்ஸைடு அல்லது நைட்ரஜன் டை ஆக்ஸைடு மழைப் பொழிவில் கரையும் பொழுது அமிலமாக மாறுகின்றது. அவை சுண்ணாம்புக்கல் அல்லது சுண்ணாம்பு பிரதேசங்களில் தாதுக்கள் கரைதலையும் மற்றும் பாறைகளில் சிதைவையும் ஏற்படுத்துகின்றன.



சிதைக்கப்பட்ட பாறைகள்

**உங்களுக்கு தெரியுமா ?**

இந்திய அரசானது தாஜ்மஹாலை சுற்றியுள்ள தோல் தொழிற் சாலைகளை தடை செய்துள்ளது. ஏனெனில், அந்த தொழிற்சாலை களால் ஏற்படும் அமில மழையானது உலக அதிசயமான தாஜ்மஹாலில் உள்ள சலவைக் கற்களை பாதிக் கின்றது.

## தாது நீர்கொள்ளல்

தாது நீர்கொள்ளல் என்பது நீர் உட்கிரகித்தலே ஆகும். இந்த வகை சிதைவானது நீர் அயனி மற்ற தாதுக்களோடு ஒன்று சேர்ந்து பாறைகளில் காணப்படுவதாகும். இந்த இணைப்பானது தாதுக்களின் கனஅளவினை அதிகரிக்கவும் மற்றும் அவை உருமாற்ற அழுத்த சிதைவு ஏற்படவும் வழி வகுக்கின்றன.

## நீரின் சேர்க்கை

நீரின் சேர்க்கையால் சிலிகேட் தாதுக்கள் பாதிப்படையும் செயலாகும். இவ்வாறான எதிர் செயல்களினால் ஹைட்ரஜன் மற்றும் ஹைட்ராக்சைடு அயனிகளால் சிலிக்கேட்டுகள் களிமண் தாதுக்களாக மாற்றப்படுகின்றன.

## ஆக்ஸிகரணம்

இந்த செயல்முறையில் உலோகத்தோடு காணப்படும் பாறைகளானது ஆக்ஸிஜன் மற்றும் நீரோடு சேர்ந்து ஆக்ஸிகரணம் அடைகின்றது. இந்த ஆக்ஸிகரணம் பாறைகளை பலவீனப் படுத்துவதோடு மட்டுமின்றி அவற்றை சிறிய துகள்களாக மாற்றியமைக் கின்றன. இந்த செயல்முறையானது துருப்பிடித்தல் எனவும் அழைக்கப்படுகிறது.

## உயிரின சிதைவு



ஆக்ஸிகரணம்

உயிரினச் சிதைவிற்கு பொதுவாக தாவரங்கள் மற்றும் மரங்களின் வளர்ச்சி பல்வேறுபட்ட சுரங்கங்கள் அமைத்தல், கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் சாலைகள் அமைத்தல் ஆகியன காரணமாகின்றது.



உயிரின சிதைவு

## ஓடும் நீர்

ஆறு என்பது ஓடும் நீராகும். வழக்கமாக நன்னீர் உயர் நிலப் பகுதிகளில் உருவாகி ஆறு, ஏரி, கடல் அல்லது பேராழியினை நோக்கி பாய்கின்றது. ஆறானது அரித்தல் செயலில் மிகவும் முக்கியமான காரணியாக இருக் கின்றது. ஆறுகள்

அவற்றின் போக்கில் பாயும் போது அரித்தல், கடத்துதல் மற்றும் படிய வைத்தல் ஆகிய பணிகளை செய்கின்றன.

### அரிப்புச் செயல்

ஆறு தன்னுடைய அரிப்பு பணியினை பல்வேறு செயல்கள் மூலமாக செய்கின்றன. அவைகளாவன,

### நீர் தாக்கம்

நீரானது தொடர்ந்து ஓடி வரும்போது அதனுடைய தாக்கத்தால் பாறைகள் உடைபடுதலே நீர்தாக்கச் செயலாகும்.

### அரித்துத் தின்னல்

ஆற்றுநீரின் அரைத்தலால் ஆற்றினுடைய படுகை மற்றும் அதன் கரையோரங்கள் அரித்து அடித்து செல்லப்படுகின்றன.

### மோதி உடைத்தல்

ஆற்றினால் கடத்தப்படும் பாறைத் துகள்கள் ஆற்றுநீரில் செல்லும் போது தரையில் உருளுவதாலும் மற்றும் ஒன்றோடு ஒன்று மோதுவதாலும் பாறைத் துகள்களில் உராய்தல் மற்றும் தேய்தல் ஆகியன நடைபெறுகின்றன.

### கரைதல்

நீரின் இரசாயண அல்லது கரைக்கும் ஆற்றலினால் பாறைகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கரைக்கப்படுவதாகும்.

### ஆற்றின் கடத்தல் செயல்

ஆறுகள் கடத்தும் பணியினை பின்வரும் செயல்முறைகளில் செய்கின்றன.

### இழுத்து செல்லல்

ஆறானது பெரும் பாறைகளையும் மற்றும் கூழாங்கற்களையும் அதனுடைய படுகையிலும் மற்றும் ஆற்றுப் பள்ளத்தாக்கின் ஓரங்களிலும் இழுத்து செல்கின்றன.

### தாவுதல்

நடுத்தர கனஅளவுள்ள சில பொருட்கள் தாவியும் மற்றும் குதித்தும் ஆற்றுப் பள்ளத்தாக்கின் படுகையில் செல்கின்ற இச்செயலை தாவுதல் என்கிறோம்.

### தொங்கும் நிலை

சிறிய அளவுள்ள துகள்கள் தரையில் படாமல் தொங்கும் நிலையில் ஆற்று நீரில் கடத்தப்படுகின்றன. இந்நிலையே தொங்கும் நிலை எனப்படுகிறது.

### கரைதல்

உப்புக்கள் மற்றும் சுண்ணாம்பிலாலான ஒரு சில பாறைகள் நீரால் கரைக்கப்பட்டு கடத்தப்படுகின்றன.

### ஆறோடு தொடர்புடைய நிலத்தோற்றங்கள்
### மலைப்பாதை

மலைத்தொடர் பகுதிகளில் இந்நிலை ஆரம்பமாகிறது. செங்குத்து சரிவு மற்றும் ஆற்றின் அதிக வேகம் காரணமாக செங்குத்து அரித்துத் தின்னல் செயல் இங்கு முதன்மையாக இருக்கிறது. பாறை இடுக்கு (Gorges), ஆற்றுப் பள்ளத்தாக்குகள் (Canyons) மற்றும் V–வடிவ பள்ளத்தாக்குகள் உருவாகின்றன.



ஆற்று கவர்வு

## ஆற்று கவர்வு

இது ஆற்று கவர்வு (River Piracy) அல்லது ஆற்றின் தலைதிசை மாற்றம் (River Beheading) எனவும் அறியப்படுகிறது. அதனுடைய வளர்ச்சி ஆற்றின் பல்வேறு வகையின் தலைத்திசை அரிப்பின் அளவை சார்ந்து மாறுபடுகின்றது.

## சிறு நீர்வீழ்ச்சி அல்லது துள்ளல்கள், பெரிய செங்குத்தான நீர்வீழ்ச்சிகள் மற்றும் நீர்வீழ்ச்சிகள்



துள்ளல்

ஆற்றின் போக்கில் மாறி மாறி அமைந் துள்ள கடின மற்றும் மென் பாறைகள் வழியே ஆற்றுநீர் ஓடி வரும்போது கடின பாறையின் மேற்பரப்பில் நீர்பட்டு குதித்து கீழே ஆற்றில் விழுகிறது. இவ்வாறாகத்தான் சிறிய நீர்வீழ்ச்சி அல்லது துள்ளல்கள் உருவாகின்றன.



நீர்வீழ்ச்சி

இந்நீர்வீழ்ச்சி சற்று பெரிய அளவில் அமையும் போது அதை பெரிய செங்குத்தான நிர்வீழ்ச்சி என அழைக்கிறோம். ஆற்றின் நீரானது பெரிய அளவில் சற்று உயரத்திலிருந்து கீழே விழுந்தால் அதை நீர்வீழ்ச்சி என்கிறோம்.

## பள்ளதாக்குப் பாதை

இங்கு செங்குத்து அரித்து தின்னல் செயல் நிலைமாறி பக்கவாட்டு அரித்து தின்னல் செயல் ஏற்படுகிறது. துரிதமான அரித்தல் செயலால் 'V' வடிவ பள்ளத் தாக்கின் கரைகள் அகலமாகின்றன.

## குருட்டாறுகள்

பொதுவாக குருட்டாறுகள் என்பது ஆற்றின் வளைந்து செல்லும் பாதைகளிலுள்ள ஒரு வளைவாகும்.



குருட்டாறு

ஆற்றுநீர் செல்லும் போது அதன் வெளிப்புற கரையை நீண்ட காலமாக அரித்து பள்ளத்தாக்கை அகலப்படுத்துவதையே குருட்டாறுகள் என்கிறோம். ஆற்றுநீர் புவி ஈர்ப்பு விசையினால் ஓடும்போது அது நேராக நீண்ட தூரத்திற்கு ஓடுவது அரிதாக இருப்பதால் வளைந்து செல்லும் போக்கு எளிதில் ஏற்படு கின்றன. நிலத்தின் மாறுபட்ட அமைப்புக் கேற்ப ஆறு அதன் பாதையிலிருந்து விலகி இங்கும் அங்கும் ஓடுவதால் குருட்டாறுகள் உருவாகின்றன.

## ஆற்று ஒங்கல்கள்

ஆற்று வளைவில் ஆற்றுநீர் செல்லும் போது அது வளைவின் மேல் நேரடியாக மோதி அரித்து வன் சரிவுடைய ஆற்று ஒங்கலை ஏற்படுத்துகிறது.



உள் அமைந்த கிளைக்குன்றுகள்

## உள் அமைந்த கிளைக்குன்றுகள்

ஆறுகள் ஓடும் போக்கில் குருட்டாற்றின் வளைவானது வெளிப்புறமாக வளர்ச்சி அடைகின்றது. குருட்டாற்றின் போக்கில் காணப்படும் கிளை குன்றுகளின் பக்கவாட்டு அரிப்பே இதற்கு காரணமாகும்.

## சமவெளிப் பாதை

இங்கு ஆற்றின் முக்கிய பணி படியவைத்தல், ஆற்றின் கரையை விரிவுபடுத்துதல் மற்றும் பரந்த சமவெளியை உருவாக்குவதலாகும். பல துணை ஆறுகள் முதன்மை ஆற்றில் இணைவதால் ஆற்றுநீரின் கனஅளவு அதிகரிக்கின்றது. ஆற்றின் முகத்து வாரத்தை நோக்கிப் பருப்பொருட்கள் இழுத்து வரப்பட்டும் நுண்ணிய படிவுகளை தூக்கிக் கொண்டும் ஆற்றுநீர் செல்கிறது. ஆறானது பெரிய அளவில் பருப்பொருட்களை சமவெளி பகுதிகளில் படிய வைத்தும் மற்றும் பல்வேறு சிக்கலான துணை ஆறுகளாகவும் பிரிந்து செல்கிறது. இதுவே பின்னிய ஆறுகள் (Braided Streams) எனப்படுகின்றன.

## வெள்ளச் சமவெளி

ஆறானது மூப்பு நிலையில் அதிக அளவு படிவுகளை கொண்டிருக்கிறது. வருடாந்திர வெள்ளப் பெருக்கு ஏற்படும் பொழுது, இந்த படிவுகளானது அருகாமையில் உள்ள பகுதிகளில் பரவுகின்றது. பெரும் பரப்பிலான படிவுகள் ஒவ்வொரு வெள்ளப் பெருக்கின் போதும் தொடர்ந்து படிவதால் மெதுவாக இந்த வளமான வெள்ளச் சமவெளி உருவாகிறது. ஆற்றுநீர் இயல்பாக செல்லும் போது அது கொண்டு வந்த படிவுகள் மற்றும் பருப்பொருட்கள் ஆற்றின் கரையில் படிவதால் அதன் கரை உயருகிறது. இதனை லெவிஸ் (Levees) என்கிறோம்.

## குதிரை குளம்பு ஏரி

ஆற்று வளைவானது ஆற்றின் மூப்பு நிலையில் அதிக அளவு துடிப்புடன் காணப்படுகிறது. ஆதன் வெளிப்புற கரை அல்லது உட்குழிந்த கரை துரிதமாக அரிக்கப்பட்டு அது ஒரு முழுமையான வளையம் போல மாற ஆரம்பிக்கிறது. இந்நிலையில் நீரானது ஆற்று வளைவின் குறுகிய கழுத்து



வெள்ளச் சமவெளி

பகுதியை உடைத்து நேராக செல்வதால், அதனால் விடப்பட்ட வளைவுப் பகுதி குதிரை குளம்பு ஏரி எனப்படுகிறது.

## டெல்டா



குதிரை குளம்பு ஏரி

ஆறு கடலை அடையும் பொழுது நுண்ணிய பருப்பொருட்கள் மேற்கொண்டு இழுத்து செல்லாமல்

மற்றும் படிய வைக்காமல் ஆற்றின் முகத்துவாரப்பகுதியில் விசிறி வடிவில் வண்டலை படிய வைக்கிறது. இதுவே டெல்டா என்று அழைக்கப்படுகிறது. பல்வேறு வகைப்பட்ட டெல்டாக்கள் உள்ளன. அவைகளாவன, பறவை பாத டெல்டா (Bird Foot Delta), வில் அல்லது விசிறி வடிவ டெல்டா (Arcute or Fan Shaped Delta), பொங்குமுக டெல்டா (Estuarine Delta) மற்றும் கூரிய வடிவ டெல்டா (Cone Shaped Delta).



டெல்டா

**உங்களுக்கு தெரியுமா ?**

வட அமெரிக்காவின் மிக நீண்ட ஆறு மிசிசிபி ஆகும். ஏறத்தாழ 3,730 கி.மீ நீளமுள்ள ஆறு, வட அமெரிக்காவில் உள்ள மினோஸ்டாவின் இட்ஸ்கா ஏரியில் உருவாகிறது. இது உலகின் நான்காவது நீண்ட ஆறாகவும் மற்றும் பத்தாவது மிக அதிக சக்தி வாய்ந்த ஆறாகவும் உள்ளது.

**உங்களுக்கு தெரியுமா ?**

கங்கை இந்திய துணைக்கண்டத்தின் நீண்ட ஆறு, வட இந்தியாவிலிருந்து கங்கைச் சமவெளி வழியாக கிழக்கு நோக்கி ஓடி பங்களாதேசை அடைகிறது. உத்ரகாண்டிலுள்ள இமயமலையில் இருந்து 2,510 கி.மீ நீளம் கொண்ட இந்த ஆறு உருவாகிறது. கங்கை ஆறானது 10,00,000 சதுர கிலோ மீட்டர் வடி நிலத்தைப் பெற்று உலகத் தினுடைய அதிகமான மக்கள்தொகை அடர்த்தியை உருவாக்குகிறது. இந்தியாவின் தேசிய ஆறாக கங்கை ஆறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## அலைகள்

கடற்கரை பகுதியில் காணப்படும் அரிப்பிற்கு முக்கிய காரணி அலைகள் ஆகும். அலைகள் கடற்கரையை சுற்றிலும் அரித்தல், கடத்துதல் மற்றும் படியவைத்தல் ஆகிய பணிகளை செய்கின்றன. கடல் அரிப்பானது கீழ்கண்ட வழிகளில் நடைபெறுகிறது.

### அரித்து தின்னல்

அலையின் விசையோடு சேர்ந்த பாறைத்துகள்கள் ஓங்கல் மீது மோதி உடைத்து துகள்களாகப்பட்டு திரும்புகிறது.

### மோதி உடைத்தல்

அலைகள் அரிக்கப்பட்ட பொருட்களை கடத்தும் போது அலைகள் ஒன்றுடன் ஒன்று மோதி மேலும் சிறிய துகள்களாக உடைகின்றன.

### நீர் தாக்க செயல்

அலைகள் கடற்கரைக்கு எதிராக மோதும் போது நீரானது பாறைகளின் விரிசல்களில் உள்ளே நுழைகிறது. இதனால் உள்ளேயுள்ள காற்று அழுத்தப்பட்டு இறுக்கமடைகிறது. அலைகள் பின்வாங்குகின்ற போது உள்ளே இருந்த காற்றானது அதிக விசையுடனும் மற்றும் பெரும் ஒலியுடனும் விரிவடைகின்றன.

### கரைத்தல் செயல்

கரைத்தல் செயல் மூலம் பாறைகளில் இரசாயண மாற்றம் ஏற்படுத்தப்பட்டு சிதைவடைகின்றன.

## கடல் அரிப்புடன் தொடர்புடைய நிலத்தோற்றங்கள்

### வளைகுடாக்கள்

கடற்கரையின் வெளிப்புறத்தின் மேல் தொடர்ச்சியாக அலைகளானது மோதுகின்ற போது பாறைகளின் கடினத் தன்மைக்கு ஏற்ப கடற்கரை பகுதியானது அரிக்கப்பட்டு ஒழுங்கற்று



ஓங்கல்

காணப்படுகிறது. மாறி மாறி காணப் படுகின்ற கிராணைட், சுண்ணாம்புகல், மண மற்றும் சேறு ஆகியவை ஒன்றிணைந்து காணப்படும் இடத்தில் இவை அதிகமாக காணப்படுகின்றன.

### ஓங்கல்கள்



குகை மற்றும் கடல் தூண்

பொதுவாக, செங்குத்தான பாறை கடலை நோக்கி அமையும் போது ஓங்கல் ஏற்படுகின்றது.

## குகை, வளைவு, கடல் தூண் மற்றும் எஞ்சிய பாறை

### குகை

தொடர்ச்சியான அலைகளானது ஓங்கலின் அடிமட்டத்தில் குடைந்து குகை போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகின்றன.



கடல் வளைவு

### கடல் வளைவு

இரண்டு குகைகள் ஒன்றோடு ஒன்று சேரும் போது கடல் வளைவு உருவாகின்றன. மேலும் அலைகளால் ஏற்படுகின்ற தொடர் அரிப்பானது கடல் வளைவை முழுவதுமாக நொறுங்கி போக வழிவகுக்கிறது.

### கடல் தூண்

எஞ்சி இருக்கின்ற பாறைத் தோற்றமானது தூணைப் போல் இருப்பதால் அவற்றை கடல் தூண் என்கிறோம்.

### எஞ்சிய பாறை

தொடர்ந்து கடல் தூண்கள் அரிக்கப்படுவதனால் எஞ்சிய பாறை உருவாகின்றன. அவை கடல் மட்டத்திலிருந்து சற்றே பார்க்கக் கூடிய மட்டமே இருக்கும்.



எஞ்சிய பாறை

## அலையின் படிவித்தலோடு தொடர்புடைய நிலத்தோற்றங்கள்

### காயல்

கடற்கரையைச் சுற்றிலும் மண் படியவைத்தலால் தோற்றுவிக்கப்படும் நிலத்தோற்றமே காயல் எனப்படும்.

காயலானது பொதுவாக மிக நுட்பமான மணற்துகள்களால் ஆனது.

**உங்களுக்கு தெரியுமா ?**

உலகின் நீண்ட கடற்கரையான மியாமி கடற்கரை அமெரிக்காவிலும் அதனை அடுத்த பெரிய கடற்கரை சென்னையில் உள்ள மெரினா கடற்கரையாகும்.

### மணல் திட்டுக்கள் மற்றும் நீண்ட மணல் திட்டுக்கள்

கடல் அலைகளினால் அரிக்கப்பட்ட துகள்கள் கடத்தப்படும் போது ஏதேனும்



மணல் திட்டு

குறுக்கீடுகள் ஏற்படுமாயின் அவ்விடத்திலேயே துகள்கள் படிய வைக்கப்படுகின்றன. மேலும்



நீண்ட மணல் திட்டு

படியவைத்தல் தொடரும் போது நீண்ட தடுப்பு போலவும் மற்றும் நாக்கு போன்ற அமைப்பாகவும் கடற்கரைகளிலிருந்து கடலினை நோக்கி வளர்கின்றன. இது போன்ற அமைப்பு ஆற்று முகத்துவாரத்தில் உருவாகுமேயானால் அது குடா என்று அழைக்கப்படுகிறது.

### பனியாறுகள்

பனிப்பாறைகள் நகர்கதலே பனியாறுகள் என அழைக்கப்படுகிறது. உறை நிலைக்கும் குறைவான வெப்பநிலை உள்ள பகுதிகளில் பனியாறுகள்பரவிக் காணப்படுகின்றன. பனியாறுகள் ஆஸ்திரேலியாவைத் தவிர அனைத்து கண்டங்களிலும் காணப்படுகின்றன. உறைபனிக்கோட்டிற்கு மேல் அமைந்துள்ள பிரதேசங்களில் குவியும் பனித்துகள்களானது திடநிலையை அடைவதால் உருவாகும் அழுத்தத்தின் காரணமாகவும், ஈர்ப்பு விசையினாலும் பள்ளதாக்குகளின் வழியாக மெதுவாக நகருகின்றது. பனியாறுகள் செல்லும் வழியில் அரித்தல், கடத்துதல் மற்றும் படியவைத்தல் ஆகிய கூட்டு செயல்களை செய்கின்றது. அவற்றை (i)பள்ளதாக்கு பனியாறுகள் (Valley Glaciers), (ii) கண்டப் பனியாறுகள் (Continental Glaciers) மற்றும் (iii)மலையடிவாரப் பனியாறுகள் (Piedmont Glaciers) என வகைப்படுத்தப்படுகின்றன.

### பள்ளதாக்கு பனியாறுகள்

இவ்வகை பனியாறுகள் மலைகளின் மேல் அமைந்துள்ளன.



ஆல்ஃபைன் பனியாறு

இவைகள் பள்ளதாக்கு அல்லது ஆல்ஃபைன் பனியாறுகள்எனவும் அழைக்கப்படுகிறது.

### கண்டப் பனியாறுகள்

துருவப் பிரதேசங்களில் பனித் துகள்களானது பரந்த அளவில் பரவிக் காணப்படுகின்றன. இவ்வாறு பரவிக் காணப்படும் பனித் துகள்களின் தொகுப்பே கண்டப் பனியாறுகள் என அழைக்கப்படுகிறது.

### மலையடிவாரப் பனியாறுகள்

மலையடிவாரப் பகுதியில் பனித் துகள்கள் குவிவதால் உருவாகும்



மலையடிவாரப் பனியாறுகள்

பனியாறுகள் மலையடிவாரப் பனியாறுகள் என அறியப்படுகின்றது.

### அரிப்புச் செயல்

பின்வரும் நிகழ்வுகள் பனியாறுகளின் அரிப்புச் செயல்களோடு தொடர்புடையவைகளாகும்.

### உறைபனி உடைப்பு

பாறைகளில் பனி உறைவதாலும் மற்றும் உருகுவதாலும் சிதைக்கப்படும் நிகழ்வே உறைபனி உடைப்பு என அழைக்கப்படுகிறது.

### பறித்தெடுத்தல்

பனியாறு நகரும் போது அதன் பாதையில் உள்ளவைகளை அடியோடு பெயர்த்தெடுக்கப்படுதலே பறித்தெடுத்தல் ஆகும்.

### உராய்ந்து அரித்தல்

உராய்ந்து அரித்தல் என்பது பறித்தெடுக்கப்பட்ட பாறைத் துகள்களின் மூலம் தரைப்பகுதியானது உராய்ந்து அரிக்கப்படுவதலாகும்.

### பனியாறுகளோடு தொடர்புடைய நிலத்தோற்றங்கள்

### சர்க்

பனியாறுகள் பறித்தெடுத்தல் செயலினால் உருவாகும் நாற்காலி



சர்க்

போன்ற அமைப்பினை கொண்டிருக்கும் நிலத்தோற்றமே சர்க் ஆகும்.

### அரெட்டுகள் மற்றும் பிரமிடு சிகரங்கள்

இரண்டு சர்க்குகளுக்கு இடையே காணப்படும் கத்தி போன்ற நீண்ட தொடர் நிலப்பகுதியே அரெட்டு ஆகும்.



பிரமிடு சிகரம்

அருகருகே உள்ள இரண்டுக்கும் மேற்பட்ட சர்க்குகளால் இணைக்கப் பட்டுள்ள பகுதி உடைந்து உயர்ந்து நிற்கும் சிகரம் போன்ற அமைப்பே பிரமிடு சிகரமாகும்.

### U–வடிவ பள்ளதாக்கு

பள்ளதாக்கானது பனியாற்றினால் அரிக்கப்பட்டு ஆழப்படுத்தப்படுவதால் உருவாகும் நிலத்தோற்றமே U–வடிவ



U–வடிவ பள்ளதாக்கு

பள்ளதாக்கு ஆகும். இவை, ஆற்றினால் உருவாக்கப்பட்டிருக்கும் `V' வடிவ பள்ளதாக்கானது பனியாற்றினால் ஆழப்படுத்தப்பட்டு அகலப்படுத்தப் படுவதினால் உருவாகின்றது.

## தொங்கும் பள்ளதாக்கு

முதன்மை கண்டப் பனியாறு, துணைப் பனியாற்றினை விட அதிக அளவு அரிப்புத்திறன் கொண்டிருக்கும் போது தொங்கும் பள்ளதாக்கு



தொங்கும் பள்ளதாக்கு

உருவாகின்றது. துணை ஆற்றில் உள்ள பனி உருகிய பின்பு அது முதன்மையாற்றின் மீது தொங்கிக் கொண்டிருப்பது போல் காட்சியளிக்கும். இவ்வாறான துணை ஆறு தொங்கும் பள்ளதாக்கு என அழைக்கப் படுகின்றது.

பனியாறுகளினால் உருவாக்கப்படும் மற்ற நிலத்தோற்றங்களாவன, செம்மறி ஆட்டுப்பாறை (Rocke Moutonnee), வால் வடிவப் பாறை (Crag and Tail), பொருந்தாப்பாறை அல்லது திரியும்பாறை (Boulder Clay or Glacial Till) மற்றும் எராடிக்கள் (Erractics).

## படிவுகள்
## மொரைன்கள்

மொரைன்கள் எனப்படுபவை பாறைத்துகள்கள், துண்டுகள், பாறை உருண்டைகள் மற்றும் சேறுகளால் ஆனவை. மேலும் அவைகள் விளிம்பு மொரைன்கள் (Terminal Moraines), பக்க மொரைன்கள் (Lateral Moraines) மற்றும் மத்திய மொரைன்கள் (Medial Moraines) என பிரிக்கப்படுகின்றன.

## டிரம்லின்கள்

பாறைத்துகள் மற்றும் சேறு சலவையாலான நிலத்தோற்றமே டிரம்லின்கள் ஆகும். இவைகள் பார்ப்பதற்கு முட்டைகள் புதைத்துள்ளது போல் தோற்றமளிக்கும். வண்டல் சமவெளி மற்றும் எஸ்கர்கள் ஆகியன இதர படிவித்தலால் உருவாக்கப்படும் நிலத்தோற்றங்கள் ஆகும்.

**செயல் முறை**

பனியாற்றின் பனிக்கட்டி உருகுதலுக்கான காரணத்தையும் மற்றும் ஏன் கடலின் மட்டம் உயர்கின்றன என்பதைப் பற்றி விவாதிக்கவும்.

## காற்று

காற்றானது பாலை மற்றும் அரைப் பாலைவனங்களில் தேயுறுதலை ஏற்படுத்துவதில் வலிமையான காரணியாகும், ஏனெனில் குறைந்த அளவு மழைப்பொழிவு மற்றும் சொற்ப அளவு இயற்கைத் தாவரங்கள் இருப்பதே காரணமாகும்.

## அரித்தலின் செயல்பாடுகள்

அரித்தலின் செயல்பாடுகள் மூன்று வகைகளாக வகைப்படுத்தப்படுகிறது. அவைகளாவன,

### புடைத்தெடுத்தல்

உதிரியான மணல் துகள்கள் அவை இருக்கும் இடத்திலிருந்து காற்றினால் தூக்கி செல்லப்படும் செயலே புடைத்தெடுத்தலாகும்.

### அரித்து தின்னல்

பாறைத் துகள்களானது காற்றினால் எடுத்து செல்லப்பட்டு எதிரிலுள்ள பாறைகளின் மீது மோதி சிதைப்பதே அரித்து தின்னலாகும்.

### மோதி உடைதல்

காற்றினால் கடத்தப்படும் பாறைத் துகள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி சிதைவடைவது மோதி உடைதலாகும்.

### கடத்தல் செயல்முறைகள்

கடத்தல் செயலானது பின்வரும் நிகழ்வுகள் மூலம் நடைபெறுகிறது. அவைகளாவன, தாவுதல் (Saltation) மற்றும் தொங்குதல் (Suspension) ஆகும்.

### காற்றினால் செய்யப்படும் அரிப்புச் செயல்கள்

காற்றானது புடைத்தெடுத்தல் (Deflation) மற்றும் அரித்து தின்னல் (Abration) ஆகிய செயல்கள் மூலம் பல்வேறுவகையான நிலத்தோற்றங்களை குறிப்பாக பாலைவனப் பகுதிகளில் உருவாக்குகின்றது. அவைகளாவன,

### பீடப்பாறைகள் அல்லது காளான் பாறைகள்

கடின மற்றும் மென்மையான அடுக்குகளால் ஆன பாறையானது காற்றினால் கடத்தி கொண்டு வரப்படும் மணல் துகள்களினால் தாக்கப்படுகின்றது. அப்போது மென் அடுக்குகளானது கீழ் பகுதியில் இருப்பின் மேலே உள்ள கடின அடுக்கினைவிட வேகமாக



காளான் பாறை

அரிக்கப்படுகிறது. இவ்வாறான நீண்டகால அரிப்பினால் பாறைத்தூணானது காளான் போன்று தோற்றமளிக்கிறது. இவ்வாறான பாறைகள் பீடப்பாறைகள் எனவும் அழைக்கப்படுகிறது.

### சூகன்

மென்பாறை அடுக்கின் மேல் தட்டையான கடினப்பாறை அடுக்குகள் கிடையாக அமைந்திருந்தால் அவை காற்றினால் குறுக்காக அரிக்கப்பட்டு நீண்ட குன்று தோன்றுகிறது. இந்த கடினப்பாறையின் தோற்றம் மேடை போன்று காட்சியளிக்கும். அதன் உச்சி சூகன் எனப்படும்.

### யார்டாங்

பாலைவனச் சூழலில் காற்றினால் அரிக்கப்பட்டு நீண்ட மலைத்தொடர் போல காணப்படும் நிலத்தோற்றமே யார்டாங் ஆகும். யார்டாங்குகள் அகன்ற நீள்வட்ட வடிவமுடைய நிலத் தோற்றங்களாகும். மேலிருந்து பார்ப்பதற்கு கவிழ்த்து வைக்கப்பட்ட படகு போன்று காட்சியளிக்கும்.

### இன்சல்பர்க்குகள்

அரிக்கப்படாத எஞ்சிய குன்றுகாளக தரைப் பகுதியிலிருந்து உயர்ந்து காணப் படும் நிலத்தோற்றமே இன்சல்பர்க்குகள் ஆகும். இவைகள் செங்குத்து சரிவுகளையும் மற்றும் வட்ட வடிவ உச்சி பகுதிகளையும் கொண்டிருக்கும். காற்றின் அரிப்போடு

தொடர்புடைய மற்ற நிலத்தோற்றங்களாவன, மேசா (Mesa), பட்டிஸ் (Buttes), பட்டைக்கற்கள் (Ventifacts), முப் பட்டைக் கற்கள் (Dreikanter) மற்றும் ஊது பள்ளங்கள் (Deflation Hallows).

### காற்றின் படிவித்தலோடு தொடர்புடைய நிலத்தோற்றங்கள்

பின்வருவன காற்று படிவித்தலின் முக்கியமான நிலத்தோற்றங்களாகும்.




பர்கான்

### பர்கான்

இவைகள் பிறைச்சந்திர வடிவ மணற்குன்றுகள் ஆகும். காற்று வீசும் திசைக்கு ஏற்ப நிலையாக நகரும் தன்மை கொண்டவை, காற்று வீசும் திசையானது வன் சரிவினையும் மற்றும் எதிர் திசையானது மென் சரிவினையும் கொண்டிருக்கும்.

### செஃப் அல்லது நீள் வடிவ மணற்குன்றுகள்

காற்று வீசும் திசைக்கு இணையாக பல கிலோ மீட்டர்கள் நீளத்திற்கு அமைந்திருக்கும் குறுகலான மணற்குன்றுகளே செஃப் அல்லது நீள் வடிவ மணற்குன்றுகள் ஆகும்.

### லோயஸ்

பாலைவனத்திற்கு அருகாமையிலுள்ள பகுதிகளில் படிந்திருக்கும் நுண்ணிய மணல் துகள்களே லோயஸ் ஆகும். இவை மிகவும் வளமான, நுட்பமான மற்றும் மஞ்சள் நிறமுள்ள மணல் துகள்காளகும்.

## பயிற்சி

### I) சரியான விடையை தேர்ந்தெடு.

1. ஆக்ஸிகரண செயல்முறையானது இவ்வாறு அறியப்படுகிறது.
   அ) இரும்பு துருப்பிடித்தல் ஆ) வேதிப்பொருட்கள் கூட்டமைப்பு
   இ) வெப்ப அதிர்ச்சி ஈ) ஹாலோஹிலாஸ்டி
2. குருட்டாறுகள் உருவாக்கப்படுவது ..................................
   அ) மலைப் பாதையில் ஆ) பள்ளத்தாக்கு பாதையில்
   இ) சமவெளிப் பாதையில் ஈ) டெல்டா பாதையில்
3. பீச்சுகள் எதனுடன் தொடர்புடையவை.
   அ) ஆறுகள் ஆ) பனியாறுகள் இ) காற்று ஈ) அலைகள்
4. பீடப்பாறைகள் இப்படியும் அழைக்கப்படுகின்றன.
   அ) ரூகன் ஆ) காளான் பாறை இ) யார்டாங் ஈ) பர்கான்கள்
5. பர்கான் எந்த செயலோடு தொடர்புடையது.
   அ) படியவைத்தல் நிலத்தோற்றம் ஆ) அரித்தல் நிலத்தோற்றம்
   இ) கடத்தல் நிலத்தோற்றம் ஈ) இயற்கை நிலத்தோற்றம்

## II) கோடிட்ட இடங்களை நிரப்புக

1. வெப்ப அழுத்தம் இவ்வாறு கூட அழைக்கலாம் __________
2. இரண்டு குகைகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து அணுகுவது இவ்வாறு அழைக்கப்படுகிறது __________
3. ஆற்றின் மூப்பு நிலையில் உருவாகும் விசிறி வடிவ வண்டல் நிலத் தோற்றமானது __________ என அழைக்கப்படுகிறது.
4. பாறைகள் உடைக்கப்படுவது மற்றும் சிதைக்கப்படுவதுமான செயல்களானது __________ என அழைக்கப்படுகிறது.
5. காற்றினால் படிய வைக்கப்படும் பொருட்கள் __________ மற்றும் __________ ஆகும்.

## III) கீழ்கண்டவற்றை பொருத்துக

| | |
|---|---|
| 1. உப்பு படிகங்களின் வளர்ச்சி | சமவெளிப் பாதை |
| 2. குதிரை குளம்பு ஏரி | பனியாறு படியவைத்தல் |
| 3. மணல் திட்டுக்கள் | காற்று படியவைத்தல் |
| 4. மொரைன்கள் | ஹாலோஹிலாஸ்டி |
| 5. செஃப் | அலையின் படியவைத்தல் நிலத்தோற்றம் |

## IV) சுருக்கமாக விடையளி

1. வானிலை சிதைவு குறித்து ஒரு சிறு குறிப்பு எழுதுக.
2. ஆற்றின் அரித்தல் செயலால் உருவாகின்ற நிலத்தோற்றங்களின் பெயர்களை கூறுக.
3. சர்க்குகள் எவ்வாறு உருவாகின்றன ?
4. யார்டாங் குறித்து ஒரு சிறு குறிப்பு தருக.
5. நீண்ட மணல் திட்டுக்கள் என்றால் என்ன ?

## V) விரிவாக விடையளி

1. வானிலைச் சிதைவின் பல்வேறு வகைகளை கூறி அவற்றைப் பற்றி விரிவாக விளக்குக.
2. ஆற்றின் போக்கு தொடர்பான பல்வேறு வகைப்பட்ட நிலத்தோற்றங்கள் குறித்து விரிவாக தருக.
3. அலைகளின் அரித்தல் செயல்பாடு குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
4. பனியாறுகளின் படியவைத்தலால் ஏற்படும் நிலத்தோற்றங்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
5. காற்றின் அரித்தல் நிலத்தோற்றங்களைப் பற்றி விளக்குக.

# 3. வானிலையும் காலநிலையும்

வானிலை மற்றும் காலநிலை என்ற இரு சொற்களையும் நம்முடைய அன்றாட வாழ்வில் அடிக்கடி பயன் படுத்துகின்றோம். இதற்குக் காரணம் நம்முடைய வாழ்வின் நடைமுறைகள் அனைத்தும் வானிலையை அடிப் படையாகக் கொண்டுதான் அமை கின்றன. உலகில் எந்த ஒரு பகுதியில் வசிக்கும் மனிதனின் நடவடிக்கைகள் அனைத்தும் வானிலை மற்றும் கால நிலையினால் தீர்மானிக்கப்படுகின்றது. உதாரணமாக வெப்பமண்டலப் பகுதிகளில் நெல் முக்கியப் பயிராகவும், மித வெப்பமண்டலப் பகுதிகளில் கோதுமை முக்கியப் பயிராகவும் பயிரிடப்படுகின்றது. நாம் கோடையில் பருத்தி ஆடைகளையும் அணிவதும் மற்றும் குளிர் காலங்களில் கம்பளி ஆடைகளை அணிகிறோம். நாம் கோடையில் பனிக்கூழ் (Ice cream), மோர் மற்றும் குளிர் பானங்களை அருந்த விரும்புவதும், குளிர் மற்றும் மழைக் காலங்களில் குளம்பி (Coffee) மற்றும் தேநீர் (Tea) அருந்தவும் விரும்பு கின்றோம். இவைகள் மட்டுமல்லாது நம் அன்றாட உணவுப் பழக்கவழக்கங்கள், கலாச்சாரம், பாரம்பரிய வழக்கங்கள் ஆகியவற்றோடு நமது பொதுவான விழாக்களும், பண்டிகைகளும் கூட வானிலை மற்றும் காலநிலையோடு நெருங்கிய தொடர்புடையவை.

**செயல்முறை**

வானிலை மற்றும் காலநிலையோடு தொடர்புடைய பொதுவான விழாக்கள் மற்றும் பண்டிகைகளை அறிந்துகொள்க.

## வானிலை

வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் 24 மணி நேரத்திற்குள் நிலவும்வளிமண்டலத்தின் நிலையாகும். அவை வெப்பம், காற்றழுத்தம், ஈரப்பதம், மழையளவு, மேக மூட்டம், காற்றின் வேகம் மற்றும் அதன் திசை ஆகியவற்றால் வரையறுக்கப்படுகிறது. இதன் வேறுபாடுகளானது ஒரு குறிப்பிட்ட இடத்தில் விழும் சூரிய வெப்பக்கதிர்களின் கோணத்தைப் பொருத்து அமைகின்றது. அவை வெப்ப மண்டலத்திலிருந்து ஒவ்வொரு அட்சரேகைக்கும் வேறுபடுகின்றது.

## காலநிலை

காலநிலை என்பது பொதுவாக ஒரு நீண்ட காலத்தில் மற்றும் ஒரு பெரும் பரப்பளவில் காணப்படும் வானிலையின் சராசரி ஆகும். ஒரு திட்டமான சராசரி காலம் என்பது 30 ஆண்டுகளாகும்.

**உங்களுக்கு தெரியுமா ?**

காலநிலை என்ற சொல் கிளைமா (Klima) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் ஒழுங்கிலிருந்து விலகுதல் என்பதாகும்.

## வானிலை மற்றும் காலநிலைகளை தீர்மானிக்கும் காரணிகள்

வானிலையின் மூலகங்களானது பல்வேறு காரணிகளால் மாற்ற மடைகிறது. கீழ்கண்ட காரணிகளால் கால நிலை பாதிப்படைகிறது.

### அட்சரேகை

நிலநடுக்கோட்டுப்பகுதியானது சூரியனின் வெப்பக்கதிர்களை நேர்க்கதிர்களாகப் பெறுகின்றது, அவை




ஒரு சிறிய பரப்பில் மட்டுமே விழுகின்றது. இதற்கு மாறாக துருவப் பகுதிகள் சூரியனின் சாய்வுக்கதிர்களைப் பெறுகின்றது. மேலும், அவை ஒரு பெரும் பரப்பளவில் விழுகின்றது. இதன் விளைவாக நிலநடுக்கோட்டுப் பகுதியில் துருவப்பகுதிகளைக் காட்டிலும் வெப்பம் அதிகமாகக் காணப்படுகிறது. உதாரணமாக தமிழ்நாட்டில் உள்ள மதுரை நகர் வெப்பமாகவும், இரஷ்யாவிலுள்ள மாஸ்கோ நகரம் குளிராகவும் காணப்படுகிறது.

## உயரம்

நீங்கள் எப்பொழுதாவது கோடை வாழிடங்களுக்கு (Hill Stations) சென்றிருக்கின்றீர்களா ? அங்கு நிலவும் வானிலையை எவ்வாறு உணர்ந்தீர்கள் ? வானிலை மற்றும் காலநிலை மலைகள் மற்றும் மலைத்தொடர்களால் மாறுபாடு அடைகின்றன. உயரமான பகுதிகளில் அமைந்துள்ள இடங்கள் சமவெளிப்




### உங்களுக்கு தெரியுமா ?

பூமியின் மேற்பரப்பிலிருந்து வெப்பநிலையானது சுமார் ஒவ்வொரு 1,000 மீட்டருக்கும் சுமார் 6.5° செல்சியஸ் என்ற விகிதத்தில் குறைகின்றது

பகுதிகளை விட குளிர்ந்து காணப் படுகிறது. இதற்குக் காரணம், மலை களில் காற்றின் அடர்த்தி குறைவாகக் காணப்படுவதாலும் மேலும் அவை குறைந்த அளவு வெப்பத்தினையே கிரகிக்கும் தன்மையினை கொண்ட தாலாகும். உதாரணமாக, ஊட்டி மற்றும் கொடைக்கானல் பகுதிகள் திருச்சிராப்பள்ளியை விட குறைந்த வெப்ப நிலையைக் கொண்டுள்ளன.

### செயல்முறை

உங்கள் தாயாரிடம் இரண்டு பாத்திரங்களை எடுத்துக் கொள்ளச் சொல்லவும். அதில் ஒன்றை நீரால் நிரப்பியும் மற்றொன்றை காலியாகவும் அடுப்பில் வைத்து சூடாக்கச் சொல்லவும். பிறகு எந்தப் பாத்திரம் முதலில் சூடாகிறது என்பதை கவனிக்கவும்.

## கடலிலிருந்து தூரம்

காலியாக உள்ள பாத்திரத்தினை நிலத்தோடும் மற்றொன்றை கடலோடும் ஒப்பிடலாம். நீர் நிரப்பிய பாத்திரத் தினைப் போலவே கடலானது தாமதமாக வெப்பமடைந்து, கிரகித்த வெப்பத்தினை வெளியிட நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளும். கடற்கரையோரப் பகுதிகளில் குளிர்ந்த ஈரப்பதம் நிறைந்த காற்று ஆண்டு முழுவதும் வீசுவதால் கோடை மற்றும் குளிர்காலங்களில் நிலவும் தட்பவெப்பத்தினை மாற்றியமைக்கின்றன. இவ்வகையான காலநிலையை சீரான காலநிலை

(Equable Climate) அல்லது கடலாதிக்கக் காலநிலை (Maritime Climate) என்றழைக்கலாம்.

**செயல்முறை**

மும்பை மற்றும் டெல்லியின் வானிலை வேறுபாடுகளை கண்டறிக.

இதற்கு மாறாக, நிலப்பரப்பானது காலிப்பாத்திரத்தினைப்போலவே வேகமாக வெப்பமும் குளிர்ச்சியும் அடைகின்றது. உள்நாட்டு நிலப்பரப்பானது அப்போது வறண்ட வெப்பக்காற்றினை உணர்கின்றது. அங்கு கோடையில் வெப்பம் கடுமையாகவும் மற்றும் குளிர்காலத்தில் குளிர் கடுமையாகவும் நிலவுகிறது. இவ்வகையான காலநிலையை தீவிரக் காலநிலை (Extremes of Climate) மற்றும் கண்டக்காலநிலை (Continental Climate) என்றும் அழைக்கலாம்.

**செய்முறை**

உலக வரைபடத்தை கவனித்து, வெப்பப் பாலைவனங்களைச் சுட்டிக்காட்டவும். இந்த பாலை வனங்கள் அங்கு அமைவதற்கும், உருவாவதற்கும் கடல் நீரோட்டங்கள் ஒரு காரணமாக இருந்திருக் கின்றன. அதனைப்பற்றி உங்கள் வகுப்பறையில் விவாதிக்கவும்.

## கடல் நீரோட்டங்கள்

கடல் நீரோட்டங்களானது வெப்பநிலையைப் பொறுத்து, வெப்ப நீரோட்டங்கள் மற்றும் குளிர் நீரோட்டங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. வெப்ப நீரோட்டங்களானது கடற்கரைப் பகுதிகளை மித வெப்பத்துடனும் மற்றும் ஈரப்பதத்துடனும் வைத்துக் கொள்வதோடு, கடலில் பனிப்பாறைகள் உருவாகாமல் தடுக்கின்றன. ஆனால், குளிர் நீரோட்டங்களானது குளிர்ந்த, வறண்ட வானிலையோடு கடலில் பனிப் பாறைகளையும் உருவாக்குகின்றது

**உங்களுக்கு தெரியுமா ?**

வெப்ப மற்றும் குளிர் நீரோட்டங்கள் சந்திக்கின்ற இடங்கள் முதன்மையான மீன்பிடித்தளங்களாக இருப்பதற்குக் காரணம் மீன்களின் உணவான கடல்வாழ் நுண்ணுயிரிகள் (Plankton) வளர இங்கு தக்க சூழ்நிலை நிலவுகிறது. அங்கு உருவாகும் அடர் மூடுபனியும் (Fog) மற்றும் தாழ் முகில்களும் கடல் போக்குவரத்தை பாதிக்கின்றன.

## காற்றோட்டங்களின் திசை

கடல் பகுதியிலிருந்து வீசும் காற்றானது அதிக ஈரப்பதத்தினை கொண்டிருப்பதால், அவை குளிர்ந்த ஈரமான காற்றாக வீசுகின்றது. உதாரணம், தென்மேற்கு பருவக் காற்றுகள். மாறாக நிலத்திலிருந்து வீசும் காற்றுகள் வெப்பத்துடன் வறண்ட வெப்பக் காற்றாக வீசுகிறது. உதாரணம், வடகிழக்கு பருவக்காற்றுகள். இவற்றில் எவை, ஏன் மழையைத் தரும் ?என ஊகித்து அறிக.

## எல்நினோ விளைவு

நமது நாட்டில் 'பருவக்காற்று பொய்த்தல்' (Monsoon failure) என பதை அடிக்கடி கேள்விப்படுகின்றோம். அப்படி என்றால் என்ன ? எதனால் இவை ஏற்படுகிறது ? இந்த பருவக்காற்று பொய்ப்பதற்கு பல்வேறு காரணங்கள் இருப்பினும், எல்நினோ என்ற காரணியும் முக்கியமானதாகிறது. எல்நினோ என்றால் ஸ்பானிய மொழியில் 'குழந்தை ஏசு' (Christ Child) என்று பொருள். இது கிருஸ்துமஸ் காலங்களில் தோன்றி, சில மாதங்கள் நீடிக்கும். இந்த

காலக்கட்டங்களில் சுமார் 5 முதல் 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெப்ப நிலையானது பெரு மற்றும் ஈக்வடார் நாட்டுக் கடற் கரையோரங்களில் துரிதமாக அதிகரிப்பதால் அங்கு தாழ் அழுத்த மண்டலமானது ஏற்படுகின்றது. இது அனைத்து திசைகளிலிருந்தும் காற்றினை ஈர்க்கின்றது. இதன் விளைவாக, பசிபிக் பேராழி மற்றும் இந்திய பேராழிகளில் வியாபாரக் காற்றுகள் வலுவிழந்து திசை விலக்கமடைவதால், நீண்ட வறட்சியான நிலையை இந்தியாவில் ஏற்படுத்துகிறது. எல்நினோவின் மற்ற விளைவுகளாவன, ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட புதர் தீ மற்றும் வறட்சி, இந்தோனேஷியாவில் ஏற்பட்ட பஞ்சம், பிரேசில் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் ஏற்பட்ட காட்டுத் தீ.

## மனிதனின் ஆதிக்கம்

நம்முடைய வாழ்க்கைப் போக்கில் தொழிற்புரட்சியானது பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இதன் விளைவாகக் காடுகள் அழிக்கப்பட்டு, பல்வேறு வகையான போக்குவரத்து வசதிகள், பெரிய காரை வீடுகள், பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் பல இதர வசதிகளைப் பெற்றுள்ளோம். இந்த வளர்ச்சியானது, நம் வாழ்க்கையின் போக்கினை சுலபமானதாகவும், சுகமானதாகவும் மாற்றியமைத்துள்ளது. இதன் விளைவாக புவி வெப்பமாதல் (Global Warming), பசுங்குடில் விளைவு (Green House Effect), மாசடைதல் (Pollution), போன்றவை கரியமில வாயுவை (Corbon-di-Oxide), காற்றில் அதிகரிக்கச்செய்துள்ளதாக உணர்கின்றோம். இந்த மனிதனின் ஆதிக்கம் நகர வெப்பத் தீவுகளை உருவாக்குகின்றன. நகர வெப்பத்தீவு (Urban Heat Island) என்பது ஒரு பெரு நகரமானது அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைக் காட்டிலும் அதிக வெப்பத்துடனே இருப்பதாகும்.

**உங்களுக்கு தெரியுமா ?**

புவி வெளியிடும் வெப்ப ஆற்றல் என்பது புவிக் கதிர்வீசலாகும்.

## வெப்பநிலை

புவி பெறும் ஒளி மற்றும் வெப்பத்திற்கு மூலாதாரம் சூரியனாகும். புவியானது மிகக் குறைந்த அளவு சூரிய கதிர்வீசலையே பெறுகின்றது. மேலும் இது புவியின் மேற்பரப்பை அடைய 8 நிமிடங்களையே எடுத்துக்கொள்கிறது. சூரியனிடமிருந்து வரும் சூரிய கதிர்வீசலே வெப்பம் என அழைக்கப்படுகிறது.

**உங்களுக்கு தெரியுமா ?**

ஒரு நாளில் நிலவும் அதிக அளவு மற்றும் குறைந்த அளவு வெப்ப நிலைக்கு இடையே உள்ள வெப்ப நிலை வேறுபாடே தினசரி வெப்ப வியாப்தி (Diurnal Range of Temperature) என அழைக்கப்படுகிறது.

சூரிய கதிர்வீசலிலிருந்து பூமி பெறும் வெப்ப ஆற்றலானது மூன்று வழிகளில் செயல்படுகிறது. அவைகளாவன, வளிமண்டலத்தில் கதிர்வீசல் (Radiation) முறையிலும், நிலத்தில் கடத்தல் (Conduction) முறையிலும், நீரில் வெப்பச் சலன (Convection) முறையிலும் நடைபெறுகிறது. பூமியின் வளிமண்டலமானது சூரிய கதிர்வீசலைவிட (Insolation) புவிக் கதிர்வீசலால் (Terrestrial Radiation) அதிகம் வெப்படைகிறது.




வளிமண்டத்தின் மூலங்கள்

**உங்களுக்கு தெரியுமா ?**

ஒரு வருடத்தில் நிலவும் வெப்பமான மாதத்திற்கும் குளிரான மாதத்திற்கும் இடையேயான வேறுபாடே வருடாந்திர வெப்ப வியாப்தி (Annual Range of Temperature) எனப்படும்.

## புவியின் வளிமண்டலம்

புவியின் வளிமண்டலமானது வாயுக்களால் சூழப்பட்டுள்ளது. இவைகள் புவி ஈர்ப்பு விசையினால் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. புவியின் வளிமண்டலமானது வாயுக்களின் கலவையினால் ஆனது. வளிமண்டத்தில் காணப்படும் முக்கிய வாயுக்களானது, நைட்ரஜன் மற்றும் ஆக்சிஜனாகும். ஆர்கான், நியான், ஹீலியம், கிரப்டான், கார்பன்டை ஆக்ஸைடு மற்றும் ஓசோன் ஆகியவை குறைந்த அளவு காணப்படும் வாயுக்களாகும். இவைகளைத் தவிர நீராவி மற்றும் தூசுக்களும் வளிமண்டலத்தில் காணப்படுகின்றன. இவையே வானிலை மாற்றதிற்கு காரணமாக அமைகின்றன.

வளிமண்டலத்தின் உயரத்திற்கு ஏற்ப வாயுக்களின் அளவானது வேறுபடுகின்றது. அவை பூமியின் மேற்பரப்பிற்கு அருகில் அடர்த்தி அதிகமாகவும் உயரம் அதிகரிக்க அதிகரிக்க குறைந்தும் காணப்படுகிறது. வளிமண்டலத்தினை அதன் பண்புகளின் அடிப்படையில் நான்கு அடுக்குகளாக பிரிக்கப்படுகிறது. அவையாவன அடியடுக்கு (Troposphere), படையடுக்கு (Stratosphere), அயனியடுக்கு (Ionosphere) மற்றும் வெளியடுக்கு (Exosphere).

## அடியடுக்கு

அடியடுக்கு புவியின் மேற்பரப்பலிருந்து துருவப் பகுதிகளில் 8 கி.மீ வரையிலும், பூமத்திய ரேகைப்பகுதியில் 18 கி.மீ வரையிலும் பரவிக் காணப்படுகிறது. வானிலை மூலங்களான வெப்பநிலை, காற்று, காற்றின் அழுத்தம், மேகங்களின் உருவாக்கம் மற்றும் மழைப்பொழிவு ஆகிய அனைத்து மாற்றங்களும் இந்த அடுக்கிலேயே நடைபெறுகின்றது. உயரம் அதிகரிப்பிற்கு ஏற்ப வெப்பநிலை குறைவது இந்த அடுக்கில் மட்டுமேயாகும். சேணிடை அடுக்கு (Tropopause) என்ற மெல்லிய அடுக்கானது அடியடுக்கு மற்றும் படையடுக்கு இவைகளுக்கிடையே அமைந்துள்ளது.

**உங்களுக்கு தெரியுமா ?**

வானிலையியல் என்பது வளிமண்டலத்தைப் பற்றி படிக்கும் அறிவியலாகும் மேலும் வளிமண்டலத்தின் கீழ் அடுக்கில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் வானிலை மாற்றங்களை உற்று நோக்குவதாகும்.




வளி மண்டல அமைப்பு

## படையடுக்கு

படையடுக்கானது புவியின் மேற்பரப்பிலிருந்து சுமார் 80 கி.மீ. வரை பரவி காணப்படுகிறது. ஜெட் விமானங்கள் இந்த அடுக்கில்தான் பயணிக்கின்றன. படையடுக்கின் உச்சி விளிம்பில் ஓசோன் வாயு அதிக அளவில் காணப்படுகின்றது. இவை, சூரியனிடமிருந்து வரும் புற ஊதாக் கதிர்களை வடிகட்டி கெடுதல்களிலிருந்து பாதுகாக்கின்றது. சூரியனிடமிருந்து வரும் வடிகட்டப்படாத கதிர்களானது உயிரினங்களின் திசுக்களை அழிக்கும் ஆற்றல் கொண்டவை. புவியின் மீது வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் ஓசோன் வாயு மிக முக்கியமானதாகும். இந்த அடுக்கானது சமவெப்ப அடுக்கு (Isothermal Layer) மற்றும் ஓசோன் அடுக்கு எனவும் அழைக்கப்படுகிறது. படையடுக்கினை தொடர்ந்து மீண்டும்ஒரு மெல்லிய அடுக்கு காணப்படுகின்றது. இது மீவளி இடையடுக்கு (Stratopause) என அழைக்கப்படுகிறது.

## அயனியடுக்கு

அயனியடுக்கு புவியின் மேற்பரப்பிலிருந்து 80 கி.மீ முதல் 500 கி.மீ வரை பரவிக் காணப்படுகிறது. இது அயனியடுக்கு என அழைக்கப்படக் காரணம், வளிமண்டலத்தின் இப்பகுதியில் சூரிய கதிர்கள் மின்செறிவூட்டப் படுவதாலாகும் (Ions). இவை வானொலி அலைகளை பூமிக்கு திருப்பி அனுப்புவதால் நவீன தொலை தொடர்பிற்கு மிகவும் உதவுகின்றது. ஒருதிறப்பொன்னென்றழைக்கப்படும் (Auroras) வண்ணமயமான காட்சியமைப்பினை வடகோளத்தில் வடமுனை வளரொளி (Northern lights) அல்லது வடதுருவ விண்ணொளி (Aurora Borealis) மற்றும் தென் கோளத்தில் தென்முனைவளரொளி (Southern lights) அல்லது தென்துருவ விண்ணொளி (Aurora Australis) ஆகியவையும் இங்கே காணப்படுகின்றன.

**உங்களுக்கு தெரியுமா ?**

கதிர்வீசலியல் (Aerology) என்பது வானிலையியலின் (Meteorology) ஒரு பிரிவு ஆகும். வளிமண்டலத்தினை பலூன்கள், வானூர்திகள் மற்றும் செயற்கைக்கோள்களை பயன் படுத்தி ஆராய்வதாகும். கதிர் வீசலியலானது ஓசோன் அடுக்கு, சூரிய கதிர் வீச்சு, நீண்ட அலை வரிசையினை கொண்ட கதிர் வீச்சு ஆகியவற்றினையும் ஆராய்கின்றது. சுருக்கமாக கூறுவதென்றால் வளி மண்டலத்தின் மேல் அடுக்கினைப் பற்றி படிப்பதாகும்.

## வெளியடுக்கு

வெளியடுக்கு என்பது வளிமண்டலத்தின் மிக உயரமான அடுக்காகும். எக்ஸோஸ்பியர் அடுக்கானது பெருமளவு ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் வாயுக்களை கொண்டுள்ளது. சில சமயங்களில் இவை அண்ட வெளியின் புறப்பகுதியாகவே கருதப்படுகின்றது.

## வெப்பநிலை மண்டலங்கள்

புவியின் வெப்பநிலையானது அதன் அட்சரேகை அளவு உயருவதற்கு ஏற்ப வெப்பநிலையின் அளவும் குறையும் என்பதை முன்பே கற்றிருக்கிறோம். இதன் அடிப்படையில் புவியானது வெப்ப மண்டலங்கள், மிதவெப்ப மண்டலங்கள் மற்றும் குளிர் மண்டலங்கள் எனப் பிரிக்கப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா ?**

வெப்பநிலையை அளக்க உதவும் உபகரணத்தின் பெயர் வெப்பமானியாகும் (Thermometer). வரைபடத்தில் ஒரே அளவுடைய வெப்பநிலையை கொண்டிருக்கும் இடங்களை இணைக்கும் கற்பனை கோட்டிற்கு சமவெப்பக்கோடுகள் (Isotherms) என்று பெயர்.

## வெப்ப மண்டலம்

கடக ரேகைக்கும் ($23\frac{1}{2}^0$ வ) மகர ரேகைக்கும் ($23\frac{1}{2}^0$ தெ) இடைப்பட்ட பகுதியில் வெப்ப மண்டலமானது காணப்படுகிறது. அவை சூரியனின் செங்குத்து கதிர் வீச்சினை பெறுவதால், மற்ற மண்டலங்களை விட வெப்பமாக காணப்படுகிறது.

**செய்முறை**

உங்களுக்கு வெப்ப சந்தி (Summer Solstice) மற்றும் குளிர் சந்தியைப் (Winter Solstice) பற்றி தெரியுமா ? அவை எப்போது ஏற்படுகின்றது என்றும், அதன் அம்சங்களையும் வரிசைப் படுத்துக.

கடக ரேகைக்கும் ($23\frac{1}{2}^0$ வ) ஆர்டிக் வட்டத்திற்கும் ($66\frac{1}{2}^0$ வ) இடைப்பட்ட பகுதியை வட மிதவெப்ப மண்டலம் என்றும், மகர ரேகைக்கும் ($23\frac{1}{2}^0$ தெ) அண்டார்டிக் வட்டத்திற்கும் ($66\frac{1}{2}^0$ தெ) இடைப்பட்ட பகுதியை தென் மித வெப்ப மண்டலம் என்றும் கூறுகிறோம். இந்த இடங்களானது எப்பொழுதும் சாய்வான சூரிய கதிர்வீசலைப் பெறுவதால் வெப்ப மண்டலத்தை விட குறைவான வெப்ப நிலையையே கொண்டிருக்கிறது.

## குளிர் மண்டலம்

ஆர்டிக் வட்டத்திற்கும் ($66\frac{1}{2}^0$வ) வட துருவத்திற்கும் ($90^0$வ) இடைப்பட்ட பகுதியையும் அண்டார்டிக் வட்டத்திற்கும் ($66\frac{1}{2}^0$ தெ) தென் துருவத்திற்கும் ($90^0$ தெ) இடைப்பட்ட பகுதியையும் குளிர் மண்டலம் என்று அழைக்கின்றோம். இவை எப்போதும் மிகவும் சாய்வான சூரிய வெப்பக் கதிர் வீசலைப் பெறுவதால் மற்ற இரண்டு



உலகின் வெப்பநிலை மண்டலங்கள்
வ
ஆர்டிக் வட்டம்
வடகுளிர் மண்டலம்
66 ½°வ
வட மிகவெப்ப மண்டலம்
கடக ரேகை
23 ½°வ
பூமிமத்திய ரேகை
வெப்ப மண்டலம்
0°
மகர ரேகை
23 ½°தெ
வட மிதவெப்ப மண்டலம்
அண்டார்டிக் வட்டம்
66 ½°தெ
தென் குளிர் மண்டலம்

மண்டலங்களையும் விட குளிர்ச்சியாக காணப்படுகின்றது.

**உங்களுக்கு தெரியுமா ?**

வெப்பத்தினை மூன்று அளவைகளில் கணக்கிடுகிறோம். அவைகள், 1.செல்சியஸ் 2.ஃபாரன்ஹீட் 3.கெல்வின்.

## காற்று அழுத்தம்

காற்றின் அழுத்தமானது பூமியின் மேற்பரப்பில் காற்றின் நிறையினால் ஏற்படுத்தப்படும் அழுத்தமே ஆகும். கடல் மட்டத்தில் நிலவும் காற்றழுத்தின் சராசரி அளவு 1,013 மில்லி பார்களாகும். காற்றழுத்தத்தின் கிடை மட்ட பரவலானது ஒரு இடத்தில் நிலவும் வெப்பநிலையினாலேயே தீர்மானிக்கப் படுகிறது.

**உங்களுக்கு தெரியுமா ?**

வளிமண்டல அழுத்தத்தை அளவிடப் பயன்படும் உபகரணம் அல்லது கருவி அழுத்தமானி (Barometer) ஆகும்.

வளிமண்டலத்தின் அழுத்தமானது எப்பொழுதும் வளிமண்டல வெப்பநிலையோடு எதிர்மறையாக தொடர்புடையது. அதிக அழுத்த மண்டலங்கள் குறைந்த வெப்பநிலை நிலவும் பகுதிகளில் உருவாகின்றன.

## பூமத்தியரேகை தாழ் அழுத்த மண்டலம்

இந்த மண்டலமானது $5^0$ வடக்கு முதல் $5^0$ தெற்கு அட்சரேகை பகுதிகளில் அமைந்துள்ளது. இப்பகுதிகளில் சூரிய கதிர்கள் ஆண்டு முழுவதும் செங்குத்தாக விழுகின்றன. அதிக வெப்பநிலையின் காரணமாக அங்குள்ள காற்று வெப்பமடைவதால் லேசாகி மேலெழும்பி தாழ்வழுத்த நிலையை உருவாக்குகிறது. இந்த மண்டலத்தினை 'அமைதி மண்டலம்' (Belt of calm) அல்லது டோல்ட்ராம்ஸ் என்றழைப்பர்.

## துணை அயண உயர் அழுத்த மண்டலம்

இந்த மண்டலமானது $25^0$ முதல் $35^0$ வடக்கு முதல் தெற்கு வரையிலான அட்சரேகைகளுக்கு இடையில் அமைந்துள்ளது. வெப்பமண்டலத் திலிருந்து மேலெழும்பிய காற்று, குறைந்த வெப்பநிலையின் காரணமாக குளிர்ந்து $30^0 – 35^0$ அட்சரேகைப் பகுதி களில் தரைப்பகுதியை நோக்கி கீழிறங் குகிறது.

பண்டையக் காலங்களில் வணிகர்கள் இந்த மண்டலத்தின் வழியாக அமைதி மண்டலத்தை நோக்கி கப்பல் பயணம் செய்யும்போது கப்பலின் எடையினை குறைப்பதற்காக குதிரைகளை கடலில் வீசியுள்ளார்கள். எனவே இம்மண்டலமானது குதிரை அட்சரேகை (Horse Latitudes) என்றழைக்கப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா ?**

சம அழுத்தக் கோடுகள் என்பவை ஒரே அளவுள்ள காற்றழுத்தத்தினை கொண்ட வெவ்வெறு இடங்களை இணைக்கும் கற்பனைக் கோடுகளாகும்.

## துணை துருவ தாழ் அழுத்த மண்டலம்

இந்த மண்டலமானது $60^0$ முதல் $65^0$ வரை வட மற்றும் தென் கோளங்களில் அமைந்துள்ளது. புவியின் சுழற்சி காரணமாக இங்குள்ள காற்று வெளி யேறுவதால் தாழ் அழுத்தம் உருவா கிறது.

## துருவ உயர் அழுத்த மண்டலம்

துருவப் பகுதிகளில் இந்த அழுத்த மண்டலமானது அமைந்துள்ளது. சூரியக் கதிர்களானது மிகவும் சாய்ந்த நிலையில் துருவப் பகுதிகளின் மீது விழுகின்றது. இதன் விளைவாக

# உலகின் முதன்மையான அமுழுத்த மண்டலங்கள்



குறைந்த வெப்பநிலையும், கனமான காற்றும் மற்றும் உயர் அழுத்தத்தையும் உருவாக்குகின்றது.

## காற்றுகள்

**உங்களுக்கு தெரியுமா ?**

காற்றின் வேகம் மற்றும் வீசும் திசையினை அளவிட காற்றுமானி (Anemometer) என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது. காற்று வீசும் திசையினை குறிப்பதற்கு காற்று திசைக்காட்டி (Wind vane) என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது.

கிடைமட்டமாக நகரும் வாயுவானது காற்று என அழைக்கப்படுகிறது. பொதுவாக காற்றானது உயர்வழுத்தப் பகுதியிலிருந்து தாழ்வழுத்தப் பகுதியை நோக்கி நகர்கின்றது. காற்றின் வேகமானது நிலப்பரப்பில் கிலோ மீட்டர்களில் அல்லது மைல்களிலும் மற்றும் கடல்களில் கடல் மைல்கள் (Knots) என்ற அளவைகளிலும் குறிக்கப்படுகிறது.

**உங்களுக்கு தெரியுமா ?**

பூமியின் மீது நகரும் பொருட்கள் அனைத்தும் காற்று மற்றும் பேராழி நீரோட்டங்கள் உட்பட புவி சுழற்சியின் காரணமாக வடகோளத்தில் வலப்புறமாகவும் தென் கோளத்தில் இடப்புறமாகவும் விலகிச் செல்கிறது. இந்த மாற்றமில்லாத விதி 'ஃபெரல் விதி' அல்லது 'கொரியாலிஸ் விசை' என்றழைக்கப்படுகிறது.

## காற்றினை வகைப்படுத்துதல்

காற்று உருவாகும் இடம் மற்றும் வீசும் காலம் ஆகியவற்றை அடிப் படையாகக் கொண்டு கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்படுகிறது.

**காற்றுகள்**

- **கோள் காற்றுகள்**
  - வியாபாரக்காற்றுகள்
  - மேலைக்காற்றுகள்
  - துருவக்காற்றுகள்
- **பருவகால மற்றும் பகுதி நேரக் காற்றுகள்**
  - பருவக் காற்றுகள்
  - நிலக் காற்றுகள்
  - கடல் காற்றுகள்
- **தலக் காற்றுகள்**
  - இது வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.
- **மாறும் காற்றுகள்**
  - சூறாவளிகள்
  - எதிர் சூறாவளிகள்

## கோள் காற்றுகள்

ஆண்டு முழுவதும் ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கி வீசும் காற்றுகளுக்கு கோள் காற்றுகள் என்று பெயர். முதன்மையான கோள் காற்றுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வியாபாரக் காற்றுகள் (Trade Winds) அயன மண்டலங்களுக்கு இடையே வீசுகின்றன. இவை வட கோளத்தில் வடகிழக்கு வியாபாரக் காற்றுகளாகவும் மற்றும் தென் கோளத்தில் தென்கிழக்கு வியாபாரக் காற்றுகளாகவும் வீசுகின்றன. வரலாற்று காலங்களில் கடற்பயணம் மேற்கொள்பவர்களுக்கு இவை மிகவும் பயனுள்ளதாக இருந்ததால் அவ்வாறு அழைக்கப்பட்டது. இவ்வகையான காற்றுகள் சீரானதாக மற்றும் நிலையானதாகவும் குறிப்பாக கடற்பரப்பில் வீசக்கூடியது. ஃபெரல் விதியின் படி இவ்வகையான காற்றானது விலகி வீசுகின்றது.

மேலைக் காற்றுகளானது (Westerlies) இரு கோளங்களிலும் துணை அயன மண்டல உயர்அழுத்த

பகுதியிலிருந்து துணை துருவ தாழ்வழுத்தப் பகுதியை நோக்கி வீசுகின்றது. வட கோளத்தில் தென் மேலைக் காற்றுகளாகவும் மற்றும் தென் கோளத்தில் வட மேலைக் காற்றுகளாகவும் வீசுகின்றது. பூமியின் சுழற்சி காரணமாக இவ்வகையான காற்றுகள் மேற்கிலிருந்து கிழக்காக வீசுகின்றது.

துரவக் காற்றுகள் (Polar Winds) துருவ உயர்வழுத்தப் பகுதியிலிருந்து துணை துருவ தாழ்வழுத்தப் பகுதியை நோக்கி கீழைக் காற்றுகளாக வீசுகின்றது. இவை கடுங்குளிர் காற்றுகளாகும். இந்தக் காற்றுகள் உள்நாட்டுப் பகுதிகளை நோக்கி ஊடுருவுகின்றன. உதாரணம் – அமெரிக்க ஐக்கிய நாடுகள். ஆனால் இந்தியாவில் இவை இமயமலை தொடர்களினால் தடுக்கப்படுகின்றன.

## பருவ கால மற்றும் பகுதி நேரக் காற்றுகள்

புவியின் மீது ஏற்படும் வெப்பப் படுத்துதல் மற்றும் குளிராதல் நிகழ்ச்சிகளினால் உருவாக்கப்படும் வேறுபாட்டின் காரணமாக இக்காற்றுகள் தோற்றுவிக்கப்டுகின்றன. இவ்வகையான காற்றுகள் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே வீசுகின்றன.

## பருவக் காற்றுகள்

'மான்சூன்' என்ற சொல்லானது 'மவுசிம்' (Mausim) என்ற அரேபிய சொல்லிலிருந்து பெறப்பட்டது. அதன் பொருள் 'பருவங்கள்' (Seasons) என்பதாகும். பருவக் காற்றுகளானது மேலும் தென்மேற்குப் பருவக்காற்றுகள் மற்றும் வடகிழக்குப் பருவக்காற்றுகள் என பிரிக்கப்படுகின்றன. தென்மேற்குப் பருவக்காற்றானது தென் இந்திய மற்றும் தென் பசிபிக் பேராழிகளில் இருந்து ஆசியப் பகுதிகளை நோக்கி வீசுகின்றது. மாறாக, வடகிழக்குப் பருவக்காற்றுகள் ஆசியாவின் உயர் அழுத்தப் பகுதிகளில் இருந்து இந்தியா மற்றும் பசிபிக் பேராழிகளை நோக்கி வீசுகின்றது. இக்காற்றுகளின் முழு விவரங்களும் அடுத்து வரும் வகுப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

## கடல் காற்றுகள்

பகற் பொழுதில் நிலமானது அருகில் உள்ள நீர்நிலைகளைவிட வெம்மையாக உள்ளது. அதன் விளைவாக தாழ்வழுத்தம் நிலத்தின் மீதும் உயரழுத்தம் நீர்ப்பரப்பின் மீதும் உருவாகின்றது. இதன் காரணமாக ஈரப்பதம் மிக்க குளிர்ந்த தென்றலானது பிந்திய மாலைப் பொழுதில் கடலிலிருந்து நிலத்தை நோக்கி வீசுகின்றது.




கடல் காற்று

**செய்முறை**

கடலோரப் பகுதிகளில் உள்ள மக்கள் கோடை காலத்தில் மாலை வேளைகளில் கடற்கரை செல்வதற்கான காரணத்தினை கண்டறிக.

## நிலக் காற்றுகள்

இரவுப் பொழுதில் நிலமானது அருகில் உள்ள நீர்நிலைகளை விட குளிர்ச்சியாக உள்ளது. அதனால் நிலத்தின் மீது உயரழுத்தமும் மற்றும் நீர்

# உலகின் கோள் காற்றுகள்






பரப்பின் மீது தாழ்வழுத்தமும் உருவாகின்றது. எனவே குளிர்ந்த வறண்ட காற்றானது அதிகாலைப் பொழுதில் நிலத்திலிருந்து நீர்பரப்பை நோக்கி வீசுகின்றது.

**செய்முறை**

மீனவர்களுக்கு நிலக்காற்று எவ்வாறு மீன்பிடிக்க உதவுகிறது என்பதை கூறுக.

## மாறும் காற்றுகள்

மாறும் காற்றுகளுக்கு ஒரு நிலையான இடமோ மற்றும் திசையோ கிடையாது. இவ்வகைக் காற்றுகள் வீசும் திசை மற்றும் வேகமானது இடத்திற்கு இடம் வேறுபடுகின்றது.

## புயல்கள்






தாழ் அழுத்தம் மற்றும் சூறாவளி கண்

புயல் என்பது தாழ்வழுத்த அமைப்பின் மையமாகும். அவை காற்றினை அனைத்து திசைகளிலிருந்தும் ஈர்க்கின்றது. மேலும் அவை கனத்த மழை மற்றும் அதிவேகக் காற்றுகளுடன் தொடர்புடையவை.

புயலின் மையப்பகுதி வெற்றிடமாகும். அதுவே 'புயல் கண்' (Eye of the cyclone) எனப்படுகிறது. இவை உருவாகும் இடம் மற்றும் அமைவிடத்தைப் பொறுத்து, புயல் காற்று, டைபூன்கள் மற்றும் அரிக்கேகன்கள் என்றழைக்கப்படுகின்றன. அவைகள் வடகோளத்தில் எதிர் கடிகாரச் சுற்று



திசையிலும் மற்றும் தென் கோளத்தில் கடிகாரச் சுற்றாகவும் நகர்கின்றன. இந்தத் தாழ்வழுத்த அமைப்பு நீர்பரப்பில் உருவாகும் போது அவை மிகவும் வன்மையானதாகவும் மற்றும் மழைப் பொழிவையும் உருவாக்குகின்றது.

## எதிர் சூறாவளிகள்

எதிர் சூறாவளிகள் என்பது உயர் அழுத்த அமைப்பின் மையமாகும். இங்கிருந்து காற்று வெளித்திசையை நோக்கி நகர்கின்றது. இவை தெளிவான வானிலையோடு தொடர்புடையதால் மழைப்பொழிவை கொடுப்பதில்லை. எதிர் சூறாவளிகள் வடகோளத்தில் கடிகாரச் சுற்று திசையிலும் மற்றும் தென் கோளத்தில் எதிர் கடிகாரச் சுற்று திசையிலும் நகர்கின்றன. பெரும்பாலும் இவை நிலப்பரப்பின் மேல் உருவாவதால் அவை வறண்டே காணப்படுகிறது.

## தலக் காற்றுகள்

தலக் காற்றுகள் ஒரு சிறிய பரப்பளவில் குறுகிய காலத்திற்கு சில சிறப்பான குணாதிசயங்களோடு வீசுகின்றன. இவ்வகையான அனைத்து காற்றுகளும் பெரும்பாலும் பகுதி நேரக் காற்றுகளாகவும் தலப்பெயர்களையும் கொண்டுள்ளன. சில தலக்காற்றுகளின் பெயர்களையும் அதனோடு தொடர்புடைய இடங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வெப்ப தலக் காற்றுகள் | இடங்கள் |
|---|---|
| ஃபிரிக் பீல்டர் | ஆஸ்திரேலியா |
| சின்னூக் | அமெரிக்கா ஐக்கிய நாடுகள் |
| ஃபான் | வடக்கு இத்தாலி |
| சிராக்கோ | சகாரா பாலைவனம் |
| லூ | இந்தியாவின் தார்பாலைவனம் |

| குளிர் தலக் காற்றுகள் | இடங்கள் |
|---|---|
| ஆர்மத்தான் | மத்திய ஆப்பிரிக்கா |
| மிஸ்ட்ரல் | ஆல்ப்ஸ் மலை |
| புர்கா | இரஷ்யா |
| நார்ட் | மெக்சிகோ வளைகுடா |
| ஃபாம்பெரோ | அர்ஜென்டைனா |

## மேகங்கள் அல்லது முகில்கள்

வளிமண்டலத்திலுள்ள நீராவியானது நீர் சுருங்குதல் மூலம் நுண்ணிய நீர் திவளைகளாகவோ அல்லது பனிப் படிகங்களாகவோ மாற்றப்படுவதின் தொகுப்பே மேகங்கள் என்று அழைக்கப்படுகிறது. வளிமண்டலத்தில் மிதந்து கொண்டிருக்கும் நுட்பமான



மேகங்கள்

நீர்த்துளிகளே மேகங்களை உருவாக்கு கின்றது. மேகங்களின் வடிவம் மற்றும் காணப்படும் உயரத்தின் அடிப்படையில் கீற்று மேகங்கள், படை மேகங்கள், திரள் மேகங்கள் மற்றும் கார்படை மேகங்கள் என வகைப்படுத்தப்படுகிறது.



கீற்று மேகங்கள்



படை மேகங்கள்



திரள் மேகங்கள்



கார்படை மேகங்கள்

## கீற்று மேகங்கள் (Cirrus)

கீற்று மேகங்கள் உயர் மேகங்கள் என அழைக்கப்படுகிறது ஏனெனில் இவை கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 5000 மீட்டர் உயரத்தில் உருவாகின்றன. இயற்கையிலே இவை வறண்டும் பனிப்படிகங்களைக் கொண்டும் உள்ளதால் ஒருபோதும் மழைப்பொழிவினை கொடுப்பதில்லை. இம்மேகங்கள் நீண்டவைகளாகவும் நார் போன்ற அமைப்பினைக் கொண்டதாகவும் வளைந்தும் முனைகளில் சுருள் போன்ற அமைப்பு இல்லாததாகவும் காணப்படும்.

## படை மேகங்கள் (Stratus)

படை மேகங்கள் கடல் மட்டத்திலிருந்து 2000 மீட்டருக்கும் இடையிலேயே உருவாவதால் தாழ் மேகங்கள் எனப்படுகிறது. ஒரே மாதிரியாகவும் அடர் சாம்பல் நிற விரிப்பு போன்ற தோற்றத்தையும் கொண்டிருக்கும். இவை சிறு தூரல்களையோ மற்றும் பனிப் பொழிவினையோ கொடுக்கவல்லது.

## திரள் மேகங்கள் (Cumulus)

திரள் மேகங்கள் நடுத்தர மேகங்களாகும். இதன் தோற்றமானது மிருதுவான வெடித்த பருத்தியைப் போன்று காணப்படும். திரள் மேகங்களானது தனித்தனியாகவோ அல்லது அணியாகவோ அல்லது சிதறியோ காணப்படும். இவ்வகையான மேகங்களுடன் மழைப்பொழிவு, மின்னல் மற்றும் இடி ஆகியவற்றோடு தொடர்புடையவையாகும். இவை கடல் மட்டத்திலிருந்து சுமார் 12,000 மீட்டர் உயரம் வரை காணப்படும்.

## கார் படை மேகங்கள் (Nimbus)

கார் படை மேகங்களானது செங்குத்தான மேகங்களாகும். கருமை அல்லது சாம்பல் நிறத்தில் அடர்த்தியாக காணப்படும். கனத்த மழைப் பொழிவினை கொடுப்பதால் இவை புயல் அல்லது மழை மேகங்கள் என அழைக்கப்படுகிறது.

## மழைப்பொழிவு

மழைப்பொழிவு எனப்படுவது முகில்களிலிருந்து பூமியை நோக்கி விழும் நீர்த்துளிகள் ஆகும். மழைப்பொழிவின் இயக்கமானது நீர் ஆவியாதலில் தொடங்கி ஒரு குறிப்பிட்ட உயரத்தில் நீர் சுருங்குதலாக தொடர்கிறது. பிறகு முகில்கள் உருவாகி அவை மழைப்பொழிவிற்கு காரணமாகிறது. மழைப்பொழிவு வெப்பச்சலன மழை, மலைத் தடுப்பு மழை மற்றும் புயல் மழை என வகைப்படுத்தப்படுகிறது.

**உங்களுக்கு தெரியுமா ?**

மழை அளவை அளவிடப் பயன்படும் உபகரணம் அல்லது கருவி

மழைமானி ஆகும். வரைபடத்தில் ஒரே அளவுடைய மழை அளவை கொண்டிருக்கும் இடங்களை இணைக்கும் கற்பனை கோட்டிற்கு சம மழைக்கோடுகள் (Isohytes) என்று பெயர்.

## வெப்பச் சலன மழை

சூரியக் கதிர்கள் பூமத்தியரேகைப் பகுதியில் செங்குத்தாக விழுவதால் வெப்பமான பகுதியாக உள்ளது.




இதனால் காற்று விரிவடைந்து செங்குத்தாக மேலெழும்புகிறது. உயரம் செல்லச் செல்ல வெப்பநிலை படிப்படியாகக் குறைவதால் காற்று குளிர்ச்சியடைந்து முகில்கள் உருவாகின்றன. இந்த முகில்கள் பனி விழும் நிலையை அடையும்போது மழைப்பொழிவு உருவாகிறது. இதுவே வெப்பச் சலன மழை எனப்படுகிறது. இவ்வகையான மழைப்பொழிவு இடி மற்றும் மின்னலினைக் கொண்டிருக்கும். வழக்கமாக இம்மழைப்பொழிவானது மாலை நேரங்களில் குறிப்பாக 4 மணிக்கு வருவதால், மாலை நேர நான்கு மணி மழைப்பொழிவு (4'O Clock rain fall) என்று அழைக்கப்படுகின்றது.




மலைத்தடை மழை

## நில அமைப்பு அல்லது மலைத்தடை மழை

கடற்பகுதியிலிருந்து வீசும் காற்றானது அதிக ஈரப்பதத்தினை கொண்டுள்ளது. மலைச் சரிவுகளானது கடலிலிருந்து வீசும் காற்றினை எதிர்கொள்ளும் போது அந்த காற்று மேலெழுப்பப்படுகிறது. அதன் பின்பு அவை குளிர்ந்து காற்று முகப் பகுதியில் (Windward side) அதிக மழையை உருவாக்குகிறது. பிறகு அவை எதிர் முகக் காற்று திசையில் (Leeward Side) ஈரப்பதம் குறைவான காற்றாக கீழிறங்குவதால் குறைந்த அளவு மழையையோ அல்லது மழைப் பொழிவினையோ கொடுப்பதில்லை.

**உங்களுக்கு தெரியுமா ?**

கேரளா மற்றும் தமிழ்நாடு ஒரே அட்சரேகையில் அமைந்திருந்தாலும் கேரளா அதிக மழைப்பொழிவினை பெறுகின்றது. ஏனெனில் கேரளா காற்று முகப் பகுதியிலும் தமிழ்நாடு எதிர் முக காற்று திசையிலும் அமைந்துள்ளதே காரணமாகும்.

## புயல் மழை





புயல் மழை

வெப்பமான பகுதியிலுள்ள காற்றானது மேலும் வெப்பப்படுத்தப்பட்டு மேலெழும்புகிறது. ஆகையினால் தாழ் அழுத்தப்பகுதி உருவாகி அருகாமையிலுள்ள உயரழுத்தப் பகுதிகளிலிருந்து காற்றினை ஈர்க்கின்றது. பூமி சுழற்சியின் காரணமாக காற்றானது திசை விலக்கப்பட்டு சுழல் வடிவத்தில் உருவாகின்றது. மேலெழும்பிய காற்றானது, புனல் வடிவத்தை அடைகின்றது. மேலெழும்பிய காற்று குளிர்ச்சியடைந்து நீர்ச்சுருங்குதல் ஏற்படுகிறது. இவை கனத்த மழையினை தாழ்வழுத்தப் பகுதிகளில் கொண்டு வருகிறது. உதாரணமாக, வடகிழக்கு பருவக்காற்று காலத்தில் அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம் மற்றும் ஒரிசா கடற்கரையோரங்களில் அதிக எண்ணிக்கையிலான புயல்கள் உருவாகின்றன.

## மின்னல்


மின்னல்

மின்னல் என்பது வளிமண்டலத்தில் வெளிப்படும் மின் சக்தியாகும். இது இடியுடன் இணைந்து வெளிப்படும். மின்னல் ஒரு நொடிக்கு 96,560 மைல்கள் வேகத்தில் பயணிக்கின்றது.

**உங்களுக்கு தெரியுமா ?**

மின்னலைப் பற்றி படிக்கும் அறிவியலானது மின்னலியல் (Fulminology) என்று அழைக்கப்படுகிறது. மின்னலைப் பற்றி படிப்பவரை மின்னலியல் அறிஞர் (Fulminologist) என குறிப்பிடுகிறோம்.

இவ்வுலகில் ஆண்டொன்றுக்கு சுமார் 16 மில்லியன் மின்னல்கள் தோன்றுகின்றன. பொதுவாக வெப்பச் சலன மழை, புயல் மழை மற்றும் எரிமலை முகில்களோடு இணைந்து மின்னல் ஏற்படுகிறது. நேர் மற்றும் எதிர் மின்னூட்ட பண்புகளைக் கொண்ட மேகங்கள் ஒன்றுக்கொன்று சந்திக்கும் போது மின்னலானது உருவாகும். மின்னல் உருவாகும் போது அதிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

**உங்களுக்கு தெரியுமா ?**

ஐஸ்லாந்தில் ஏப்ரல் 2010ம் ஆண்டு ஏற்பட்ட எரிமலை வெடிப்பின் போது சுமார் 23,000 வானூர்திகள் இரத்து செய்யப்பட்டதன் காரணத்தை கண்டறிக.

## இடியுடன் கூடிய புயல்

இடியுடன் கூடிய புயல் என்பது கார்திரள் மேகங்களால் உருவாக்கப்படுகிறது. அவை குறைந்த கால அளவே நீடிக்கும். அவைகளோடு, மின்னல், இடி, வலிமையான தூசுக் காற்று, கனத்த மழைப்பொழிவு மற்றும் சில சமயங்களில் ஆலங்கட்டி மழை ஆகியவற்றுடன் இணைந்து

காணப்படும். வளிமண்டலத்தின் கீழ் அடுக்குகளில் வெம்மை மற்றும் ஈரத்துடன் கூடிய காற்று, வளிமண்டலத்தின் நிலையற்ற தன்மை, தீவிர வெப்பச் சலன செயல்பாடு ஆகியன இடியுடன் கூடிய புயல் உருவாவதற்கு ஏதுவான சூழ்நிலையாகும்.

இடியுடன் கூடிய புயலின்போது வானிலையின் அனைத்து மூலகங்களும் இணைந்து வெளிப்படுவதால் இவை வானிலை அறிஞர்களால் 'வானிலை தொழிற்சாலை' (Weather factory) என்றழைக்கப்படுகிறது. பூமியின் மேற்பரப்பிலிருந்து 4 முதல் 20 கிலோ மீட்டர் உயரத்தில் இவை உருவாகின்றன.

அயன மண்டலப் பகுதியில் மழைக் காலங்களில் பிற்பகல் அல்லது மாலை வேளையில் நிலப்பரப்பின் மீது காணப்படுகின்றது. ஆனால் பேராழிகளின் மீது இரவு நேரங்களில் காணப்படுகிறது. பருவக்காற்று காலநிலை பிரதேசங்களில் கோடை பருவக்காற்று தொடக்க மற்றும் முடியும் காலங்களில் இவை காணப்படுகிறது.



இடியுடன் கூடிய புயல்

## பயிற்சி

**(அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. "கிளைமா" என்ற கிரேக்கச் சொல் என்பது ____________ யைக் குறிக்கும்.
2. பூமியின் மேற்பரப்பிலிருந்து வெப்பநிலையானது ஒவ்வொரு 1000 மீட்டருக்கும் சுமார் ____________ என்ற விகிதத்தில் குறைகின்றது.
3. எல்நினோ என்றால் ஸ்பானிய மொழியில் ____________ என்று பொருள்.
4. ____________ என்ற பெரு நகரமானது அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைக் காட்டிலும் அதிக வெப்பத்துடனேயே காணப்படுவதாகும்.
5. ____________ என்பது வளிமண்டலத்தின் அடியடுக்கிற்கும், படையடுக்கிற்கும் இடைபட்ட மெல்லிய அடுக்காகும்
6. பூமத்தியரேகை தாழ்வழுத்த மண்டலத்தினை ____________ என்றழைப்பர்.
7. கிடைமட்டமாக நகரும் வாயுவினை ____________ என அழைக்கப்படுகிறது.
8. இந்தியாவில் உள்ள தார்பாலைவனத்தில் வீசும் தலக்காற்றின் பெயர் ____________ ஆகும்.
9. மின்னலைப் பற்றி படிக்கும் அறிவியலானது ____________ என்று அழைக்கப்படுகிறது.

10. இடியுடன் கூடிய புயல் என்பது___________மேகங்களால் உருவாக்கப்படுகிறது.

(ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. வெப்ப மண்டலத்தில்___________முக்கியப் பயிராகும்.

அ) நெல் ஆ) கோதுமை இ) தேயிலை ஈ) பார்லி

2. எல்நினோ காலக்கட்டங்களில் சுமார் மூன்று முதல் எட்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெப்பநிலையானது___________கடற்கரை ஓரங்களில் துரிதமாக அதிகரிக்கும்.

அ பெரு மற்றும் ஈக்வடார் ஆ) ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் இ) இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஈ) சீனா மற்றும் ஜப்பான்

3. ஒரு நாளில் நிலவும் அதிகப் பட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலையின் வேறுபாடு___________என்று அழைக்கப்படுகிறது.

அ) புவிக் கதிர் வீசல் ஆ) தினசரி வெப்ப வியாப்தி இ) வருடாந்திர வெப்ப வியாப்தி ஈ ) சூரிய கதிர்வீசல்

4.___________ கருவி வளிமண்டல அழுத்தத்தை அளவிடப் பயன்படுகிறது.

அ) வெப்பமானி ஆ) மழைமானி இ) அழுத்தமானி ஈ)காற்றுமானி

5. துணை அயண உயர்வழுத்த மண்டலத்தினை___________என்று அழைக்கப்படுகிறது.

அ) டோல்ட்ரம்ஸ் ஆ) குதிரை அட்சரேகைகள் இ) கொரியாலிஸ் விசை ஈ) அமைதி மண்டலம்

6. ___________ இல் சூரியக்கதிர்கள் மின்செறிவூட்டப்படுகின்றன.

அ) அடியடுக்கு ஆ) படையடுக்கு இ) அயனியடுக்கு ஈ) வெளியடுக்கு

7. ___________ மேகங்கள் மழைபொழிவு, இடி மற்றும் மின்னலோடு தொடர்புடையவை

அ)கீற்று மேகங்கள் ஆ) படைமேகங்கள் இ) திரள் மேகங்கள் ஈ)கார்படை மேகங்கள்

8. ___________மழைப் பொழிவானது 4 மணி மழைப் பொழிவு என்று அழைக்கப்படுகிறது.

அ) வெப்பச் சலன ஆ) மலைத் தடை இ) சூறாவளி ஈ) பருவக்காற்று

9. கடல் மட்டத்தில் நிலவும் காற்றழுத்தத்தின் சராசரி அளவு ___________ மில்லிபார்களாகும்.

அ) 1008 ஆ) 1020 இ) 1033 ஈ) 1013

10. ____________ மேகங்கள் செங்குத்தான மேகங்களாகும்

அ)கீற்று மேகங்கள் ஆ) படைமேகங்கள்

இ) திரள் மேகங்கள் ஈ)கார்படை மேகங்கள்

## (இ) பொருத்துக.

| | |
|---|---|
| 1. புவி வெப்பமாதல் | வெற்றிடம் |
| 2. வெப்பமானி | மனிதனின் தாக்கம் |
| 3. காற்றுமானி | வானிலை தொழிற்சாலை |
| 4. சூறாவளியின் கண் | காற்றின் வேகம் மற்றும் திசைக்காட்டும் கருவி |
| 5. இடி, மின்னல், புயல் | வெப்பநிலையை அளக்கும் கருவி |

## (உ) சுருக்கமாக வடையளி.

1. வானிலையையும், காலநிலையையும் வேறுபடுத்துக.
2. வெப்ப மற்றும் குளிர் நீரோட்டங்கள் சந்திப்பதால் ஏற்படும் சாதக மற்றும் பாதகங்கள் யாவை ?
3. சூரிய கதிர் வீசலிலிருந்து புவி பெறும் வெப்ப ஆற்றலை வரிசைப்படுத்துக.
4. வெப்பத்தினை அளக்கும் அளவைகள் யாவை ?
5. சமவெப்பக்கோடுகளையும், சமமழைக்கோடுகளையும் வேறுபடுத்திக் காட்டுக.
6. ஃபெரல் விதியினை வரையறு.
7. கோள் காற்றுகள் என்றால் என்ன ?
8. மின்னல் என்றால் என்ன ? அவை எவ்வாறு உருவாகின்றன ?
9. வானிலை தொழிற்சாலை என்றால் என்ன ?
10. சீரான மற்றும் தீவிரக் காலநிலையினை வேறுபடுத்துக.

## (ஊ) விரிவான விடையளி

1. வானிலை மற்றும் காலநிலைகளை தீர்மானிக்கும் காரணிகள் யாவை ? ஏல்நினோ விளைவையும், மனிதனின் தாக்கத்தையும் விவரி.
2. பூமியின் வெப்பநிலை மண்டலங்களை ஒரு நேர்த்தியான படத்துடன் விவரிக்க.
3. நிலக்காற்று மற்றும் கடல்காற்று என்றால் என்ன ? தகுந்த படங்களுடன் விவரிக்க.
4. மழைப்பொழிவின் வகைகள் யாவை ? அவற்றினை படம் வரைந்து விளக்குக.
5. இடியுடன் கூடிய புயலைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.
6. மேகங்கள் என்றால் என்ன ? அதன் வகைகளை வரையறு.
7. வளிமண்டலத்தின் அடுக்குகள் யாவை ? அதனை ஒரு படத்துடன் விவாதி.

## 4.பேரிடர் மற்றும் பேரிடர் மேலாண்மை

சமீப காலங்களில் நம்மைச்சுற்றி நடப்பவைகளை தற்போது உள்ள நவீன தொடர்பு வசதிகளின் உதவியுடன் குறுகிய காலத்திலேயே அறிந்து கொள்ள முடிகின்றது. சில நிகழ்வுகள் ஏற்படுதும் பாதிப்பு நம்மிடையே கவலையையும் மற்றும் அனுதாபத்தையும் உருவாக்குகின்றன.

இவ்வகையான நிகழ்வுகள் பெரிய அளவிலான உயிர் இழப்புகளையும் மற்றும் உடைமைகளை சேதப்படுத்துவதாலும் இருக்கக்கூடும். பேரிடர் என்ற ஒரு நிகழ்வானது சமூகம் அல்லது சுற்றுச்சூழலின் மீது எதிர்மறையான விளைவுகளை உருவாக்குவதை குறிக்கும்.

ஐக்கிய நாடு கூட்டமைப்புகளின் விளக்கவுரையானது ‘சமூகத்தின் நடவடிக்கையானது தொடர்ந்து தடைபடுவதும், மனிதர்களுக்கும், பொருட்களுக்கும் அல்லது சுற்று சூழலுக்கு இழப்பினை உருவாக்குவதும் அதன் அழிவிலிருந்து சுய திறன் மற்றும் வளங்களின் உதவியுடன் மீண்டெழுவதுமாகும்’.

அழிவில்லாமல் ஆக்கம் இல்லை என்பது உண்மையெனினும் இவ்வளங்களை அதிகமாக சுரண்டுவது பொறுத்துக்கொள்ள முடியாததாக இருக்கின்றன. இறுதியாக வெள்ளம், வறட்சி, நிலச்சரிவு, மண் அரிப்பு, புவி வெப்ப மயமாதல், புயல், மற்றும் நிலநடுக்கங்கள் மேலும் சில விளைவுகளை நாம் எதிர் கொள்ள இவைகள் காரணமாகலாம்.

இந்த நிகழ்வின் காரணமாக அதிக உயிர் சேதங்கள் மற்றும் பொருட் சேதங்கள் ஏற்படும் பொழுது அதனை பேரழிவு (Disaster) என அழைக்கலாம். நாமும் கூட பேரழிவு ஏற்பட காரணமாக இருப்பதால் அவைகளின் தாக்கத்திலிருந்து மீள, வளங்களை அளவாக பயன்படுத்துவதை தெரிந்து கொள்வது நமது கடமையாகும்.

பேரிடர்கள், இயற்கை பேரிடர் (Natural Disaster) மற்றும் மனிதனால் உருவாக்கப்படும் பேரிடர் (Man Made Disaster) என இரண்டு வகைப்படுத்தப்படுகின்றன. இயற்கையின் செயலினால் இயற்கை பேரிடர் ஏற்படுகின்றன. அதேசமயம் மனிதனின் கவனக்குறைவு, அலட்சியப்போக்கு மற்றும் அறியாமையினால் மனித பேரிடர்கள் ஏற்படுகின்றன.

**பேரிடர்கள்**

**இயற்கை பேரிடர்கள்**
நிலநடுக்கங்கள், எரிமலை வெடிப்புகள் நிலச்சரிவுகள், பனிப்பாறை வீழ்ச்சி, புயல், வெள்ளப் பெருக்குகள், வறட்சிகள், சூறைக்காற்றுகள் மற்றும் பிற.

**மனிதனால் உருவாக்கப்படும் பேரிடர்கள்**
போர், தீ–விபத்துக்கள், சாலை விபத்துக்கள், கப்பல் முழ்குதல், அணுகுண்டு வெடிப்புகள், மின்சார விபத்துக்கள் மற்றும் பிற.

## இடர் தணித்தல்

இடர் தணித்தல் என்பதன் பொருள் 'விளைவின் தீவிரத்தை குறைத்தல்'. ஆகையால், இடரின் விளைவால் ஏற்படும் பாதிப்பை முன்கூட்டியே அறிந்து அதனை குறைக்க மேற்கொள்ளும் நடவடிக்கையே இடர் தணித்தல் என வரையறுக்கப் படுகின்றது.

## நிலநடுக்கம்

நாம் அறிந்தது போல் பூமியினுடைய மேலோட்டில் ஏற்படும் அதிர்வே நிலநடுக்கம் ஆகும்.

புவித்தட்டு நகர்வுகள், எரிமலை வெடிப்புகள், பருப்பொருள் சிதைவு, நிலச்சரிவுகள் மற்றும் நிலப்பிளவுகள் ஆகிய காரணங்களால் நிலநடுக்கம் ஏற்படுகின்றன.

நிலநடுக்கத்தினால் பல விதமான தீ–விபத்து, அணைக்கட்டு உடைவதால் ஏற்படும் வெள்ளப் பெருக்குகள், மற்றும் நிலச்சரிவுகள் ஆகியவை ஏற்படலாம். மேலும் ஆற்றின் போக்கினையும் மாற்றலாம்.

நிலநடுக்கத்தினால் கட்டடங்களுக்கு சேதம் மற்றும் இடிந்தும் விழுகின்றன. இதனால் ஓத அலைகள் மற்றும் ஆழிப்பேரலைகளும் (சுனாமி) ஏற்படுகின்றன.

| அதிர்வலை மண்டலங்கள் | அதிர்வலை ஏற்படும் பகுதிகள் | வகைகள் |
|---|---|---|
| ஐந்து | காஷ்மீர், பஞ்சாப், மேற்கு மற்றும் மத்திய இமயமலைப் பகுதிகள், வட கிழக்கு இந்தியப் பகுதி மற்றும் ராணாப் கட்ச் பகுதிகள். | மிக அதிக அபாய நேர்வு மண்டலம் |
| நான்கு | சிந்து கங்கை சமவெளி வடிநிலப் பகுதிகள், டெல்லி, ஜம்மு மற்றும் பீகார். | அதிக அபாய நேர்வு மண்டலம் |
| மூன்று | அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் மேற்கு இமயமலைப் பகுதிகள் | லீதமான அபாய நேர்வு மண்டலம் |
| இரண்டு | தக்காணப் பீடபூமி பகுதிகள் மற்றும் தமிழ்நாடு | குறைவான அபாய நேர்வு மண்டலம் |





நிலநடுக்கத்தினால் சேதமடைந்த பல அடுக்கு கட்டிடங்கள்

## இந்தியாவின் அதிர்வலை மண்டலங்கள்




சுகாதாரக்கேடு, குடிநீர், மின்சாரம், போக்குவரத்து தடை ஆகியனவும் ஏற்படலாம். இவைகளைத் தவிர நிலநடுக்கத்தினால் உயிரிழப்பு களும் ஏற்படுகின்றன.

இந்தியாவில் நிலநடுக்கம் ஏற்படும் பகுதிகளை நான்கு அதிர்வலை மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அவைகள் கீழ்கண்ட அட்டவணையில் பட்டியலிடப்படுள்ளது.

ஜனவரி 26, 2001ல் 51 வது குடியரசு தின விழாவின் போது குஜராத்தில் மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோளில் 7.6 மற்றும் 8.1 – க்கும் இடைப்பட்ட அளவில் பதிவாகியது. நிலநடுக்க அலைகள் 700கி.மீ தூரம் வரை பரவி 21 மாவட்டங்களை பாதித்தது மற்றும் 6,00,000 மக்கள் வீடுகளை இழந்தனர். 19,727 மக்கள் உயிரிழந்தனர். 1,66,001 மக்கள் இடிபாடுகளில் சிக்கி காயமடைந்தனர், 90 சதவீதம் வீடுகள், எட்டு பள்ளிகள், இரண்டு மருத்துவமனைகள் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க சுவாமி நாராயணன் கோவில் ஆகியன சேதமடைந்தன.

### இடர் தணித்தல்

நிலநடுக்கத்தின் போது செய்ய வேண்டிய முக்கியமான ஒன்று அமைதியாக இருப்பது. நீங்கள் கட்டிடத்தின் உள்ளே இருந்தால் கதவு

நிலைகள் அல்லது மேசைக்கு கீழேயும், சன்னல்கள் அல்லது கண்ணாடி பொருத்தப்பட்ட தளவாடங்களிலிருந்து விலகியும் இருக்க வேண்டும்.

திறந்த வெளிப்பகுதிகளில் இருப்பின் மின் கம்பங்கள் மற்றும் மின்சார கம்பிகளுக்கு அப்பால் இருக்க வேண்டும். மோட்டார் வாகனங்களில் பயணம் செய்து கொண்டிருந்தால் சுரங்கப் பாதைகளையோ அல்லது மேம்பாலங்களையோ விட்டு விலகப் பாதுகாப்பான இடத்தினை தெரிவு செய்து இருக்க வேண்டும்.

நிலநடுக்கங்களை தாங்கக்கூடிய கட்டிடங்களை கட்டுவதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டும்.

அடுக்கு மாடி குடியிருப்புகளில் வாழும் மக்கள் கட்டிடங்களை விட்டு வெளியே செல்வதற்கு ஒருபோதும் மின் தூக்கியை (Lift) பயன்படுத்தக்கூடாது. அதற்கு பதிலாக படிக்கட்டுகளை பயன்படுத்த வேண்டும்.

தீவிபத்தை தவிர்க்க எரிவாயு அடுப்பு, மின்விளக்குகள், மெழுகுவர்த்திகள் மற்றும் ஏனைய விளக்குகளை அணைக்க வேண்டும்.

கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் மண் பரிசோதனை செய்தல் வேண்டும். மேலும் தரம் குறைந்த மற்றும் மிருதுவான நிலப் பகுதியில் கட்டிடங்கள் கட்டுதல் கூடாது.

பள்ளி மாணவர்களிடையேயும் மற்றும் பொதுமக்களிடையேயும் நிலநடுக்கம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

காயமடைந்த மக்களுக்கு சரியான நேரத்தில் முதலுதவி செய்தல் வேண்டும்.

## எரிமலை வெடிப்புகள்

நிலநடுக்கம் போல அல்லாமல்



ஐஸ்லாந்து எரிமலை வெடிப்பினால் வெளியேறும் சாம்பல் திரள்

எரிமலை வெடிப்புகளை, அவை வெடிப்பதற்கு முன் அவற்றிலிருந்து வெளிவரும் புகை, வாயுக்கள் வெளியேற்றம், மாக்மா வழிதல் மற்றும் லேசான அதிர்வுகள் மூலமாக முன்னதாகவே நன்கு அறிந்து கொள்ள முடியும்.

எரிமலை வெடிப்பதினால் காடுகள் அழிக்கப்படுகின்றன. பனி உருகுவதால் வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்டு மனித குடியிருப்புகளை பாதிக்கின்றன. மேலும் எரிமலையிலிருந்து வெளியேறும் புகையினால் விமான போக்குவரத்து, அருகிலுள்ள வேளாண்மை நிலங்கள் மற்றும் இதர பொருளாதார நடவடிக்கைகள் பாதிப்பிற்கு உள்ளாகின்றன.

எரிமலை அழிவை ஏற்படுத்தினாலும் இது நன்மைகளையும் கூட செய்கிறது. அதாவது, எரிமலைப் பொருட்கள் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்களாகவும் மற்றும் இரசாயான பொருட்களை உருவாக்கவும் பயன்படுகின்றன. கற்குழம்பினால் உருவாக்கப்படும் பாறைகள், கட்டடங்கள் மற்றும் சாலைகள் அமைப்பதற்கும் பயன்படுகின்றன. சிதைவடைந்த எரிமலை துகள்களினால் மண் வளம் அதிகரிக்கிறது. எரிமலையிலிருந்து வெளியேறும் நீரோடை மற்றும் வென்னீர்

ஊற்றானது புவி வெப்பசக்தியை (Geothermal Energy) தயாரிக்கப் பயன்படுகின்றது.

நவம்பர் 13, 1985–ல் கொலம்பியாவில் நெவாடா டெல் ருச் பகுதியில் (Nevada del Ruiz) ஏற்பட்ட எரிமலை வெடிப்பினால் 40,000 மக்கள் இறந்தனர். அவ்வெடிப்பினால் அர்மேரோ நகரம் முழுவதும் புதையுண்டு போனது அதேபோல் ஏப்ரல் 14, 2010ஆம் ஆண்டு ஐஸ்லாந்தில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பு மிகப் பரந்த அளவில் சாம்பலுடன் புகையை கக்கியதால் (பனிப் பாறையிலிருந்து வெளியேறிய கற்குளம்பினால்) 20 –க்கும் மேற்பட்ட ஐரோப்பிய நாடுகளின் விமான நிலையங்கள் மூடப்பட்டன.

### இடர் தணித்தல்

எரிமலையால் மக்கள் உயிர் இழப்பது அரிதாக இருப்பினும் எரிமலை பகுதிகளுக்கு அப்பால் மக்கள் வசிக்க வேண்டும்.

அனைத்து வகையான போக்குவரத்துகளும் தவிர்க்கப்பட வேண்டும். குறிப்பாக, எரிமலை பகுதிகளுக்கு அருகில் விமான போக்குவரத்து தவிர்க்கப்பட வேண்டும்.

எரிமலை வெடிப்புகளால் நிலநடுக்கம் ஏற்படலாம். ஆகவே, மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

பனி படர்ந்த மலைப்பகுதிகளில் எரிமலை வெடிப்பின் காரணமாக பனி உருகுவதால் வெள்ளப் பெருக்குகள் ஏற்படலாம். எனவே வெள்ள தடுப்பு சுவர்கள் கண்டிப்பாக கட்டப்பட வேண்டும்.

எரிமலை பரவலைப் பற்றி அறிந்து கொள்ள பயன்படும் சாய்வு மாணி (Tilt Meter) கருவியைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

### கடற்கோள்கள்

நிலநடுக்கங்கள், எரிமலை வெடிப்புகள் அல்லது கடலடி நிலச்சரிவினால் தோன்றும் மிகப்பெரிய அலைகள் அல்லது உயிர் கொல்லும் அலைகளே கடற்கோள்கள் (சுனாமி) ஆகும். இவ்வலைகள் 15 மீட்டர் அல்லது அதற்கு மேலும் உயரத்தைக் கொண்டிருக்கும். கடல் அல்லது பெருங்கடலில் நில நடுக்கம் ஏற்படும்போது அலைகள் பல மீட்டர்கள் வரை உயர்ந்து சில நிமிடங்களில் கடற்கரையை அடையலாம். மிகப்பெரிய நிலநடுக்கத்திற்குப் பிறகும் பல மணி நேரங்களுக்கு (கடற்கோள்) சுனாமி தோன்றுவதற்கான அபாயம் இருக்கக்கூடும்.

**உங்களுக்கு தெரியுமா ?**

கடற்கோளின் ஆங்கிலச்சொல் சுனாமி (Tsunamis) இச்சொல் ஜப்பானிய மொழியிலிருந்து வந்தது 'Tsu' என்பதன் பொருள் Harbour (துறைமுகம்), 'Nami' என்பதன் பொருள் Waves (அலைகள்)

சுனாமி அலைகள் மணிக்கு 320 கி.மீ வேகத்தில் பயணிக்கும் ஆற்றல் கொண்டவை மற்றும் இவைகள் கண்டங்களை நெருங்கும் போது வேகம் அதிகரிக்கும்.

**உங்களுக்கு தெரியுமா ?**

இந்தியாவில் சுனாமி எச்சரிக்கை மையம் ஹைதராபாத்தில் நிறுவப்பட்டுள்ளது.

டிசம்பர் 26, 2004 –ல் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஏற்பட்ட சுனாமிகளின் தாக்கத்தினால் 1,50,000க்கும் மேற்பட்டோர் இறந்தனர்.



கடற்கோளின் சீற்றம்



கடற்கோளின் எழுச்சி



கடற்கோளின் அழிவு

இப்பேரிடரால் ஏற்பட்ட மனஅழுத்தம், பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் இழப்புகளின் அளவினை கணக்கிடமுடியாது. பல கிராமங்களின் வாழ்வாதாரங்கள் முற்றிலும் பாதிப்படைந்தது. கடந்த 40 வருடங்களில் ஏற்பட்ட நிலநடுக்கங்களில் இதுவே மிகப் பெரியதாகும். ஒரே இரவில் நிகழ்ந்த இந்த பேரிழப்பு எவராலும் நினைத்துப் பார்க்க இயலாத ஒன்று மேலும் இது உலகம் முழுவதும் பாதிப்புகளை உணரவைத்தது.

## இடர் தணித்தல்

சுனாமி எச்சரிக்கை மையத்திலிருந்து வரும் தகவல்களை கேட்டு அறிய வேண்டும்.

கடற்கோள் குறித்த முன்னெச்சரிக்கையினை தொடர்ந்து உடனடியாக மக்கள் கடற்கரை பகுதியிலிருந்து வெளியேற வேண்டும்.

கடுமையாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உடனடியாக முதலுதவி செய்ய வேண்டும்.

மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லக் கூடாது.

முதலில் உருவான அலை மட்டுமே அபாயகரமானதாக இருக்கும் என்று எண்ணிவிடக்கூடாது. அதைத் தொடர்ந்து வரும் அலைகளும் அபாயகரமானவைகளாகவே இருக்கும்.

## நிலச்சரிவுகள்



நிலச்சரிவு

பெரும் பாறைகள் மற்றும் பாறைத்துகள்கள் ஆகியன கீழ் நோக்கி நகர்வதே நிலச்சரிவு என வரையறுக்கப்படுகிறது. பாறைத்துகள்கள் நீருடன் சேர்ந்து நகர்வதை சேறு வழிதல் (Debris flow) என்கிறோம்.



நிலச்சரிவு

நிலச்சரிவுகளானது சரிவின் நிலையற்ற தன்மை, கனத்த மழைப் பொழிவு, நிலநடுக்கங்கள், எரிமலை வெடிப்புகள், காடுகள் அழிப்பு மற்றும் முறைகேடான கட்டிட அமைப்பு ஆகிய காரணங்களால் ஏற்படுகின்றன.

நிலச்சரிவினால் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்படுகின்றன, குடியிருப்புகள் அழிக்கப்படுகின்றன, சாலைகள் மற்றும் இருப்பு பாதைகள் சேதமடைகின்றன இவைகளோடு நீரோடைகளின் போக்கு வேறு திசையில் மாற்றப்படுகின்றன.

## இடர் தணித்தல்

மிருதுவான மண் உள்ள பகுதிகளில் வீடுகள் கட்ட வேண்டியிருந்தால் நிலச்சரிவின் போது பாறைத் துகள்கள் விலகிச் செல்ல ஏதுவாக மாற்றுப் பாதைகள் உருவாக்கப்பட வேண்டும்.

நிலச்சரிவு ஏற்படும் முன், எச்சரிக்கை அறிவிப்புகளாக கதவுகள் மற்றும் ஜன்னல்கள் இறுகிக்கொள்ளும்.

மண் சரிவால் தெருக்கள் அடைபட வாய்ப்புகள் உள்ளதால் உடனடியாகத் தப்பிப்பதற்குக் குறைந்தது இரண்டு அல்லது மூன்று மாற்று பாதைகளைத் திட்டமிட்டுத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

நிலச்சரிவின்போது வீட்டிற்குள்ளேயே இருக்க நேர்ந்தால் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது.

நிலச்சரிவினால் தப்பிக்க இயலாத நிலை ஏற்படும்போது கழுத்தின் பின்புறம் இரு கைகளையும் இணைத்து மண்டியிட்டோ அல்லது அமர்ந்த நிலையிலோ இருக்க வேண்டும்.

நிலச்சரிவில் சிக்கிக் கொண்டவர்களை மீட்டு பாதுகாப்பான இடத்தில் வைத்து காயங்களுக்கு முதலுதவி செய்தல் வேண்டும்.



பனிப்பாறை வீழ்ச்சி



பனிப்பாறை வீழ்ச்சி

## பனிப்பாறை வீழ்ச்சி

ஒரு பெரிய பனித் தொகுதி அல்லது பனிப்பாறை மலைச் சரிவை நோக்கி நகர்வதே பனிப்பாறை வீழ்ச்சி என்று அழைக்கப்படுகிறது. இவை உயர் அட்சப்பகுதிகளிலும் மற்றும் உயரமான மலைப்பகுதிகளிலும் ஏற்படுகின்றன.

நிலநடுக்கங்கள், அதிக மழை வீழ்ச்சி, மனித செயல்களினால் உருவாக்கப்படக்கூடிய அதிக இரைச்சல், வேகமான பனிச்சறுக்கு விளையாட்டு மற்றும் வெடிப்பொருட்களை வெடிப்பது ஆகிய காரணங்களால் பனிப்பாறை வீழ்ச்சிகள் ஏற்படுகின்றன. பனிப்பாறை வீழ்ச்சிகள் ஏற்படும் பகுதிகளில் அதிக பனிப்பொழிவு ஏற்படும்போது அதன் தாக்கம் மேலும் தீவிரமாகிறது.

பனிப்பாறை வீழ்ச்சிகளினால் சாலைகள் துண்டிப்பு, சிறிய குடிசைகள்,

தாவரங்கள் மற்றும் காட்டு விலங்குகள் ஆகியன அழிக்கப்படுகின்றன.

## இடர் தணித்தல்

பனிப்பாறைகளின் வீழ்ச்சிகளை நிறுத்துவதோ அல்லது தடுப்பதோ கடினமானது. ஆனால் பனிப்பாறை வீழ்ச்சியின் சக்தியை குறைப்பதன் மூலம் அதன் தாக்கத்தை குறைக்கலாம்.

பனிப்பாறை வீழ்ச்சிகள் ஏற்படும் பகுதிகளில் கோடை வாசஸ்தலங்கள் மக்கள் குடியிருப்பு பகுதிகள், சாலைகள் மற்றும் இருப்பு பாதைகள் அமைப்பதை தவிர்க்கலாம்.

மக்கள் வெடிப்பொருட்களை பயன்படுத்தக்கூடாது என அறிவுறுத்தப் படவேண்டும்.

மலைச் சரிவு பகுதிகளில் வசிக்கும் மக்கள் வீட்டைச் சுற்றிலும் மரங்களை வளர்க்க ஊக்கப்படுத்தப்படவேண்டும்.

பனிப்பாறை வீழ்ச்சிகள் ஏற்படும் பகுதிகளில் அனைத்துவிதமான போக்குவரத்துகளும் தவிர்க்கப்பட வேண்டும்.

## புயல்கள்

மற்ற பேரிடர்களை விட தென்னிந்திய கடற்கரைப் பகுதிகள் அதிகமாக புயலால் பாதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் சோழமண்டல கடற்கரைப்பகுதியில் சில உயிரிழப்புகள் ஏற்படுகின்றன, குறிப்பாக ஆந்திர பிரதேசம் மற்றும் ஒரிசா.



பெரும் புயல்

உலகில் புயலால் பாதிக்க கூடிய 6 முக்கிய பகுதிகளில் இந்திய கடற்கரைப்பகுதியும் ஒன்று.

தாழ்வழுத்தப் பகுதியில் வெப்ப மற்றும் குளிர் வளிமுகங்கள் சந்திப்பதால் உருவாகும் பலத்தக் காற்றையே புயல்கள் என்கிறோம். கடல் மற்றும் பேராழிகளில் அலைகள் தோன்றும் போது அலைகள் தீவிரமடைகின்றன. அப்பகுதியில் புயல் காற்றினை தடை செய்ய எவ்வித தடுப்பும் இல்லாததே இதற்கு காரணமாகும்.

புயல் எப்பொழுதும் பலத்த காற்றுடன் பெரும் மழையையும் மற்றும் அதனால் வெள்ளப் பெருக்கையும் ஏற்படுத்துகின்றன. மரங்கள் வேறுடன் சாய்தல், வடிகால் அமைப்புகளை பாதித் தல், மின்சார துண்டிப்பு, போக்குவரத்து துண்டிப்பு, நீர் தேங்குதல், நோய்கள் பரவுதல், பயிர்கள் அழிவு, மண் அரிப்பு, பழைய கட்டிடங்கள் சிதை வடைதல் மற்றும் உயிர் சேதங்களையும் ஏற்படுத்துகின்றன.

**உங்களுக்கு தெரியுமா ?**

1999 அக்டோபர் 29–ல் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழ் அழுத்தத்தினால் ஒரிஸாவில் மாபெரும் புயல் (Super Cyclone) மணிக்கு 260 கி.மீட்டர்களுக்கும் 300 கி.மீட்டர்களுக்கும் இடைப்பட்ட வேகத்தில் வீசியது ஒரிஸா கடற்கரையானது ஏறத்தாழ 144 கி.மீ தூரம் வரை பாதித்தது. இப்புயலால் கடல் நீர்மட்டம் இயல்பை விட 12 மீட்டர் உயர்ந்தது. இந்த மாபெரும் புயல் உள்நாட்டுப் பகுதியில் 36 மணி நேரத்தில் 250 கி.மீட்டருக்கு மேல் பயணித்தது. இதனால் 20 மில்லியன் ஹெக்டேர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டன. மரங்கள் மற்றும்

தாவரங்கள் வேருடன் சாய்ந்தன. இப்புயல் அதிக சேதங்களை ஏற்படுத்திச் சென்றது. இந்த மாபெரும் புயல் ஒரிஸா மாநிலத்தின் வாழ்வாதாரங்களை சிதைத்தது. இதனால் ஆயிரக்கணக்கான இறப்புகள், பல மில்லியன் மதிப்புள்ள பொருட்சேதங்கள் ஏற்பட்டன.

## இடர் தணித்தல்

மக்களைதாழ்வான பகுதியிலிருந்து அருகில் உள்ள உயரமான பகுதிகளுக்கு செல்ல அறிவுறுத்த வேண்டும்.

நீர் தேங்கியுள்ள பகுதிகளில் நீர் வடிய தற்காலிக கால்வாய் அமைக்கப்பட வேண்டும்.

பழைய கட்டிடங்களில் வசிக்கும் மக்களை தற்காலிகமாக வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும்.

மக்களின் உடைமைகளான, முக்கிய ஆவணங்கள் மற்றும் அணிகலன்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

குடிநீர் குழாய்களை பாதுகாப்பது அவசியமாகும்.

மக்கள் அருகில் உள்ள மின்சார கம்பங்களிலிருந்து ஏதாவது கம்பி அறுபட்டு மின் கசிவுகள் இருக்கிறதா என கவனிக்கப்பட வேண்டும்.

மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்வதை தவிர்த்தல் வேண்டும்.

உள்ளூர் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் சொல்லப்படும் குறிப்புகளை அனைவரும் கவனிக்க வேண்டும். நோய்கள் பரவுவதை தடுப்பதற்காக அனைவரும் கொதிக்க வைத்த நீரையே பருக வேண்டும்.

## வெள்ளப் பெருக்குகள்

அளவுக்கு அதிகமாக வழிந்தோடும் நீரையே வெள்ளப் பெருக்குகள் என்கிறோம். மிக அதிக மழைப்பொழிவு, புயல், பனி உருகுதல், சுனாமி மற்றும் அணைக்கட்டுகள் உடைதல் ஆகிய காரணங்களால் வெள்ளப்பெருக்குகள் ஏற்படுகின்றன. வடகிழக்கு பருவ காலங்களில் பெய்யும் மிக அதிக மழையினால் தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம் மற்றும் ஒரிஸா



வெள்ளம்

மாநிலங்களிலும் தென்மேற்கு பருவ காலங்களில் மும்பை பகுதிகளிலும் பொதுவாக வெள்ளப் பெருக்குகள் ஏற்படுகின்றன.

வெள்ளப் பெருக்கினால் கழிவுநீர் வடிகால் அமைப்பு அழிக்கப்படுதல், நீர் மாசுபடுதல், மண் அரிப்புகள், வண்டல்படிதல், நீர் தேங்குதல், வேளாண்மை நிலங்கள், கால்நடைகள் அழிக்கப்படுதல். மீன்பிடிச் சாதனங்கள் சேதப்படுதல் மற்றும் உயிர் சேதங்கள் ஏற்படுகின்றன.

தென்னிந்திய நதிகளைக் காட்டிலும் வடஇந்திய நதிகளில் ஒவ்வொரு வருடமும் வெள்ளப் பெருக்குகள் ஏற்படுகின்றன ஏன்? சிந்திக்க!

வெள்ளப் பெருக்குகள் மற்றும் வறட்சிகள் ஆகிய இரண்டு இடர்களும் பருவ கால மாறுபாட்டினால் ஏற்படுகின்றன.

## இடர் தணித்தல் (Mitigation)

நீர் வழிந்தோடலை தவிர்க்க பல கால்வாய்கள் தேவைப்படுகின்றன. குறிப்பாக வேளாண்மை நிலங்கள் மற்றும் தாழ்வான பகுதிகளிலிருந்து நீர்வழிந்தோட கால்வாய்கள் தேவை.

ஆற்றின் கரைகளை உயர்த்த வேண்டும், குறிப்பாக குளங்கள் மற்றும் ஏரிகளை தூர் எடுத்தல் வேண்டும்.

தாழ்வான பகுதியில் அமைந்துள்ள வீடுகளுக்கு முன்னால் நீர் உட்புகாமல் இருக்க மணல் மூட்டைகளை வைக்க வேண்டும்.

காடுகளை வளர்க்க ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

மழைநீர் சேமிப்பு முறைகளில் ஏதேனும் ஒரு முறையின் மூலம் மழை நீரைச் சேமிக்க வேண்டும்.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் உயரமான பகுதிகளுக்கு இடம் பெயர்தல் வேண்டும்.

வெள்ளப்பெருக்கின் போது சமுதாய மீட்புப் பணிகளின் செயல்பாடுகளில் பங்குகொள்ள மாணவர் களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும்.

## வறட்சி (Drought)

மழைப்பொழிவு பற்றாக்குறையினால் நீண்ட காலமாக நிலவும் வறண்ட வானிலையை வறட்சி என்கிறோம். வறட்சி எப்பொழுது ஆரம்பிக்கிறது, எப்பொழுது முடிகிறது என்பதை தெரிவிப்பது கடினமாகும். இந்திய வானிலைத் துறையின் கூற்றின்படி, நீண்ட காலமாக ஒரு நாட்டில் 10 சதவீதத்திற்கும் குறைவாக மழைப்பொழிவு இருக்குமேயானால் அந்நாட்டை வறட்சியால் பாதிக்கப்பட்ட நாடு எனலாம்.

பற்றாக்குறையான மழைப்பொழிவே வறட்சிக்கு முக்கிய காரணம். பற்றாக்குறையான மழைப்பொழிவிற்கு பருவகாலம் பொய்த்து போவதால் உருவாகும் போதுமான மழைப்பொழிவின்மை, பருவகால மாறுபாடுகள், காடுகள் அழிவு, சுற்றுச்சூழல் சீர்கேடு, அதிக அளவு ஆவியாதல், மோசமான நில



வறட்சி



வறட்சி

மேலாண்மை, அதீத மேய்ச்சல் மற்றும் மண் அரிப்பு ஆகியன முக்கிய காரணங்களாகும்.

புன்செய் பயிர்கள் வறட்சியின் காரணமாக அதிகம் பாதிக்கப்படுகின்றன.

மற்ற விளைவுகளாவன 1.குடிநீர் பற்றாக்குறை, 2. உணவுப் பற்றாக்குறை, 3.கால்நடைகளுக்கு நீரின்மை, 4.ஊட்டச்சத்து குறைபாடு நோய்கள் மற்றும் 5. மண் அரிப்பு ஆகியன.

## இடர் தணித்தல் (Mitigation)

மாற்று பயிர் மற்றும் சொட்டு நீர் பாசன முறை மூலம் நிலப்பயன்பாட்டை

திட்டமிட்டு மேம்படுத்துதல்.

மழைநீரை சரியான முறையில் சேமித்தல் மற்றும் பயன்படுத்துதல்.

வறட்சி பிரதேசங்களில் கால்நடை உணவு மற்றும் குடிநீர் ஆகியவற்றை ஏற்படுத்துதல்.

வறட்சி நிவாரணத் திட்டமிடுதலை கிராம அளவில் கொண்டு வருதல்.

உணவு தேவைப்படும் பகுதிகளுக்கு ஏற்ப இறக்குமதி செய்து விநியோகித்தல் என்பது முக்கியமான ஒன்றாகும்.

## சூறைக்காற்றுகள் (Tornadoes)

தீவிர சுழற்சியுடன் சுழலும் காற்றுத் தொகுதியினை சூறைக்காற்றுகள் என்கிறோம். இக்காற்றினால் உருவாகும் கார் திரள் மேகம் பூமியின் தரைப் பகுதி புனல் வடிவத்தில் தொட்டுக் கொண்டிருக்கும்.

இக்காற்று சுழற்சியின் அகலம் சில மீட்டரிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்கு மேலாகவும், இதன் சுழற்சி வேகம் மணிக்கு 64 – 509 கி.மீ இடைபட்டதாக இருக்கும்.

தீவிர தாழ் அழுத்தத்தின் காரணமாக இவைகள் உருவாகின்றன. சுழல்காற்று துரிதமாக உருவாகின்றன. நிலத்தின் மீது உருவாகும்போது வேகமான சுழல் காற்றினை தோற்றுவிக்கின்றன. அவைகள் வெப்ப மற்றும் குளிர் காற்றுகள் சந்திக்கும்போது உருவாகின்றன. புயலைப் போல இவைகள் மிகப்பெரிய உயிர் சேதங்களையும் மற்றும் பொருட் சேதங்களையும் ஏற்படுத்துகின்றன.

மார்ச் 24, 1998–ல் மேற்கு வங்காளம் மற்றும் ஒரிசாவின் கிழக்கு கடற்கரையோர மாவட்டங்களில் 20 கடற்கரையோர கிராமங்களை தீவிர சூறைக்காற்றுகள் தாக்கின. இக்காற்றினால் 160 பேர்கள் இறந்தனர்.



சூறைக்காற்று

2000 பேர்கள் காயம் அடைந்தனர். படகில் பயணம் செய்த 10 பேர்கள் காற்றினால் ஏறத்தாழ 20 அடி உயரம் வரை தூக்கி எறியப்பட்டு இறந்தார்கள்.

ஒரிசாவில் பலசூர் மாவட்டத்திலுள்ள கோபுர்காட்டா என்ற ஊரில் சூறைக்காற்றினாலல் பள்ளிக்கட்டிடத்தின் கூரை இடிந்ததில் 35 பள்ளிச் சிறுவர்கள் நசுங்கி மாண்டனர். 15,000 வீடுகள் சேதமடைந்தன மற்றும் 10,000–க்கும் மேலான மக்கள் வீடுகளை இழந்து தவித்தனர்.

**உங்களுக்கு தெரியுமா ?**

சூறைக்காற்றினை அமெரிக்க ஐக்கிய நாட்டில் (USA) டுவிஸ்டர் (Twister) என அழைக்கின்றனர். ஏனெனில் சுருள் போல் சுழன்று புனல் வடிவ மேகத்தினை உருவாக்குவதால் இப்பெயர் வழங்கப்பட்டது.

## இடர் தணித்தல் (Mitigation)

சூறைக்காற்றின் தாக்கம் அறிந்தவுடன் தாழ்வான பகுதியிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர வேண்டும் அல்லது வீட்டிலோ பாதுகாப்பு மையத்திலோ இருக்க வேண்டும்.

பழுதடைந்த கட்டிடங்களில் இருந்து விலகி இருக்க வேண்டும்.

சூறைக்காற்றின் போது நீங்கள் வீட்டிற்கு வெளியே இருக்க நேர்ந்தால் அங்கேயே இருக்க வேண்டும். சூறைக்காற்றின் தாக்கம் குறைந்து விட்டதென அரசு துறை அலுவலர்கள் கூறிய பின்பே வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

காயமடைந்த அல்லது காப்பாற்றப்பட்ட மக்களுக்கு உதவுதல் மற்றும் முதலுதவியை உடனடியாக கொடுக்கப்பட வேண்டும்.

### பொதுவான இடர் தணித்தல்

முதலில் ஒவ்வொரு தனிநபரும் பேரிடரிலிருந்து தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள இயலும் என்பதனை தெரிந்திருக்க வேண்டும்.

பேரிடருக்குப் பிறகு மக்களுக்கு இடரின் பாதிப்பிலிருந்தும், மனஅழுத்தத்திலிருந்தும் விடுபட ஏதுவாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

மின்கலத்தால் இயங்க கூடிய வானொலி மூலம் பேரிடர் கால அவசர தகவல்கள் மற்றும் பாதுகாப்பு முறைகளை கேட்டறிதல் வேண்டும்.

## பயிற்சி

I) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1. வறட்சி ஏற்பட முதன்மையான காரணம் ___________.

   அ) பற்றாக் குறைவான மழைப்பொழிவு ஆ) சுற்றுச்சூழல் சீர்கேடு

   இ) காடுகளை வளர்த்தல் ஈ) தொழிற்சாலைகள்

2. பொதுவாக சூறைக்காற்று ஏற்படுவது ___________.

   அ) இந்தியா ஆ) பங்களாதேஷ் இ) சீனா ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு

3. நிலச்சரிவுகள் அடிக்கடி ஏற்படுவது ___________.

   அ) பாலைவனப் பிரதேசம் ஆ) காட்டுப் பிரதேசம்

   இ) துருந்திர பிரதேசம் ஈ) மலைப் பிரதேசம்

4. சுனாமி என்ற சொல்___________மொழியிலிருந்து வந்தது.

   அ) தமிழ் ஆ) பிரெஞ்ச் இ) ஜப்பான் ஈ) லத்தீன்

5. கீழே கொடுக்கப்பட்டுள்ளதில் எது இயற்கையான பேரிடர் இல்லை.

   அ) அணுகுண்டு வெடிப்பு ஆ) காடுகள் அழிதல்.

   இ) காட்டுத் தீ ஈ) மின்னல்

## II) கோடிட்ட இடங்களை நிரப்புக

6. பேரிடர் என்பது ஒரு ___________.
7. இந்தியா___________அதிர்வலை மண்டலங்களாக பிரிக்கப்படுகின்றன.
8. இந்தியாவில் சுனாமி எச்சரிக்கை மையம்___________ல் நிறுவப்பட்டுள்ளது.
9. பாறைத்துகள்கள் நீருடன் சேர்ந்து நகர்வதை___________என்கிறோம்.
10. பனிப்பாறை வீழ்ச்சிகள் உயர்___________மற்றும் உயரமாக___________ ஏற்படுகின்றன.

## III) பொருத்துக

| | |
|---|---|
| 11. சூறைக்காற்று | கனத்த மழைப்பொழிவு |
| 12. இறுகிய பாறைக்குழம்பு | காற்றின் சுழற்சி |
| 13. நிலச்சரிவு | எரிமலை வெடித்தல் |
| 14. வறட்சி | சுனாமி |
| 15. நிலநடுக்கம் | மழைப்பொழிவு பற்றாக்குறை |

## IV) கீழ்கண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி

16. பேரிடர் என்றால் என்ன ?
17. இடர் தணித்தல் வரையறு.
18. நிலச்சரிவு என்றால் என்ன ?
19. வெள்ளம் மற்றும் வறட்சியினை வேறுபடுத்துக.
20. சூறைக்காற்று மற்றும் புயல் வேறுபடுத்துக.

## V) கீழ்கண்ட வினாக்களுக்கு விரிவாக விடையளி

21. இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படும் பேரிடர்களை விளக்குக.
22. பேரிடர் மேலாண்மை என்றால் என்ன ?
23. சுனாமி பற்றியும் அவற்றினால் சுற்றுச்சுழலில் ஏற்படும் தாக்கங்களையும் எழுதுக.
24. வறட்சி மற்றும் வெள்ளப் பெருக்குகளைப் பற்றி விரிவாக எழுதுக.
25. இந்தியாவில் உள்ள அதிர்வலை மண்டலங்களைப் பற்றி விரிவாக எழுதுக.

# 5.பேராழியியல் ஒரு அறிமுகம்

பூமியில் நிலவும் நிலையான வாழ்விற்கு பேராழிகளின் பங்களிப்பு மற்றும் காலநிலை மாற்றம் திறவுகோளாக இருக்கின்றது. பேராழி கனிம வளங்களின் கிடங்காக உள்ளது. கடலைச் சுற்றி பல பிரச்சினைகள் ஏற்படுவதை நாம் கண்கூடாக காண்கிறோம். குறிப்பாக கடற்கரை மறைந்து போவது, தீவு மூழ்குதல், நீர் மாசுபடுதல், மீன் வளம் அழிதல், கடல் நீர்மட்டம் உயர்தல், புவியின் வெப்பநிலை உயர்தல், கடல் நீரோட்டங்கள், சூறாவளிகள், பனிப் படலங்கள் உருகுதல் ஆகியன மனிதனை அச்சுறுத்துவதாக உள்ளன. ஆகவே, பேராழியின் அமைப்பினை நாம் புரிந்து கொண்டால் தான், வரும் நூற்றாண்டில் நிகழப்போகும் மாற்றங்களை அறிந்து முன்கூட்டியே தடுக்க முடியும். மிகக் குறுகிய காலத்தில் சரியான உற்றுநோக்குதல் மூலம் வரக் கூடிய பேரிடர்களான சூறாவளிகள், வெள்ளம், வறட்சி மற்றும் அவற்றின் பாதிப்புகளை தணிக்கும் வகையிலும் மக்களை இப்பாதிப்பிலிருந்து விடுபடவும் முன் அறிவிப்பு செய்ய முடியும்.

**உங்களுக்கு தெரியுமா ?**

பேராழி என்பது ஒரு கிரேக்கச் சொல் "ஒகேனஸ்" பேராழிகள் எனன்பது ஒரு உவர்பிய நீரின் பெரும் பகுதி மற்றும் நீர்கோளத்தின் முதன்மையான கூட்டமைப்பாகும்.

## பேராழியியல் என்றால் என்ன ?

பேராழியியல் என்பது கடல் நீரின் இயற்கை மற்றும் வேதித்தன்மை, ஆழம், வெப்பநிலை, உவர்ப்பியம், கடல் நீரோட்டங்கள் மற்றும் கடலடி பகுதியில் காணப்படும் தாவர மற்றும் விலங்கினம் பற்றி படிக்கக்கூடிய ஒரு அறிவியலாகும்.

பேராழிகளானது பூமியின் மொத்தப்பரப்பில் 71 சதவீதம் மற்றும் பூமியின் மொத்த நீரில் 97 சதவீதம் கொண்டிருக்கின்றது. பெரும் பரப்பிலான நீரினால் சூழப்பட்டிருக்கும் பகுதியை பேராழி என அழைக்கின்றோம்.

பூமியானது நீர்க்கோளம் (Watery Planet) எனவும் அழைக்கப்படுகின்றது. சூரியக்குடும்பத்தில் பூமியின் பேராழிகளானது தனித்துவமானதாக உள்ளது. சூரியக் குடும்பத்தில் உள்ள மற்ற கோள்கள் நீரைக் கொண்டிருப்பதில்லை. (சமீப கால ஆய்வுகள் வியாழன் கோளானது நீரைக் கொண்டிருக்கலாம் எனத் தெரிவிக்கின்றன) புவியில் உயிரினமானது முதன் முதலில் கடலில் தோன்றிருக்க கூடும் என நம்பப்படுகிறது.

புவியின் பல்வேறு இயக்கங்களுக்கு பேராழிகள் காரணமாகின்றன. குறிப்பாக வானிலை மற்றும் வெப்பநிலை யினை பாதிக்கின்றன. சூரியக் கதிர் களை உட்கவருதன் மூலம் புவியின் வெப்பநிலையினை இவைகள் மாற்றியமைக்கின்றது. மேலும் உட்கவரப்பட்ட வெப்ப ஆற்றலை கடல் நீரோட்டங்கள் உலகம் முழுவதும் கடத்துகின்றன.

உலகில் உள்ள பேராழிகள் அனைத்தும்கடல்கள், வளைகுடாக்கள், நீர் சந்திப்புகள் மற்றும் கால்வாய்கள் மூலம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. பசிபிக், அட்லாண்டிக், இந்திய, ஆர்டிக் மற்றும் அண்டார்டிக் ஆகிய ஐந்து பேராழிகளும் நாம் நன்கு அறிந்தவைகள் ஆகும்.

# உலகின் பேராழிகள் மற்றும் கடல்கள்



## பசிபிக் பேராழி

பசிபிக் பேராழியானது முக்கோண வடிவ அமைப்பை பெற்றுள்ளது மற்றும் அது புவியின் மொத்த மேற்பரப்பில் 33 சதவீதம் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் சராசரி ஆழம் 5,000 மீட்டர்கள் ஆகும். பசிபிக் பேராழியானது மிகப் பெரியதும் மற்றும் ஆழமான பேராழியும் ஆகும். இது மேற்கில் ஆசியா மற்றும் ஆஸ்திரேலியா, கிழக்கில் வடஅமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா, தெற்கில் அண்டார்டிகாவையும் எல்லைகளாக கொண்டுள்ளது.

தென் பசிபிக்கில் உள்ள சேலஞ்சர் ஆழிக்குழியே (மரியானா ஆழிக்குழி) உலகின் ஆழமான பகுதி ஆகும். இதன் ஆழம் 11,033 மீட்டர்கள் ஆகும். பசிபிக் பேராழியில் ஏறக்குறைய 20,000 தீவுகள் உள்ளன. நியுசிலாந்து, இந்தோனேஷியா, ஜப்பான் மற்றும் ஹவாய் ஆகியன நன்கு அறியப்பட்ட தீவுகளாகும்.

## அட்லாண்டிக் பேராழி

அட்லாண்டிக் பேராழியானது நீண்ட 'S' வடிவத்தினை கொண்டது. இது புவியின் மொத்த பரப்பில் 16.5 சதவீதம் வரை பரவிக் காணப்படுகிறது. இது பசிபிக் பேராழியின் 50 சதவீத பரப்பு ஆகும். இது மேற்கே வட மற்றும் தென் அமெரிக்காவாலும், கிழக்கே ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்காவாலும் சூழப்பட்டுள்ளது. அட்லாண்டிக் பேராழியில் காணப்படும் முக்கியத் தீவுகளான கீரின்லாந்து, பிரிட்டிஷ் தீவுகள், நியூபவுண்ட்லாந்து, மேற்கு இந்தியத் தீவுகள், வெர்டிமுனை மற்றும் கானரீஸ் ஆகும். அட்லாண்டிக் பேராழியின் வர்த்தக வழியானது உலகின் மிகவும் போக்குவரத்து நிறைந்த ஒன்றாக கருதப்படுகிறது.

## இந்திய பேராழி

உலகில் உள்ள அனைத்து பேராழிகளின் மொத்த பரப்பில் 20 சதவீதம் இந்திய பேராழி கொண்டுள்ளது. வடக்கே இந்தியா, பாகிஸ்தான், கிழக்கே ஆஸ்திரேலியா, சுந்தா தீவுகள் மற்றும் மலேசியா, மேற்கில் அரேபிய தீபகற்பம் மற்றும் ஆப்பிரிக்கா ஆகியன இதன் எல்லைகளாக அமைந்துள்ளது. இந்திய பேராழியானது ஆப்பிரிக் காவின் தென்முனையில் அட்லாண்டிக் பேராழியுடனும், கிழக்கு மற்றும் தென்கிழக்கில் பசிபிக் பேராழியுடனும் இணைகின்றது. இப்பேராழியின் சராசரி ஆழம் 4,000 மீட்டர்களாகும். அந்தமான், நிக்கோபர், மாலத்தீவு, மடகாஸ்கர், இலங்கை, சுமத்ரா மற்றும் ஜாவா ஆகியன இந்திய பேராழியின் நன்கு அறிந்த தீவுகளாகும். இது ஒரு நாட்டின் பெயரினால் அழைக்கப்படும் பேராழி மற்றும் வரலாற்று காலந்தொட்டே வணிகர்களின் பரிச்சயமான வணிக வழியாக இருந்து வருகின்றது.

## அண்டார்டிகா பேராழி

இது நான்காவது பெரிய, குளிரான மற்றும் தென்கோடி முனையில் அண்டார்டிகா கண்டத்தினை சுற்றி அமைந்துள்ள பேராழி ஆகும். இது 'தென் பேராழி' எனவும் அழைக்கப்படுகின்றது. அலெக்ஸாண்டர் தீவுகள், பாலினி தீவுகள் மற்றும் ரோஸ் தீவுகள் இப்பேராழியில் உள்ள சில தீவுகளாகும். இதன் சராசரி ஆழம் 4,500 மீட்டர்களாகும். வெப்பநிலையானது $10^0$ செல்சியஸ் முதல் $-2^0$ செல்சியஸ் வரை வேறுபடுகிறது. குளிர்காலத்தில் இப்பேராழியின் மேல் பகுதியானது பாதிக்கும் மேல் பனிக்கட்டியாக உறைந்திருக்கும்.

### ஆர்டிக் பேராழி

ஆர்டிக் பேராழி ஏறக்குறைய வட்ட வடிவில் புவியின் வடதுருவத்தில் அமைந்துள்ளது. இதன் மொத்த பரப்பு 14 மில்லியன் சதுர கிலோ மீட்டர்களாகும். இதன் சராசரி ஆழம் 4,000 மீட்டர்களாகும். இதன் முக்கிய தீவுகள், விக்டோரியா தீவுகள், எலிசபத் தீவுகள், ஐஸ்லாந்து ஸ்பிட்பெர்ஜென் மற்றும் நோவாகா சோம்லியா ஆகியனவாகும்.

### உலகத்தின் கடல்கள்

குறைந்த அளவு நீர் பரப்பினைக் கொண்ட நிலத்தினால் சூழப்பட்டுள்ள பகுதியை கடல்கள் என்கின்றோம். தென் சீனக்கடல், கரிபீயன் கடல், மத்திய தரைக்கடல் ஆகியன உலகின் முக்கியமான கடல்களாகும்.

### பேராழியின் தரை அமைப்பு

நிலமும் கடலும் சந்திக்கின்ற இடத்தில் பேராழியின் தரையானது ஆரம்பிக்கின்றது. கடலோர பகுதியானது நிலையானது அல்ல. ஒவ்வொரு அலைகள் மற்றும் ஓதங்களின் போதும் மாற்றி அமைக்கப்படுகின்றன. பேராழியின் தரை அமைப்பானது மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றது. அவை, (அ)கண்டத்திட்டு, (ஆ) கண்டச் சரிவு மற்றும் (இ) கடல்தரை ஆகும்.

### கண்டத் திட்டு

கடற்கரை ஓரத்தின் ஆழம் குறைந்த பகுதியாகும். இதன் ஆழம் 100 மீட்டர்கள் ஆகும். இக்கண்டத்திட்டு பகுதியானது மிகச்சிறந்த மீன்பிடித்தளமாக விளங்குகின்றது. இங்கு மீன்களின் உணவான கடல்வாழ் நுண்ணுயிரிகள்(Plankton) அதிக அளவு கண்டத்திட்டு பகுதிகளில் நிறைந்து காணப்படுகின்றன. உதாரணமாக, நியுபவுன்ட்லாந்தில் உள்ள கிராண்ட் பேங் மற்றும் பிரிட்டனில் உள்ள டாகர் திட்டுகளாகும். இக்கண்டத் திட்டு பகுதிகளில்




பேராழி தரை நிலத் தோற்றம்

பெட்ரோலிய ஆழ்குழாய் கிணறுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மும்பை ஹை (இந்தியா).

### கண்டச் சரிவு

செங்குத்து சரிவாக பேராழியின் தரையை அடைகின்றது. கண்டச்சரிவு மற்றும் கண்டத்திட்டு பகுதிகளை கண்ட விளிம்பு (Continental Margin) என அழைக்கின்றோம். இதன் சராசரி ஆழம் 155 மீட்டர்கள் ஆகும்.

ஒழுங்கற்ற கடற்கரை மற்றும் ஆழமான சரிவுகள் ஆகியன இயற்கை துறைமுகம் அமைய அவசியமாகின்றது. உதாரணமாக, கொச்சின் மற்றும் மும்பை துறைமுகங்கள். கண்டச் சரிவில் குறுகிய பள்ளத்தாக்கு, ஓங்கல் மற்றும் சேறு வழிதல் ஆகியன காணப்படுகின்றன.

கடலடிக் குன்றுகளைச் சுற்றி கீழ் மட்டத்தில் ஆழ்கடல்ச் சமவெளி (Abyssal Plain) உள்ளது. இந்த ஆழ்கடல்ச் சமவெளி உயிரினங்களின் அழுகியக் கரிமப் பொருட்களால் மூடப்பட்டுள்ளது. நடுகடல் மலைத் தொடரானது (Ocean Ridge) கண்டத்திட்டு விசையினால் ஏற்படுகின்றன.

### கடல் மலைகள்

கடலின் அடிப்பகுதியில் உள்ள எரிமலையின் ஒவ்வொரு சீற்றத்தின் போது வளர்ந்து உருவாகிறது. இக்கடல் மலைகள் கடல் நீரின் மேற்பரப்பிற்கு மேல் தெரிவதை தீவு (Island) என அழைக்கிறோம். கடல் மட்டத்திற்கு மேல் உள்ள தீவுகள் அலை மற்றும் வானிலை செயல்களால் அரிக்கப்பட்டு கீழ்ப்பகுதிக்கு சென்றிருந்தால் அவை கயாட் (Guyot) என அழைக்கப்படுகின்றது.



நீர் சுழற்சி

பேராழியின் அகழிகள் (Oceanic Tranches) என்பவை பேராழியின் அழமான பகுதியாகும். இரு கண்டத் திட்டுகள் ஒன்றோடு ஒன்று மோதும் போது அடர்த்தி அதிகமான தட்டின் அழுத்தத்தால் அடர்த்தி குறைவான தட்டிற்குக் கீழ் அடர்த்தி அதிகமான தட்டு செல்வதால் அகழிகள் உருவாகிறது. இவையே கடலின் மிக ஆழமான பகுதியாகும்.

### நீர் சுழற்சி

நீர் சுழற்சி என்பது நீர், நிலத்திலிருந்து வளிமண்டலத்தை அடைந்து மீண்டும் நிலத்தை அடையும் செயலாகும். புவியில் உள்ள பேராழிகள், ஏரிகள், ஆறுகளில் உள்ள நீரானது சூரியனின் வெப்ப ஆற்றலால் ஆவியாகின்றது. மேலும், தாவரங்கள் ஒளிச்சேர்க்கையின் மூலம் காற்றில் நீரினை இழக்கின்றன. இவை நீராவி–போக்கு எனப்படும். இந்நீராவியானது மிக நுண்ணிய நீர்த் திவளைகளாக மாறி மேகத்தை உருவாக்குகின்றன. இறுதியாக, திரவமாகி மேகங்களில் மிகச் சிறிய நீர் திவலைகளாகின்றன. மேகங்கள் பூரித நிலையை அடையும்போது மழைவீழ்ச்சி (மழை, ஆலங்கட்டி அல்லது பனி) தூண்டப்படுகிறது மற்றும் நீர் நிலப்பரப்பினையோ அல்லது கடலையோ அடைகின்றது. மழைநீரின்

ஒரு பகுதியானது நிலத்தால் உறிஞ்சப்பட்டு பாறை அல்லது களிமண் அடுக்கிற்கு இடையே தேங்குகிறது. இவை நிலத்தடி நீர் என அழைக்கப்படுகின்றது. ஆனால் பெருமளவு மழைநீரானது மலைச் சரிவில் இருந்து வேகமாக ஓடி சிறிதளவு உப்பு கலந்த நீராக இறுதியாக கடலை அடைகிறது.

கடல் நீரில் சோடியம் குளோரைடு, மெக்னீசியம் குளோரைடு, மெக்னீசியம் சல்பேட், கால்சியம் சல்பேட், பொட்டாசியம் சல்பேட், கால்சியம் கார்பனேட் மற்றும் மெக்னீசியம் புரோமைட் ஆகிய உப்புகள் பெருமளவு கலந்துள்ளன.

## பேராழிகள் உவர்ப்பது ஏன் ?

புவியில் உள்ள பாறை மற்றும் ஆற்று படுகையின் மண்களில் உள்ள உப்பானது மழைநீரினால் கரைக்கப்பட்டு ஆறுகளில் பாய்கின்றது. பேராழிகள் மற்றும் கடல்களில் சிறிதளவு உப்பு கலந்த நீராக கலக்கின்றது. ஆவியாதலின் செயலினால் கடல் நீர் ஆவியாவதுடன் உப்பு ஆவியாகாமல் தங்கிவிடுகிறது. எனவேதான் கடல் நீர் உப்புத் தன்மையுடன் காணப்படுகிறது.

**செயல்முறை**

நீங்கள் கடல் நீரை சுவைத்து இருக்கிறார்களா ? ஏன் உப்புத் தன்மையுடன் உள்ளது ?

## உவர்ப்பியம்

உவர்ப்பியம் என்பது கடல் நீரில் கரைந்துள்ள உப்பின் அளவினை குறிப்பதாகும். இதன் பொருள் பேராழியில் கரைந்துள்ள உப்பின் அளவே உவர்ப்பியம் ஆகும். உவர்ப்பியம் என் பது ஒரு லிட்டர் நீரில் எத்தனை கிராம் அளவு உப்பு கலந்துள்ளது என்பதை குறிப்பிடுவதாகும் (குறியீடு $^{0}/_{00}$). உலகில் உள்ள பேராழிகளின் சராசரி உவர்ப்பியம் 35 கிராம் ஆகும்.

**செய்முறை**

பேராழிக்குப்பேராழி உவர்ப்பியம் வேறுபடுவது ஏன் ?

சாக்கடல், செங்கடல் மற்றும் பெர்சியன் வளைகுடாவின் உப்பளவு மிக அதிகமாகும். இங்கு உவர்ப்பியத்தின் அளவு 40 கிராம் ஆகும் (காரணம் மிக அதிகமாக நீராவியதாலும் மற்றும் குறைந்த அளவு நன்னீர் சேர்க்கையும் ஆகும்). கடல்களிலேயே சாக்கடலில் மிக அதிக அளவு உவர்ப்பியம் உள்ளது. துருவ பிரதேசங்களில் உள்ள கடல்களில் உவர்ப்பியம் மிக குறைவாக இருப்பதற்கு பனி உருகுதலும் மற்றும் அதிக மழைப்பொழிவும் காரணமாகும்.

**செய் முறை**

நிலத்தினால் சூழப்பட்டுள்ள கடல்களில் உவர்பியத்தின் அளவு ஏன் அதிகமாக உள்ளது ?

## பேராழியின் வெப்பநிலை

பேராழியில் உள்ள உயிரினங்களின் பண்புகளை நிர்ணயிப்பதில் பேராழியின் வெப்பநிலை முக்கிய பங்கு வகிக்கின்றன. கடல் நீரின் வெப்பநிலை மாறுபாடே பேராழியில் நீரோட்டங்கள் உருவாக காரணமாய் அமைகிறது. பேராழிகள் சூரிய ஆற்றலை சேமித்து வைக்கும் திறன் கொண்டுள்ளதால் புவியின் வெப்பச் சமநிலையினை சீர் செய்வதில் முக்கிய பங்காற்றுகின்றன. நிலத்தின் மேற்பரப்பானது மிக விரைவாக வெப்பமடைந்து மிக விரைவாக குளிர்ச்சி அடைகிறது. ஆனால், நீர்ப் பரப்பானது மெதுவாக வெப்பமடைந்து மெதுவாகவே குளிர்ச்சி அடைகிறது. இவ்வாறான நிலம் மற்றும் நீரின்

வெப்பநிலை வேறுபட்டால் புவியின் மேற்பரப்பில் உள்ள பேராழி மற்றும் கண்டங்களில் பல்வேறு வகையான காலநிலை காணப்படுகின்றது.

பேராழியின் மேற்பரப்பு வெப்ப நிலையினை பல்வேறு காரணிகள் கட்டுப்படுத்துகின்றன. அவைகள், அட்சரேகைகள், பேராழி நீரோட்டங்கள், நிலவும் காற்றுகள் மற்றும் உள்ளூர் வானிலை ஆகியனவாகும்.

## அலைகள்

பேராழிகளில் நீரானது எப்பொழுதும் மேலும் கீழுமாக அசைகின்றன. இந்த நீரின் அசைவே அலைகள் என அழைக்கப்படுகிறது. அலைகள் உருவாவதற்கு முக்கியக்காரணம் காற்றோட்டம் ஆகும். இயற்கையான அலைகள் பெரும்பாலும் காற்றோட்டத்தால் தோற்றுவிக்கப்படுகின்றன. அலைகள் சில குறிப்பிட்ட திசைகளில் பயணிக்கின்றன. ஆனால் நீரானது அலைகளோடு பயணிப்பதில்லை.

## பேராழி நீரோட்டங்கள்

பேராழி நீரோட்டங்கள் பொதுவாக ஒரு குறிப்பிட்ட திசையில் பெரிய பரப்பில் நகரும் நீரினை குறிக்கும்.

வேறுவகையில் கூறவேண்டுமெனால் பேராழி நீரோட்டமானது பேராழியில் இயல்பாக ஓடும் நீராகும். இப்பேராழி நீரோட்டங்கள் ஆறுகளைப் போல் குறிப்பிட்ட பாதை மற்றும் வேகத்தில் பாய்கின்றன. பேராழி நீரோட்டங்கள் இரண்டு வகைப்படும். அவைகள், வெப்ப (Warm) மற்றும் குளிர் (Cold) நீரோட்டங்கள் ஆகும். வெப்ப நீரோட்டங்கள் தாழ் அட்சரேகையிலிருந்து உருவாகி துருவங்களை நோக்கி ஓடுகின்றன. இருப்பினும் குளிர் நீரோட்டங்கள் உயர் அட்சரேகை பகுதிகளில் உருவாகி பூமத்தியரேகையை நோக்கி ஓடுகின்றன.

## பேராழிகளில் உருவாகும் நீரோட்டங்களை பாதிக்கும் காரணிகள்

1. வெப்பநிலையில் வேறுபாடு,
2. பேராழி நீரின் அடர்த்தி (உவர்ப்பியம்),
3. காற்று மற்றும் வளிமண்டல அழுத்தம்,
4. கொரியாலிஸிஸ் விசை,
5. புவியீர்ப்பு விசை,
6. மழை வீழ்ச்சி மற்றும் ஆவியாதல் மற்றும்
7. பனி உருகுதல்

## ஓதங்கள்

சூரியன் மற்றும் சந்திரனின் ஈர்ப்பு விசையினால் ஒவ்வொரு நாளும் 6 மணி நேர இடைவெளியில் கடல் நீரின் மட்டம் உயர்ந்து தாழ்வதை ஓதம் என அழைக்கப்படுகின்றது. கடல் மட்டம் உயர்வதை உயர் ஓதம் (High Tide) என்றும் தாழ்வதை தாழ் ஓதம் (Low Tide) என்றும் அழைக்கப்படுகிறது.

மிகவை ஓதமானது(Spring tide) அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் ஏற்படுகிறது. இந்த நாட்களில் சூரியன், சந்திரன் மற்றும் பூமி ஆகியன ஒரே நேர்க்கோட்டில் இருக்கின்றன. அத்தகைய நாட்களில் சந்திரன் மற்றும் சூரியனின் ஈர்ப்பு விசையால் ஈர்க்கப் படுகின்றது. இக்காலங்களில் உயர் ஓதம் மிக உயர்ந்தும் மற்றும் தாழ் ஓதம் மிகத் தாழ்ந்தும் காணப்படும்.

தாழ்வை ஓதமானது (Neap tide)நிலவின் முதல் மற்றும் மூன்றாவது வளர்ச்சி நிலையில் ஏற்படுகின்றது.

இந்நிலையில் சூரியன், சந்திரன் மற்றும் பூமி ஆகியன செங் கோணத்தில் இருக்கின்றன. இதன் விளைவாக நிலவின் ஈர்ப்பு விசையில் இருந்து ஒன்றுக்கொன்று செங் கோணத்தில் அமைகின்றன. இந்நேரங் களில் உயர் ஓதம் மிகத் தாழ்ந்தும் மற்றும் தாழ் ஓதம் மிக உயர்ந்தும் காணப்படும்.

**செயல்முறை**

பேராழியின் வளங்களை பட்டியலிடுக

## மனித வாழ்வில் பேராழிகளின் ஆதிக்கம்

பேராழிகள் மனிதனுடைய இயற்கை சூழ்நிலையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பேராழிகள் மனிதனை பல்வேறு வகைகளில் கட்டுப்படுத்துகின்றன. காலநிலையை கட்டுப்படுத்துவதிலும், ஆக்ஸிஜனை சுவாசிப்பதற்கும், அவன் உண்ணும் உணவு, பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் இராணுவ நிலையினையும் தீர்மானிக்கின்றன.

பேராழிகள் முக்கிய வளமான புரத சத்து மிகுந்த மீன் உணவினை கொண்டுள்ளது. பல்வேறு மதிப்பு மிக்க உலோகங்களை கடலானது மிகுதியாக கொண்டுள்ளது. அவற்றில் தங்கம், வெள்ளி, மாங்கனிசு, பெட்ரோல் மற்றும் முத்து ஆகியனவாகும். இவற்றிற்கும் மேலாக கடல் நீரில் மெக்னீசியம், புரோமின் மற்றும் சோடியம் குளோரைடு (அல்லது) சாதாரண உப்பு ஆகிய தாது உப்புகளும் உள்ளன. கட்டுமானப் பணிகளுக்கான மணல், சரளைக்கல் மற்றும் சிப்பி ஓடுகள், வைரங்கள் மற்றும் சரளைக்கல் ஆகியன பேராழிகளின் தரைப்பகுதியில் காணப்படுகிறது.

கடற்கரையோரப் பகுதிகளில் உள்ள எண்ணெய் மற்றும் இயற்கை வாயு வளங்கள் உலக பெட்ரோலிய உற்பத்தியில் 17 சதவீதத்தை அளிக்கின்றன. மேலும் பேராழிகள் மாற்று சக்தி வள ஆதாரமாக பயன்படுத்துவதற்கான வாய்ப்பினையும் கொண்டிருக்கின்றன. கடல் சூரிய வெப்பத்தினை உட்கவருவதால் பேராழிகள் வெப்பப்படுத்தப்பட்டு நீரோட்டங்கள் ஏற்படுகின்றது. இதை மின்னாற்றலாக மாற்ற இயலும். இந்நிகழ்ச்சியானது பேராழியின் வெப்ப ஆற்றல் மாற்றம் (Ocean Thermal Energy Conversion - OTEC) என அழைக்கப்படுகிறது.



## பயிற்சி

### I) சரியான விடையை தேர்ந்தெடு

1. நீரினால் சூழப்பட்டு இருக்கும் விசாலமான பெரும் பரப்பு ___________ என அழைக்கப்படுகிறது.

அ) பேராழி ஆ) கடல் இ) வளைகுடா ஈ) விரிகுடா

2. அட்லாண்டிக் பேராழி நீண்ட ___________ வடிவம்

அ) முக்கோணம் ஆ) S இ) வட்டம் ஈ) நீர்ச்சந்தி

3. கடல் நீரின் உயர்வு மற்றும் தாழ்வு ___________ எனப்படும்.

அ) ஓதங்கள் ஆ) பேராழி நீரோட்டங்கள் இ) சுனாமி ஈ) அலைகள்

4. நீரின் அடியில் உள்ள மலைகளின் உயரப் பகுதி___________.

அ) கயாட் ஆ) ஆழ்கடல் சமவெளி இ) கடல் மலை ஈ) கடலடித்தொடர்

5. நீரியல் சுழற்சி இவ்வாறு அழைக்கப்படுகிறது.

அ) ஹைட்ரஜன் சுழற்சி ஆ) ஆக்சிஜன் சுழற்சி
இ) நீர் சுழற்சி ஈ) கார்பன் சுழற்சி

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக

1. புவியின் மற்றொரு பெயரானது ___________.
2. ___________ தென் பசிபிக் பேராழியில் உள்ள ஆழமான அகழி (மடு)
3. நிலத்தினால் சூழப்பட்ட நீர் பகுதி ___________ எனப்படுகிறது.
4. கடலடி சமவெளியானது ___________ சூழப்பட்டுள்ளது.
5. ___________ காரணமாக கடலலைகள் உருவாக்கப்படுகின்றன.

### III) பின்வரும் வினாக்களுக்கு விடையளி

1. உவர்பியத்தினை வரையறு.
2. பேராழி நீரோட்டங்கள் என்றால் என்ன ?
3. அலைகள் எவ்வாறு உருவாகின்றது ?
4. பேராழியியல் என்றால் என்ன ?
5. கடல் வளங்களின் பெயர்களை கூறுக.

### IV) பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி

1. இந்திய பேராழியைப் பற்றி விவாதி.
2. கடலடி தளத்தினை வரைபடத்துடன் ஆராய்க.
3. நீரியலை படத்துடன் விவரி.
4. மனித வாழ்வினை பேராழிகள் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன ?

உலகில் உள்ள பேராழிகளைப் பற்றி கட்டுரை ஒன்று வரைக.

# குடிமையியல்

## 1. நமது நாடு

நமது இந்திய நாடு பழமையான நாகரீகத்தையும், உயர்ந்த கலாச்சாரத்தையும், மிகச் சிறந்த பண்புகளையும் கொண்டது. சுதந்திரத்திற்குப் பிறகு நமது நாடு, சமூக, பொருளாதார நிலையில் மிகப்பெரிய முன்னேற்றத்தை பெற்றுள்ளது. உணவு பொருள் உற்பத்தியில் தன்னிறைவையும் தொழில் துறையில் உலக அளவில் பத்தாவது இடத்தையும் பெற்றுள்ளது. உலக நாடுகளின் வரிசையில், விண்வெளி ஆய்வில் இந்தியா ஆறாவது இடத்தை பெற்றுள்ளது.

இந்தியாவை ஒரு சிறிய உலகம் என்று அழைப்பதுண்டு. மாறுபட்ட புவியியல் அமைப்பு, தட்பவெட்பநிலை, தாவரங்கள், விலங்குகள், பலவகைப்பட்ட கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், மொழிகள், நம்பிக்கைகள் ஆகிய அனைத்தும் கொண்டது நமது இந்திய நாடு. வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட நம் நாட்டில், நாம் அனைவரும் இந்தியர் என்ற ஒற்றுமை உணர்வில் நாம் ஒன்றுபட்டு வாழ்கிறோம்.

நில அளவு அடிப்படையில் (32,87,263 சதுர கிலோமீட்டர் பரப்பளவு) உலகின் 7வது பெரிய நாடாகவும், மக்கள் தொகை அடிப்படையில் சீனாவிற்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தையும் இந்தியா பெற்றுள்ளது.

### இருப்பிடம்

இந்தியா, வடக்கே இமயமலைத்தொடர், தெற்கே இந்தியப்பெருங்கடல், கிழக்கே வங்காளவிரிகுடா, மேற்கே அரபிக்கடல் ஆகியவற்றினால் சூழப்பட்டுள்ளது. இந்தியாவின் மொத்த நில எல்லையின் நீளம் 15,200 கிலோமீட்டர் ஆகும். இந்தியாவின் கடற்கரை 7,516.6 கிலோமீட்டர் நீளம் உடையதாகும். இந்திய நாடு முழுவதும் வடக்கு அரைக் கோளத்தில் அமைந்துள்ளது. $8^{0}4'$ முதல் $37^{0}6'$ வட அட்சக் கோட்டிற்கு இடையிலும், $68^{0}7'$ முதல் $97^{0}25'$ வரையில் கிழக்கு தீர்க்க கோட்டிற்கு இடையேயும் இடம்பெற்றுள்ளது. இந்திய நாடு அதிகபட்சமாக வடக்குத் தெற்காக 3,214 கிலோ மீட்டர் நீளமும், கிழக்கு மேற்காக 2,933 கிலோ மீட்டர் நீளமும் கொண்டுள்ளது.

### மக்கட்தொகையும் கல்வியறிவும்

2001–ம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 1028 மில்லியன் மக்கள் இந்தியாவில் உள்ளனர். இவர்களில் ஆண்கள் 532.1, மில்லியன், பெண்கள் 496.4 மில்லியன் ஆகும்.

**மக்கள் அடர்த்தியும் கற்றோரின் விழுக்காடும்**

மக்கள் தொகை அடர்த்தியின்படி சதுர கிலோமீட்டருக்கு 324 பேர் உள்ளனர். மக்கள் தொகை அடர்த்தி என்பது ஒரு சதுர கிலோமீட்டருக்குள் வாழும் மக்களின் சராசரி எண்ணிக்கையாகும்.

2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நாட்டில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை 64.8விழுக்காடாக அதிகரித்துள்ளது. இவற்றில் ஆண்கள் 75.26 விழுக்காடும், பெண்கள் 53.67 விழுக்காடும் கல்வியறிவு பெற்றவர்கள் ஆவர்.

## அரசியல் நிர்வாகம்

இந்தியா உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடாகும். இது இறையாண்மையுடைய, சமதர்ம, மதசார்பற்ற, மக்களாட்சிக் குடியரசு நாடு. இது பாராளுமன்ற அமைப்பின்படி செயல்படுகிறது. 1950–ஆம் ஆண்டு சனவரி 26 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசியல் அமைப்பின்படி இந்தியக் குடியரசானது நிர்வகிக்கப்படுகிறது. இந்திய அரசியல் அமைப்பு உலகின் மிக நீண்ட, எழுதப்பட்ட அரசியல் ஆவணமாகும்.

**இந்தியக் குடியரசு, 28 மாநிலங்களையும் 7 யூனியன் பிரதேசங்களையும் உடையது.**

| | | | |
|---|---|---|---|
| ஆந்திரப் பிரதேசம் | அரியானா | மகாராஷ்டிரம் | ராஜஸ்தான் |
| அருணாச்சலப் பிரதேசம் | இமாச்சலப் பிரதேசம் | மணிப்பூர் | சிக்கிம் |
| அசாம் | ஜம்மு காஷ்மீர் | மேகாலயா | தமிழ்நாடு |
| பீகார் | ஜார்கண்ட் | மிசோரம் | திரிபுரா |
| சத்தீஸ்கர் | கர்நாடகம் | நாகலாந்து | உத்திராஞ்சல் |
| கோவா | கேரளா | ஒரிசா | உத்திரப் பிரதேசம் |
| குஜராத் | மத்தியப் பிரதேசம் | பஞ்சாப் | மேற்கு வங்காளம் |

**யூனியன் பிரதேசங்கள்**

1) அந்தமான் நிக்கோபர் தீவுகள் 2) சண்டிகர் 3) தாத்ரா, நாகர் ஹவேலி

4) டையூ, டாமன் 5) லட்சத் தீவுகள் 6) புதுச்சேரி

7) தேசியத் தலைநகர் டெல்லி



பாராளுமன்றம்

## மத்திய அரசின் நிர்வாகம்

மத்திய அரசின் நிர்வாகத்தில் குடியரசுத்தலைவர், துணைக்குடியரசுத்தலைவர், பிரதம அமைச்சர், மத்திய அமைச்சர்கள் குழு மற்றும் தலைமை சட்டத் தலைவர் (அட்டர்னி ஜெனரல்) ஆகியோர் உள்ளனர்.

குடியரசுத் தலைவரே இந்திய நாட்டின் தலைவர் ஆவார். அவரே முதன்மைக் குடிமகனும் ஆவார். ஒற்றுமை, ஒருமைப்பாடு, நாம் இந்தியர் என்ற உணர்வுகளின் முழுமையான அடையாளமாகக் குடியரசுத் தலைவர் விளங்குகிறார். இவர் மறைமுகத்தேர்தல் முறையில்

தேர்ந்தெக்கப்படுகிறார். 35 வயது நிரம்பிய இந்தியக் குடிமக்கள் எவரும் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட முடியும். ஏறக்குறைய மைய அரசின் உயர் அதிகாரிகள் அனைவரையும் இவரே நியமனம் செய்கிறார்.



திருமதி. பிரதிபா தேவி சிங் பட்டேல்

குடியரசுத் தலைவர் பதவி நிரப்பபடாமலிருக்கும் நேரத்திலும், தனது பணியைச் செய்ய இயலாத நேரத்திலும், குடியரசுத்தலைவர் பணியை, துணைக்குடியரசுத் தலைவர் ஏற்று செயல்படுவார்.

இந்தியப் பராளுமன்ற அமைப்பின்படி குடியரசுத் தலைவர் பெயரளவிலான தலைவர். உண்மையான அதிகாரங்கள் அனைத்தும் பிரதமஅமைச்சரிடமே உள்ளது. தேர்தலில் வெற்றிபெற்ற பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சித் தலைவரையும், மக்கள் அவையின் நம்பிக்கையை பெற்றவருமான ஒருவரை, பிரதமஅமைச்சரகக் குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார். பிரதம அமைச்சர் ஆலோசனையின்படி மற்ற அமைச்சர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

## நாடாளுமன்றம்

மத்திய சட்டமன்றமானது, பாராளுமன்றம் எனவும், நாடாளுமன்றம் எனவும் அழைக்கப்படுகிறது. இது குடியரசுத்தலைவர் மற்றும் இரண்டு அவைகளைக் கொண்டது. இந்த அவைகள் மக்களவை(லோக்சபா), மாநிலங்களவை (இராஜ்ய சபா) என்பனவாகும்.



டாக்டர். மன்மோகன் சிங்

லோக்சபா என்பது பாராளுமன்றத்தின் கீழ் அவை அல்லது மக்களவை என அழைக்கப்படுகிறது. இதன் உறுப்பினர்கள் ( வயது வந்தோர் வாக்குரிமையின்படி ) மக்களால் தேர்தல் மூலம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் ஆகியன பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தேர்தலில் அதிக வாக்குகள் பெற்றவரே அந்தத்தொகுதியின் உறுப்பினராவார். தற்போது நம் நாடாளுமன்றத்தில் 2 ஆங்கிலோ – இந்திய நியமன உறுப்பினர்களை உள்ளடக்கி 545 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.

## மாநிலங்கள் அவை

இராஜ்யசபா எனப்படும் இது பாராளுமன்றத்தின் மேலவை ஆகும். மேலவை உறுப்பினர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த அவை மொத்தம் 245 உறுப்பினர்களைக் கொண்டது. இதில் 233 பேர் மறைமுகமானத் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கலை, இலக்கியம், சமூகப் பணியில் சிறப்பாக பணிபுரியும் 12 உறுப்பினர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

## மாநில அரசு
## மாநில அரசின் நிர்வாகம்

மாநில அரசின் நிர்வாகத்தில் ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள் குழு மற்றும் சட்டத்துறை தலைவர் (அட்வகேட் ஜெனரல்) ஆகியோர் உள்ளனர். ஆளுநர், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார். மாநிலங்களின் அரசியலமைப்புத் தலைவரும் இவரே. 35 வயதிற்கு மேற்பட்ட இந்திய குடிமக்கள் எவரும் ஆளுநராக நியமிக்கப்படலாம். தேர்தலில் வெற்றிப் பெற்ற பெரும்பான்மை உறுப்பினர்களை கொண்ட கட்சித் தலைவரும், சட்டமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றவருமான ஒருவரை, முதலமைச்சராக ஆளுநர் நியமிப்பார். முதலமைச்சர் ஆலோசனையின்படி மற்ற அமைச்சர்களை ஆளுநர் நியமிப்பார். மாநிலத்தின் அதிகாரங்கள் அனைத்தும் முதலமைச்சரிடமும் அவரின் அமைச்சர்கள் குழுவிடமும் இருக்கும்.

## மாநில சட்டமன்றம்

எல்லா மாநிலங்களின் சட்டமன்ற அமைப்பும் ஒரேசீராக அமையவில்லை. ஆந்திரப்பிரதேசம், பீகார், ஜம்மு–காஷ்மீர், கர்நாடகம், மகாராஷ்டிரம் மற்றும் உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஈரவை சட்ட மன்றமும் மற்ற எல்லா மாநிலங்களிலும் ஓரவை சட்டமன்றமும் உள்ளது. ஈரவை சட்டமன்றத்தில் சட்டமன்ற மேலவை, சட்டமன்ற பேரவை ஆகிய இரண்டு அவைகள் உள்ளன. இவைகள், மேலவை மற்றும் கீழவை எனப்படும். ஓரவை சட்ட மன்றத்தில் ஓர் சட்டமன்ற பேரவை மட்டுமே உள்ளது. இதுவே கீழவை என்று அழைக்கப்படுகிறது.

## நீதித் துறை

நீதித்துறை ஒரு சுதந்திரமான அமைப்பாகும். இந்தியாவின் உச்சநீதிமன்றம், அனைத்து நீதிமன்றங்களுக்கும் தலைமையானது. இந்தியாவில் உச்சநீதிமன்றம்.



உச்ச நீதி மன்றம்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பாதுகாவலனாக உள்ளது. இது புதுடெல்லியில் அமைந்துள்ளது. தற்போது ஒரு தலைமைநீதிபதி உட்பட 31 நீதிபதிகள் உச்சநீதி மன்றத்தில் உள்ளனர். மாநிலங்களின் தலைமை நீதிமன்றம் உயர்நீதிமன்றம் ஆகும். இந்தியாவில் 21 உயர்நீதிமன்றங்கள் உள்ளன. அவற்றுள் மூன்று உயர்நீதிமன்றங்கள், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்குப் பொதுவாக உள்ளன.

## இந்திய தேசியச் சின்னங்கள்

உலகத்தில் உள்ள சுதந்திரமான நாடுகள் அனைத்தும் தங்கள் நாட்டிற்கென்று சிறப்பான அடையாளங்களைக் கொண்டுள்ளன. அவற்றை தேசியச்சின்னங்கள் என்று அழைக்கிறோம். நமக்கென்று தனியே தேசியக்கொடி, தேசிய இலச்சினை, தேசியகீதம், தேசியப் பாடல், தேசியவிலங்கு, தேசியப் பறவை, தேசியமலர், தேசியமரம் ஆகியன உள்ளன. தேசியச்சின்னங்கள் நமது நாட்டின் ஒருமைப்பாட்டு அடையாளங்களாக உள்ளன. இவை தேசதியாகிகளுக்கு அஞ்சலி செலுத்த ஊக்குவிக்கின்றன.

## தேசியக்கொடி

செவ்வக வடிவமைப்பைக் கொண்ட நமது கொடி மூன்று நிறங்களால் ஆனது. அதன் மேற்பகுதியில் காவி நிறத்தையும், நடுவில் வெண்மை நிறத்தையும், கீழே கரும்பச்சை நிறத்தையும் கொண்டுள்ளது. அதன் நீள, அகல விகிதம் 3:2 ஆகும். கொடியின் மேல் உள்ள காவி நிறமானது தியாகத்தையும், தைரியத்தையும் குறிக்கிறது. மேலும் அது சுதந்திரப்போராட்ட வீரர்களின் தியாகத்தை நினைவுபடுத்துகிறது. நடுவில் உள்ள வெண்மைநிறம் உண்மையைக் குறிக்கிறது. வெண்மைப்பகுதியில் கருநீலநிறத்தில் அமைந்துள்ள சக்கரம் அறவழியில் முன்னேறிச்சென்று அமைதியினையும், செழுமையினையும் பெற்றுத்தர



தேசியக் கொடி

தூண்டுகிறது. இந்த சக்கரத்தின் வடிவம் சாரநாத் அசோகத்தூணின் தலைப்பகுதிக்குக் கீழ் உள்ள வடிவமாகும். சக்கரத்தின் விட்டமும், வெள்ளைப்பட்டையின் அகலமும், சரிசம வீதத்தில் உள்ளது. வெண்மை நிறப்பட்டையில் அமைந்துள்ள சக்கரம் 24 ஆரங்களை உடையதாகும். கீழே உள்ள கரும்பச்சை நிறம் இந்தியாவின் செழிப்பையும், வளமான நிலத்தையும், பசுமையினையும், நம்பிக்கையினையும் குறிக்கின்றது. நமது கொடியை நாம் மதித்தல் வேண்டும்.

### கொடியைப் பற்றிய விதிமுறைகள்

தேசியக்கொடியை ஏற்றும்போதும், இறக்கும்போதும் கவனமாகச் செயல்படல் வேண்டும்.

வேறு எந்த ஒரு கொடியையும் நமது தேசியக்கொடியின் வலது புறமோ அல்லது கொடியை விட உயரமாகவோ பறக்கவிடக் கூடாது.

கம்பத்தின் உச்சிவரை கொடி உயர்ந்திருக்க வேண்டும்.

சூரியன் மறையும்முன் தேசியக் கொடியை இறக்கிவிட வேண்டும்.

நமது நாட்டின், தலைவர் இறந்து விட்டாலோ அல்லது நட்பு நாட்டின் தலைவர் இறந்துவிட்டாலோ நமது தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிட வேண்டும்.

கொடியை கம்பத்தில் ஏற்றும்போது நாம் நேராக நிற்கவேண்டும்.

அரசியல் நிர்ணயச்சபை, தேசியக்கொடியை ஜூலை 22ம் நாள் 1947ஆம் ஆண்டு, சுதந்திரம் பெறுவதற்கு மூன்றுவார காலத்திற்கு முன்பே, அங்கீகாரம் அளித்தது. முதல் முறையாக நமது தேசியக்கொடி ஆகஸ்ட் 15ம் நாள் 1947ஆம் ஆண்டு ஏற்றப்பட்டது.

## தேசிய கீதம்

ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனியே ஒரு தேசியகீதம் உள்ளது. தேசியகீதம் பாடும்போதும், இசைக்கப்படும் போதும், மரியாதையைக் காட்டும்வகையில் நாம் நேராக நிற்க வேண்டும். தேசிய, மாநில மற்றும் முக்கிய விழாக்களில் தேசியகீதம் பாடப்படுகிறது.



இரவீந்திரநாத் தாகூர்

நமது இந்திய தேசியப்பாடலை தேசியக்கவிஞர் இரவீந்தரநாத்தாகூர் இயற்றினார். வங்காள மொழியில் உள்ள இந்தப்பாடல் ஐந்து பத்திகளைக் கொண்டது. அவற்றில் முதல் பத்தியில் உள்ள பாடல்மட்டுமே தேசியகீதமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

1950–ஆம் ஆண்டு சனவரி 24 – ஆம் நாள் நமது அரசியல் நிர்ணயசபையால் நமது தேசிய கீதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1911ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம்நாள், கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் இப்பாடல் முதன் முறையாகப் பாடப்பட்டது.

தேசியகீதத்தைப் பாடும், இசைக்கும் கால நேரம் 52 விநாடிகள் ஆகும்.

தேசியகீதம், தாய்நாட்டின் பெருமை, புகழ் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக உள்ளது. அது தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, சகிப்புத்தன்மை, நாட்டுப்பற்று ஆகிய அறச்செய்திகளை உணர்த்துகிறது.

## தேசியச்சின்னம்

நமது நாட்டு இலச்சினை அசோகரின் சாரநாத்தூணில் உள்ள சிங்கங்களின் உருவமாகும். 1950ஆம் ஆண்டு சனவரி 26–ஆம் நாள் குடியரசுதினத்தன்று, இந்த இலச்சினை நமது இந்திய நாட்டின் இலச்சினையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.



இந்திய தேசியச் சின்னம்

நமது தேசியச் சின்னத்தில் நான்கு சிங்கங்கள் முதுகோடு முதுகு இணைந்த நிலையில், வட்டபீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. (பார்ப்பதற்கு மூன்று சிங்கங்கள் மட்டுமே தெரியும். நான்காவது சிங்கம் பின்புறம் மறைவாக உள்ளது). இச்சிங்கங்களின் உருவங்களானது அதிகாரத்தையும், கம்பீரத்தையும் சுட்டிக்காட்டுகிறது. சிங்கங்களின் கீழேஉள்ள அடித்தட்டுப் பீடத்தின்வரிசையில் குதிரையும், மத்தியில் சக்கரமும், வலப்புறம்

காளையும் உள்ளன. குதிரை, ஆற்றலையும், வேகத்தையும் குறிக்கிறது. காளை, கடினஉழைப்பும், உறுதியையும் குறிக்கிறது, சக்கரம், தர்மத்தையும், அறவழியையும் குறிக்கிறது. இதன் கீழே தேவநாகரி மொழியில், 'சத்யமேவஜெயதே' என்னும் வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் 'வாய்மையே வெல்லும்' என்பதாகும்.

**தேசிய கீதம் பொருள்**

இந்தியத் தாயே! மக்களின் இன்ப, துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனதிலும் ஆட்சி செலுத்துகின்றாய்.

நின்திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும் கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும்,

திராவிடத்தையும், ஒரிசாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் இந்திய இமயமலைத் தொடரில் எதிரொலிக்கிறது. யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றிணைகிறது.

இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின் அருளைவேண்டுகின்றன. நின் புகழைப்பரப்புகின்றன.

இந்தியாவின் இன்ப, துன்பங்களைக் கணிக்கின்ற தாயே,

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!

## தேசியப்பாடல்

நமது தேசியப் பாடலான 'வந்தே மாதரம்', கவிஞர் பக்கிம்சந்திர சட்டர்ஜியால் சமஸ்கிருதமொழியில் இயற்றப்பட்டது. இப்பாடல் சுதந்திரப்போராட்டக்காலத்தில் வீரர்களை உற்சாகப்படுத்தியது. இது, இக்கவிஞர் எழுதிய 'ஆனந்தமடம்' என்ற புத்தகத்தில் 1882–ல் வெளியிடப்பட்டது. 1896ல் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்தியத் தேசிய காங்கிரஸ் மாநாட்டில் இப்பாடல் முதல்முறையாகப் பாடப்பட்டது. இப்பாடலை முதல் முதலில் கல்கத்தாவில் பாடியவர் ரவீந்தரநாத் தாகூர்.

## தேசிய விலங்கு

இந்தியாவின் தேசியவிலங்காக முதலில் சிங்கம் தேர்வுசெய்யப்பட்டிருந்தது. தற்போது தேசிய விலங்காக புலி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வலிமை, திறமை, மிகுந்த ஆற்றல் ஆகிய பண்புகளை குறிக்கும் நோக்குடன் புலி தேசிய விலங்காக தேர்வு செய்யப்பட்டது.



தேசிய விலங்கு—புலி

## தேசியப் பறவை

நமது தேசியப்பறவை 'மயில்' ஆகும். இதன் அழகானஇறகுகள் நம் நாட்டின் இயற்கை அழகைப் பிரதிபலிக்கின்றன. இந்திய இலக்கியங்கள்மயிலின் பெருமையைப்பற்றி உயர்வாகப் பேசுகின்றன.



தேசியப் பறவை – மயில்

## தேசிய மலர்

'தாமரை' நமது தேசியமலர் ஆகும். அதன் தோற்றம், பேரழகு, மணம் ஆகியன ஒப்பற்றதாகும். இதன் இதழ்கள் ஒன்றுசேர்ந்திருப்பது நமதுநாட்டின் ஒற்றுமையைக் குறிக்கிறது. புராண இலக்கியங்களில் முக்கிய இடத்தை இம்மலர் பெற்றுள்ளது.



| | |
|---|---|
| தேசியப் பழம் | : மா |
| தேசிய விளையாட்டு | : ஹாக்கி |
| தேசிய ஆறு | : கங்கை |
| தேசிய நாள்காட்டி | : சாகா காலப்பிரிவு |

## தேசிய மரம்

'ஆலமரம்' நமது 'தேசியமரம்' ஆகும். இது நம்அனைவரையும் ஒரு குடையின்கீழ் ஒன்றிணைக்கும் அடையாளமாகக் கருதப்படுகிறது.



தேசிய மரம்– ஆலமரம்

வலிமையான அரசியல் அமைப்பு, தேசியச்சின்னங்கள் ஆகியவை நம் அனைவரிடையே இந்தியர் என்ற ஒற்றுமை உணர்வை உருவாக்குகிறன. மேலும் இவை நமது நாட்டின் ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதாகவும் விளங்குகிறன.

## பயிற்சி

### I) சரியான விடையை எழுதுக.

1. நில அளவு அடிப்படையில் இந்தியா உலகின்___________பெரிய நாடாகத் திகழ்கிறது.

   அ) இரண்டாவது ஆ) ஐந்தாவது இ) ஏழாவது

2. ___________நாளில் இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.

   அ) 26 சனவரி 1950 ஆ) 15 ஆகஸ்ட் 1947 இ) 30 சனவரி 1930

3. இந்திய உச்ச நீதி மன்றம் அமைந்துள்ளது இடம்___________.

   அ) மும்பை ஆ) கொல்கத்தா இ) புதுடில்லி

4. தேசியப்பாடல் 'வந்தே மாதரத்தை' இயற்றியவர்___________.

   அ) பக்கிம் சந்திரசட்டர்ஜி ஆ)இரவீந்திரநாத் தாகூர்

   இ) ஜவஹர்லால் நேரு

5. நமது தேசிய மரம்___________.

   அ) வேப்பமரம் ஆ) ஆலமரம் இ) ஆப்பிள்மரம்

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இந்தியக் குடியரசு___________ன்படி நிர்வகிக்கப்படுகிறது.
2. இந்திய நாட்டின் தலைவர்___________ஆவார்.
3. லோச்சபா___________என்றும் அழைக்கப்படுகிறது.
4. நமது தேசிய___________ல் 'சத்யமேவ ஜெயதே' என்னும் வார்த்தைப் பொறிக்கப்பட்டுள்ளது.
5. இந்தியாவின் தேசியப் பறவை___________.

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. குடியரசு தலைவர் | இரவீந்தரநாத் தாகூர் |
| 2. முதலமைச்சர் | முதல் இந்தியக் குடிமகன் |
| 3. உச்ச நீதி மன்றம் | ஆளுநரால் நியமிக்கப்படுகிறார் |
| 4. தேசிய சின்னங்கள் | அரசியலமைப்பின் பாதுகாவலர் |
| 5. தேசிய கீதம் | சிறப்பான அடையாளங்கள் |

IV) குறுகிய விடையளி.

1. இந்தியாவின் அமைவிடத்தை எழுதுக.
2. இந்தியக் குடியரசுத் தலைவராவதற்குரிய தகுதிகள் யாவை ?
3. நமது நாட்டின் தேசிய சின்னங்கள் சிலவற்றைக் கூறு ?
4. நமது தேசிய கீதம் கூறும் செய்திகள் யாது ?
5. நமது தேசிய மலர் எதனைக் குறிக்கிறது ?

V) விரிவான விடையளி.

1. லோச்சபா அல்லது மக்களவையைப் பற்றி விரிவாக எழுது.
2. நமது தேசியக் கொடியின் முக்கியத்துவத்தை விவரி.
3. இந்தியாவின் தேசிய சின்னங்களை விவரி.

VI) செய்ய வேண்டியன.

1. இந்திய தேசிய காங்கிரஸ் 1947 ஜூலை 22க்கு முன்னால் பயன்படுத்திய கொடிகளைப் பற்றிய விவரங்களை சேகரிக்கவும் (நிவேதித்தா கொடி, மேடம் காமா கொடி, கொல்கத்தா கொடி, ஸ்தல சுய ஆட்சிக் கொடி)
2. கங்கை ஆறு நமது நாட்டின் தேசிய நதியாக ஏன் தேர்வு செய்யப்பட்டுள்ளது, என்பதனைப்பற்றி கலந்துரையாடு.

# 2. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள்

நமது தாய் நாட்டுக்கு 1947ஆம் ஆண்டு, ஆகஸ்டு 15ஆம் நாள் வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாகும். இந்த நாளில்தான் சுமார் 200 ஆண்டுகளாக தொடர்ந்த ஆங்கிலேய ஆட்சி நீக்கப்பட்டு, அரசியல் அதிகாரங்கள் இந்திய மக்கள் பிரதிநிதிகளுக்கு கிடைத்தது.

அமைச்சரவை தூதுக்குழுவின் பரிந்துரைப்படி, நம் இந்திய நாட்டிற்கான புதிய அரசியலமைப்பினை உருவாக்க இந்தியப்பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் நிர்ணயசபை 1946ல் அமைக்கப்பட்டது.

1946 டிசம்பர் 9ம் நாள் டாக்டர்.சச்சிதாநந்த சின்கா தலைமையில் அரசியல் நிர்ணயசபையின் முதல்கூட்டம் நடைபெற்றது. டாக்டர்.சின்காவிற்குப் பிறகு டாக்டர்.இராஜேந்திரபிரசாத் அரசியல் நிர்ணயசபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அவர் இந்திய குடியரசின், முதல் குடியரசுத்தலைவராகவும் செயல்பட்டார். அரசியல் நிர்ணயசபையானது, அரசியலமைப்புச் சட்டமியற்றும்பணியை வரைவுகுழுவிற்கு அளித்தது. 1947 ஆகஸ்டு 29ம் நாள் வரைவுக்குழுவின் தலைவராக டாக்டர்.பி.ஆர். அம்பேத்கார் நியமனம் செய்யப்பட்டார். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 'சிற்பி' எனப்படும் டாக்டர்.அம்பேத்கார் ஒரு திறமையான சட்ட வல்லுநர் ஆவார். சட்ட வரைவுக் குழு, இங்கிலாந்து, அமெரிக்கா, அயர்லாந்து, ரஷ்யா, பிரான்ஸ், சுவிஸ்சர்லாந்து போன்ற 60 நாடுகளின் அரசியலமைப்புச் சட்டத்தை ஆய்ந்துப்படித்து, அவற்றில் உள்ள தகுதிமிக்க சிறப்புக் கூறுகளை ஏற்றுக் கொண்டது.

அரசியலமைப்பு நிர்ணய சபை 1950 சனவரி 24ம் நாள் கடைசியாக கூடியது. 1950 சனவரி 26–ஆம் நாளில் நமது அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்நாளையே நாம் குடியரசு நாளாகக் கொண்டாடுகிறோம்.



டாக்டர். பாபு இராஜேந்திர பிரசாத்

**அரசியல் வரைவுக்குழு சட்ட வல்லுநர்கள்**

டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் குழுத் தலைவர்

என்.கோபால்சுவாமி ஐயங்கார்,

அல்லாடி கிருஷ்ணசாமிஐயர்

டாக்டர்.கே.எம்.முன்சி,

சையத்முகமது சாதுல்லா,

பி.எல். மிட்டர்,

என்.மாதவராவ்,

டி.டி.கிருஷ்ணமாச்சாரி,

டி.பி. கைத்தான்.

**அரசியலமைப்பு**

அரசியலமைப்பு என்பது, அரசியல் முறைகளின் அடிப்படைக் கோட்பாடுகளுடைய தொகுப்பாகும். இதன் அடிப்படையிலேயே நாட்டு மக்கள் ஆளப்படுகின்றனர்.

அரசியலமைப்புச் சட்டமன்றம் 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 18 நாட்கள் நடைபெற்றது. 11 திட்டமிட்டக் கூட்டங்களில் அரசியலைப்புச் சட்டத்தைப் பற்றி கலந்துரையாட 114 நாட்கள் ஆயிற்று.



டாக்டர். பி.ஆர். அம்பேத்கார்

1929ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற இந்தியதேசியக் காங்கிரஸ் மாநாட்டு தீர்மானத்தின்படி ‘பூரண சுயராஜ்யம்’ 1930 ஆம் ஆண்டு, சனவரி 26ம் நாள் கொண்டாடப்பட்டது. அதனை நினைவு கூறும் வகையில் 1950 ஜனவரி 26ம் நாள் இந்திய அரசியலமைப்புச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்திய அரசியல் அமைப்பு 22 பாகங்களையும், பணிரெண்டு அட்டவணைகளையும், 449 சரத்துக்களையும் கொண்டது.

## அரசியல் அமைப்புச் சட்டத்தின் சிறப்பியல்புகள்

1. முகப்புரை.
2. இறையாண்மை.
3. மதச்சார்பின்மை.
4. நாடாளுமன்ற மக்களாட்சி அரசு.
5. அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள்.
6. அரசு நெறிமுறைக்கோட்பாடு.
7. வயதுவந்தோர் வாக்குரிமை.

## அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்பியல்புகள்: முகப்புரை

சட்ட அறிமுகமே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முன்னுரை ஆகும். மக்களே அதிகாரத்தின் தோற்றுவாய் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை கூறுகிறது. இந்தியா ஓர் இறையாண்மையுடைய சமதர்ம, மதசார்பற்ற, மக்களாட்சி நாடாக உள்ளது. என முகப்புரைத் தெளிவுபடுத்துகிறது. நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை நமது நோக்கங்கள் எனவும் அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை கூறுகிறது.

## இறையாண்மை

இந்திய அரசியலமைப்புச்சட்டம் இந்தியமக்களுக்கு முழு உரிமைகளையும் வழங்கியுள்ளது. இது அரசியலமைப்புச் சட்டத்தின் பலபகுதிகளில் குறிப்பாக தேர்தல் என்னும் அதிகாரத்தில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. மத்திய, மாநிலஅரசுகள் மக்களிடமிருந்துதான் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்கின்றன. குறிப்பிட்ட கால இடைவெளியில் மத்திய,

மாநில அரசுகளுக்கு பிரதிநிதிகளை மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். இப்பிரதிநிதிகள் அரசின் நிர்வாக அதிகாரங்களை பெற்றுள்ளார்கள். இவர்கள் சட்டமன்றங்களுக்கு பொறுப்பாளர்களாகவும், மக்களுக்கு சட்டமன்றங்களின் வழியாக பணியாற்ற கடமைப்பட்டவர்களும் ஆவர். ஆகவே இவர்களை தேர்ந்தெடுக்கும் மக்களே உயர்அதிகாரம் மிக்கவர்கள். இதுவே இறையாண்மை கோட்பாட்டின் அடிப்படை ஆகும்.

### மதச் சார்பின்மை

இந்திய அரசின் தேசிய குறிக்கோள்களுள் ஒன்று


THE CONSTITUTION OF INDIA

WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens:

JUSTICE, social, economic and political;

LIBERTY of thought, expression, belief, faith and worship;

EQUALITY of status and of opportunity;

and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the unity of the Nation;

IN OUR CONSTITUENT ASSEMBLY this twenty-sixth day of November, 1949, do HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.

இந்திய அரசியலமைப்பு முகவுரை

மதச்சார்பின்மை ஆகும். மதச்சார்பின்மையை பின்பற்றும் நாட்டில் மக்கள் மத அடிப்படையில் பாகுபடுத்தப்படுவதில்லை. அனைத்துக் குடிமக்களும் தமது சமயத்தின்படி சுதந்திரமாக வழிபடவும், சமூக மற்றும் அரசியலில் சமமான உரிமைகளை அனுபவிக்கவும் முடியும். இந்திய அரசு எந்தவொரு மதத்தையும் சார்ந்ததல்ல. இந்தியாவில் எல்லா மதங்களுக்கும் சமவாய்ப்பும், சமமதிப்பும் தரப்படுகிறது.

### பாராளுமன்ற அரசு முறை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி பாராளுமன்றமானது நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. அரசின் நிர்வாகக்குழு, சட்டமன்ற நடவடிக்கைகள் இவைகளுக்கு இப்பாராளுமன்றமே பொறுப்பாகும். பாராளுமன்ற அரசு முறையை பொறுப்பு அரசு அல்லது காபினேட் அரசு என்றும் அழைப்பர்.

### அடிப்படை உரிமைகள்

அடிப்படை உரிமைகள் என்பன தனிமனிதனுக்கு மிகவும் அவசியமான உரிமைகள் ஆகும். அடிப்படை உரிமைகள், உண்மையான மக்களாட்சி நிலவவும், அனைத்து குடிமக்கள் சமத்துவம்பெறவும் உதவுகிறது. இந்த உரிமைகள் அரசியல் அமைப்புச் சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது. தனிமனிதனின் முழு பாதுகாப்பு, முன்னேற்றத்திற்கு இது அவசியமாகிறது. இந்த உரிமைகள் பறிக்கப்பட்டால் உயர்நீதிமன்றம் அல்லது உச்சநீதிமன்றத்தில் முறையிட்டு தீர்வு பெறலாம். அடிப்படை உரிமைகள் ஆறு வகைப்படும். அவையாவன,

#### சமத்துவ உரிமை

சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

#### சுதந்திர உரிமை

பேச்சு மற்றும் கருத்துகளை வெளியிடும் உரிமை, வாழும் உரிமை, தனிமனித உரிமை மற்றும் பல அடங்கும்.

#### சுரண்டலிருந்து பாதுகாக்கும் உரிமை

மனிதனை வியாபாரப்பொருள் ஆக்குதலையும், தொழிலைச்செய்ய கட்டாயப்படுத்துதலையும் மற்றும் குழந்தைத் தொழிலாளர்களையும் தடை செய்தல்.

#### மதச்சுதந்திர உரிமை

குடிமக்கள் எந்த மதத்தையும் பின்பற்ற உரிமை.

#### பண்பாட்டு மற்றும் கல்வி உரிமை

அனைத்து குடிமக்களும் தம்மொழி, கலாச்சாரத்தை, பண்பாட்டைப் பாதுகாக்கும் உரிமை. கல்வி நிறுவனங்களை நடத்தவும் சிறுபான்மையினருக்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

#### அரசியலமைப்பின்படி தீர்வுகாணும் உரிமை

அடிப்படை உரிமைகள் பறிக்கப்படும் எந்த குடிமகனும் உச்சநீதி மன்றத்தை அணுக உரிமை.

### அரசு நெறிமுறைக் கோட்பாடுகள்

சட்டங்கள் இயற்றும் போதும், அவற்றை நடைமுறைப்படுத்தும் போதும் பின்பற்ற வேண்டிய செயல்முறைகள் 'அரசு நெறிமுறைக்கோட்பாடுகள்' எனப்படும். எந்தவொருச் சட்டத்தை இயற்றும்போதும் அரசு கண்டிப்பாக இதனைக் கடைபிடிக்க வேண்டும். மக்கள் நலனைப் பாதுகாப்பதே இதன் நோக்கம் ஆகும். இந்த நெறிமுறைக் கோட்பாடுகளை 4 வகைப்படுத்தலாம்.

i) சமூக நலனை அடைய வழிகாட்டும் கோட்பாடுகள்.

ii) காந்தியக் கோட்பாடுகளைச் செயல்படுத்த வழிகாட்டும் கோட்பாடுகள்.

iii) பன்னாட்டு அமைதியை ஏற்படுத்த வழிகாட்டும் கோட்பாடுகள்.

iv) பல்வகையான நெறிக் கோட்பாடுகள்.

**சமூக நலனை அடைய வழிகாட்டும் கோட்பாடுகள்**

I) இக்கோட்பாடுகள் சமூகநீதியை வலியுறுத்துகின்றன. குடிமக்கள் அனைவருக்கும் வாழ்க்கைத் தேவைகளை வழங்குதல். ஆண், பெண் வேலைக்குச் சமஊதியம் வழங்குதல். வருவாய் ஏற்றத் தாழ்வை நீக்குதல் போன்ற பல நெறிமுறைகளை வலியுறுத்துகின்றது.

ii) காந்தியக் கோட்பாடுகளைச் செயல்படுத்த வழிகாட்டும் கோட்பாடுகள்

இக்கோட்பாடுகள் காந்தியச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டவை. சமூகத்தில் பின்தங்கியுள்ள, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் ஆகியோரின் கல்வி மற்றும் பொருளாதாரத்தை முன்னேற்றுதல்,கிராமப்பஞ்சாயத்துகளை உருவாக்குதல், குடிசைத் தொழில்களை வளர்த்தல் போன்றவை.

iii)பன்னாட்டு அமைதியை ஏற்படுத்த வழிகாட்டும் கோட்பாடுகள்

பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துதல்.

iv)பல்வகையான நெறிக்கோட்பாடுகள்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள கோட்பாடுகளைத் தவிர, சமநீதி, இலவச சட்ட உதவி, நாடுமுழுவதும் அனைவருக்கும் பொதுவான சட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல் போன்றவை இதில் அடங்கும்.

## வயது வந்தோர் வாக்குரிமை

அரசியல் அமைப்பு சட்டத்தில் வயதுவந்தோர் வாக்குரிமைத் திட்டத்தின்படி, சாதி, நிறம், மதம், பாலினம், படித்தோர், சொத்து உடைமை ஆகிய வேறுபாடுகளின்றி 18 வயது நிரம்பிய அனைவரும் தேர்தலில் வாக்களிக்க உறுதி செய்யப்பட்டுள்ளது.

## அடிப்படைக்கடமைகள்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இந்தியக் குடிமக்கள் செய்ய வேண்டிய பல்வேறு கடமைகள், அடிப்படைக் கடமைகள் ஆகும். அரசியமைப்புச் சட்டத்தில் இத்தகைய 11 கடமைகள் இடம் பெற்றுள்ளன.

**அடிப்படைக் கடமைகள்**

1) அரசியலமைப்புச் சட்டங்களின்படி நடத்தல் மற்றும் தேசியகீதம், தேசியக்கொடி மற்றும் தேசியச்சின்னங்களுக்கு மதிப்பு அளித்தல்,

2) நாட்டின் விடுதலைப் போராட்டவீரர்களின் உன்னத உணர்வுகளை நினைத்துப் போற்றுதல்.

3) நமது நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு இவற்றைப் பேணிக்காத்தல்.

4) நாட்டின் பாதுகாப்பிற்காக அக்கறை கொள்ளல், தேவை ஏற்பட்டால் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுதல்.

5) சகோதரத்துவத்தையும், நல்லிணக்கத்தையும் உருவாக்க முனைதல்.

6) நம்முடைய பண்பாடு மற்றும் பன்முகப் பாரம்பரிய கலாச்சாரத்தின் மேன்மையை மதித்துப் பாதுகாத்தல்.

7) காடுகள், ஏரிகள், ஆறுகள், மற்றும் விலங்குகள் போன்ற இயற்கை வளங்களைப் பாதுகாத்தலும் தரம் உயர்த்துதலும்.

8) அறிவியல் மனப்பான்மை, மனிதநேயம், ஆய்வுமனப்பான்மை ஆகியவற்றை மேம்படுத்துதல்.

9) நாட்டின் பொதுச்சொத்துக்களை அக்கறையுடன் பாதுகாத்தல், வன்முறையைக் கைவிடல்.

10) அனைத்துத் துறைகளிலும் மிகச்சிறந்த நிலையை அடைய முயற்சி செய்தல். நமதுநாடு தொடர்ந்து முன்னேறி உயர்ந்தநிலையை அடையப்பாடுபடுதல்.

11) ஆறு வயது முதல் 14 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருதல்.

இவ்வகையில் மிகுந்த கவனத்துடன் உருவாக்கப்பட்ட இந்திய அரசியலமைப்பானது, சமூக மாற்றத்திற்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் நல்வழியை காட்டுகிறது. மேலும், அனைத்து குடிமக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் வழிவகை செய்கிறது.

## பயிற்சி

**I) சரியான விடையை எழுதுக.**

1. இந்திய அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம்__________ தலைமையில் நடைபெற்றது.

   அ) Dr. இராஜேந்திரபிரசாத் ஆ) Dr. சச்சிதாநந்தசின்கா

   இ) Dr. பி.ஆர் அம்பேத்கார்

2. நமது அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்__________.

   அ) 26 மார்ச் 1950 ஆ) 26 ஜனவரி 1950 இ) 15 ஆகஸ்ட் 1947

3. இந்திய அரசியலமைப்பு முகப்புரை, இந்தியா ஒரு __________ நாடு என கூறுகிறது.

   அ) குடியரசு ஆ) ஏதேச்சதிகாரம் இ) முடியாட்சி

4. இந்திய மக்களுக்கு முழு உரிமையையும் இந்திய __________ வழங்கியுள்ளது.

   அ) பாராளுமன்றம் ஆ) அரசாங்கம் இ) அரசியலமைப்பு

5. பாராளுமன்றம் முறையில் அரசின் நிர்வாகக்குழுவுக்குப் __________ பொறுப்பாகும்.

   அ) மக்களவை ஆ) நீதித்துறை இ) சட்டமன்றம்

## II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் __________ ஆவார்.
2. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 'சிற்பி' __________ ஆவார்.
3. சட்ட அறிமுகமே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் __________ ஆகும்.
4. மதச் சார்பின்மை அரசு எந்த __________ சார்ந்ததல்ல.
5. __________ அரசினை நிறுவுவதே அரசு நெறிமுறைக் கோட்டிபாட்டின் நோக்கம் ஆகும்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. அரசியல் நிர்ணய சபை | 26 ஜனவரி 1950 |
| 2. வரைவுக் குழு | வரைவுக் குழுவின் தலைவர் |
| 3. பி.ஆர். அம்பேத்கார் | தொழிலை கட்டாயப்படுத்தி செய்ய வைத்தலுக்குத் தடை |
| 4. குடியரசு தினம் | 9 டிசம்பர் 1946 |
| 5. சுரண்டலிலிருந்து பாதுகாக்கும் உரிமை | 29 ஆகஸ்ட் 1947 |

## IV) குறுகிய விடையளி.

1. Dr. பி.ஆர். அம்பேத்கார் பற்றி குறிப்பு வரைக.
2. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை கூறுவன யாவை ?
3. இந்தியா ஒரு மதச் சார்பின்மை நாடு என நாம் ஏன் கூறுகிறோம் ?
4. அரசியலமைப்பின் படி தீர்வு காணும் உரிமை என்றால் என்ன ?
5. வயது வந்தோர் வாக்குரிமை என்றால் என்ன ?

## V) விரிவான விடையளி.

1. இறையாண்மை என்றால் என்ன ? விளக்குக.
2. இந்திய குடிமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை விவரி.

## VI) செய்ய வேண்டியன

1. நமது அன்றாட வாழ்வில் 'அடிப்படை உரிமைகள்' மறுக்கப்படுவதையும் அவற்றை பெறும் வழிமுறைகளையும் பற்றி கலந்துரையாடு.
2. ஆற்ற வேண்டிய அடிப்படைக் கடமைகளை' மையமாகக் கொண்டு ஒரு நாடகம் தயாரிக்கவும்.

# 3. அரசியல் கட்சிகள்

இன்றைய இந்தியாவில் மன்னராட்சிமுறை மறைந்து, தற்போது மக்களாட்சி முறையானது நடைபெற்று வருகிறது என்பதை அனைவரும் அறிவோம். 'மக்களாட்சி என்பது மக்களால், மக்களுக்காக, மக்களே ஏற்று நடத்தும் அரசு' என்பது ஆபிரகாம்லிங்கன் அவர்களின் கூற்று. மக்களாட்சியில் நாட்டின் குடிமகனே ஆள்பவரும், ஆளப்படுபவரும் ஆவார். எனவே குடிமக்கள் தங்கள் உரிமைகளையும், கடமைகளையும் அறிந்திருக்க வேண்டும். மேலும் நாட்டு நடப்புகளைப்பற்றி தெளிந்த அறிவையும் கொண்டிருத்தல் வேண்டும். எனவேதான் இதற்கான அரசியல் விழிப்புணர்வை அரசியல் கட்சிகள் உருவாக்குகின்றன. மக்கள் கருத்தை முன்நிறுத்த அவை துணைபுரிகின்றன. ஆகவே அரசியல்கட்சிகள் மக்களாட்சி முறையை வெற்றியடையச் செய்ய உதவுகின்றன எனலாம்.

மக்களாட்சியில், அரசியல் கட்சிகள் வெளிப்படையாக செயல்படும் அமைப்புகள் ஆகும். ஆகவே, அவை மக்களுக்கும், அரசுக்கும் இடையில் பாலமாகவும், பல்வேறு பிரச்சனைகளை விவாதிக்கும் மேடையாகவும் செயல்படுகின்றன.

## கட்சி என்பதன் பொருள்

மக்கள், ஒரு கூட்டமைப்பாக செயல்பட்டு, தேர்தலில் பங்கேற்று, ஆட்சி அமைக்கும் அதிகாரத்தைப் பெறச்செய்யும் அமைப்பு–அரசியல் கட்சியாகும். அவர்கள், மக்கள் சமூகத்தை உயர்த்த நல்ல கொள்கைகளையும், திட்டங்களையும் அமைத்துச் செயல்படுவர். தலைவர்கள், செயல் உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் ஆகிய மூன்று அமைப்புகளைக் கொண்டு அரசியல்கட்சிகள் செயல்படுகின்றன.

## அரசியல் கட்சிகளின் பண்புக்கூறுகள்

1. முக்கியப் பொதுகொள்கைகளை அரசியல் கட்சிகள் அடையாளம் காணுதல்.

2. ஆட்சி அதிகாரங்களில் பங்குபெறுவதை தங்கள் நோக்கமாகக் கொள்ளுதல்.

3. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் தங்களின் திட்டங்களையும், கொள்கைகளையும் நடைமுறைபடுத்தல்.

4. அரசியல் கட்சிகள் ஓரளவு நிலைத்திருக்கும் தன்மை உடையதாக விளங்குதல்.

5. தனக்கென்று தெளிவான நோக்கங்களையும், செயல்திட்டங்களையும் கொண்டிருத்தல் ஆகியவை அரசியல் கட்சியின் பண்புக்கூறுகள் ஆகும்.

## அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள்

அடிப்படையில் அரசியல் கட்சிகள், தேர்தலில்வென்று, பதவிகளைப்பெற்று அதிகாரங்களுடன் செயல்படுகின்றன. அவை பொதுவாகக் கீழ்காணும் செயல்பாடுகளைக் கொண்டுள்ளன.

1. தேர்தலைச் சந்திக்கின்றன.

2. வாக்காளர்களிடம் தங்கள் கட்சிக்கொள்கைகளையும், திட்டங்களையும் முன்வைக்கின்றன.

3. சட்டங்களை உருவாக்குவதில் தீர்மானிக்கும் பங்கு வகிக்கின்றன,

4.பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெறும் கட்சியே ஆளும் கட்சியாக செயல்பட்டு ஆட்சி அமைக்கிறது.

5.தேர்தலில் பெரும்பான்மையை இழக்கும் கட்சி, எதிர்கட்சி ஆகிறது. அது மாற்றுக் கருத்துக்களை முன்வைத்தும், அரசின் தோல்விகள் மற்றும் தவறானக் கொள்கைகளை விமர்சனம் செய்தும் செயல்படுகிறது.

6.கட்சிகள் பொதுக்கருத்துக்களை உருவாக்குகின்றன. பிரச்சனைகளுக்காகக் குரல் கொடுத்து அவைகளை வெளிப்படுத்துகின்றன.

### அரசியல் கட்சியின் அமைப்பும், செயல்படும் முறையும்

அரசியல் கட்சியானது படிநிலை நிர்வாக அமைப்பைக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட கால இடைவெளியில், தேர்தல்மூலம் கட்சியின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். கட்சியின் உயர்நிலைப்பதவி 'தலைவர்' பதவி ஆகும். தலைவருக்கு உறுதுணையாக உதவிட செயலாளர்களும், பொருளாளரும் உள்ளனர். இவர்களுடன் கட்சிப்பணி செய்திட செயற்குழு உள்ளது. செயற்குழு அவ்வப்போது கூடி, பிரச்சனைகள் விவாதித்து, கலந்துரையாடி முக்கிய முடிவுகளை எடுக்கின்றன. ஆறு மாதத்திற்கு ஒருமுறை அல்லது வருடத்திற்கு ஒருமுறை கட்சியின் பொதுக்குழுக்கூட்டம் நடத்தப்பட்டு அதில் கட்சியின் தீர்மானங்களும், செயல்பாடுகளும் வரையறுக்கப்படுகின்றன.

கட்சியின் மாநாடுகள், கட்சியின் வலிமையினையும், உறுப்பினர்களிடையே கட்டுப்பாட்டு உணர்வினையும், பெரும் ஆதரவினையும் வெளிக்காட்டுவதோடு பொதுமக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தவும் பயன்படுகிறது.

### கட்சி முறையின் வகைகள்

பொதுவாக கட்சிமுறைகள் மூன்று வகைப்படும், அவையாவன

1. ஒருகட்சி முறையில், ஓர் ஆளும்கட்சி மட்டுமே இருக்கும். எதிர்கட்சிகள் செயல்பட அனுமதிகிடையாது. முன்னாள் கம்யூனிச நாடான சோவியத் ரஷ்யா இதற்கு எடுத்துக்காட்டு ஆகும்.

2.இருகட்சி முறையில் இரண்டு பெரியகட்சிகள் மட்டுமே செயல்படும். எடுத்துக்காட்டு அமெரிக்கா, இங்கிலாந்து ஆகியவை.

3.பலகட்சிஆட்சி முறையில் இரண்டுக்கு மேற்பட்ட பல அரசியல்கட்சிகள் செயல்படுகின்றன. எடுத்துக்காட்டு இந்தியா, பிரான்ஸ் இத்தாலி மற்றும் இலங்கை, ஆகியவை.

### இந்தியாவில் பலகட்சி அமைப்பு முறை

பரந்து விரிந்த இந்திய நாடும், அதன் பன்முகத் தன்மையும் பல அரசியல் கட்சிகள் உருவாகக் காரணமாய் உள்ளன. உலகத்தில் அதிகமான எண்ணிக்கையுடைய அரசியல் கட்சிகள் கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது. பல்வேறு பட்ட மாநிலப் பிரச்சனைகள். பல வகையான சாதி, சமூக, பண்பாட்டு மற்றும் மொழி பிரிவுகளின் காரணமாக பலகட்சி அமைப்பு முறை இந்தியாவில் காணப்படுகிறது.

தேர்தல் முடிவிற்குப்பிறகு, மத்திய அரசில் கூட்டாட்சி அமைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்போது, மாநிலக்கட்சிகள், தேசியக்கட்சிகளுக்கு ஆதரவை நல்கி கூட்டாட்சி அமைக்க முற்படும் முக்கிய பங்கினை ஆற்றுகிறது.

### மாநில கட்சிகள்

சட்டப் பேரவை அல்லது நாடாளுமன்ற (கீழ்அவை) தேர்தலில் குறிப்பிட்ட சதவீதம் அல்லது குறிப்பிட்ட இடங்களைப்பெற்ற கட்சிகள் என்ற அடிப்படையில், இந்தியத் தேர்தல் ஆணையத்தினால் ஒப்புதல் பெற்ற கட்சிகள் மாநிலக் கட்சிகளாகும்.

### தேசியக் கட்சிகள்

குறைந்தது நான்கு மாநிலங்களில், மாநிலக்கட்சி என ஒப்புதல்பெற்ற கட்சிகள் தேசியக் கட்சிகளாகும்.

அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல் ஆணையத்திடம் தங்கள் கட்சியைப் பதிவு செய்ய வேண்டும். தேர்தல் ஆணையம் அனைத்துக் கட்சிகளையும் சமமாக நடத்துகிறது. அமைப்பு ரீதியான மாநில மற்றும் தேசியக்கட்சிகளுக்கு சிறப்புச் சலுகைகளை அளிக்கிறது. கட்சி சின்னத்தில் போட்டியிட அனுமதிக்கிறது. அரசியல் கட்சியின் ஒப்புதல் பெற்ற வேட்பாளர்கள் மட்டுமே கட்சி சின்னத்தைத்தேர்தலில் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறு அரசியல் கட்சிகளானது மக்களாட்சியைச் சிறப்பாக நடத்த உதவுகின்றன. மேலும் மக்களாட்சியின் முதுகெலும்பாகவும் அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன.

## பயிற்சி

### I) சரியான விடையை எழுதுக.

1. ___________விழிப்புணர்வை அரசியல் கட்சிகள் உருவாக்குகின்றன.

அ) சமூக ஆ) பொருளாதார இ) அரசியல்

2. இரு கட்சிமுறை உள்ள நாடு___________.

அ) இந்தியா ஆ) அமெரிக்கா இ) பிரான்ஸ்

3. ___________ மாநிலங்களில், மாநிலக்கட்சி என ஒப்புதல் பெற்றகட்சிகள் தேசியகட்சிகள் ஆகும்.

அ)நான்கு ஆ) ஐந்து இ) ஆறு

4. ___________மக்களாட்சியின் முதுகெலும்பாக செயல்படுகின்றன.

அ) தேர்தல் ஆ) அரசியல் கட்சிகள் இ) வாக்குகள்

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. மக்களாட்சியில் குடிமகனே ஆள்பவரும்___________ஆவார்.
2. அரசியல் கட்சிகள்___________கருத்தை உருவாக்க துணைபுரிகின்றன.
3. அரசியல் கட்சிகள்___________க்கும், அரசுக்கும் இடையில் இணைப்பாக செயல்படுகின்றன.

4. உலகத்தில் அதிகமான எண்ணிக்கையுடைய அரசியல் கட்சிகள் கொண்ட நாடாக __________ திகழ்கிறது.

### III) சுருக்கமாக விடையளி.

1. மக்களாட்சியைப் பற்றி ஆபிரகாம்லிங்கன் கூறியது என்ன ?
2. அரசியல் கட்சி என்றால் என்ன ?
3. அரசியல் கட்சியின் உள்உறுப்புகள் யாவை ?
4. அரசியல் கட்சியின் பங்கு கூறுகளில் சிலவற்றைக் குறிப்பிடுக.
5. எப்பொழுது அரசியல் கட்சி தேசிய கட்சியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது ?

### IV) விரிவான விடையளி.

1. மக்களாட்சி நாட்டில் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளைப் பற்றி விரிவாக எழுது.
2. உலகில் உள்ள மூன்றுவகை கட்சிமுறைகள் யாவை ? அவற்றினை எடுத்துக்காடுகளுடன் விளக்கவும்.

### V) செய்ய வேண்டியன.

உன்னுடைய மாநிலத்தில் உள்ள மாநிலகட்சிகள், தலைவர்,கட்சி சின்னம், நோக்கங்கள் மற்றும் தேர்தல் அறிக்கை ஆகியவற்றை சேகரிக்கவும்.

# 4. ஐக்கிய நாடுகள் அவை

நமது உலகில் கி.பி.1939 முதல் கி.பி.1945ஆம் ஆண்டு வரையில் நடைபெற்ற இரண்டாவது உலகப் போர், முதல் உலகப்போரைவிட பெரும்அழிவை ஏற்படுத்தியது. இந்தப் போரில் 50 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர். முதல் உலகப் போரின்முடிவில் ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டுக்கழகம் உலகஅமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டாத காரணத்தினால் இரண்டாம் உலகப்போர் ஏற்பட்டது.

அமெரிக்கா, சோவியத்ரஷ்யா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் உலகத்தில் உடனடியாக நிரந்தரமான அமைதி ஏற்படுத்த ஒரு புதிய அமைப்புத்தேவை என உணர்ந்தன. அதன் விளைவாக ஐக்கிய நாடுகள் அவை உருவானது.

## ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றமும், தொடக்கக்காலத்திட்டங்களும்

உலக அமைதியை நிலைநாட்ட உருவாக்கிய பன்னாட்டுநிறுவனத்தின் அடிப்படைத் திட்டங்கள், அமெரிக்காவின் ஆதரவுடன் 1939ஆம் ஆண்டு உருவாயின. உலக அமைதிக்காக செயலாற்றும் நேசநாடுகளைக் குறிப்பதற்காக “ஐக்கியநாடுகள்” என்ற பெயரை அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத்தலைவர் பிராங்கிளின் டி ரூஸ்வெல்ட் உருவாக்கினார். சனவரி 1ம் நாள் 1942ஆம் ஆண்டு, 26 நாடுகள் சேர்ந்து அட்லாண்டிக் சாசனத்தில் கையெழுத்திட்டனர். அந்தச் சாசனத்தில் ‘ஐக்கிய நாடுகள்’ என்ற பெயர் முதன் முதலில் அதிகாரப்பூர்வமாகப் பயன்படுத்தப்பட்டது.

## அட்லாண்டிக் சாசனம்

இது உலகமக்களிடையே அமைதி மற்றும் பாதுகாப்பை உருவாக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு கொள்கை அமைப்பாகும். 1941 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் நாள், அமெரிக்கா அதிபர் பிராங்களின் டி ரூஸ்வெல்ட்டு, இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அட்லாண்டிக் கடலில் ஹெச். எம். எஸ். வேல்ஸ் பிரின்ஸ் என்னும் கப்பலில் பயணம் செய்யும் போது இந்த சாசனத்தில் கையொப்பமிட்டனர். எனவே இது அட்லாண்டிக்சாசனம் என அழைக்கப்படுகிறது.

## ஐக்கிய நாடுகள் சாசனம்

பல்வேறு நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளின் முடிவில் ஐக்கியநாடுகள் அவை உருவானது. ஐக்கிய நாடுகள் அவையின் சாசனத்தை எழுதுவதற்குச் சான்ப்ரின்சிஸ்கோ நகரில் ஒரு மாநாடு ஏப்ரல் 25ம் நாள் 1945 ஆம் ஆண்டு கூட்டப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அவையின் இலக்குகள், நோக்கங்கள், விதிமுறைகள் ஆகியவற்றின் தொகுப்பே ஐக்கிய நாடுகள் அவை சாசனம் ஆகும். இச்சாசனத்தில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் ஜுன் 26ஆம் நாள் 1945 ஆம் ஆண்டு கையெழுத்திட்டனர். போலந்து மட்டும் பின்னர் கையெழுத்திட்டது. அக்டோபர் 24 ஆம் நாள் 1945 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள்அவை தமது செயல்பாட்டைத் தொடங்கியது. எனவே அக்டோபர் 24ம் நாளை, ஐக்கிய நாடுகள் அவையின் நாளாக கொண்டாடப்படுகிறது.

ஐ.நா.சபையை உருவாக்குவதற்கு முன் கூட்டப்பட்ட மாநாடுகள்,

1943 அக்டோபர் 30 – மாஸ்கோ.

1943 டிசம்பர் 1 – டெக்ரான்.

1944 செப்டம்பர் 21 – டம்பர்டன் ஒக்ஸ்.

1944 அக்டோபர் 7 – டம்பர்டன் ஒக்ஸ்.

1945 பிப்ரவரி 11 – யால்டா.

## ஐ.நா. உறுப்பினர்கள்

அமைதியை விரும்பும் நாடுகள் ஐநாவின் உறுப்பினர் ஆகலாம். தற்போது 192 நாடுகள் இதில் உறுப்பினராக உள்ளனர். இதன் தலைநகர் நியூயார்க்கில் 'மன்ஹாட்டன்'னில் பன்னாட்டு பகுதியில் அமைந்துள்ளது.

## ஐ.நா சபையின் இலச்சினை, கொடி மற்றும் மொழிகள்

ஐந்து உள்வட்டங்களும், அதன்மீது வடதுருவத்திலிருந்து பார்த்தால் தெரியக்கூடிய வகையிலான உலகப்பட தோற்றமும், அதனைச் சூழ்ந்து ஆலீவ் இலைக்கொத்துகளும் கொண்ட படம் ஐ.நாவின் இலச்சினையாக உருவாக்கப்பட்டுள்ளது. உலக அமைதியை குறிக்கும் வண்ணம் ஆலிவ் இலைக்கொத்துகளும், உலக அமைதி மற்றும் பாதுகாப்பினை அடைவதே ஐ.நா.வின் முக்கிய இலக்கு என்பதை எடுத்துரைக்க உலகபடமும் ஐநாவின் இலச்சினையாக உருவாக்கப்பட்டுள்ளது.



ஐ.நாவின் இலச்சினை

வெளிர்நீலநிறக் கொடியின் நடுவில் வெள்ளைநிறத்தில் ஐ.நாவின் இலச்சினை பொறிக்கப்பட்ட கொடி, ஐ.நாவின் கொடியாக அமைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ருஷியன், சீனமொழி மற்றும் அரேபியமொழி ஆகியவை ஐ.நாவின் பொது மொழிகளாக இருக்கின்றன.

## ஐ.நா.வின் செயல்கள்

அமைதியை நிலை நாட்டல்.

முரண்பாடுகளை களைதல்.

அகதிகளுக்கு பாதுகாப்பு அளித்தல்.

தீவிரவாதம் தடுத்தல், படைவலிமைக்குறைப்பு.

மக்களாட்சியை மேம்படுத்தல்.

தொடர் வளர்ச்சி.

பன்னாட்டு மக்கள் மற்றும் குழந்தைகள்நலன் மேம்படுத்தல்.

அம்மை நோயினால் ஏற்படும் இறப்பு விகிதத்தைக் குறைத்தல்.

போலியோ நோயை ஒழித்தல்.

மலேரியா இறப்புகளைத் தடுத்தல்.

உணவு உற்பத்தியைப் பெருக்குதல்.

## ஐ.நா. சபையின் நோக்கங்கள்

உறுப்புநாடுகளுக்கு இடையே ஏற்படும் வேறுபாடுகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காணுதல்.

உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டல்.

நாடுகளிடையே நட்புறவுகளை உருவாக்குதல்.

உலகப்பொருளாதாரம், சமூகப்பண்பாடு மற்றும் மனிதஇனம் சார்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஒத்துழைத்தல்.

சமூக முன்னேற்றம், தரமானவாழ்வு மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் ஆகியன ஐ.நா சபையின் நோக்கங்களாகும்.

### ஐ.நா.சபையின் 'ஆயிரம் ஆண்டு குறிக்கோள்'

இந்த ஆயிரம் ஆண்டில், கீழ்க்கண்ட குறிக்கோள்களை ஐ.நா. அவை வகுத்துள்ளது.

1. மிகுதியான ஏழ்மையையும், பட்டினியையும் நீக்குதல்.

2. அனைவருக்கும் தொடக்கக்கல்வி அளித்தல்.

3. பாலின சமத்துவத்தையும், பெண்களுக்கு அதிகாரமளித்தலையும் உருவாக்குதல்.

4. குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைத்தல்.

5. அன்னையர் உடல் நலம் பேணுதல்.

6. எய்ட்ஸ், ஹெச்ஐவி, மலேரியா போன்ற நோய்களைக்களைய நடவடிக்கை எடுத்தல்.

7. சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல்.

8. முன்னேற்றப்பணிகளுக்காக உலகளாவியத் தோழமையை உருவாக்குதல்.

### ஐ.நா. சபையின் அமைப்புகள்

ஐ.நா. சபையானது, ஆறு முக்கிய அமைப்புகளைக் கொண்டு செயல்படுகிறது. அவைகளாவன:

1. பொதுப்பேரவை.

2. பாதுகாப்புப் பேரவை.

3. பொருளாதார மற்றும் சமூகப்பேரவை.

4. பன்னாட்டு நீதிமன்றம்.

5. அறங்காவலர் பேரவை

6. பன்னாட்டு செயலகம்

### பொதுப்பேரவை

ஐ.நா.வின் அனைத்து அமைப்புகளில் மிகமுக்கியமான அங்கம் பொதுப்பேரவை ஆகும். இது **மனிதஇனப் பாராளுமன்றம்** என்று அழைக்கப்படுகிறது. பொதுபேரவையில் அனைத்து உறுப்புநாடுகளின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவாக்கு உண்டு. ஒவ்வோர் உறுப்பு நாடும் ஐந்து பிரதிநிதிகளைப் பொதுப்பேரவைக்கு அனுப்பமுடியும். ஆண்டுக்கு ஒருமுறை பொதுக்குழு கூடும். பெரும்பாலும் செப்டம்பர் மாதத்தில் பொதுக்குழுக்கூட்டம் நடைபெறும். பாதுகாப்புப் பேரவையின் வேண்டுகோளின் படி தேவைப்படும்போது அவசரக் கூட்டமும் நடைபெறும்.

பொதுப்பேரவையின் தலைவராக 1954ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர், திருமதி.விஜயலட்சுமி பண்டிட் ஆவார்.

முக்கிய நடவடிக்கைகளான, அமைதி, பாதுகாப்பு, புதிய உறுப்புநாடுகளைச் சேர்த்தல், வரவு, செலவு திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகியவற்றிற்கு 2/3 பங்கு உறுப்பினர்களின் ஆதரவுதேவை. மற்றத்தீர்மானங்களுக்கு சாதாரணப் பெரும்பான்மையே போதுமானது.

### பொதுப்பேரவையின் முக்கியச் செயல்பாடுகள்

1. தலைவரையும், 21 துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பது.

2. பாதுகாப்புப்பேரவையின் நிரந்தர உறுப்பினரல்லாதவர்களையும், ஐ.நா. சபையின் பிற அமைப்புகளுக்கான உறுப்பினர்களையும் தேர்ந்தெடுப்பது.

3. ஆண்டு வரவு, செலவுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பது.

4. பாதுகாப்புப்பேரவையின் பரிந்துரையின்படி, பொதுச்செயலர் மற்றும் பன்னாட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை நியமனம் செய்வது.

### பாதுகாப்புப் பேரவை

ஐ.நா. அவையின் இரண்டாவது முக்கிய அமைப்பு பாதுகாப்பு அவை ஆகும். இது ஐ.நா. அவையின் நிர்வாக அமைப்பாக விளங்குகிறது. பாதுகாப்பு பேரவையானது 5 நிரந்தர உறுப்பினர்களையும், 10 நிரந்தரமற்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி, மொத்தம் 15 பேரைக்கொண்டது. ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சீனா ஆகியவை நிரந்தர உறுப்பினர்கள். மற்ற நிரந்தரமற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 2 ஆண்டுகளாகும். இவர்கள் பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர். பாதுகாப்புப்பேரவையின் உறுப்பினர்கள் மாதம் ஒருமுறை கூடி புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பர். 2/3 பங்கு உறுப்பினர்களின் ஆதரவின் அடிப்படையில் முடிவுகள் தீர்மானிக்கப்படும். நிரந்தர உறுப்புநாடுகளுக்குத் தடுப்புரிமை ஆணை (veto power) உண்டு. இதனைப்பயன்படுத்தி ஒரு நிரந்தர உறுப்புநாடு எந்த ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்ற முடியாமல் தடுக்க இயலும்.

**2010 ஆம் ஆண்டில் இந்தியா, பாதுகாப்பு பேரவையின் நிரந்தரமற்ற உறுப்பினராக 2 ஆண்டு காலத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.**

### பாதுகாப்புப்பேரவையின் முக்கியச் செயல்பாடுகள்

1. உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்துதல்.

2. உறுப்பு நாடுகளிடையே எழும்பிரச்சனைகளை அமைதிவழியில் தீர்வுகாணுதல்.

3. புதிய உறுப்பினர்களைச் சேர்க்கப்பரிந்துரைத்தல்.

4. பாதுகாப்புப் பேரவையின் பொதுச்செயலர் தேர்தலில் பங்கெடுத்தல்.

### பொருளாதார மற்றும் சமூகப்பேரவை

இப்பேரவை ஐநாவின் பொருளாதார, சமூகச் செயல்பாடுகளையும், மற்றும் ஐநாவின் சிறப்பு நிறுவனத்தின் பணிகளையும் ஒருங்கிணைக்கிறது. இதன் 54 உறுப்பினர்கள் ஒவ்வொரு மூன்றாம் ஆண்டும் பதவிவிலகுவர். பின்னர் அதில் புதியஉறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பேரவை, தேவை ஏற்படும்போதெல்லாம் ஆண்டு முழுவதும் கூடும். இந்தப்பேரவையின் முக்கியக்கூட்டம் ஜுலை மாதம் நடைபெறும். இதில் பொருளாதாரப் பிரச்சனைகள் , சமூக – மனிதாபிமானப் பிரச்சனைகளான, சமூக வளர்ச்சி, பெண்கள் நிலை, குற்றங்களைத்தடுத்தல், போதைமருந்துகள் ஆகியவைப்பற்றி விவாதிக்கப்படும்.

### அறங்காவலர் பேரவை

தன்னாட்சி அதிகாரம் பெறாத 11 நாடுகளை நிர்வகிக்க 7 உறுப்பினர் கொண்ட அறங்காவலர்பேரவை அமைக்கப்பட்டது. பேரவை மேற்பார்வைசெய்த நாடுகள் தன்னாட்சி பெற உதவியது. 1994ஆம் ஆண்டுக்குள் இந்நாடுகளனைத்தும் சுதந்திரம் அடைந்தன. இப்பணி தற்போது நிறைவுற்றதால், வருங்காலத்தில் தேவை ஏற்பட்டால் அறங்காவலர் பேரவை செயல்பட தொடங்கும் வகையில் அறங்காவலர் பேரவை மாற்றியமைக்கப்பட்டது.

### பன்னாட்டு நீதிமன்றம்

பன்னாட்டு நீதிமன்றம் 'உலக நீதிமன்றம்' என அழைக்கப்படுகிறது. இது ஐ.நா. அவையின் முக்கிய நீதி அமைப்பாகும். இந்நீதிமன்றத்துக்கான 15 நீதிபதிகள் பொதுக் குழுவாலும், பாதுகாப்புப் பேரவையாலும் தேர்ந்தெடுக்கப்படுவர். உறுப்பு நாடுகளிடையே எழும் பிரச்சினைகளை இந்நீதிமன்றம் தீர்த்துவைக்கும். மேலும், ஐ.நா. அவைக்கும், அதன்கீழ் செயல்படும் சிறப்பு நிறுவனங்களுக்கும் தேவையான அறிவுரைகளையும் இது வழங்கும். இது ஹாலந்து நாட்டில் உள்ள ஹேக் என்ற நகரில் அமைந்துள்ளது.

### செயலகம்

செயலகமானது ஐ.நா.சபையின் பொதுக்குழு, பாதுகாப்புப்பேரவை, மற்றும் பிற அமைப்புகளின் வழிக்காட்டுதலின்படி நிர்வாகப்பணிகளைச் செய்கிறது. பொதுச் செயலரின் தலைமையிலும், வழிகாட்டுதலிலும் செயலகத்தின் நிர்வாகப்பணிகளானது நடைபெறுகின்றன. தென்கொரியாவைச்சேர்ந்த பான்கீமூன், ஐ.நாவின் தற்போதைய பொதுசெயலர் ஆவார். இவர் 2007 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இச்செயலகத்தில் பல்வேறு துறைகளில் அலுவலர்கள், ஊழியர்கள் என 7500 பேர் பணிபுரிகிறார்கள். திறமை, நேர்மை, தகைமை ஆகிய உயர்ந்த பண்புகள் அடிப்படையிலேயே, இதன் அலுவலர்கள் தேர்வுசெய்யப்படுகிறார்கள்.

ஐ.நா. அவை மேலும் 30 சிறப்பு நிறுவனங்களின் துணையுடன் இலக்கினை அடைய அரும்பாடுபடுகிறது.

**ஐ.நா. சபையின் சிறப்பு நிறுவனங்கள்**

FAO - உலக உணவு மற்றும் வேளாண் நிறுவனம். (Food and Agricultural Organization )

ILO - பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம். (International Labour Organization ).

IMF - உலக நிதி நிறுவனம். ( International Monetary Fund).

UNICEF- ஐ.நா. உலகநாடுகள் குழந்தைகள் நலநிதி. (United Nations International & Children Emergency Fund)

UNESCO-ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம். (United Nations Educational Scientific and Cultural Organization)

WHO- உலக மக்கள்நல நிறுவனம். (World Health Organisation ).

WTO- உலகளாவிய வணிக நிறுவனம். (World Trade Organisation ).

## ஐ.நா. அவையின் சாதனைகள்

உலக நாடுகளிடையே போரைத்தவிர்த்து, அமைதியையும், பாதுகாப்பையும் ஐ.நா. அவை உருவாக்கி வருகிறது. உறுப்புநாடுகளிடையே உள்ள சமூக, கலாச்சார, பொருளாதார, மனிதாபிமானப் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுகிறது.

### ஐ.நா. அவையின் பெரும் சாதனைகள்

1946–ல் ஈரானிலிருந்து ரஷ்யப் படைகளைத் திரும்பப்பெறவும், சிரியா, லெபனான் நாடுகளிலிருந்து பிரிட்டன், பிரான்ஸ் படைகளைத் திரும்பப்பெறவும் செய்தது.

1947–ல் டச்சு நாட்டின் பிடியிலிருந்து இந்தோனேசியாவுக்கு விடுதலை வழங்கியது.

1956–ல் சூயஸ் கால்வாய் பிரச்சனையை முடிவுக்குக் கொணர்ந்து அதை அனைத்து நாடுகளின் பயன்பாட்டிற்குப் பொதுவாக்கியது.

1962 மற்றும் 1973–ல் எழுந்த, மத்திய கிழக்கு நாடுகள் பிரச்சனையையும், கியூபா ஏவுகணைப் பிரச்சனையையும் முடிவுக்கு கொண்டு வந்தது.

1988–ல் ஏற்பட்ட ஈரான் – ஈராக் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.

1989–ல் ஆப்பானிஸ்தானிலிருந்து ரஷ்யப்படைகளைத் திரும்பப்பெற செய்தது.

1990–ல் குவைத் நாட்டிற்கு மேலாண்மையினை பெற்றுத்தந்தது. கம்போடியா, எல் சால்வேடர், கௌட்டாமேலா, மொசாம்பிக் ஆகிய நாடுகளின் உள்நாட்டுப் போர்களை முடிவுக்கு கொண்டுவந்தது.

ஐ.நா சபையின் சிறப்பு அமைப்பான உலக சுகாதார நிறுவனம் (WHO) பெரியம்மையை முழுவதும் நீக்கியதுடன் போலியோ, மலேரியா, காசநோய் ஆகியவற்றை உலகிலிருந்து நீக்கவும் உறுதியேற்று செயல்பட்டு வருகிறது.

அகதிகளுக்கான ஐக்கியநாடுகளின் மேலாணையர் அலுவலகம் (UNCHR) அகதிகளுக்கு ஆற்றிய சேவைக்காக 1954 மற்றும் 1981ஆம் ஆண்டுகளில் நோபல் பரிசு பெற்றுள்ளது.

வருங்காலத் தலைமுறையினருக்கு அமைதியான, பாதுகாப்பான உலகை உருவாக்க ஐக்கிய நாடுகள் அவையும் அதன் பிற நிர்வாக அமைப்புகளும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

## பயிற்சி

I) சரியான விடையை எழுதுக.

1. ஐ.நா.சபையின் தலைமையகம் __________ நகரில் உள்ளது.
   அ) வாஷிங்டன் ஆ) ஹேக் இ) நியுயார்க்
2. __________ மனித இனப்பாராளுமன்றம் என்று அழைக்கப்படுகிறது.
   அ) அறங்காவலர் பேரவை ஆ) பொதுப்பேரவை
   இ) பொருளாதார மற்றும் சமூகப் பேரவை
3. ஐ.நா.வின் அலுவலக மொழிகளில் ஒன்று __________.
   அ) இந்தி ஆ) ஜெர்மனி இ) பிரெஞ்சு

4. ஐ.நா.வின் பாதுகாப்பு பேரவை__________ நிரந்தர உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

அ) 4 ஆ) 5 இ) 10

5. ஐ.நா.சபையின் சிறப்பு அமைப்பான__________தனது செயல்திட்டங்களில் பெரியம்மையை முழுமையாக நீக்கியுள்ளது.

அ) உலக சுகாதார நிறுவனம் ஆ) பன்னாட்டு தொழிலாளர் நிறுவனம் இ) ஐ.நா.கல்வி அறிவியல் மற்றும் பன்னாட்டு நிறுவனம்.

## II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஐக்கிய நாடுகள் என்ற பெயரை உருவாக்கியவர் __________.
2. ஐக்கிய நாடுகள் சாசனத்தில் __________ நாடுகள் ஜீன் 26ம் நாள் 1945ம் ஆண்டு கையெழுத்திட்டனர்.
3. ஐ.நா.சபையின் நிர்வாக அமைப்பாக __________ விளங்குகிறது.
4. __________ ஆண்டுக்குள் அறங்காவலர் பேரவை மேற்பார்வை செய்த அனைத்து நாடுகளும் தன்னாட்சி பெற்றன.
5. பன்னாட்டு நீதிமன்றம் ஹாலந்து நாட்டில் உள்ள __________ நகரில் உள்ளது.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. ஐ.நா.சபை மாநாடு | அகதிகளை புனரமைப்பு. |
| 2. ஐ.நா.சபை | சான் பிரான்சிஸ்கோ |
| 3. பான் கீ மூன் | நியூயார்க் |
| 4. ஐ.நா.தலைமையகம் | 24ம்நாள் அக்டோபர் 1945 |
| 5. யு.என்.சி.எச்.ஆர் | ஐ.நா.பொதுச்செயளர் |

## IV) சுருக்கமாக விடையளி.

1. ஐ.நா.சபையின் இலச்சினையைப் பற்றி எழுதுக.
2. ஐ.நாசபையின் அலுவலக மொழிகள் யாவை ?
3. ஐ.நா.சபையின் நோக்கங்களில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.
4. பாதுகாப்பு பேரவையில் உள்ள நிரந்தர உறுப்பினர்கள் யாவர் ?
5. பன்னாட்டு நீதி மன்றத்தின் பணிகள் யாது ?

## V) விரிவான விடையளி.

1. ஐ.நா.சபையின் 'ஆயிர ஆண்டு வளர்ச்சிகுறிக்கோள்'களைக் குறித்து விரிவாக எழுதவும்.
2. ஐ.நா.பையின் முக்கிய அமைப்புகள் யாவை ? பாதுகாப்பு பேரவையின் பணிகளை விளக்குக.

## VI) செய்ய வேண்டியன.

ஐ.நா.சபை, இந்திய பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எவ்வகையில் உதவுகிறது என்பதை குறித்து விவரங்களை சேகரி.

# 5. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான சட்டங்களும், நலத்திட்டங்களும்.

நமது இந்திய நாடு மக்கள் நல நாடாகும். நமது அரசு அனைத்துக் குடிமக்களின் நலனுக்காக முழுஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, குழந்தைகள், பெண்கள் நலனில் சிறப்புஅக்கறை கொண்டுள்ளது. எந்த ஒருநாடும் பெண் கல்வியைப் புறந்தள்ளிவிட்டு முன்னேற முடியாது. ஏனென்றால் தாயே குழந்தையின் முதல் ஆசிரியர். குழந்தைகளே நம் நாட்டின் வருங்காலத் தூண்கள். ஆகவே குழந்தைகள் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்கு நமது நாடு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

## குழந்தைகளின் நலனுக்கான சட்டங்கள்

இந்திய அரசியல்அமைப்பின் நெறிக்காட்டும் வழிமுறைகளில் சரத்து எண்.39(f) மற்றும் 45 ஆகியன குழந்தைகள் பாதுகாப்பையும், வளர்ச்சியையும் பற்றிக் கூறுகிறது.

சரத்து 24, குழந்தைகளின் அடிப்படை உரிமைகளைப்பற்றியது ஆகும். இது குழந்தைத் தொழிலாளர்முறையிலிருந்து அவர்களைப் பாதுகாக்க உறுதிச்செய்கிறது. 14 வயதிற்குட்பட்ட எந்தக்குழந்தையும் ஆலைகளில் வேலைசெய்யவும், சுரங்கள் மற்றும் அபாயமான தொழில்கள் செய்வதையும் தடை செய்கிறது.

சரத்து 39(f), குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி, குழந்தைகள் மற்றும் இளையோர்மீது போதியகவனத்துடன் செயல்படுதல், சுரண்டலிலிருந்து பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு வழிவகுக்கிறது.

சரத்து 45, பதினான்கு வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக்கல்வி அளிக்க வழிவகுக்கிறது.

## பெண்கள், குழந்தைகளுக்கான அமைச்சரகம்

குழந்தைகள், பெண்களின் முழுமையான வளர்ச்சி, பாதுகாப்பு, வளமான வாழ்க்கை வாழ்தல் அவர்களின் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கி முழு குடிமக்களாக வாழச்செய்யும் நோக்கத்துடன் செயல்படுகிறது.

## கல்வி உரிமை

நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, சுதந்திரப்போராட்ட தலைவர் கோபாலகிருஷ்ண கோகலே, குழந்தைகளின் கல்வி உரிமையின் முக்கியத்துவத்தை ஆங்கிலேயர் காலத்திலேயே, சட்ட சபையில் எடுத்துரைத்து, அதனை பெறுவதற்காக அரும்பாடுபட்டார். அவரின் கனவு 2010, ஏப்ரல்–1ம் நாள் கொண்டுவரப்பட்ட கல்விஉரிமைச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 6முதல் 14வயது முடிய உள்ள குழந்தைகளுக்கு கல்வி ஓர் அடிப்படை உரிமையாக ஆக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக இந்தியஅரசு இளைய சமுதாயத்தை நிறைவான கல்வி அறிவு படைத்தோர் சமுதாயமாக மாற்ற வழிவகுத்துள்ளது.

## இந்திய அரசால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்

குழந்தைகள் நலனுக்காகப் பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றுள் சில,

1. 1986ல் நிறைவேற்றப்பட்டு, 2000ல் மாற்றியமைத்து நடைமுறைபடுத்திய இளம் குற்றவாளிகள் நீதிச் சட்டம்.

2. தாய்ப்பாலுக்கு மாற்றாக, உணவுப்புட்டிகள் மற்றும் குழந்தை உணவு திட்டம் – 1992.

3. குழந்தை உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பாணைக்குழு சட்டம் 2005.

## குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள்

குழந்தைகள் முன்னேற்றம் மற்றும் நலனுக்காக மிகுதியான நலத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

1. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிதிட்டம் (ICDS) – 1975 : நோக்கங்கள்:

அ) ஆறு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களின் உடல்நலத்தைப் பாதுகாத்தல்.

ஆ) குழந்தை இறப்புவிகிதம், சத்துணவு குறைவு, பள்ளி இடைநிற்றல் போன்றவற்றின் விழுக்காடுகளைக் குறைத்தல்

2. பணிக்குச்செல்லும் தாய்மார்களின் குழந்தைகளுக்காக குழந்தைகள் பேணி வளர்க்கும் ராஜீவ் காந்தி குழந்தைக்காப்பக திட்டம் 2006ல் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் வேலைக்குச்செல்லும் தாய்மார்களின், 6 வயதுவரை உள்ள குழந்தைகளுக்காக, குழந்தைகள் காப்பகத்தை ஏற்படுத்தி நடத்தி வருகின்றது.

3. வீதிகளில் வாழும் குழந்தைகளுக்கானத் திட்டம்: வீதிகளில் ஆதரவின்றிதிரியும் குழந்தைகளுக்கு உறைவிடம், ஊட்டச்சத்து, உடல்நலம் பேணல், கல்வி மற்றும் ஓய்வு நேரத்தைச் பயன்படுத்த வழிசெய்தல் போன்ற ஒருங்கிணைப்பு திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. குழந்தைகளைத் தவறாக பயன்படுத்துவதிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் இத்திட்டம் பாதுகாக்கிறது.

4. குழந்தை உதவிமையங்கள், இது பிரச்சனைகளிலிருக்கின்ற குழந்தைகளுக்கும், அவசரக் காலத்திலும் உதவிசெய்கின்றன. குழந்தைகளின் உடல்நலன், பாதுகாப்பு ஆகியவற்றிலும் சிறப்புக்கவனத்தை செலுத்துகின்றன.

5. ஒருங்கிணைந்த குழந்தைப்பாதுகாப்பு அமைப்பு: இது, நிறுவனம் சார்ந்த மற்றும் அமைப்புச்சாரா குழந்தைகளுக்கு பாதுகாப்பு கிடைக்க உதவுகிறது.

6. வேலைக்குச்செல்லும் குழந்தைகளுக்கான கவனிப்பும், பாதுகாப்பும்: 2005. இதனால் முறைச்சாராக் கல்வியும், தொழிற்கல்வியும், தொடர்கல்வியும், வேலைக்குச் சென்ற குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

குாந்தைகள்தினம் கடைப்பிடித்தல் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 14ம் நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. அது அரசுக்கும், தன்னார்வ நிறுவனங்களும், குழந்தைகளின் வளர்ச்சித் திட்டங்களை திரும்பிப்பார்க்க வாய்ப்பளிக்கிறது. மேலும் பல்வேறுத் துறைகளில் அவர்கள் முன்னேற ஊக்கம் அளிக்கின்றது.

## அரசின் விருதுகள்

குழந்தைகளுக்கான கலை, இலக்கியம், கலாச்சாரம், விளையாட்டு, ஆகிய துறைகளில் முதன்மை பெற்று தனித்திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு அரசு முறையான ஏற்பு தந்து பல்வேறு விருதுகளை அளித்து வருகிறது.

1996 – ல் முதன்மையான குழந்தைகளுக்கான தேசிய விருது ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தினத்தன்று 4 முதல் 15 வயதிற்குட்பட்ட, பாராட்டுக்குரிய குழந்தைகள், சிறப்பு விருதுகளினால் கௌரவிக்கப்படுகிறார்கள்.

குழந்தைகளுக்காக பல்வேறு சட்டங்களை உருவாக்கினாலும் குழந்தைகளுக்கு நடைபெறுகின்ற கொடுமைகள் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு உருவாக்கப்பட வேண்டும். பிரச்சனைகளை முடிவுக்குக் கொண்டுவர சரியான வழிகாட்டுதலையும், நெறிப்படுத்துதலையும், அணுகக்கூடியவகையில் அவர்களை உருவாக்கவேண்டும். குழந்தைகளுக்கு நடைபெறுகின்ற பல்வேறு கொடுமைகள், தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றை நீக்க பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமுதாய நல நிறுவனங்கள் ஆகியவைகள் அரசுடன் ஒத்துழைக்கவேண்டும்.

## பெண்கள் முன்னேற்றமும், சட்டங்களும்

பழங்காலத்திலிருந்தே பெண்களின்நிலை மாறுபட்டே இருந்துவருகிறது. சில காலங்களில் பெண்கள் மிகஉயர்வாகக் கருதப்பட்டதும், சில காலங்களில் சொல்லமுடியாத அளவு துன்பங்கள் அனுபவித்ததும் வரலாற்று உண்மைகளாகும். சமூகத்தில் பெண்கள் நிலையை உயர்த்த இந்திய அரசு எண்ணற்ற உரிமைகளையும், சட்டங்களையும் நடைமுறை படுத்தியுள்ளது.

## பெண்களின் உரிமைகளும், சட்டங்களும்

இந்திய அரசியலமைப்புச் சட்டம், சரத்து 23 மற்றும் 24 பெண்களின் விடுதலைப் பற்றிக் கூறுகிறது.

சரத்து 23, பெண்களை வியாபாரப் பொருளாகச் செயல்படுவதைத் தடைசெய்கிறது.

பெண்களைக் கட்டாய வேலைக்கு உட்படுத்துதல் குற்றமாகும்.

பெண்களை அடிமையாக விற்பது சட்டவிரோதமாகும்.

பெண்கள் சுரண்டப்பட்டு ஏமாற்றுதலை எதிர்பதற்கான உரிமைகளும், சட்டங்களும் உள்ளன.

குடும்பச் சொத்துகளில் மகன்களோடு, மகள்களும் உரிமைகோர சட்டம் இடம் அளிக்கிறது. 1978ல் உருவாக்கப்பட்ட குழந்தைத்திருமணத்தடைச்சட்டதிருத்தம் – பெண்களின் திருமணவயது 15 லிருந்து 18 ஆகவும், ஆணின் திருமண வயது 18 லிருந்து 21 ஆகவும் உயர்த்தியுள்ளது. இது குழந்தைத் திருமணத்தைத் தடை செய்கிறது.

1961ல் நடைமுறைக்கு வந்த வரதட்சணைத் தடைச்சட்டம், வரதட்சணை கொடுப்பதையும், வாங்குவதையும் தடைசெய்துள்ளது. 1986ல் கொண்டு வரப்பட்ட வரதட்சணைத் தடைச்சட்டத்திருத்தம், வரதட்சணை வாங்குபவர், வரதட்சணை தொடர்பாக பெண்களை கொடுமைப்படுத்துபவர் மீது கடுமையான தண்டனை கொடுக்க வழி வகுத்துள்ளது. இந்திய அரசியல்

அமைப்புச்சட்டம் மட்டுமல்லாமல் மத்திய, மாநில அரசுகள் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை நீக்கியும், சமூக அநீதி மற்றும் சுரண்டலிலிருந்து பாதுகாக்கவும், பல்வேறு சட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. எடுத்துக்காட்டாக தமிழ்நாடு அரசு 1997ல் (ஈவ்டீசிங்) பெண்களை இகழ்தல் தடைச் சட்டம் இயற்றியுள்ளது. 2002ல் உருவாக்கப்பட்ட இதன் திருத்தம் பெண்களுக்குத் தொல்லை கொடுப்பதைத்தடை செய்துள்ளது. அவ்வப்போது ஏற்படுத்தப்படுகின்ற அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்கள் குடிமக்களின் நலனுக்காகவே ஏற்படுத்தப்படுகின்றன. 73வது மற்றும் 74வது அரசியல் சட்டத்திருத்தம் ஊராட்சி அமைப்புகளிலும், உள்ளூர் அமைப்புகளிலும், பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை கொடுத்துள்ளது.

## பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்

பெண்களைப் பாதுகாக்க, கல்வி அளிக்க, வாழ்வாதரங்களை உயர்த்த, எண்ணற்ற பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில;

1.வேலைக்கானப் பயிற்சித் திட்டம் (STEP) பணி மற்றும் பயிற்சி ஆதாரத்திட்டம்.

இத்திட்டம் 1996ல் ஆரம்பிக்கப்பட்டது. இது கைவேலைப்பாடுகள், கைத்தறிகள், காதி போன்ற கிராமத் தொழிற்சாலைகளில் வேலைவழங்க பெண்களுக்குப் பயிற்சி அளிக்கிறது.

**2.**சுயவம்சத்திட்டம். சுயம்ஸிதா : (சுயமுயற்சி)

இது பெண்களுக்கு, சுய உதவிக்குழுக்கள் போன்ற திட்டங்களின்வழியாக பெண்களின் அதிகாரக்குவிப்பு மற்றும் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறது.

**3.**குறுகிய கால இல்லங்கள் – 1996.

சமூக, பொருளாதார, மனஅழுத்தம் போன்ற பிரச்சனைகளில் துன்பப்படுகின்ற பெண்களுக்கு ஆற்றுப்படுத்தும் இடமாக இது உள்ளது.

4.குடும்ப ஆலோசனை மையங்கள்.

குடும்பங்களில் ஒத்துப்போக முடியாத சூழலினாலும், சமூக ஆக்கிரமிப்புகளாலும் பாதிக்கப்பட்டப் பெண்களுக்கு அறிவுரைவழங்கும் மையமாக இவைச் செயல்படுகின்றன.

5.பெண் கல்வித்திட்டங்கள்.

பல்வேறு காரணங்களினால் பள்ளிப்படிப்பை தொடர முடியாத 15 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் கல்வி கற்கவும், திறன்களை வளர்க்கவும் வழி செய்கிறது. இதன் மூலம் வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. இது பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்.

6.கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்கள்.

பெண்கள் தங்களின் உரிமைகளையும், வாய்ப்புகளையும் தெரிந்து கொள்ளாததால் எண்ணற்றப் பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இந்தத் திட்டம் ஏழைப் பெண்களிடம் விழிப்புணர்வை உருவாக்கி அவர்கள் தங்கள் நிலைகளையும், உரிமைகளையும் தெரிந்து பல பிரச்சனைகளைத் தீர்க்க உதவுகிறது.

பெண்களின் சமூக வாழ்க்கை உயர்வு அரசின் சட்ட திட்டங்களில்

மட்டுமல்ல, ஏராளமான சமூக நல அமைப்புகளின் முயற்சியாலும் முன்னேற்றம் கண்டுள்ளது. இவைகளின் உதவியோடு எதிர்காலத்தில் பெண்கள் நிலை மேலும் உயர்வடையும் என உறுதியாகக் கூறலாம்.

## பயிற்சி

### I) சரியான விடையை எழுதுக.

1. __________ நம் நாட்டின் வருங்காலத் தூண்கள்.

   அ) முதியோர்கள் ஆ) இளைஞர்கள் இ) குழந்தைகள்

2. இந்திய அரசியலமைப்பின்__________சரத்து குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வாய்பளிக்கிறது.

   அ) சரத்து 39 F ஆ) சரத்து 45 இ) சரத்து 25

3. இந்திய அரசு, கல்வி உரிமைச்சட்டத்தை நடைமுறைப்படுத்திய நாள்__________

   அ) 15 ஆகஸ்ட் 1947 ஆ) 26 ஜனவரி 1950 இ) 1 ஏப்ரல் 2010

4. 73 வது மற்றும் 74 வது அரசியல் சட்ட திருத்தம் ஊராட்சி அமைப்புகளில் __________33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை கொடுத்துள்ளது.

   அ) ஆசிரியர்களுக்கு ஆ)பெண்களுக்கு இ) பட்டதாரிகளுக்கு

5. __________திட்டம், பெண்கள் சுயஉதவிக்குழுக்கள் போன்ற திட்டங்கள் வழியாக பெண்களின் அதிகார குவிப்பு மற்றும் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான வழிகாட்டுகிறது.

   அ) குறுகிய கால இல்லங்கள் ஆ) சுயம்ஸிதா

   இ) குடும்ப ஆலோசனை மையம்

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக

1. இளம் குற்றவாளிகள் நீதிச்சட்டம்__________ல் திருத்தியமைக்கப்பட்டது.
2. குழந்தைகளுக்கு உதவி சேவை மையங்கள்__________ துன்பங்கள் ஏற்படும் காலத்திலும், நெருக்கடி நிலையிலும் உதவி செய்கின்றன.
3. 1978ல் உருவாக்கப்பட்ட குழந்தை திருமணத்தடை சட்டதிருத்தம், பெண்களின் திருமண வயதை 15 லிருந்து__________ஆக உயர்த்தியுள்ளது.
4. தமிழ்நாடு அரசு__________ஆண்டில் 'ஈவ்டீசிங்' (பெண்களை இகழ்ச்சி செய்தல்) தடைச்சட்டம் இயற்றியுள்ளது.
5. சமூக அட்டூழியங்களினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு __________வழங்கும் மையமாக, குடும்ப ஆலோசனை மையங்கள் செயல்படுகின்றன.

## III ) பொருத்துக.

| | |
|---|---|
| 1. சரத்து 45 | குழந்தை இறப்பு விகிதம் குறைத்தல் |
| 2. ஒருங்கிணைந்தகுழந்தை வளர்ச்சி திட்டம் | 1961 |
| 3. குழந்தைகள் தினம் | பெண்கள் மறு சீரமைப்பு இடம் |
| 4. வரதட்சணைத் தடைச்சட்டம் | 14 நவம்பர் |
| 5. குறுகிய கால இல்லங்கள் | இலவச மற்றும் கட்டாயக்கல்வி |

## IV) குறுகிய விடையளி.

1. சரத்து 24 குழந்தைகளுக்கு எவற்றை அளிக்கின்றது ?
2. குழந்தைகளின் நலன்கருதி நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் யாவை ?
3. இந்திய அரசினால் குடியரசுதினத்தன்று எத்தகைய குழந்தைகள் கௌரவிக்கப்படுகிறார்கள் ?
4. சரத்து 23 மற்றும் 24 எவ்வகையில் பெண்களுக்கு உதவுகிறது ?
5. 1961 மற்றும் 1986 வரதட்சணை தடைச்சட்டங்களின் முக்கியத்துவத்தை வெளிக்கொணர்க.

## V) விரிவான விடையளி.

1. குழந்தைகளின் நலனிற்காகவும் உயர்கல்விக்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள் யாவை ?
2. பெண்களின் பொருளாதார, அதிகாரக்குவிப்பு திட்டங்களை விரிவாக எழுதவும்.

## VI) செய்ய வேண்டியன.

உன்னுடைய பகுதியில் பெண்கள், குழந்தைகளை உயர்த்த மேற்கொண்டுள்ள நலத்திட்டங்களைப் பற்றி விவரங்களை சேகரிக்கவும்.

# பொருளாதாரம்

## 1. உற்பத்திக்காரணிகள்

பொருளியல் ஒரு சமூக அறிவியல். அது மனித விருப்பங்களைப் பற்றியும், அவை நிறைவு செய்யப்படுவது பற்றியும் விளக்குகிறது. பொருளியல் சமுதாயத்தின் பிரச்சனைகளாகிய வேலையின்மை, வறுமை, மருத்துவ உதவி, உற்பத்தி மற்றும் அரசின் கொள்கைகளைப் பற்றி விளக்குகிறது.



ஆடம் ஸ்மித்

ஆடம்ஸ்மித் பொருளியிலின் தந்தை என அழைக்கப்படுகிறார். அவர் பொருளியலின் இலக்கணத்தை கீழ்க்கண்டவாறு வரையறுத்துள்ளார். 'பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஒரு அறிவியல்'. அவருடைய 'நாடுகளின் செல்வம்' (An Enquiry into the nature and causes of wealth of Nations) என்ற புத்தக வெளியீட்டின் பிறகே, பொருளியலை நாம் முறைப்படுத்தப்பட்ட அறிவியலாக அறிகிறோம்.

'இலயனல் ராபின்ஸ்' அவர்கள் பொருளியலுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். "விருப்பங்களோடும், கிடைப் பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றி பயிலுகின்ற அறிவியல் பொருளியலாகும்".



இலயனல் ராபின்ஸ்

### சமுதாயமும் பற்றாக்குறையான வளங்களும்

ஒரு சமுதாயம் தன்னிடம் உள்ள பற்றாக்குறையான வளங்களை பல்வேறு பயன்பாட்டிற்கு பகிர்ந்தளிக்கிறது. பற்றாக்குறையாக உள்ள வளங்களை சிறந்த முறையில் பகிர்ந்தளிப்பதற்கான விதிமுறைகளை பொருளியல் உருவாக்கியுள்ளது.

இந்த நவீன உலகில் மக்கள் நிறைய பண்டங்களையும், பணிகளையும் தங்களது அன்றாட வாழ்க்கையில் நுகர விரும்புகிறார்கள். பணிகளும், பண்டங்களும் உற்பத்தி செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். உற்பத்தி என்பது மனிதன், வளங்களை மாற்றி அமைத்து மனிதத் தேவைகளை பூர்த்தி செய்யும் முறை ஆகும், பண்டங்கள், பணிகளின் உற்பத்தி அளவைப் பொறுத்தே ஒரு நாட்டின் நாட்டு வருமானம் அமையும். வளர்ந்த நாடுகள் பண்டங்களையும், பணிகளையும் அதிக அளவில் உற்பத்தி செய்வதால் நாட்டு வருமானம் உயர்ந்த அளவில் உள்ளது.

மூலதனமும் தொழிலமைப்பும் பெறப்பட்ட காரணிகளாகும்.

**அறிந்து கொள்வோம்**

உற்பத்தி என்பது பயன்பாட்டை உருவாக்குவதாகும்.

பயன்பாடு என்பது விருப்பங்களை நிறைவு செய்வதாகும்.

நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் தொழிலமைப்பு ஆகியவை பண்டங்களும், பணிகளும் உற்பத்தி செய்யப் பயன்படுகின்றன. அவை உற்பத்திக் காரணிகள் எனப்படுகின்றன. எந்தப் பொருளையும், பணியையும் உற்பத்தி செய்ய எல்லா நான்கு உள்ளீட்டுக் காரணிகளும் அவசியம். ஒவ்வொரு காரணியும் உற்பத்தியில் முக்கிய பங்களிக்கிறது. ஒரு காரணியின் உபயோகம் இல்லாவிட்டால் கூட உற்பத்தி இல்லை. ஆகவே உற்பத் தியாளர் எல்லா உற்பத்திக் காரணி களையும் சரியான அளவில் இணைத்து உற்பத்தி செய்கிறார். உற்பத்தியாளரின் நோக்கம் குறைந்த செலவில் அதிக லாபம் பெற வேண்டும் என்பதே ஆகும். உற்பத்தி என்பது பண்டங்களை உற்பத்தி செய்வது மட்டுமின்றி, மருத்துவர், ஆசிரியர் போன்ற பல பணிகளையும் உள்ளடக்கியதாகும்.

**செய்முறை**

சமுதாயத்தின் பல்வேறு பொருட்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன ?



**உற்பத்திக் காரணிகளும் அதன் வெகுமதிகளும்**

| நிலம் (வாரம்) | உழைப்பு (கூலி) | மூலதனம் (வட்டி) | தொழிலமைப்பு (இலாபம்) |
|---|---|---|---|

## நிலம்

சாதாரணமாக நிலம் என்றால் (நிலப்பரப்பை) பூமியைக் குறிக்கும். ஆனால் பொருளியலில் மனிதனால் உருவாக்கப்படாத அனைத்துப் பொருட்களும் நிலம் என்றழைக்கப்படுகிறது. இயற்கையின் கொடைகள் அனைத்தும் நிலம் எனப்படும். காற்று, சூரிய ஒளி, பூமி, காடுகள், ஆறுகள் மற்றும் கனிம வளங்கள் ஆகிய அனைத்தும் நிலம் எனப்படும். உற்பத்திக் காரணியான நிலத்திற்கு அளிக்கப்படும் வெகுமதி வாரம் (வாடகை) எனப்படும். மற்ற காரணிகளிடம் காணப்படாத சில சிறப்பியல்புகளைக் கொண்டது நிலம்.

**அறிந்து கொள்வோம்**

நிலமும், உழைப்பும் உண்மைக் காரணிகள்

மூலதனமும், தொழிலமைப்பும் பெறப்பட்ட காரணிகள்



நிலம்



காடுகள்



ஆறு



கனிமம்

## நிலத்தின் சிறப்பியல்புகள்

### 1. நிலம் இயற்கையின் கொடை ஆகும்

நிலம் மனிதனால் உருவாக்கப்பட்டதல்ல. அது இயற்கையாக அமைந்தது.

### 2. நிலத்தின் அளிப்பு நிலையானது

நிலத்தின் மொத்தப் பரப்பளவை அதிகரிக்கவோ குறைக்கவோ முடியாது. மனிதன் நிலத்தின் பயன்பாட்டை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

### 3. நிலம் நிரந்தரமானது

நிலம் நிரந்தரமானது ஏனெனில், அதை மனிதனால் அழிக்க முடியாது.

### 4. நிலம் செழிப்புத்தன்மையில் மாறுபடும்

சில நிலங்கள் அதிக செழிப்புத் தன்மை கொண்டது. சில குறைந்த செழிப்புத் தன்மை கொண்டது. எந்த இரு நிலங்களும் செழிப்புத் தன்மையில் ஒன்றாக இருக்காது.

## 5. நிலம் செய்யப்பாட்டு உற்பத்திக் காரணி

நிலம் தானாக எதையும் உற்பத்தி செய்ய முடியாது. மனிதன் நிலத்தில் உழைத்து பண்டங்களையும், பணி களையும் உற்பத்தி செய்கிறான்.

**செய்முறை**

உனது பகுதியில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் எங்கே வேலை செய்கிறார்கள் ?

"Labour is the active and initial force and labour is therefore the employer of capital"

## உழைப்பு

ஊதியத்தை பெறுவதற்கு செய்யப்படும் எந்த வேலையும் உழைப்பு ஆகும். அந்த உழைப்பு உடல் உழைப்பாகவோ, மன உழைப்பாகவோ இருக்கலாம். ஒரு சமையல்காரரின் உழைப்பு உடல் உழைப்பு ஆகும். ஒரு



உடல் உழைப்பு



மன உழைப்பு

ஆசிரியரின் உழைப்பு மன உழைப்பு ஆகும். இன்பத்திற்காக செய்யப்படும் எந்த வேலையும் உழைப்பாகாது. உற்பத்திக் காரணியான உழைப்பிற்கு அளிக்கப் படும் வெகுமதி கூலி ஆகும்.

## உழைப்பின் சிறப்பியல்புகள்

### 1. உழைப்பு அழியக்கூடியது

அதை பண்டங்களைப் போல் சேமித்து வைக்க முடியாது. உழைப்பின் சக்தி ஒரு முறை அழிந்தால் திரும்பப் பெற இயலாது.

### 2. உழைப்பு பிரிக்க இயலாதது

உழைப்பை உழைப்பாளியிடமிருந்து பிரிக்க இயலாது. உதாரணமாக நடனத்தை, நடனக்காரரிடமிருந்து பிரிக்க இயலாது.

### 3. உழைப்பு மனிதனுக்கு மனிதன் மாறுபடும்

ஒரே மாதிரியான படிப்பும், பயிற்சியும் இருப்பினும் திறமை மாறுபடும். அந்த மாற்றத்தைப் பொறுத்து ஊதியம் அமையும்.

### 4. உழைப்பு இடம் பெயரக்கூடியது

மனிதன் குறைவான ஊதியம் பெறும் தொழிலிலிருந்து அதிக ஊதியம் பெறும் தொழிலுக்கு இடம் பெயர்கிறார்.

### 5. தனி உழைப்பாளிகளின் பேரம் பேசும் ஆற்றல் குறைவு

வளர்ந்து வரும் நாடுகளாகிய இந்தியா போன்ற நாட்டில் உழைப்பாளிகள் வேலை இல்லாமல் இருப்பதை விட குறைந்த ஊதியம் பெற வற்புறுத்தப் படுகின்றனர். தொழிற்சங்கங்களின் வருகை பேரம் பேசும் ஆற்றலை அதிகரித்திருக்கிறது.

## உழைப்பாளிகளின் திறமை

உழைப்பாளிகளின் திறமை என்பது உழைப்பாளிகளின் அதிக உழைப்புத் திறன். அதிக உழைப்புத்திறன் உள்ள உழைப்பாளிகள் உற்பத்தியை அதிகரித்து வளர்ச்சியை பெருக்க முடியும். உழைப்பாளிகள் திறமை சில காரணிகளைப் பொறுத்து அமையும்.

அ) தட்ப வெப்பநிலை

ஆ) பரம்பரைக் காரணிகள்

இ) வேலை செய்யும் இடத்தில் நல்ல சூழ்நிலை

ஈ) வேலையின் நேரம்

உ) இடர்பாடு, விபத்து, வைப்பு நிதி போன்றவற்றிற்கு கிடைக்கக்கூடிய பாதுகாப்பு முறைகள்

## வேலைப் பகுப்பு முறை

ஆடம்ஸ்மித் பொருளியலின் தந்தை. வேலைப் பகுப்பு முறையை தனது "நாடுகளின் செல்வம்" என்ற நூலில் அறிமுகப்படுத்தியுள்ளார். குண்டூசி தயாரிப்பதை உதாரணமாகக் கூறியுள்ளார்.

## பொருள்

ஒரு உற்பத்தி முறையை வெவ்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்து அந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவிடம் ஒப்படைத்தலே வேலைப் பகுப்பு முறை எனப்படும்.

ஆடம்ஸ்மித் குண்டூசி தயாரிப்பை, தலைப்பகுதி ஒட்டவைத்தல், முனையைத் தீட்டுதல் என வரையறுக்கப்பட்ட 18 உட்பிரிவுகளாக பிரித்து விளக்கியுள்ளார். வேலைப் பகுப்பு முறையில் 10 மனிதர்கள் ஒரு நாளைக்கு 48,000 ஊசிகள் உற்பத்தி செய்ய முடியும். ஒரு தொழிலாளி ஒரு நாளில் 4,800 குண்டூசிகள் செய்ய முடியும். வேலைப் பகுப்பு முறையும், இயந்திரங்களும் இன்றி ஒரு தொழிலாளி ஒரு நாளில் ஒரு குண்டூசி மட்டுமே செய்ய முடியும்.

## நன்மைகள்

1. உற்பத்தி அதிகரிக்கின்றது.

2. திறமையில் முன்னேற்றம் காணமுடிகிறது.

3. நீண்ட அலகு உற்பத்தி செய்ய முடிகிறது.

4. காலமும் மூலப்பொருட்களும் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

5. வேலை பகுப்பு முறையில் தகுதியான வேலைக்கு தகுதியான ஆட்களை நியமிக்க முடிகிறது.

## தீமைகள்

1. ஒரே வேலையை திரும்பத்த திரும்ப செய்வதால் சுவையற்ற

(Monotonous) வேலைத்தன்மையை அடைகிறான்.

2. வேலைப் பகுப்பு முறை மனித் தன்மையை அழிக்கிறது.

3. கைவினைப் பொருட்களின் வளர்ச்சியைத் தடுக்கிறது.

4. ஒரு பொருளை முழுமையாக உற்பத்தி செய்தோம் என்ற மனநிலை தொழிலாளிக்கு இல்லாமல் போகிறது.

5. வேலையில் குறுகிய பயிற்சியை பெறுவதால் வேறு வேலை வாய்ப்பைத் தேடுவதற்கான வாய்ப்புகள் குறைகிறது.

### மூலதனம்

பொதுவாக மூலதனம் என்பது செல்வத்தைக் குறிக்கும். பொருளியலில் மூலதனம் என்பது செல்வத்தை மேலும் உற்பத்தி செய்திட மனித முயற்சிகளால் உருவாக்கப்பட்ட செல்வம் ஆகும். இயந்திரங்கள், கருவிகள் மற்றும் இடைப்பொருள்கள் மூலதனத்தில் அடங்கும். கட்டிடம் தொழிற்சாலையாக இருந்தால் அது மூலதனம் ஆகும். வீட்டு உபயோகத்திற்காக இருந்தால் அது மூலதனம் ஆகாது. எல்லா மூலதனமும் செல்வம் ஆகும். உற்பத்திக் காரணியான மூலதனத்திற்கு அளிக்கப்படும் வெகுமதி வட்டி ஆகும்.

**செய்முறை**

ஒரு ஆடை நிறுவனம் தொடங்க தேவையான பண முதலீடு எவ்வளவு என்று உன்னால் அனுமானிக்க முடியுமா ?

உன்னுடைய சொந்த மனித மூலதனத்தைப் பற்றி யோசி, உன்னிடம் உள்ள திறமைகள் என்னென்ன ?







### மூலதனத்தின் வகைகள்

#### 1. பருமப் பொருள் மூலதனம்

மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் மீதான மூலதனம் பருமப்பொருள் மூலதனம் என்று அழைக்கப்படுகிறது.

#### 2. பண மூலதனம்

பண வடிவில் அல்லது பண மாற்றுப் பத்திரங்களாக உள்ள முதலீடுகள் பண மூலதனம் என்று அழைக்கப்படுகிறது.

### 3. மனித மூலதனம்

கல்வி, பயிற்சி மற்றும் உடல் நலத்திற்காக செய்யப்படும் முதலீடு மனித மூலதனம் என்று அழைக்கப்படுகிறது.

### மூலதனத்தின் சிறப்பியல்புகள்

**1. மூலதனம் ஒரு செயலற்ற உற்பத்திக் காரணி**

நிலத்தைப் போலவே மூலதனமும் உழைப்பின்றி இயங்காது.

**2. மூலதனம் மனித முயற்சியால் உருவாக்கப்பட்டது**

நிலமும், உழைப்பும் உண்மைக் காரணிகள் மூலதனம் என்பது சேமிப்பிலிருந்து உருவானது.

**3. மூலதனம் ஆக்கமுடையது**

மூலதனம் ஆக்கமுடையது ஏனெனில் அது வருவாயைக் கொடுக்கிறது.

**4. மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும்**

மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும். அது மறையாது பயனற்று இருந்த மூலதனத்தை மீண்டும் பயன்படுத்தலாம்.

**5. மூலதனம் அதிக இயங்கும் தன்மை கொண்டது**

நிலம் முற்றிலும் இயங்காத் தன்மை கொண்டது. உழைப்பு குறைவான இயங்கும் தன்மை கொண்டது. மூலதனம் இடத்தைப் பொறுத்தும், வேலையைப் பொறுத்தும் இயங்கும்.

### தொழிலமைப்பு

உற்பத்தி என்பது நிலம், உழைப்பு மற்றும் மூலதனத்தைப் பொறுத்தது. அக்காரணிகளை சரியான அளவில் இணைத்து, உற்பத்தி முறையை ஒருங்கிணைத்து இடர்பாடுகளை



ஏற்க ஒரு காரணி இருக்க வேண்டும். அக்காரணி 'தொழிலமைப்பு' எனப்படுகிறது.

**செய்முறை**

ஒரு சிறந்த தொழில் முனைவோருக்கு தேவையான குணங்களை வரையறு.

ஏதேனும் ஒரு தொழில் முனைவரோடு கலந்துரையாடி அவரின் வெற்றிக்கான காரணங்களை ஆய்க.

தொழில் முனைவோர் என்பவர் பல வகையான உற்பத்திக் காரணிகளை சரியான அளவில் இணைத்து உற்பத்தியைத் தொடங்கி, இடர்பாடுகளையும் நிச்சயமின்மையும் எதிர் கொள்பவர் ஆவார். தொழில் முனைவோர் 'சமுதாய மாற்றம் காணும் முனைவர்' என அழைக்கப்படுகிறார்.

### தொழில் முனைவோரின் பணிகள்

1. இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை காணுதல்

2. உற்பத்தி அலகின் இடத்தைத் தேர்ந்தெடுத்தல்

3. புத்தாக்கப் பணி

4. இடர்பாடுகளை ஏற்றல்

5. நிச்சயமின்மையை எதிர் கொள்ளுதல்

### சமுதாயத்தின் பலவகைத் துறைகள்

மனிதனின் பல விதமான தொழில்களை மூன்று துறைகளாகப் பிரிக்கலாம்.அவை முதன்மைத்துறை, இரண்டாம் துறை மற்றும் சார்புத்துறை, பண்ணைத் தொழிலாளர்கள் வயலில் வேலை செய்கிறார்கள்.



தொழில் அமைப்பு

தொழிற்சாலை பணியாளர்கள் பண்டங்களை உற்பத்தி செய்கிறார்கள். மருத்துவர்கள், ஆசிரியர்கள், வங்கிப் பணியாளர்கள், போக்குவரத்து துறை தொழிலாளர்கள் தங்கள் பணிகளை செய்கிறார்கள். பொருளாதார நடவடிக்கையின் சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது. இவ்வாறு பண்டங்கள் பணிகளின் இயக்கம் முதன்மை, இரண்டாம் மற்றும் சார்புத்துறை மூலமாக செயல்படுவது 'உற்பத்திச் சங்கிலி' எனப்படுகிறது.




### முதன்மைத் துறை (Primary Sector)

ஒரு சமுதாயத்தின் முதன் மைத் துறை இயற்கைப்பொருள்களை முதன்மைப் பொருள்களாக மாற்றுகின்றனர். இந்தத் துறை உணவு உற்பத்தி மற்றும் மூலப்பொருள்களைக் கொண்டதால் முதன்மை உற்பத்தி எனப்படுகிறது. பெரும்பாலான பொருட்கள் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்களாக விளங்குகின்றன. விவசாயம், மீன்பிடித்தல், வனத்துறை, சுரங்கத்தொழில், கல் உடைத்தல் போன்ற தொழில்கள் இந்தத் துறையைச் சார்ந்தவை. இந்தியாவின் பெரும்பாலான மக்கள் இந்தத் துறையைச் சார்ந்துள்ளனர். பல வளர்ந்த நாடுகளில் கூடுதலான மூலதனம் இந்தத் துறையில் முதலீடு செய்யப்படுகிறது. விவசாயத் தொழில் இந்தியாவின் மிக அதிகமானதாகவும், முக்கியமான தொழிலாகவும் விளங்குகிறது.

### இரண்டாம் துறை (Secondary Sector)

இரண்டாம் துறை முதன்மை உற்பத்தியாளர்களின் மூலப்பொருட்களை உபயோகிக்கத்தக்க பொருட்களாக மாற்றுகிறது. இந்தத் துறை

உற்பத்தித்துறை எனவும் அழைக்கப்படுகிறது. மூலப்பொருட்கள் இறுதி நிலைப் பொருளாகவும் அரை இறுதி நிலைப் பொருளாகவும் மாற்றப்படுகிறது. இந்தத் துறையில் பெரிய அளவிலான உற்பத்தித் தொழிற்சாலைகள் சிறு உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் குடிசைத் தொழில்கள் அடங்கும். உலோகத் தொழில், உருக்காலைகள், நெசவுத் துறை, இரசாயன மற்றும் பொறியியல் தொழிற்சாலைகள், கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் முதலியவை இந்தத் துறையைச் சார்ந்த தொழில்கள்.

### சார்புத்துறை (Tertiary Sector)

ஒரு சமுதாயத்தின் சார்புத்துறை சேவைத்துறை ஆகும். இந்தத் துறை பொது மக்களுக்கும், வணிகத் துறைக்கும் சேவைகளை வழங்குகிறது. காப்பீடு, வங்கித்துறை, உடல் நலம், போக்குவரத்து, தொலைத் தொடர்பு சில்லரை மற்றும் மொத்த வியாபாரம், கேளிக்கை ஆகியவை இத்துறையைச் சார்ந்தவை.

நம் நாட்டில் சேவைத்துறையில் கவர்ந்திழுக்கும் வகையில் வேலை வாய்ப்பு விரிவாக்கம் உள்ளது. பெரும்பாலான வளர்ந்த நாடுகளில் அதிக சதவிகித தொழிலாளர்கள் சார்புத்துறையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். அமெரிக்காவில் 80 சதவிகித மக்கள் சார்புத்துறை தொழிலாளர்கள். உலக நாடுகளில் மிகவும் முக்கியமான துறையாக சார்புத்துறை விளங்குகிறது.

**பொருளாதாரத்தில் துறைகளின் பங்களிப்பு**




பொருளாதாரத்தின் மூன்று துறைகளும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன.

## பயிற்சி

### I) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது.

1. பொருளாதாரம் என்பது ______________ அறிவியல் ஆகும்.

   அ) சமூக ஆ) அரசியல் இ) நீதி

2. உற்பத்தி காரணிகள் _______________ வகைப்படும்.

   அ) இரண்டு ஆ) நான்கு இ) ஐந்து

3. உழைப்பை ______________ இருந்து பிரிக்க முடியாது.

   அ) உழைப்பாளரிடம் ஆ) லாபம் இ) மூலதனம்

4. பொதுவாக மூலதனம் என்பது _________________.

   அ) கட்டிடங்கள் ஆ) இயந்திரங்கள் இ) பணம்

5. தொழில் முனைவோர் எப்போதும் செய்வது _______________.

   அ) புத்தாக்கப்பணி ஆ) மரபு இ) இடர்பாடுகள்

6. முதலுக்கு அளிக்கப்படும் ஊதியம் _______________.

   அ) வாரம் ஆ) கூலி இ) வட்டி

7. கல்வியில் செய்யப்படும் முதலீடு ___________ மூலதனம் எனப்படும்

   அ) பருமப்பொருள் ஆ) மனித இ) பண

8. உற்பத்தி காரணியான உழைப்பிற்கு அளிக்கப்படும் வெகுமதி ___________ ஆகும்.

   அ) வாரம் ஆ) கூலி இ) இலாபம்

9. அமெரிக்காவில் ___________க்கு அதிகமான உழைப்பாளர்கள் சார்புத்துறையைச் சேர்ந்தவர்கள்.

   அ) 60% ஆ) 40% இ) 80%

10. வேளாண்மை _______________ துறையைச் சார்ந்தது.

    அ) முதன்மை ஆ) இரண்டாம் இ) சார்பு

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக

1. உற்பத்தி என்பது ___________________ உருவாக்குவதாகும்.
2. _____________ என்பது தேவைகளை பூர்த்தி செய்யும் சக்தி.
3. _____________ மற்றும் __________ உண்மைக் காரணிகள் என்று அழைக்கப்படுகின்றன.

4. ____________ என்பது இயற்கையின் கொடையாகும்.

5. மூலதனமும், தொழில் அமைப்பும் ___________ காரணிகள் ஆகும்.

6. வேலைப் பகுப்பு முறை என்பதை அறிமுகப்படுத்தியவர் ___________

7. ___________ என்பவர் சமுதாய மாற்றம் காணும் முனைவர்.

8. இரண்டாம் துறை __________ என்றும் அழைக்கப்படுகிறது.

9. சமுதாயத்தின் சார்புத் துறை என்பது _________ துறை ஆகும்.

10. "நாடுகளின் செல்வமும் அவற்றின் இயல்புகளும் ஓர் ஆய்வு "என்ற நூலை இயற்றியவர் _______________.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. நிலம் | இடர்பாடுகளை ஏற்றல் |
| 2. வங்கிப் பணிகள் | வாரம் |
| 3. தொழில் முனைவோர் | கட்டிடங்கள் |
| 4. உழைப்பு | சார்புத்துறை |
| 5. உடல் உழைப்பு | அழியக்கூடியது |

## IV) சுருக்கமான விடையளி

1. லயனல் ராபின்ஸின் பொருளியல் இலக்கணத்தை கூறுக.
2. ஒரு நாட்டின் மூன்று துறைகள் யாவை ?
3. வேலைப் பகுப்பு முறை என்றால் என்ன ?
4. மூலதனத்தின் மூன்று வடிவங்கள் யாவை ?
5. உற்பத்திக் காரணிகளையும் அதன் வெகுமதிகளையும் குறிப்பிடுக.

## V) ஒரு பத்தியில் விடையளி.

1. நிலத்தின் சிறப்பு இயல்புகளை விளக்குக.
2. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?

## VI) விரிவான விடையளி

1. வேலை பகுப்பு முறையின் நன்மை தீமைகள் யாவை ?
2. சார்புத்துறையைப் பற்றி விளக்குக.